# T.P.M Sunday School



# Standard : 11



**பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து;** நீதி:22:6

# TPM ஞாயிறுபள்ளி
# 11-வகுப்பு பாடங்கள் மற்றும் வேதாகமப் பகுதி

I. பாடங்கள் *(80 மதிப்பெண்கள்)*

1. பலிகள்
2. பஸ்கா ஆட்டுக்குட்டி
3. சர்வாங்க தகனபலி
4. போஜன பலி
5. சமாதான பலி
6. பாவநிவாரண பலி
7. குற்றநிவாரண பலி
8. கால நியமங்கள் (பகுதி I)
9. கால நியமங்கள் (பகுதி II)
10. கால நியமங்கள் (பகுதி III)
11. கால நியமங்கள் (பகுதி IV)
12. பழைய ஏற்பாட்டின் ஊழியம்
13. புதிய ஏற்பாட்டின் ஊழியம்
14. மெல்கிசேதேக்கின் முறைமை
15. விசுவாச ஜீவியம்
16. பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல்
17. ஜெய ஜீவியம்
18. புதிய எருசசேலம் (பகுதி I)
19. புதிய எருசசேலம் (பகுதி II)
20. சீயோன்

# Std 11

1 **L1** 1. *லேவியராகமம் 19:18*

பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிலும் அன்புகூறுவாயாக; நான் கர்த்தர்.

1 **L1** 2. *உபாகமம் 11:1*

நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய பிரமாணங்களையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும், அவருடைய கற்பனைகளையும் எப்பொழுதும் கைக்கொள்வாயாக.

1 **L1** 3. *உபாகமம் 28:9*

நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்.

1 **L1** 4. *யோசுவா 1:9*

நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.

1 **L1** 5. *2 சாமுவேல் 22:7*

எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று.

1 **L1** 6. *2 நாளாகமம் 7:14*

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன்.

1 **L1** 7. *யோபு 17:9*

நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்; சுத்தமான கைகளுள்ளவன் மேன்மேலும், பலத்துப்போவான்.

2 **L2** 8. *சங்கீதம் 2:12*

குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்; அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

2 **L2** 9. *சங்கீதம் 16:8*

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.

2 **L2** 10. *சங்கீதம் 19:9*

கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.

2 **L2** 11. *சங்கீதம் 25:4*

கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்.

2 **L2** 12. *சங்கீதம் 30:5*

அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.

2 L2 13. *சங்கீதம் 32:8*

நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

2 L2 14. *சங்கீதம் 33:12*

கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது.

3 L3 15. *சங்கீதம் 34:15*

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.

3 L3 16. *சங்கீதம் 37:37*

நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.

3 L3 17. *சங்கீதம் 39:6*

வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்; ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்.

3 L3 18. *சங்கீதம் 41:12*

நீர் என் உத்தமத்திலே என்னைத்தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்.

3 L3 19. *சங்கீதம் 45:13*

ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது.

3 L3 20. *சங்கீதம் 48:9*

தேவனே, உமது ஆலயத்தின் நடுவிலே, உமது கிருபையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

3 L3 21. *சங்கீதம் 50:2*

பூரணவடிவுள்ள சீயோனிலிருந்து தேவன் பிரகாசிக்கிறார்.

4 L4 22. *சங்கீதம் 55:22*

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.

4 L4 23. *சங்கீதம் 66:18*

என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

4 L4 24. *சங்கீதம் 71:16*

கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்; உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன்.

4 L4 25. *சங்கீதம் 84:4*

உம்முடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எப்பொழுதும் உம்மைத் துதித்துக்கொண்டிருப்பார்கள்.

4 L4 26. *சங்கீதம் 85:10*

கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்.

4 L4 27. *சங்கீதம் 86:13*

நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது; என் ஆத்துமாவைத்தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர்.

4 **L4** 28. *சங்கீதம் 91:13*

சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்.

5 **L5** 29. *சங்கீதம் 91:14*

அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.

5 **L5** 30. *சங்கீதம் 91:15*

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.

5 **L5** 31. *சங்கீதம் 91:16*

நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

5 **L5** 32. *சங்கீதம் 96:9*

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்.

5 **L5** 33. *சங்கீதம் 100:4*

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

5 **L5** 34. *சங்கீதம் 100:5*

கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

5 **L5** 35. *சங்கீதம் 101:2*

உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்; எப்பொழுது என்னிடத்தில் வருவீர்! என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்துகொள்ளுவேன்.

6 **L6** 36. *சங்கீதம் 119:9*

வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே.

6 **L6** 37. *சங்கீதம் 119:165*

உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.

6 **L6** 38. *சங்கீதம் 134:3*

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக.

6 **L6** 39. *சங்கீதம் 138:8*

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.

6 **L6** 40. *சங்கீதம் 139:2*

என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.

6 **L6** 41. *சங்கீதம் 139:24*

வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

6 **L6** 42. *நீதிமொழிகள் 3:35*

ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள்; மதிகேடரோ கனவீனத்தை அடைவார்கள்.

7 **L7** 43. *நீதிமொழிகள் 4:23*

எல்லாக் காலலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.

7 **L7** 44. *நீதிமொழிகள் 4:25*

உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்குமுன்னே செவ்வையாயப் பார்க்கக்கடவது.

7 **L7** 45. *நீதிமொழிகள் 4:27*

வலதுபுறமாவது இடதுபுறமாவது சாயாதே; உன் காலைத் தீமைக்கு விலக்குவாயாக.

7 **L7** 46. *நீதிமொழிகள் 10:19*

சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்.

7 **L7** 47. *நீதிமொழிகள் 12:2*

நல்லவன் கர்த்தரிடத்தில் தயைபெறுவான்; துர்ச்சிந்தனைகளுள்ள மனுஷனை அவர் ஆக்கினைக்குட்படுத்துவார்.

7 **L7** 48. *நீதிமொழிகள் 12:24*

ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகைசெய்யும்; சோம்பேறியோ பகுதிகட்டுவான்.

7 **L7** 49. *நீதிமொழிகள் 14:2*

நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான்; தன் வழிகளில் தாறுமாறானவனோ அவரை அலட்சியம்பண்ணுகிறான்.

8 **L8** 50. *நீதிமொழிகள் 14:12*

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.

8 **L8** 51. *நீதிமொழிகள் 14:27*

கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்.

8 **L8** 52. *நீதிமொழிகள் 16:2*

மனுஷனுடைய வழிகளெல்லாம் அதன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப்பார்க்கிறார்.

8 **L8** 53. *நீதிமொழிகள் 16:7*

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்.

8 **L8** 54. *நீதிமொழிகள் 17:27*

அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்; விவேகி குளிர்ந்த மனமுள்ளவன்.

8 **L8** 55. *நீதிமொழிகள் 22:4*

தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்.

8 **L8** 56. *நீதிமொழிகள் 25:28*

தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்.

9 **L9** 57. *நீதிமொழிகள் 29:1*

அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்.

9 **L9** 58. *பிரசங்கி 5:6*

உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?

9 **L9** 59. *பிரசங்கி 11:9*

வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.

9 **L9** 60. *பிரசங்கி 11:10*

நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும் வாலிபமும் மாயையே.

9 **L9** 61. *ஏசாயா 6:8*

பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.

9 **L9** 62. *ஏசாயா 8:18*

இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்.

9 **L9** 63. *ஏசாயா 35:10*

கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.

10 **L10** 64. *ஏசாயா 41:14*

யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே, பயப்படாதே; நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார்.

10 **L10** 65. *ஏசாயா 42:1*

இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்.

10 **L10** 66. *ஏசாயா 43:4*

நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்குஈடாக ஜனங்களையும்கொடுப்பேன்.

10 **L10** 67. *தானியேல் 12:3*

ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.

10 **L10** 68. *ஓசியா 2:19*

நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்.

10 **L10** 69. *செப்பனியா 3:17*

உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.

10 **L10** 70. *மத்தேயு 6:22*

கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்.

11 **L11** 71. *மத்தேயு 7:21*

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

11 **L11** 72. *மத்தேயு 19:24*

மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

11 **L11** 73. *லூக்கா 6:36*

ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.

11 **L11** 74. *யோவான் 15:7*

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

11 **L11** 75. *யோவான் 16:20*

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

11 **L11** 76. *அப்போஸ்தலர் 4:12*

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.

11 **L11** 77. *ரோமர் 8:9*

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.

12 **L12** 78. *ரோமர் 8:30*

எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

12 **L12** 79. *ரோமர் 13:8*

ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றென்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.

12 **L12** 80. *ரோமர் 13:14*

துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்.

12 **L12** 81. *ரோமர் 15:1*

அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்.

12 **L12** 82. *1 கொரிந்தியர் 9:24*

பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.

12 **L12** 83. *2 கொரிந்தியர் 3:18*

நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.

12 **L12** 84. *2 கொரிந்தியர் 4:2*

வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்.

13 **L13** 85. *2 கொரிந்தியர் 7:1*

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.

13 **L13** 86. *எபேசியர் 2:8*

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;

13 **L13** 87. *எபேசியர் 5:2*

கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்.

13 **L13** 88. *எபேசியர் 6:12*

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.

13 **L13** 89. *பிலிப்பியர் 3:21*

அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாகமறுரூபப்படுத்துவார்.

13 **L13** 90. *கொலோசெயர் 1:28*

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.

13 **L13** 91. *யாக்கோபு 3:17*

பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

14 **L14** 92. *யாக்கோபு 4:17*

ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

14 **L14** 93. *1 பேதுரு 1:13*

ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

14 **L14** 94. *1 பேதுரு 2:9*

நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.

14 **L14** 95. *1 பேதுரு 3:4*

அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.

14 **L14** 96. *1 பேதுரு 4:8*

எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்.

14 **L14** 97. *1 பேதுரு 5:8*

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

14 **L14** 98. *2 பேதுரு 2:20*

கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.

14 **L14** 99. *1 யோவான் 5:18*

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்.

14 **L14** 100. *வெளிப்படுத்தின விசேஷம் 3:21*

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.

# 11 - ஆம் வகுப்பு - விசேஷித்த வேத பகுதி வாசிப்பு - நாட்காட்டி

| பாடம் | வசனக் குறிப்புகள் | வசன எண்ணிக்கை | உள்ளடக்கத்தின் சுருக்கம் |
|---|---|---|---|
| | | | பாகம் -1 : எருசலேமின் சாட்சிகள் |
| | | | I. **சபையின் வல்லமை** |
| L 1 | **அப்போ**: 1 : 1 - 2 | 2 | A. அப்போஸ்தல முன்னுரை |
| L 1 | **அப்போ**: 1 : 3 - 8 | 6 | B. உயிர்தெழுந்த கிறிஸ்துவின்தரிசனமானது |
| L 1 | **அப்போ**: 1 : 9 - 11 | 3 | C. கிறிஸ்துவின் பரமேறுதல் |
| L 1 | **அப்போ**: 1 : 12 - 14 | 3 | D. ஆவிக்காக காத்திருப்பு |
| L 1 | **அப்போ**: 1 : 15 - 26 | 12 | E. மத்தியாவின் நியமனம் |
| L 1 | **அப்போ**: 2 : 1 - 4 | 4 | F. பரிசுத்தாவியினால் நிறப்பப்படுதல் |
| L 2 | **அப்போ**: 2 : 5 - 13 | 9 | G. வேற்று நாவுகளை பேசுதல் |
| L 2 | **அப்போ**: 2 : 14 - 41 | 28 | H. பெந்தெகொஸ்தை பற்றி பேதுரு விளக்கம் |
| L 2 | **அப்போ**: 2 : 42 - 47 | 6 | I. ஆரம்பக்கால சபையின் நடைமுறைகள் |
| | | | II. **சபையின் வளர்ச்சி** |
| L 3 | **அப்போ**: 3 : 1 - 11 | 11 | A. பேதுரு சப்பாணியை சுகமாக்குதல் |
| L 3 | **அப்போ**: 3 : 12 - 26 | 15 | B. பேதுருவின் இரண்டாம் பிர்சங்கம் |
| L 3 | **அப்போ**: 4 : 1 - 4 | 4 | C. பேதுருவையும் யோவானையும் காவலில் வைத்தல் |
| L 3 | **அப்போ**: 4 : 5 - 12 | 8 | D. பேதுரு நியாயசங்கத்திற்கு உபதேசிப்பது |
| L 3 | **அப்போ**: 4 : 13 - 22 | 10 | E. பேதுரு பிரசங்கிக்காத படி நியாயசங்கத்தின் கட்டளை |
| L 4 | **அப்போ**: 4 : 23 - 31 | 9 | F. தைரியத்திற்காக அப்போஸ்தலர்கள் ஜெபம் |
| L 4 | **அப்போ**: 4 : 32 - 37 | 6 | G. ஆதி சபை தாமாகவே பகிர்ந்து கொள்ளுதல் |
| L 4 | **அப்போ**: 5 : 1 - 11 | 11 | H. அன்னியா சப்பீராளின் பொய் |
| L 4 | **அப்போ**: 5 : 12 - 16 | 5 | I. அப்போஸ்தலரின் வல்லமையான அற்புதங்கள் |
| L 4 | **அப்போ**: 5 : 17 - 42 | 27 | J. அப்போஸ்தலரின் உபத்திரவங்கள் |
| L 4 | **அப்போ**: 6 : 1 - 8 | 8 | K. விசாரிப்புக்காரர்களை நியமித்தல் |
| L 4 | **அப்போ**: 6 : 9 - 15 | 7 | L. ஆலோசனை சங்கத்திற்கு முன் ஸ்தோவன் |
| L 5 | **அப்போ**: 7 : 1 - 60 | 60 | M. ஸ்தேவானின் பிரசங்கமும், இரத்தசாட்சி நித்திரை |
| L 6 | **அப்போ**: 8 : 1 - 4 | 4 | N. சவுல் சபையை துன்புருத்தல் |
| | | | **பாகம் -2 : யூதேயாவிலும் சமாரியாவிலும் சாட்சிகள்** |
| L 7 | **அப்போ**: 8 : 5 - 40 | 40 | **I.பிலிப்பின் சாட்சி** |
| | | | **II.சவுலின் மனமாற்றம்** |
| L 8 | **அப்போ**: 9 : 1 : 9 | 9 | A. **சவுலின் மனமாற்றமும் பார்வையற்று போனதும்** |
| L 8 | **அப்போ**: 9 : 10 - 19 | 10 | B. **பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்ட சவுல்** |
| L 8 | **அப்போ**: 9 : 20 - 22 | 3 | C. **தமஸ் குவில் சவுலின் பிரசங்கம்** |
| L 8 | **அப்போ**: 9 : 23 - 31 | 9 | D. **எருசலேமில் சவுலின் சாட்சிகள்** |
| L 9 | **அப்போ**: 9 : 32 - 43 | 13 | III. **பேதுருவின் சாட்சி** |
| L 9 | **அப்போ**: 10 : 1 - 48 | 48 | **பேதுருவின் சாட்சி** |
| L 9 | **அப்போ**: 11 : 1 - 18 | 18 | **பேதுருவின் சாட்சி** |
| | | | IV. **ஆதிசபையின் சாட்சிகள்** |
| L 10 | **அப்போ**: 11 : 19 - 30 | 12 | A. **ஆதிசபையின் சாட்சி** |
| L 10 | **அப்போ**: 12 : 1 - 25 | 25 | B. **ஏரோத்தின் மூலம் உபத்திரவங்கள்** |
| | | வசன | |

| பாடம் | வசனக் குறிப்புகள் | எண்ணிக்கை | உள்ளடக்கத்தின் சுருக்கம் |
|---|---|---|---|
| | | | பாகம் - 3 உலகத்தின் கடைசி மட்டும் சாட்சிகள் |
| | | | I. முதலாம் சுவிஷேச பிரயாணம் |
| L 11 | அப்போ: 13 : 1 - 3 | 3 | A. அந்தியோகியாவிலிருந்து பவுலும், பர்னபாவும் அனுப்படுதல் |
| L 11 | அப்போ: 13 : 4 - 13 | 10 | B. சீப்புருவில் ஊழியம் |
| L 11 | அப்போ: 13 : 14 - 50 | 37 | C. அந்தியோக்கியாவில் ஊழியம் |
| L 11 | அப்போ: 13 : 51 | 1 | D. இக்கோணியாவில் ஊழியம் |
| L 12 | அப்போ: 14 : 1 - 5 | 5 | இக்கோணியாவில் ஊழியம் |
| L 12 | அப்போ: 14 : 6 - 20 | 15 | E. லீஸ்திராவில் ஊழியம் |
| L 12 | அப்போ: 14 : 21 - 25 | 5 | F. திரும்பி வரும் பிரயாணத்தின் ஊழியம் |
| L 12 | அப்போ: 14 : 26 - 28 | 5 | G. முதல் பிரயாணத்தின் அறிக்கை |
| L 13 | அப்போ: 15 : 1 - 35 | 35 | II. எருசலேம் ஆலோசனை |
| | | | III. இரண்டாம் சுவிஷேச பிரயாணம் |
| L 14 | அப்போ: 15 : 36 - 41 | 6 | A. யோவன், மாற்குவின் கருத்து வேறுபாடு |
| L 14 | அப்போ: 16 : 1 - 5 | 5 | B. தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் |
| L 14 | அப்போ: 16 : 6 - 10 | 5 | C. துரோவா : மக்கிகதொனியாவுக்கு அழைப்பு |
| L 14 | அப்போ: 16 : 11 - 40 | 30 | D. பிலிப்பி : விரிவான ஊழியம் |
| L 14 | அப்போ: 17 : 1 - 9 | 9 | E. தெசலோனிக்கே பட்டணம் |
| L 14 | அப்போ: 17 :10 - 15 | 6 | F. பெரோயா : அநேகர் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டனர் |
| L 15 | அப்போ: 17 : 16 - 34 | 21 | G. அத்தேனே பட்டணம்: மார்ஸ் மேடையில் பவுலின் பிரசங்கம் |
| L 15 | அப்போ: 18 : 1 - 17 | 17 | H. கொரிந்து பட்டணம் |
| L 15 | அப்போ: 18 : 18 - 22 | 5 | I. அந்தியோகியாவுக்கு திரும்ப போகுதல் |
| | | | IV.மூன்றாவது சுவிஷேச பிரயாணம் |
| L 16 | அப்போ: 18 : 23 | 1 | A. கலாத்தியா, பிரிகியா நாடு |
| L 16 | அப்போ: 18 : 24 -28 | 5 | B. எபேசு பட்டணத்தில் 3 வருட ஊழியங்கள் |
| L 16 | அப்போ: 19 : 1 - 41 | 41 | எபேசு பட்டணத்தில் 3 வருட ஊழியங்கள் |
| L 16 | அப்போ: 20 : 1 - 5 | 5 | C. மக்கிகதொனியா |
| L 17 | அப்போ: 20 : 13 - 38 | 26 | D. துரோவா: ஐத்தீகு மெத்தையிலிருந்து கிழே விழுதல் |
| L 17 | அப்போ: 20 : 13 -38 | 26 | E. மித்திலேனே பட்டணம் : பவுல் விடைப் பெறுதல் |
| L 17 | அப்போ: 21 : 1 - 6 | 6 | F. திருப்பட்டணம்: பவுலுக்கு எச்சரிக்கை |
| L 17 | அப்போ: 21 : 7 - 16 | 10 | G. செசரியாப்பட்டணம் : அகபுவின் கணிப்பு |
| | | | V. ரோமாபுரிக்கு பிரயாணம் |
| L 19 | அப்போ: 21 : 17 - 40 | 24 | A. எருசலேமில் பவுலின் சாட்சிகள் |
| L 19 | அப்போ: 22 : 1 - 30 | 30 | எருசலேமில் பவுலின் சாட்சிகள் |
| L 19 | அப்போ: 23 : 1 - 33 | 33 | எருசலேமில் பவுலின் சாட்சிகள் |
| L 19 | அப்போ: 23 : 34 - 35 | 2 | B. செசரியா பட்டணத்தில் பவுலின் சாட்சிகள் |
| L 19 | அப்போ: 24 : 1 - 27 | 27 | செசரியா பட்டணத்தில் பவுலின் சாட்சிகள் |
| L 19 | அப்போ: 25 : 1 - 27 | 27 | செசரியா பட்டணத்தில் பவுலின் சாட்சிகள் |
| L 19 | அப்போ: 26 : 1 - 32 | 32 | செசரியா பட்டணத்தில் பவுலின் சாட்சிகள் |
| L 20 | அப்போ: 27 : 1 - 31 | 44 | C. ரோமாபுரியில் பவுலின் சாட்சிகள் |
| L 20 | அப்போ: 28 : 1 - 31 | 31 | ரோமாபுரியில் பவுலின் சாட்சிகள் |

# ANNUAL EXAM QUESTIONS (2004 - 2017)

| Std | Q.no. | In no. | Questions | Annual Exam | Part |
|---|---|---|---|---|---|
| 11 | 4 | 1 | பலியின் சிந்தை முதலாவது யாரிடம் காணப்பட்டது? பலிகள் யார் யாருக்கிடையில் ஒப்புரவாகுதலைக் கொண்டுவந்தன? | 2009 | A |
| 11 | 1 | 1 | பலிபீடத்தின் ஊழியமே மற்றெல்லா ஊழியங்களிலும் முதன்மையானது என்பதை எவ்வாறு அறிகிறோம்? | 2008 | A |
| 11 | 1 | 1 | பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டு வந்த பலிகள் யாவும் எவ்விரண்டு காரியங்களுக்கு நிழலாட்டமாயிருக்கின்றன? | 2005 | A |
| 11 | 1 | 1 | பானபலி எதைக் குறிக்கிறது? | 2004 | A |
| 11 | 1 | 1 | பழைய ஏற்பாட்டு காலத்தில் (அ) கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் செலுத்தப்பட வேண்டிய பலிகள் யாவை? (ஆ) கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய பலிகள் யாவை? (இ) மகா பரிசுத்தமான பலிகள் யாவை? | 2017 | B |
| 11 | 3, 1 | 1 | ஐந்து பெரிய பலிகள் யாவை? அவற்றுள் மனப்பூர்வமாகச் செலுத்தப்பட வேண்டிய பலிகளும், கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய பலிகளும் யாவை? | 2011, 2017 | B |
| 11 | 5 | 1 | ஐந்து பெரிய பலிகள் யாவை? ஆசாரியன், சபையார் ஆகியோரின் பாவத்தினால் ஆசரிப்புக் கூடாரத்தில் தீட்டுப்படும் இடங்கள் யாவை? | 2009 | B |
| 11 | 1 | 1 | ஆசரிப்புக் கூடாரத்தில் முதன்னையான ஊழியம் எது? எதனால்? பெரிய பலிகளில் மகா பரிசுத்தமான பலிகள் யாவை? | 2004 | B |
| 11 | 4,2,2 | 1 | ஐந்து சிறிய பலிகள் யாவை? அவைகளின் ஆவிக்குரிய கருத்துக்களை எழுது. | 2016, 2007,2010 | C |
| 11 | 1,3 | 1 | பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செலுத்தப்பட்டு வந்த ஐந்து பெரிய பலிகள் மற்றும் ஐந்து சிறிய பலிகளைக் குறிப்பிடுக. | 2015, 2012 | C |
| 11 | 2,2 | 1 | ஐந்து சிறிய பலிகள் யாவை? அவைகள் எவற்றை வெளிப்படுத்துகின்றன? | 2010, 2007 | C |
| 11 | 1 | 1 | தேவனுக்குக் பயப்படும் பயத்தைக் குறித்து ஒரு சிறிய பிரசங்கத்தை எழுது. வசன ஆதாரங்கள் கொடுக்கக்கூடிய அடங்களில் வசன ஆதாரங்கள் கொடுக்கவும். | 2017 | G |
| 11 | 4 | 2 | பாவ மன்னிப்பை நாம் எவ்விதம் பெற்றுக்கொள்கிறோம்? | 2014, 2005 | A |
| 11 | 4, 6, 2 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதற்கான இரு காரணங்கள் யாவை? | 2013,2010, 2008 | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 4 | 2 | பஸகா ஆசரிப்பில் “வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டி“ என்பது ஆவிக்குரிய பிரகாரமாக எதை வெளிப்படுத்துகிறது? | 2012 | A |
| 11 | 2,6 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டியில் ஒன்றும் விடியற்காலம்வரை மீதியாக வைக்கலாகாது” என்பது எதைக் காட்டுகிறது? | 2011, 2009 | A |
| 11 | 4 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டி ஒரு வயதாக இருக்க வேண்டும் என்பது எதைக் காட்டுகிறது? | 2006 | A |
| 11 | 2 | 2 | கால்களில் பாதரட்சையை தொடுத்துக்கொண்டு பஸ்காவை புசித்தல் - விளக்கு. | 2004 | A |
| 11 | 4 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டி சாயங்காலத்திலே அடிக்கப்பட்டதின் ஆவிக்குறிய கருத்து யாது? | 2016 | B |
| 11 | 1 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டி பதினான்காம் தேதி வரை வைக்கப்படுதல்“ - இது எதைக் காட்டுகிறது? | 2015 | B |
| 11 | 1 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தெளித்தல்“ - இதன் ஆவிக்குறிய கருத்து யாது? | 2014 | B |
| 11 | 3 | 2 | பஸ்கா ஆசரிப்பில் பின்வருபவை எவற்றைக் காட்டுகின்றன? (i) அரைகளில் கச்சைக் கட்டிக் கொள்ளுதல் (ii) கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொள்ளுதல், (iii) கையில் தடி பிடித்துக்கொள்ளுதல், (iv) தீவிரமாய் புசித்தல். | 2012 | B |
| 11 | 5 | 2 | பத்தந்தேதியிலே தெரிந்து கொள்ளப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டி பதினான்காம் தேதிவரை வைக்கப்படுதலைப் பற்றி விவரி. | 2007 | B |
| 11 | 1,1 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பதன் ஆவிக்குரிய அர்த்தங்களை எழுது. | 2017, 2013 | C |
| 11 | 2 | 2 | பழைய ஏற்பாட்டின் ஊழியத்தைச் செய்யும்படி தேவன் ஏற்படுத்தின பிரிவினர் யாவர்? இவர்களின் தலைவரின் தகுதிகளைப் பற்றி விவரி. | 2008 | C |
| 11 | 1, 2 | 2 | பஸ்காவைப் புசிக்கும் விதத்தை விவரி. | 2014, 2008 | D, E |
| 11 | 3 | 2 | பஸ்கா ஆட்டுக்குட்டி தெரிந்துகொள்ளப்பட வேண்டிய விதத்தை நமது ஆவிக்குரிய அனுபவங்களோடு சம்பந்தப்படுத்தி விவரி. | 2009 | D |
| 11 | 1 | 2 | தேவனின் திரித்துவத்தை குறித்து சந்தேகமுள்ள ஒரு நண்பனுக்கு நீ எவ்விதம் அதை விவரிப்பாய் என்பதை எழுது. | 2016 | G |
| 11 | 6,5,5 | 3 | சர்வாங்க தகன பலியின் பலி பொருட்கள் யாவை? | 2017, 2014, 2006 | A |
| 11 | 4 | 3 | சர்வாங்க தகன பலியல் காளை எதைக் குறிக்கிறது? | 2016 | A |
| 11 | 6 | 3 | சர்வாங்க தகனபலி எதைக் குறிக்கிறது? நாம் இந்த அனுபவத்தை எதன் மூலம் பெற்றுக்கொள்கிறோம்? | 2015 | A |
| 11 | 3,3 | 3 | சர்வாங்க தகனபலியில் ”புறாவின் தலையைக் கிள்ளுதல்” எதைக் காண்பிக்கிறது? | 2013, 2005 | A |
| 11 | 6(2) | 3 | காளை, வெள்ளாடு இவைகள் வெளிப்படுத்தும் விழுந்துபோன மனுஷனுடைய சுபாவங்கள் யாவை? | 2011(2013) | A,C |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 3 | 3 | சர்வாங்க தகனபலியாக காட்டுப்புறா அல்லது புறாக்குஞ்சு செலுத்தப்படும்போது என்ன செய்ய வேண்டும் என்பதை ஆவிக்குரிய அர்த்தத்துடன் விவரி. | 2005 | A |
| 11 | 2, 3(1) | 3 | சர்வாங்க தகனபலியில், சாம்பலைக் குறித்த பிரமாணத்தையும் அதன் ஆவிக்குறிய கருத்துக்களையும் எழுது. | 2017, 2010, (2006) | B,C |
| 11 | 1 | 3 | சர்வாங்க தகனபலி செலுத்தப்படும்போது "இரத்தம்தெளிக்கப்படுதல்", மற்றும் "சந்துசந்தாகத் துண்டித்தல்" ஆகியவை வெளிப்படுத்தும் ஆவிக்குறிய அர்த்தங்களை எழுதுக. | 2008 | B |
| 11 | 1 | 3 | சர்வாங்க தகனபலியிலி "அக்கினி போடுதல்" மற்றும் "அக்கினியின் மேல் கட்டைகளை அடுக்கிவைத்தல்" என்பவைகளை விவரி. | 2005 | B |
| 11 | 3 | 3 | நாம் பாவத்தை எவ்வாறு ஜெயிக்கலாம்? | 2017 | C |
| 11 | 2 | 3 | சர்வாங்க தகனபலியின் பலிப்பொருட்களான காளை, செம்மறியாடு, வெள்ளாடு, புறா அவைகள் வெளிப்படுத்தும் விழுந்துபோன மனுஷனுடைய சுபாவஙடகள் யாவை? | 2013 | C |
| 11 | 4 | 3 | சர்வாங்க தகனபலியின் பலிப்பொருட்கள் வெளிப்படுத்தும் விழுந்துபோன மனுஷனுடைய சுபாவங்ககளை விளக்கி எழுதுக. | 2007 | C |
| 11 | 1 | 3 | சாம்பலைக் குறித்த பிரமாணத்தை விளக்குக. | 2006 | C |
| 11 | 1, 1 | 3 | சர்வாங்க தகனபலியில் காளை, செம்மறியாடு, வெள்ளாடு இவைகளிலொன்று பலி செலுத்தப்பட்ட முறையையும் அதன் ஆவிக்குரிய அர்த்தங்களையும் வசன ஆதாரங்களுடன் விவரி. | 2015, 2004 | D, E |
| 11 | 3 | 3 | பரிசுத்தமாகுதல் என்றால் என்ன? இரட்சிப்பு, தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஆகியவற்றின் மூலம் இந்த பரிசுத்தமாகுதல் எவ்விதம் ஆரம்பமாகிறது என்பதை எழுது. பரிசுத்த ஆவியினால் நமது ஆத்துமா பரிசுத்தமாக்கப்படுதலை விளக்கி எழுதுக. | 2008 | E |
| 11 | 1 | 3 | சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணத்தையும் அதன் ஆவிக்குரிய கருத்தினையும் எழுதுக. காளை, செம்மறியாடு, வெள்ளாடு, காட்டுப்புறா (புறாக்குஞசு) - இவைகள் பலிசெலுத்தப்படும் முறைகளையும், அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களையும் எழுதுக. | 2009 | E |
| 11 | 1 | 3 | கடந்த அநேக வருடங்களாக ஞாயிறு பள்ளியின் மூலம் அநேக காரியங்களைத் தேவன் உனக்குப் போதித்திருக்கிறார். நீ கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் தேவனுக்காக அல்லது சபைக்காக நீ என்ன செய்திருக்கிறாய்? | 2015 | G |
| 11 | 5,4 | 4 | போஜனபலியில், தானிமானது மெல்லிய மாவாகும் வரை இடிக்கப்பட வேண்டும் - அதன் ஆவிக்குறிய அர்த்தம் என்ன? | 2012, 2005 | A |
| 11 | 3 | 4 | போஜன பலியில் உப்பு சேர்க்கப்பட வேண்டும் என்பது எதைக் காட்டுகிறது? | 2010 | A |
| 11 | 6 | 4 | போஜன பலியில் தேன் சேர்க்கக்கூடாது என்பது எதை வெளிப்படுத்துகிறது? | 2006 | A |
| 11 | 5 | 4 | போஜன பலியிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? | 2006 | B |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 2 | 4 | போஜன பலியில் கீழ்க்கண்டவற்றை விவரி. (அ) அது புலிப்பில்லாததாக செய்யப்பட்டது. (ஆ) அதில் உப்பு சேர்க்கப்பட வேண்டும் | 2004 | B |
| 11 | 1 | 4 | பின்வருவனவற்றை அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களுடன் விவரி: (அ) போஜன பலி செலுத்தப்பட வேண்டிய முறை, (ஆ) போஜன பலியில் தேன் சேர்க்கப்படக் கூடாது, (இ) போஜன பலியில் உப்பு சேர்க்கப்பட வேண்டும். | 2016 | D |
| 11 | 1 | 4 | போஜன பலியைக் குறித்து விளக்குக. | 2007 | E |
| 11 | 1 | 4 | போஜன பலி - விவரி. | 2014 | E |
| 11 | 1 | 4 | நீ பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தால், நீ பரிசுத்த ஆவியோடு எவ்விதம் ஒன்றாக சேர்ந்து ஜீவிக்கிறாய் என்பதை விவரி. நீ பரிசுத்த ஆவியைப் பெற்றிராவிடில் அதற்கான காரணம் இன்னதென்றும், அதைப் பற்றி நீ என்ன செய்யப்போகிறாய் என்பது குறித்தும் விளக்கு. | 2014 | G |
| 11 | 5 | 5 | சமாதான பலி எதை வெளிப்படுத்துகிறது? | 2016 | A |
| 11 | 5,3 | 5 | கர்த்தரைச் சமாதானத்தோடு சந்திக்க நாம் காத்துக்கொள்ள வேண்டிய சமாதானத்தின் நான்கு அனுபவங்களை எழுது. | 2010, 2006 | A |
| 11 | 3 | 5 | சமாதான பலியில், “மிருகத்தின் தலையின்மேல் கை வைத்தல்” என்பது எதைக் குறிக்கிறது? ஒரு வசன ஆதாரம் தருக. | 2008 | A |
| 11 | 2 | 5 | சமாதான பலி” வெளிப்படுத்தும் சத்தியம் என்ன? கர்த்தரைச் சமாதானத்துடன் சந்திக்க நாம் காத்துக்கொள்ள் வேண்டிய சமாதானத்தின் நான்கு அனுபவங்களை எழுது. | 2014 | B |
| 11 | 2 | 5 | கர்த்தரை சமாதானத்துடன் சந்திக்க நாம் காத்துக்கொள்ள வேண்டிய சமாதானத்தின் நான்கு அனுபவங்கள் யாவை? “சமாதான பலி” - இதன் ஆவிக்குரிய அர்த்தங்களை விளக்கி எழுது. | 2013 | E |
| 11 | 2 | 5 | சமாதான பலியின் முழு விவரங்களையும் தொகுத்து எழுது. | 2004 | F |
| 11 | 1 | 5 | தன்னுடைய ஜீவியத்திலுள்ள ஏதோவொரு பாவத்தினிமித்தம் சபைக்கு வருவதையே நிறுத்தியிருக்கும் உன் வயதுக்கொத்த வயதையுடைய ஒரு நபரை நீ சந்திக்கிறாய் என்று வைத்துக்கொள். அவனை மீண்டும் சபைக்கு கொண்டுவருவதற்கு நீ அவனிடம் என்ன சொல்லுவாய்? | 2013 | G |
| 11 | 3, 3 | 6 | (i) ஒரு ஆசாரியன் (ii) சபையார் (iii) ஒரு பிரபு (iv) சாதாரண ஜனங்களில் ஒருவன் - பாவம் செய்தால் செலுத்தப்படவேண்டிய பாவநிவாரண பலிக்கான பலிப்பொருட்கள் யாவை? | 2011,,2013 | A,B |
| 11 | 2 | 6 | ஆசாரியன்” “சபையார்” ஆகியோரின் பாவத்தினால் ஆசர்ப்புக் கூடாரத்தின் எந்தெந்த இடங்கள் தீட்டுப்படுகிறது? | 2006 | A |
| 11 | 5 | 6 | எப்படிப்பட்ட பாவங்களை நிவர்த்தி செய்யும்படி பாவநிவாரண பலி செலுத்தப்படுகிறது? | 2005 | A |
| 11 | 3 | 6 | தூபபீடத்தின் கொம்புகள் எதைக் குறிக்கிறது? | 2004 | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 3, 2 | 6 | பாவ நிவாரண பலியில், கீழ்க்கண்டவர்கள் பாவம் செய்தால் அவர்கள் செலுத்த வேண்டிய பலிப்பொருட்கள் யாவை? (அ) ஆசாரியன், (ஆ) சபையார்இ (இ) பிரபு, (ஈ) சாதாரண ஜனங்களில் ஒருவன். | 2013, 2008 | B |
| 11 | 4 | 6 | பாவ நிவாரண பலி எதைக் குறிக்கிறது? அது எப்படிப்பட்ட பாவங்களுக்காகச் செலுத்தப்படுகிறது? பாவநிவாரண பலியின் பலிப்பொருட்கள் பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்படுகின்றன - இது எதைக் காட்டுகின்றது? | 2010 | B |
| 11 | 3 | 6 | பின்வருவனவற்றைப் பற்றி சிறு குறிப்பு வரைக: (அ) தூபபீடம் (ஆ) வெண்கல பலிபீடம். | 2009 | C |
| 11 | 2 | 6 | பாவ நிவாரண பலியில் காளையில் தகனிக்கப்பட வேண்டிய பாகங்கள் யாவை? | 2006 | C |
| 11 | 3 | 6 | ஆசாரியன், "சபையார் இவர்களின் பாவத்தினால் ஆசரிப்புக் கூடாரத்தில் தீட்டுப்படும் இடங்கள் யாவை? அவற்றின் ஆவிக்குரிய கருத்துக்களையும், சபை மீண்டும் முந்தின நிலைக்குக் கொண்டுவரப்படும்படியாக என்ன செய்யப்பட வேண்டும் என்பதையும் விளக்கு. | 2015 | D |
| 11 | 1 | 6 | அநேக நவீன இளம் கிறிஸ்தவர்கள் திரைப்படங்களைப் பார்க்கிறார்கள். அது ஏன் தவறானது என்பதை விவரிக்கும் வகையில் ஒரு கட்டுரை எழுது. குறிப்பாக வேதாகம கதைகளை விளக்கிக் காண்பிக்கும் கிறிஸ்தவத் திரைப்படங்களைப் பார்ப்பதும் தவறானது என்பதை விவரி. | 2012 | G |
| 11 | 6 | 7 | பரிசுத்தவான்கள் தங்களுடைய எல்லையை மீறிப் போகக்கூடாது என்பதை எந்தப் பலி வெளிப்படுத்துகிறது? எல்லையை மீறிச் சென்ற ஒருவரைக் குறிப்பிடு. | 2008 | A |
| 11 | 2,(3) | 7 | குற்றநிவாரண பலி எந்தெந்தக் குற்றங்களுக்காகச் செலுத்தப்பட்டது? | 2015, (2011) | B, C |
| 11 | 3 | 7 | குற்றநிவாரண பலி எந்தெந்தக் குற்றங்களுக்காகச் செலுத்தப்பட்டது? | 2011 | C |
| 11 | 4 | 7 | குற்ற நிவாரண பலியில் ஆடு எப்போதும் மந்தையைப் பின் செல்லும் இயல்புடையது என்பதிலிருந்து நாம் என்ன படிக்கிறோம்? | 2004 | C |
| 11 | 1,3 | 7 | குற்ற நிவாரண பலியைக் குறித்து விவரி. | 2017, 2010 | D |
| 11 | 3 | 7 | "குற்றநிவாரண பலி" - வசன ஆதாரங்களுடன் விளக்குக. | 2010 | D |
| 11 | 1 | 7 | குற்றநிவாரண பலியைக் குறித்து முழுவதுமாக வசனத்துடன் விவரித்து எழுதுக. | 2005 | E |
| 11 | 1 | 7 | கிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்படும் கிறிஸ்தவர்களை அந்திக்கிறிஸ்து என்ன செய்வான் என்பது குறித்து ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரை எழுது. | 2011 | G |
| 11 | 6 | 8 | மனுஷனை ஏன் பாவமும் மரனமும் ஆட்கொண்டன? பாவம் எப்போது உயிர் கொண்டது? | 2016 | A |
| 11 | 1 | 8 | மனசாட்சியின் கால நியமத்தில் வாழ்ந்த நீதிமான்களில் ஆறு நபர்களின் பெயர்களை எழுது. அவாகளுக்குப் பிரமாணமாயிருந்தது எது? | 2015 | A |
| 11 | 6,2,5 | 8 | தூதர்கள் அரசாட்சியில் உள்ள நான்கு வகுப்புகள் யாவை? | 2014,2013, 2007 | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 4 | 8 | கீழ்க்கண்டவற்றிற்கு வசன ஆதாரம் தருக. (அ) தூதர்கள் தங்களுக்குரிய பூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்கள். (ஆ) தூதர்களுக்கு சுயாதீன சித்தம் இருந்தது. | 2004 | A |
| 11 | 5 | 8 | பின்வரும் கால நியமங்கள் எது முதல் எது வரையுள்ள காலங்கலைக் குறிப்பிடுகின்றன? (அ) மனசாட்சியின் கால நியமம் (ஆ) நியாயப்பிரமான கால நியமம் (இ) இடைக்கால நியமம் (ஈ) கிருபையின் கால நியமம். | 2016 | B |
| 11 | 7, 2,( | 8 | ஆதி மனிதனுக்கு அருளப்பட்டிருந்த ஏழு ஆசீர்வாதங்களை எழுது. அவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு வசன ஆதாரம் கொடு. | 2014, 2007, 2010,(2017) | B,C |
| 11 | 4, 5 | 8 | மனசாட்சியின் கால நியமம் - குறிப்பு வரைக. | 2012, 2016 | B |
| 11 | 2 | 8 | ஆதி மனிதனுக்கு உண்டாயிருந்த ஆசீர்வாதங்களை எழுது. அவன் அவற்றை எவ்விதம் இழந்தான்? | 2010 | B |
| 11 | 4 | 8 | தூதர்கள் எவ்விதம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தனர்? அவர்கள் அரசாட்சியில் உள்ள நான்கு வகுப்புகள் யாவை? | 2009 | B |
| 11 | 2 | 8 | அறியாமையின் காலத்தில் ஜீவித்த மனிதனுக்கு உண்டாயிருந்த ஏழு ஆவீர்வாதங்களை விவரி. | 2017 | C |
| 11 | 2 | 8 | அறியாமையின் கால நியமத்தைப் பற்றி எழுதுக. | 2016 | D |
| 11 | 2 | 8 | அறியாமையின் கால நியமத்தில் மனிதன் அனுபவித்த ஏழுவித ஆசீர்வாதங்களை விவரி. முற்றும் நியாயபிரமான காலத்தையும் இடைக் காலத்தையும் எழுது. | 2004 | E |
| 11 | 1,1 | 8 | பின்வருவனவற்றை விளக்குக: (அ) அறியாமையின் கால நியமம், (ஆ) மனச்சாம்சியின் கால சியமம், (இ) நியாயப்பிரமாண கால நியமம். | 2011, 2006 | E |
| 11 | 1 | 8 | பாவத்தின் மேல் நீ ஜெயம் பெற்றுக்கொள்ளும்படியாக இயேசு உனக்காகச் செய்து முடித்தவைகளை, குறைந்த பட்சம் ஐந்து வசன ஆதாரங்களுடன் விவரி. | 2010 | G |
| 11 | 5 | 9 | கிருபையின் கால நியமம் எது முதல் எது வரையுள்ள காலத்தைக் குறிக்கிறது? | 2017 | A |
| 11 | 1, 5 | 9 | நாம் இப்போது எந்தக் கால நியமத்தில் ஜீவிக்கிறோம்? இந்தக் காலம் எதுவரை நீடிக்கும்? | 2013, 2009 | A |
| 11 | 6 | 9 | அர்மகெதோன் யுத்தம்" - குறிப்பு வரைக. | 2012 | A |
| 11 | 5 | 9 | அந்திக்கிறிஸ்துதான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று யூதர்கள் எண்ணுவதற்கு காரணம் என்ன? வசன ஆதாரம் தருக. | 2004 | A |
| 11 | 4, 4 | 9 | இடைக்கால நியமம்" - குறிப்பு வரைக. | 2013, 2011 | B |
| 11 | (2,1,3 | 9 | கிருபையின் காலத்தைப் பற்றிய நியமங்களில் எவையேனும் நான்கினைப் பற்றி எழுதுக. | 2005,(2015, 2010, 2005) | B,C |
| 11 | 2,1,3 | 9 | கிருபையின் காலத்தைப் பற்றிய நியமங்கள் யாவை? | 2015, 2010,2005 | C |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 2 | 9 | உபத்திரவ கால நியமம் - விளக்குக. | 2104 | D |
| 11 | 1 | 9 | உபத்திரவ கால நியமம் பற்றியும் மகா உபத்திவ கால நியமம் பற்றியும் வசன ஆதாரத்துடன் விளக்கி எழுது. | 2007 | F |
| 11 | 1 | 9 | நீ ஞாயிறு பள்ளியை இவ்வாண்டில் முடிக்கிறாய். உன்னுடைய ஆவிக்குரிய எதிர்காலத்தைப் பற்றிய உனது திட்டங்கள் யாவை? உன்னுடைய ஜீவியத்தைப் பாதுகாக்க நீ என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறாய்? நீ தேவனுடைய சேவையில் எவ்விதம் பிரயோஜனமாய் இருப்பாய்? | 2009 | G |
| 11 | 1 | 10 | ஆயிர வருடம் இந்தப் பூமியில் அரசாட்சி செய்யப்போகிறவர்கள் யார்? | 2014 | A |
| 11 | 1,6 | 10 | ஆயிர வருட அரசாட்சி ஒரு "சாபம் இல்லாத ராஜ்யம்" என்பது பற்றி சிறு குறிப்பு வரைக. | 2012, 2005 | A |
| 11 | 6, | 10 | ஆயிரவருட அரசாட்சியானது சாபம் இல்லாத ராஜ்யம் என்பதை வசனத்துடன் எழுது. | 2005 | A |
| 11 | 8 | 10 | வெள்ளைச்சிங்காசன நியாயத்தீர்புக்கு முன்னதாகவும் அதற்கு பின்னரும் அக்கினிக் கடலிலே தள்ளப்படுபவர்கள் யாவர்? | 2005 | A |
| 11 | 6 | 10 | ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பாகவும் அதின் முடிவிலும் நடக்க வேண்டிய யுத்தங்களைக் கூறு. | 2004 | A |
| 11 | , 3,4(3 | 10 | ஆயிர வருட அரசாட்சயின்போதுள்ள ராஜ்யத்தின் தன்மைகளைக் குறிப்பிடுக. | 2017, 2007,2008 (2004) | B,C |
| 11 | 4,(3) | 10 | ஆயிர வருட அரசாட்சியின் தன்மைகள் ஆறினைக் குறிப்பிட்டு, அதில் ஒன்றினை விளக்குக. | 2008,( 2004) | B,C |
| 11 | 3 | 10 | பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு - குறிப்பு வரைக. | 2004 | B |
| 11 | 4 | 10 | பின்வருவனவற்றைக் குறித்து சிறு குறிப்பு வரைக: (அ) கோகு மாகோகு யுத்தம் (ஆ) பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு. | 2015 | C |
| 11 | 3 | 10 | ஆயிர வருஷ அரசாட்சியின் தன்மைகள் யாவை? அதில் ஏதேனும் ஒன்றை சவனத்துடன் விளக்கு. | 2004 | C |
| 11 | 1 | 10 | ஆயிர வருட ராஜ்யத்தின் தன்மைகளை விளக்குக. | 2011 | D |
| 11 | 3 | 10 | ஆயிர வருட அரசாட்சியின் தன்மைகளை வசன ஆதாரத்துடன் எழுது. | 2006 | E |
| 11 | 1,2 | 10 | பின்வருவனவற்றைப் பற்றி குறிப்பு வரைக: (அ) ஆயிர வருட அரசாட்சியின் ராஜ்யத்தின் தன்மைகள் (ஆ) கோகு மாகோகு யுத்தம் (இ) பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு | 2013, 2009 | E |
| 11 | 1 | 10 | இந்நாட்களில் கர்த்தர் உன்னோடு வேதவசனங்களின் மூலமாகவோ தீர்க்கதரிசனத்தின் வாயிலாகவோ அல்லது வேறு எந்த விதத்திலாவது பேசுவது யாது? கர்த்தர் உன்னோடு பேசவில்லையென்றால் அதற்குத் தடையாக உள்ள காரியங்களையும், கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க வேண்டுமென உனக்கு இருக்கும் ஆவிக்குரிய விருப்பத்தையும் விவரி. | 2008 | D |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 1,2, 5 | 11 | நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்கள் நான்கினைக் குறிப்பிடு. | 2016, 2015, 2011 | A, B |
| 11 | 7 | 11 | நித்தியம்" - வசனத்துடன் விவரி. | 2005 | A |
| 11 | 5 | 11 | நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்கள் யாவை? அவற்றைச் சுதந்தரிப்பவர்கள் யாவர்? | 2011 | B |
| 11 | 3 | 11 | புறம்பான இருளில் யாரெல்லாம் பங்கடைவார்கள்? அது எப்படிப்பட்ட இடமாயிருக்கும்? | 2009 | B |
| 11 | 3 | 11 | புதிய வானம், புதிய பூமி இவைகளைப் பற்றி வசன ஆதாரங்களுடன் சிறு குறிப்பு தருக. | 2008 | B |
| 11 | 1 | 11 | நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்களாகிய "புதிய எருசலேம்", "சீயோன்" இவைகளைக் குறித்து சிறு குறிப்பு வரைக. | 2006 | B |
| 11 | 4 | 11 | புறம்பான இருள் - எப்படிப்பட்ட இடம்? அங்கு பங்கடையும் கூட்டத்தார் யாவர்? | 2014 | C |
| 11 | 3 | 11 | அப்போஸ்தலனாகிய யூதா பின்மாற்றக்காரர்களைக் குறித்து என்ன சொல்கிறார்? அவர்களுடைய மரணத்திற்குப் பின் அவர்களுக்குச் சம்பவிப்பது என்ன? | 2010 | C |
| 11 | 3 | 11 | பின்வருவனவற்றிற்குக் குறிப்பு வரைக. (அ) அகாதமான பாதாளம் (ஆ) பாதாளம் (இ) புறம்பான இருள். | 2011 | D |
| 11 | 1 | 11 | பாதாளம், புறம்பான அருள் - விவரி. ஆவ்விடங்களில் உள்ளவர்கள் எப்போது அக்கினி கடலில் தள்ளப்படுவார்கள்? | 2017 | E |
| 11 | 2 | 11 | நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்களைக் குறித்து எழுது. புறம்பான இருளில் பங்கடைபவர்கள் யாவர்? ஆவர்களுடைய நித்திய நியாயத்தீர்ப்பைக் குறித்து விவரி. | 2012 | E |
| 11 | 1 | 11 | சங்கீதம்: 51: 10ல், தாவீது, "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் ......." என்கிறார். ஞாயிறு பள்ளயில் நீ படித்து வந்த காலங்களில் கர்த்தர் உன்னிலே சுத்த இருதயத்தை சிருஷ்டித்துக் கொண்டிருந்தாரா? உனது அனுபவங்களை எழுதுக. | 2007 | D |
| 11 | 4 | 12 | பழைய ஏற்பாட்டு ஊழியத்தை செய்யும்படி கர்த்தரால் நியமிக்கப்பட்ட பிரிவினர் யாவர்? ஆவர்களின் தலைவன் யார்? | 2017, 2004 | A |
| 11 | 1 | 12 | கோகாத்தியர்" - குறிப்பு வரைக. | 2006 | A |
| 11 | 3, 4(2) | 12 | பிரதான ஆசாரியரின் தகுதிகள் யாவை? பிரதான ஆசாரியன், ஆசாரியர்கள் ஆகியவர்களின் கடமைகளில் எவையேனும் நான்கினை எழுது. | 2016, 2014,(2011) | B,C |
| 11 | 4,(3,3) | 12 | பிரதான ஆசாரியன், ஆசாரியர்கள் இவர்களது கடமைகளில் எவையேனும் எட்டினை எழுது. | 2014(2013, 2005) | B, C |
| 11 | 2 | 12 | இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானான் வரை தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டபோது நிறைவேற்றப்பட்ட ஊழியத்தை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம்? அவைகளை விவரி. | 2005 | B |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 3,3,2 | 12 | பிரதான ஆசாரியன், ஆசாரியர்கள் இவர்களது கடமைகளில் எவையேனும் ஐந்தினை எழுது. | 2013, 2005, 2011 | C |
| 11 | 2 | 12 | பிரதான ஆசாரியன், ஆசாரியன் இவர்களது கடமைகளையும், பிரதான ஆசாரியனின் தகுதிகளையும் குறிப்பிடுக. | 2011 | C |
| 11 | 3 | 12 | புதிய ஏற்பாட்டு ஊழியத்தில் ”போதகர்கள்”, ”தீர்கதரிசிகள்” மற்றும் “சுவிசேஷகர்கள்” இவர்களுக்கு அடையாளமாயிருக்கிற பழைய ஏற்பாட்டின் மூன்று கூட்டத்தாரைப் பற்றி வசன ஆதாரத்துடன் விவரித்து எழுதுக. | 2007 | C |
| 11 | 3 | 12 | லேவியரைப் பற்றி சிறு குறிப்பு வரைக. | 2006 | C |
| 11 | 3 | 12 | லேவியரைக் குறித்தும், அவர்களுக்குள் காணப்பட்ட மூன்று பிரிவினரைக் குறித்தும் விவரி. | 2017 | D |
| 11 | 2 | 12 | பழைய ஏற்பாட்டின் முதல் பிரதான ஆசாரியன் யார்? அவன் லேவி கோத்திரத்தில் எந்த வம்சத்திற்குட்பட்டவன்? பாவ நிவிர்த்தி செய்ய எந்த தேதியில் அவன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பான்? பிரதான ஆசாரியன், ஆசாரியர்கள் ஆகியோரின் கடமைகள் யாவை? | 2009 | D |
| 11 | 2 | 12 | லேவியரையும் அவர்களுடைய மூன்று பிரிவினரையும் குறித்து விளக்குக. லேவியர், ஆசாரியர், பிரதான ஆசாரியன் ஆகியோர் ஆசரிப்புக் கூடாரத்தில் எந்தெந்த இடங்களில் ஊழியம் செய்தனர்? | 2015 | E |
| 11 | 1 | 12 | ஆசரிப்புக் கூடாரத்தில் கோகாத்தியர், கெர்சோனியர், மெராரியர் ஆகியோருடைய பணிகள் யாவை? புதிய ஏற்பாட்டில் அவர்கள் யார் யாருக்கு அடையாளமாயிருக்கின்றனர்? பழைய ஏறடபாட்டு ஊழியம் புதிய ஏற்பாட்டு ஊழியத்துக்கு எவ்விதம் நிழலாட்டமாக இருக்கிறது என்பதை வசன ஆதாரங்களுடன் விவரி. | 2012 | E |
| 11 | 1 | 12 | நீ ஞாயிறு பள்ளியை விட்டுப் போகப் போகிறாய். ஊலகம் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறது, அவ்விதமாகவே இயேசுவும் உனக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நீ உலகின் பக்கமாக இழுத்துக் கொள்ளப்படாதபடி உன் ஜீவியத்தை எவ்வாறு ஒழுங்குபடுத்தப் போகிறாய்? | 2006 | D |
| 11 | 2 | 13 | பழைய ஏற்பாட்டின் ஆசாரியர்கள, புதிய ஏற்பாட்டில் யாருக்கு நிழலாட்டமாய் இருக்கிறார்கள்? | 2016 | A |
| 11 | 2 | 13 | பழைய ஏற்பாட்டில் விடுதலையின் ஊழியம் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஊழியம் யாது? அந்த ஊழியத்தைச் செய்தவாகள் யார் யார்? | 2012 | A |
| 11 | 1 | 13 | இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து கானான் வரை செய்த பிரயாணத்தை இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம். அவை யாவை? | 2010 | A |
| 11 | 4 | 13 | சபையானது கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி தேவன் சபையில் எவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்? | 2008 | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 9 | 13 | புதிய ஏற்பாட்டு ஊழியருக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களில் எபிரெயர் நிருபத்தில் எழுதப்பட்டுள்ளவைகளை எழுது. | 2005 | A |
| 11 | 8 | 13 | புதிய ஏற்பாட்டு ஊழியருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்களில் முதலாம் கொரிந்தியர் நிருபத்தில் கூறப்பட்டுள்ள பெயர்களில் இரண்டினை எழுது. | 2004 | A |
| 11 | 2 | 13 | பழைய ஏற்பாட்டு ஊழியம் எவ்விதம் புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கு நிழலாட்டமாகத் தேவனால் ஊற்படுத்தப்பட்டது என்பதை எழுது. | 2009 | B |
| 11 | 2 | 13 | புதிய ஏற்பாட்டில் ஒவ்வொருவரும் தாங்கள் அழைக்கப்பட்ட நிலைவரத்திலே தங்கள் ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்பதினை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்கிறோம்? வசன ஆதாரம் கூறு. | 2007 | B |
| 11 | 2 | 13 | (அ) மோசேயும் ஆரோனும் எகிப்து தேசத்தில் செய்த ஊழியம். (ஆ) இஸ்ரவேல் புத்திரரை சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடத்தி சீனாய் மலையடிவாரத்திற்கு கொண்டு வந்தது ஆகிய இவைகள் புதிய ஏற்பாட்டின் ஊழியத்தில் எவைகளுக்கு நிழலாட்டமாயிருக்கிறது | 2006 | B |
| 11 | ,3,1, | 13 | புதிய ஏற்பாட்டு ஊழியருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களில் எவையேனும் பத்தினை எழுது. | 2016, 2014, 2011, 2009 | C |
| 11 | 3 | 13 | இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்ததுமுதல் காணானுக்கு வழிநடத்தப்பட்டது வரையுள்ள பழைய ஏற்பாட்டு ஊழியம் எவ்விதம் புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது? | 2015 | C |
| 11 | 1 | 13 | புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் இரண்டாம் அம்சத்தை வசாத்துடன் விவரி. | 2005 | C |
| 11 | 2 | 13 | புதிய ஏற்பாட்டு ஊழியர் பிரதிஷ்டை உள்ளவர்களாயிருக்க வேண்டியதின் அவசியத்தை வசன ஆதாரங்களுடன் விவரி. | 2017 | D |
| 11 | 3 | 13 | புதிய ஏற்பாட்டு ஊழியருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை வசன ஆதாரங்களுடன் எழுது. | 2012 | D |
| 11 | 1 | 13 | புதிய ஏற்பாட்டின் ஊழியத்தின் பிரதிஷ்டையின் அவசியத்தை வசன ஆதாரங்களுடன் எழுது. | 2008 | F |
| 11 | 2 | 13 | புதிய ஏற்பாட்டின் ஊழியத்தின் பிரதிஷ்டையின் அவசியங்களை வசன ஆதாரங்களுடன் எழுது. | 2006 | F |
| 11 | 1 | 13 | உன்னுடைய சபையில் பின்மாற்றத்தில் உள்ள உன்னுடைய சிநேகிதன்/சிநேகிதி ஆலறத்திற்கு வருவதே இல்லை. ஒரு நாள் நீ அவனை/அவளை எதிர்பாராமல் வழியில் சந்திக்கிறாய். அவனை/அவளை மறுபடியுமாக திருப்பிக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபடும் நீ அவனோடு/அவளோடு என்ன சொல்லுவாய் என்பதை கூடுமான வரையில் வேதவசன ஆதாரங்களுடன் எழுது. | 2005 | D |
| 11 | 3 | 14 | 12 கேபத்திரங்கள்“ புதிய ஏற்பாட்டில் யாருக்கு அடையாமாய் இருக்கிறார்கள்? | 2012 | A |
| 11 | 3 | 14 | லேவிய ஆசாரியத்துவம் மனுஷனைப் பூரணப்படுத்தக் கூடாததாயிருந்தது - அதற்கான நான்கு காரணங்களைக் கூறு. | 2015 | B |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 5, 3, 1 | 14 | மோசேயின் நாட்களில் ஸ்தாபிக்கப்பட்ட லேவிய ஆசாரியத்துவம் ஜனங்களை முற்றிலுமாகப் பரிசுத்தப் படுத்தவும், பூரணப்படுத்தவும் கூடாதிருந்தது. ஆதற்கான காரணங்கள் யாவை? | 2012, 2015, 2011 | B |
| 11 | 1,3 | 14 | மெல்கிசேதேக்கின் முறைமை என்றால் என்ன? | 2010, 2006 | B |
| 11 | ,2,(1, | 14 | மெல்கிசேதேக்கின் முறைமை என்றால் என்ன? “மெல்கிசேதேக்கு பரிசுத்த ஆவியானவரைத் தவிர வேறொருவரும் அல்ல” என்பது எவ்வாறு தெளிவாகிறது? | 2017, 2012, (2010, 2006) | C, B |
| 11 | 2,1 | 14 | மெல்கிசேதேக்கு யார் என்பதை விவரி. | 2014, 2004 | C |
| 11 | 2 | 14 | மெல்கிசேதேக்கின் முறைமை என்றால் என்ன? | 2012 | C |
| 11 | 3 | 14 | மோசேயின் நாட்களில் ஸ்தாபிக்கப்பட்ட ஆசாரியத்துவம் எது? அது அவர்களை பூரணப்படுத்த கூடாதிருந்ததற்கான காரணங்கள் யாவை? | 2008 | C |
| 11 | 1 | 14 | ஒரு நிழலாட்டமாக மாத்திரம் இருந்த லேவிய ஆசாரியத்துவத்தில் காணப்பட்ட வகுப்புகள் (அ) பிரிவுகளெல்லாம் உண்மைப் பொருளாகிய மெல்கிசெதேக்கின் முறைமையின்படியான ஆசாரியத்துவத்தில் காணப்படுகின்றன எனபதைக் குறித்து வவ | 2007 | C |
| 11 | 3,3, 1 | 14 | ஆரொனின் முறைமையையும் மெல்கிசேதேக்கின் முறைமையையும் ஒப்பிட்டு எழுதுக. | 2016, 2013, 2009 | D |
| 11 | 3 | 14 | ஆரோனின் முறைமையையும் மெல்கிசேதேக்கின் முறைமையையும் வசன ஆதாரங்களுடன் ஒப்பிட்டுக. | 2013 | D |
| 11 | 1 | 14 | ஆரொனின் ஆசாரிய ஊழிய முறைமையையும், மெல்கிசேதேக்கின் முறைமையையும் ஒப்பிட்டு எழுதுக. | 2009 | D |
| 11 | 1 | 14 | வெளிப்படுத்தல் 13 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மிருகம் மற்றும் அதின் முத்திரை இப்போது எவ்விதமாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இக்காலத்தில் நடைபெறும் சம்பவங்களோடு ஒப்பிட்டு நீ அறிந்தவற்றை பற்றி ஒரு கட்டுரை எழுது. | 2004 | D |
| 11 | 3 | 15 | விசுவாசத்தின் படிகள் ஐந்தினில் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக. | 2017 | A |
| 11 | 3 | 15 | விசுவாச ஜீவியம் செய்த பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களில் எவரேனும் நால்வரின் பெயர்களை எழுது. | 2016 | A |
| 11 | 3 | 15 | தற்காலத்தில் எந்த சபையின் ஊழயக்காரர் விசுவாச ஜீவியத்தின் ஒழுங்கை கடைபிடித்து வருகிறார்கள்? விசுவாசத்தின் படிகளில் கடைசி இரண்டினைக் குறிப்பிடுக. | 2015 | A |
| 11 | 2 | 15 | பழைய ஏற்பாட்டு கால பரிசுத்தவான்களின் விசுவாச ஜீவியத்திற்கும், புதிய ஏற்பாட்டு கால பரிசுத்தவான்களின் விசுவாச ஜீவியத்திற்கும் உள்ள வேறுபாட்டை எழுது. | 2010 | A |
| 11 | 2 | 15 | பெரிய விசுவாசம் என்றால் என்ன? | 2007 | A |
| 11 | 10 | 15 | ஆவியின் கனியாகிய விசுவாசம்” - விவரி. | 2005 | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 9 | 15 | விசுவாசம் எந்தப் பொருளோடு ஒப்பிடப்பட்டுள்ளது? நம்முடைய விசவாசம் விலையேறப் பெற்றதாய் மாற நமக்கு என்ன தேவை? | 2004 | A |
| 11 | 3 | 15 | இயற்கையான விசுவாசம் - குறிப்பு எழுது. | 2017 | B |
| 11 | 2,1 | 15 | விசுவாசத்தின் அன்சங்களை எழுது. அவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு வசன ஆதாரம் தருக. | 2016, 2013 | A, B |
| 11 | 5 | 15 | தேவ குமாரனின் விசுவாசம் - விளக்குக. | 2014 | B |
| 11 | 1, 2, 2 | 15 | விசுவாசத்தின் ஏழு அம்சங்களை எழுது. | 2013, 2011, 2016 | B |
| 11 | 1, 5 | 15 | தேவ குமாரனின் விசுவாசத்தைக் குறித்து எழுது. விசுவாசம் எவ்விதம் விலையேறப்பெற்றதாய் இருக்கிறது? | 2012. 2014 | B |
| 11 | 5 | 15 | அற்ப விசுவாசம்” உள்ளவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருப்பார்கள்? | 2008 | B |
| 11 | 1 | 15 | கடுகு விதையளவு விசுவாசம் பற்றி வசன ஆதாரத்துடன் குறிப்பு வரைக. | 2007 | B |
| 11 | 4 | 15 | மகா பரிசுத்தமான விசுவாசம்” - விவரி. | 2005 | B |
| 11 | 4 | 15 | விசுவாசத்தின் வரத்தைப் பற்றி விவரி. | 2004 | B |
| 11 | 4, 4 | 15 | விசுவாச ஜீவியம் என்றால் என்ன? வசன ஆதாரங்கள் தருக. | 2012, 2005 | C |
| 11 | 2 | 15 | விசுவாச ஜீவியம் என்றால் என்ன? அதை நம்முடைய பெந்தெகொஸ்தே சபையின் தேவ ஊழியர்களின் அனுபவத்துடன் விளக்கிக் கூறுக. | 2009 | C |
| 11 | 4 | 15 | விசுவாசத்தின் பல அம்சங்களை எழுது. | 2006 | C |
| 11 | 4 | 15 | விசுவாச ஜீவியம் என்றால் என்ன? | 2005 | C |
| 11 | 2,2 | 15 | விசுவாசத்தின் பல நிலைகளை அல்லது படிகளை வசன ஆதாரங்களுடன் விவரி. | 2016, 2010 | E |
| 11 | 2 | 15 | விசுவாசத்தின் ஐந்து படிகள் யாவை? வசன ஆதாரங்களுடன் வளக்குக. | 2010 | E |
| 11 | 1 | 16 | இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்” என்று அப்.பவுல் கூறுவது எதைக் காட்டுகிறது? | 2009 | A |
| 11 | 6 | 16 | பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் பலியின் ஜீவியம் இல்லை என்பதை நாம் எவ்வாறு விளந்கிக் கொள்கிறோம்? | 2007 | A |
| 11 | 2 | 16 | நாம் எப்போது பாவங்களிலிருந்தும் பாவிகளிலிருந்தும் விடுதலையாகிறோம்? | 2005 | A |
| 11 | 4,(2) | 16 | நமது ஆத்துமா பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுவதைப் பற்றி எழுது. | 2015,(2016) | B,C |
| 11 | 2,2,4 | 16 | நமது ஆத்துமா பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுவதைப் பற்றி எழுது. | 2016, 2005, 2010 | C |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 2 | 16 | எவ்விதம் நமது ஆத்துமா பரிசுத்தமாக்கப்படுகிறது? | 2005 | C |
| 11 | 2, 2 | 16 | நம் சரீரம் பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதலை வசன ஆதாரங்களுடன் விளக்குக. | 2013, 2005 | D,E |
| 11 | 2,3 | 16 | பரிசுத்த ஆவியினால் நமது ஆவி எவ்விதம் பரிசுத்தமாக்கப்படுகிறது என்பதை வசன ஆதாரங்களுடன் விவரி. | 2007, 2004 | E |
| 11 | 2,2 | 16 | பரிசுத்த ஆவியினால் நமது ஆவி, ஆத்துமா பரிசுத்தமாக்கப்படுதலை விளக்குக. | 2014 , 2011 | E |
| 11 | 2 | 16 | பரிசுத்த ஆவியினால் நமது ஆவி, ஆத்துமா ஆகியவை பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்து விவரி. வசன ஆதாரங்கள் கொடு. | 2011 | E |
| 11 | 4 | 17 | சாத்தானின் மறு பெயர்கள் யாவை? | 2015 | A |
| 11 | 2 | 17 | இஸ்ரவேலர் காணான் தேசத்தைச் சுதந்தரிக்க யாரையெல்லாம் ஜெயிக்க வேண்டியதாயிருந்தது? இவை நம்முடைய ஜீவியத்தில் எதற்கு நிழலாட்டமாயிருக்கின்றன? | 2014 | A |
| 11 | 4 | 17 | நம் சாட்சியின் வசனத்தினால் சாத்தானை நாம் எப்படி ஜெயிக்கலாம்? | 2011 | A |
| 11 | 5 | 17 | கானானைச் சுதந்தரிக்கும் முன்பு இஸ்ரவேலர் ஜெயிக்க வேண்டிய ஜாதிகளும், ராஜாக்களும் எத்தனை? | 2008 | A |
| 11 | 10 | 17 | சாத்தான் சுற்றஞ்சாட்டுகிறவனாகவும் சோதனைக்காரனாகவும் எப்படி கிரியை செய்கிறான்? | 2004 | A |
| 11 | ,2, 5, | 17 | ஜெய ஜீவியம் செய்வதினால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் யாவை? | 2016, 2013, 2010, 2005 | B |
| 11 | 1 | 17 | ஜெய ஜீவியம் என்றால் என்ன? ஜெயஜீவியத்திற்குக் கர்த்தராகிய இயேசு நமக்கு எவ்விதம் மாதிரியாக இருக்கிறார்? | 2009 | B |
| 11 | 4 | 17 | சாத்தானை ஜெயிப்பதற்கான வழிகளில் இரண்டினை ஒவ்வொரு வசன ஆதாரத்துடன் விளக்குக. | 2008 | C |
| 11 | 2, 1 | 17 | சாத்தானை நாம் எவ்விதம் ஜெயிக்கலாம்? | 2015, 2012 | D, E |
| 11 | 1,2 | 17 | சாத்தானை ஜெயிப்பது எப்படி என்பதை வசன ஆதாரத்துடன் விளக்கு. | 2012, 2006 | D, E |
| 11 | 2 | 17 | பின்வருவனவற்றை விளக்குக: (i) பாவம், (ii) சாத்தான், (iii) உலகம் | 2010 | D |
| 11 | 1 | 17 | விசுவாசத்தின் பல அம்சங்களை எழுது. விசுவாசத்தின் மூன்று பெரும் பிரிவுகளைத் தனித் தனியாக விளக்கி எழுது. | 2008 | E |
| 11 | 3 | 17 | உலகத்தை ஜெயிப்பதைக் குறித்தும் ஜெய ஜீவியத்தின் ஆசீர்வாதங்களைக் குறித்தும் விளக்குக. | 2007 | E |
| 11 | 2 | 17 | பாவத்தின் மூலமாகவும் உலகத்தின் மூலமாகவும் நமக்கு விரோதமாக வரும் சோதனைகளையும் பரீட்சைகளையும் ஜெயிப்பதைக் குறித்து வசன ஆததாரத்துடன் விவரித்து எழுதுக. | 2005 | F |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 6 | 18 | சபையானது எந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டி எழுப்பப்பட்டு வருகிறது? அதற்கு மூலைக்கல்லாயிருப்பது யார்? | 2013 | A |
| 11 | 5 | 18 | புதிய எருசலேமின் உயரமான மதில் எதைக் காட்டுகிறது? | 2011 | A |
| 11 | 4 | 18 | மகா பரிசுத்த ஸ்தலம் வரப்போகிற நித்தியத்தில் எதற்கு நிழலாயிருக்கிறது? பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் அதைச் சுதந்தரித்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? | 2010 | A |
| 11 | 4 | 18 | புதிய எருவலேம் நகரத்தைப் பற்றிய பொதுவான வர்ணனையாக அதன் பிரகாசத்தையும் மகிமையையும் குறித்து வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது யாது? | 2017 | B |
| 11 | 4,1 | 18 | புதிய எருசலேமைப் பற்றிய பொதுவான வர்ணனைகளைக் குறிப்பிடு. | 2013, 2009 | C |
| 11 | 2 | 18 | புதிய எருசலேமைப் பற்றிய குறிப்புகளை எழுது. | 2012 | D |
| 11 | 1,1,2 | 18 | புதிய எருசலேமைச் சுதந்தரித்துக்கொள்பவர்களுக்கு அல்லது கிறிஸ்துவின் மணவாட்டியாகிறவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளை விரிவாக எழுதுக. | 2016, 2015,2007 | E |
| 11 | 2 | 19 | கிறிஸ்துவின் மணவாட்டிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்களில் எவையேனும் நான்கினை எழுது. | 2017 | A |
| 11 | 3, 1 | 19 | நித்தியத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியாயிருப்பவர்கள் யார்? | 2014, 2011 | A |
| 11 | 2,3 | 19 | சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாகும்படி அது எந்த நான்கு அம்சங்களில் பூரணப்பட வேண்டும்? | 2009 | A |
| 11 | 4 | 19 | புதிய எருசலேமைச் சுதந்தரித்துக் கொள்ளும் கிறிஸ்துவின் மணவாாட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களுள் எட்டினை எழுது. | 2007 | A |
| 11 | ,4,5,(1 | 19 | புதிய எருசலேமைச் சுதந்தரித்துக் கொள்ளும் கிறிஸ்துவின் மணவாாட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களில் எவையேனும் எட்டினை எழுதுக. | 2015, 2007, 2013(2014) | B,A,C |
| 11 | 2, 4(1) | 19 | எடுத்துக்கொள்ளப்படுதல்" (Rapture) என்று அழைக்கப்படுவது யாது? அதைக் குறித்து குறிப்பு வரைக. | 2012, 2006, (2014) | B,C |
| 11 | 5 | 19 | கீழ்க்கண்டவற்றிற்கு விளக்கம் தருக. (அ) கிறிஸ்துவின் மணவாட்டியாய் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்பவர்களுக்கு வேறுபாட்டின் ஜீவியமும் ஜெப ஜீவியமும் தேவை, (ஆ) கிறிஸ்துவின் மணவாட்டி முற்றிலும் கிருபையினால் ஆயத்தப்படுகிறாள். | 2004 | B |
| 11 | 1 | 19 | புதிய எருசலேமைச் சுதந்தரித்துக்கொள்ளும் கிறிஸ்துவின் மணவாட்டிக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை எழுது. "எடுத்துக்கொள்ளப்படுதல்" (Rapture) என்றால் என்ன? | 2014 | C |
| 11 | 4 | 19 | புதிய எருசலேமின் அஸ்திபாரங்களைக் குறித்து சிறு குறிப்பு வரைக. | 2011 | C |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 3 | 19 | கீழ்கண்டவற்றை விவரி: (அ) பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருக்கிற எல்லா சபைகளும் கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்த முடியாது. (ஆ) பதிய எருசலேமை சுதந்தரிக்கிறவர்கள் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்க வேண்டும். (இ) சபை கிறிஸ்துவின் மணவாட்டியாகும்படி அவருடைய சுபாவத்தில் பூரணப்பட்டிருக்க வேண்டும். | 2005 | E |
| 11 | 1,1 | 19 | புதிய எருசலேமைச் சுதந்தரித்துக்கொள்ளும் கிறிஸ்துவின் மணவாட்டி அடைய வேண்டிய ஆவிக்குரிய அனுபவங்களை விவரி. | 2015, 2010 | E |
| 11 | 1 | 19 | கிறிஸ்துவின் அரகசிய வருகையின் புதிய எருசலேமாகிய அவருடைய மணவாட்டியாய் எடுத்துக்கொள்ளப்பட்ட நாம் செய்ய வேண்டியவற்றை விவரி. | 2010 | E |
| 11 | 2 | 19 | புதிய எருசலேமல் பிரவேசிக்கத் தேவையான தகுதிகள் யாவை? | 2007 | F |
| 11 | 1 | 20 | பழைய ஏற்பாட்டில் சீயோன் எந்த நாரத்தின் ஒரு பகுதியாயிருந்தது? அது எவ்வாறு அழைக்கப்பட்டது? | 2017 | A |
| 11 | 5 | 20 | சீயோனிலிருந்து புறப்படுபவை யாவை? | 2015 | A |
| 11 | 5 | 20 | சீயோ்ன் யாருடைய பிரதிபலனும் சுதந்தரமுமாயிருக்கிறது? | 2013 | A |
| 11 | 3 | 20 | ஆசரிப்புக் கூடாரத்தில் தேவன் எங்கு வாசம் பண்ணினார்? வசன ஆதாரம் கொடு. | 2009 | A |
| 11 | 1 | 20 | சீயோனின் மேன்மைகளுள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக. | 2007 | A |
| 11 | 3 | 20 | வெளிப்படுத்தின விஷேசம் 14: 1 - 5 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதின் அடிப்படையில் சீயோனைச் சுதந்தரிப்பவா்களின் தன்மைகளை எழுதுக. | 2016 | C |
| 11 | 1 | 20 | சீயோனின் மேன்மையைக் குறித்து எழுது. | 2012 | C |
| 11 | 1 | 20 | புதிய எருவலேமைப் பற்றிய பொதுவான வா்ணனையை வான ஆதாரங்களுடன் எழுது. | 2009 | C |
| 11 | 1 | 20 | சீயோனைக் குறித்து பொதுவான குறிப்புகளையும், ஆசரிப்புக் கூடாரத்தில் அதற்கு நிழலாயிருக்கிறதையும் விளக்குக. | 2008 | C |
| 11 | 2 | 20 | புதிய ஏற்பாட்டு சீயோனைக் குறித்து பழைய ஏற்பாட்டில் எங்கு வாசிக்கிறோம்? சீயோனிலிருந்து புறப்படுகிற நான்கு காரியங்களை வசன ஆதாரங்களுடன் விவரி. | 2004 | C |
| 11 | 3 | 20 | சீயோனின் மேன்மையைக் குறித்து எழுது. | 2014 | D |
| 11 | 1,2 | 20 | வெளிப்படுத்தின விஷேசம் 14: 1 - 5 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதின் அடிப்படையில் சீயோனைச் சுதந்தரிப்பவா்களின் தன்மைகளை யாவை? சீயோனிலிருந்து புறப்பட்ட சட்டம் எதை வெள்ப்படுத்துகிறது. | 2013, 2011 | D |
| 11 | 2 | 20 | சீயோனைச் சுதந்தரிப்பவா்களின் தன்மைகளையும், அவா்களின் என்னிக்கையையும், அங்கு அவா்கள் யாருடன் நிற்பார்கள் என்பதையும் குறிப்பிடுக. | 2011 | D |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | 1 | 20 | சீயோனின் மேன்மையை வசன ஆதாரங்களுடன் எழுது. அது யாருடைய பிரதிபலனும் சுதந்தரமுமாகும்? வசன ஆதாரங்கள் தருக. | 2010 | **D** |
| 11 | 1 | 20 | சீயோனை சுதந்தரிப்பவர்களின் தன்மைகள் யாவை? அவர்களின் தொகை என்ன? வசன ஆதாரம் தருக. | 2006 | **E** |
| 11 | 2,1, 2 | 20 | சீயோனின் மேன்மைகளைக் குறித்தும், அதைச் சுதந்தரிபப்பவர்களின் தன்மைகளைக் குறித்தும் எழுது. | 2017, 2005, 2008 | **E** |
| 11 | 2 | 20 | சீயோனின் மேன்மைகளைக் குறித்தும் மற்றும் வெளிப்படுத்தின விஷேசம் 14: 1 - 5இல் குறிப்பிடப்பட்டிருப்பதின் அடிப்படையில் அதைச் சுதந்தரிக்கப் போகிறவர்களின் தன்மைகளைக் குறித்தும் எழுது. | 2008 | **F** |
| 11 | 1 | 20 | சீயோனின் மேன்மையைக் குறித்தும் சீயோனைச் சுதந்தரிப்பவர்களின் தன்மைகளைக் குறித்தும் வசன ஆதாரத்துடன் விவரி. | 2005 | **F** |
| 11 | 2 | 10,11 | கீழ்க்கான்பவைகளைக் குறித்து குறிப்பு வரைக: (அ) ஆயிர வருட அரசாட்சியும் அந்த ராஜ்யத்தின் தன்மைகளும் (ஆ) கோகு மாகோகு யுத்தம் (இ) அபரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு (ஈ) நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்கள். | 2009 | **E** |
| 11 | 1 | 8,10,11 | கால நியமம் என்றால் என்ன? குறிப்பு எழுது. நீதிமான்களின் நித்திய வாசஸ்தலத்தைப் பற்றி விவரி. புறம்பான இருளில் பங்கடையும் கூட்டத்தாரைப் பற்றி வசன ஆதாரங்களுடன் எழுது. | 2004 | **F** |

# ANNUAL EXAM QUESTIONS - ACTS (2010 - 2017)

| Std | In no. | Questions | Annual Exam | Part |
|---|---|---|---|---|
| 11 | Acts: 3:6 | தேவாலயத்தின் வாசலில், தாயின் வயிற்றில் பிறந்ததுமுதல் சப்பாணியாய் இருந்த மனுஷனை பேதுரு எவ்விதம் எழுப்பிவிட்டார்? | 2015, 2012 | F |
| 11 | Acts:1:11 | இயேசு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வானத்தை அண்ணாந்துபார்த்துக் கொண்டிருந்த கலிலேயருக்குச் சொல்லப்பட்டது என்ன? | 2017 ,2012 | F |
| 11 | Acts:1:11 | இயேசு எடுத்துக்கொள்ளப்படும்போது வானத்தை அண்ணாந்துபார்த்து நின்ற கலிலேயருக்குத் தூதர்கள் சொன்னது என்ன? | 2012 | F |
| 11 | Acts:1:2,3 | ஆபிரகாம் மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருந்தபோது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி சொன்னது என்ன? | 2013 | F |
| 11 | Acts:1:8 | நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது ெந்தெந்த இடங்களில் சாட்சிகளாயிருப்போம் என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார்? | 2015, 2013 | F |
| 11 | Acts:1:8 | சீஷர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும்போது எந்தெந்த இடங்களில் தமக்குச் சாட்சிகளாயிருப்பார்கள் என்று கர்த்தராகிய இயேசு கூறினார்? | 2013 | F |
| 11 | Acts:10:13,14 | பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி” என்று சொல்லுகிற தேவசத்தத்தைக் பேட்டபோது பேதுரு கொடுத்த மறுமொழ என்ன? | 2016, 2013 | F |
| 11 | Acts:10:22 | நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியுவைக் குறித்த நற்நாட்சியை எழுது. | 2014 | F |
| 11 | Acts:10:44 | கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது சம்பவித்தது யாது? அப்போது பேதுரு கூறியது என்ன? | 2,017 | F |
| 11 | Acts:12:11 | சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பேதுருவுக்கு தெளிவு வந்தபோது அவன் சொன்னது என்ன? | 2016 | F |
| 11 | Acts:12:23 | ஏரோது புழப்புழத்து இறந்துபோகக் காரணம் என்ன? | 2017 | F |
| 11 | Acts:12:5 | பேதுரு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக செய்தது என்ன? அவன் தேவதூதனால் விடுதலையாக்கப்பட்டபோது யாருடைய வீட்டுக்கு வந்தான்? | 2017 | F |
| 11 | Acts:13:22 | தாவீதைக் குறித்துத் தேவன் கொடுத்த சாட்சி என்ன? | 2016, 2012 | F |
| 11 | Acts:14:11,12 | லிக்கவோனியா நாட்டார் பவுல் செய்ததைக் கண்டபோது என்ன சொன்னார்கள்? பர்னபாவுக்கும் பவுலுக்கும் அவர்கள் என்ன பெயரிட்டனர்? | 2011 | F |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Acts:15:29 | அப்போஸதலரின் தீர்மானத்தின்படி நாம் எவற்றை விட்டு விலகியிருக்க வேண்டும்? | 2014 | F |
| 11 | Acts:16:24 | சிறைச்சாலையின் உட்காவசறையில் அடைக்கப்பட்டிருந்த பவுலும் சீலாவும் செய்தது என்ன? | 2013 | F |
| 11 | Acts:16:29,30 | சிறைச்சாலைக்காரன் பவுலினிடத்திலும் சீலாவினிடத்திலும் கேட்டது என்ன? அதற்கு அவர்கள் பொடுத்த பதில் யாது? | 2015, 2012 | F |
| 11 | Acts:16:29,30 | சிறைச்சாலைக்காரன் பவுலுக்கும் சீலாவுக்கும் முனபாக விழுந்து கேட்டது யாது? அவர்கள் அவனுக்குக் கூறிய மறுமொழி யாது? | 2012 | F |
| 11 | Acts:17:11 | பெரோயா பட்டணத்தார் தெசலோனிக்கேயில் இருந்தவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாய் இருந்ததற்கான காரணம் என்ன? | 2017, 2011 | F |
| 11 | Acts:17:22,17:10,11 | அறியப்படாத தேவனுக்கு” என்று எழுதப்பட்டிருந்த பலிபீடத்தை அப்.பவுல் எந்தப் பட்டணத்தில் கண்டார்? தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தவர்கள் யார்? | 2013 | F |
| 11 | Acts:17:23,24 | பவுல் “அறியப்படாத தேவனுக்கு” என்று எழுதப்பட்டிருந்த பலிபீடத்தை எந்தப் பட்டணத்தில் கண்டான்? ஆந்தப் பட்டணத்தாரின் பொழுதுபோக்கு யாது? | 2015, 2013 | F |
| 11 | Acts:2:17 | பரிசுத்த ஆவி பொழிந்தருளப்படுவதைக் குறித்து யோவேல் தீர்க்கதரிசி உரைத்தது என்ன? | 2014 | F |
| 11 | Acts:2:41,42 | பேதுருவின் பிரசங்கதிதைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்று, சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மூவாயிரம் பேர் எவைகளில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்? | 2016, 2011 | F |
| 11 | Acts:2:42 | பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தின் மூலம் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மூவாயிரம் பேர் எவற்றில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்? | 2011 | F |
| 11 | Acts:20:9,10 | பவுல் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது ஐத்திகு என்னும் வாலிபனுக்கு சம்பவித்தது யாது? பவுலின் பிரதிக்கிரியை என்ன? | 2014, 2011 | F |
| 11 | Acts:20:9,10 | பவுல் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தபோது மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்த வாலிபனின் பெயர் என்ன? பவுல் அவனை அணைத்துககொண்டு கூறியது யாது? | 2011 | F |
| 11 | Acts:21:11 | தீர்கதரிசியாகிய அகபு பவுலைக் குறித்து சொன்ன தீர்க்கதரிசனம் என்ன? | 2016 | F |
| 11 | Acts:21:12 | செசரியா பட்டணத்தார் அகபுவின் தீர்க்கதரிசனத்தைக் கேட்டு பவுலை எருசலேமுக்குப் போக வேண்டாமென்று வேண்டிக்கொண்டபோது அவர் கொடுத்த மறுமொழி என்ன? | 2017 | / |
| 11 | Acts:23:8 | உயிர்த்தெழுதலைக் குறித்துச் சதுசேயருக்கும் பரிசேயருக்கும் இருந்த கருத்து வேறுபாடு யாது? | 2016 | F |
| 11 | Acts:26:29 | நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்” என்று சொன்ன அகரிப்பா ராஜாவுக்கு பவுல் கொடுத்த மறுமொழி என்ன? | 2013 | F |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | Acts:27:24 | கப்பல் பிரயாணத்தில் நம்பிக்கையிழந்திருந்த பிரயாணிகளைத் திடப்படுத்தும்படி தேவதூதர்கள் பவுலிடம் கூறிய வார்த்தைகள் யாவை? | 2012 | **F** |
| 11 | Acts:28:1-6 | மெலித்தா தீவில் பவுலின் கையை விரியன் பாம்பு கவ்விக்கொண்டு தொங்கினதை அத்தீவார் கண்டபோது தங்களுக்குள் சொல்லிக்கொண்டது என்ன? | 2015, 2011 | **F** |
| 11 | Acts:28:4,5 | மெலித்தா தீவில் பவுலுக்கு நேரிடவிருந்த தீங்கைக் குறித்தும், அவன் அதிலிருந்து தப்பின விதத்தைக் குறித்தும் எழுது. | 2014 | **F** |
| 11 | Acts:28:6 | மெலித்தா தீவார் பவுலை ஏன் தேவனென்று சொன்னார்கள்? | 2011 | **F** |
| 11 | Acts:3:6 | தேவாலயத்தின் வாசலண்டையிலே உட்கார்ந்திருந்த பிறவியிலேயே சப்பாணியாயிருந்த மனுஷனிடம் பேதுரு கூறியது யாது? | 2012 | **F** |
| 11 | Acts:5:1 | தங்கள் காணியாட்சியை விற்று அதன் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தவர்கள் யார்? ஆவர்களுக்குக் கிடைத்த தண்டனை என்ன? | 2014 | **F** |
| 11 | Acts:7:55 | ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்தபோது அவன் கண்டது என்ன? | 2011 | **F** |
| 11 | Acts:8:7 | சமாரியாவில் ஏன் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருந்தது? | 2015 | **F** |
| 11 | Acts:9:10-12 | றூயவ றயள வாந றழசன ழுக வாந டுழசன வழ யுயெயௌள யடிழரவ ளுயரட றாழ கநயசநன வழ அநநவ ாஐஅ யஉஉழசனபைெ வழ ர்ளை றழசன ளை னுயஅயளஉரள | 2012 | **F** |
| 11 | Acts;13:22 | தாவீதைக் குறித்து கர்த்தர் சாட்சி கொடுத்தாக பவுல் குறிப்பிடுவது யாது? | 2012 | **F** |

வகுப்பு :11

பாடம்-1

# பலிகள்

**I** ***முக்கியமானவசனம் :*** (2 Marks)

எபிரெயர் 9 : 14
நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம் .

எபிரெயர் 13 : 15
ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்..

**II** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*** (2 Marks)

**1.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலிகள் ஏன் செலுத்தப்பட்டன?
*1.* பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலிகள் மூலமாகவே மனுஷன் தேவனோடு கிட்டிச் சேரக்கூடியவனாயிருந்தான்.

*2.* பலிகள் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் ஒரு ஒப்புரவாகுதலைக் கொண்டு வந்தது.

**2.** பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டு வந்த பலிகள் எதற்கு நிழலாட்டமாய் இருக்கின்றன? வசனம் குறிப்பிடுக.
பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டு வந்த பலிகள் புதிய ஏற்பாட்டின் அனுபவங்களுக்கு நிழலாட்டமாய் இருக்கின்றன. (எபி. 10 : 1)

**3.** பலியின் சிந்தை முதலாவது யாரிடத்தில் காணப்பட்டது? அதற்காக தேவன் என்ன செய்தார்?
1) பலியின் சிந்தை முதலாவது தேவனிடத்திலேயே காணப்பட்டது.

2) அதற்காக தேவன் தம்மைத்தாமே திரித்துவராக வெளிப்படுத்தினார்.

**4.** தன்னை முதலாவதாக பலியாக ஒப்புக் கொடுத்தது யார்?
நித்திய ஆவியினாலே குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார். (எபி. 9 : 14)

**5.** உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பழுதற்ற பலியானதில் ஆசாரியனாகக் கிரியை செய்தவர் யார்? வசன ஆதாரம் தருக.
பரிசுத்த ஆவியானவர் ஆசாரியனாக கிரியை செய்தார். (எபி. 9 : 14)

**6.** பலிபீடத்தின் ஊழியமே ஆசரிப்புக் கூடாரத்தின் மற்றெல்லா ஊழியங்களிலும் முதன்மையானது என்பதை எவ்வாறு அறியலாம்? வசனம் குறிப்பிடுக (அல்லது) ஆசரிப்புக் கூடாரத்தில் வெண்கல பலிபீடத்தை எங்கு வைக்கும்படி தேவன் கட்டளையிட்டார் ? ஏன்?
தேவனாகிய கர்த்தர் ஆசரிப்புக்கூடாரத்துக்குரிய பிரமாணங்களைக் கொடுத்த போது ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக, அதாவது வெளிப்பிரகாரத்தில், முதலாவது வெண்கல பலிபீடத்தை வைக்கும்படி கட்டளையிட்டார். (யாத். 40 : 6) இது பலிபீடத்தின் ஊழியமே ஆசரிப்புக்கூடாரத்தின் மற்றெல்லா ஊழியங்களிலும் முதன்மையானது என்பதை வெளிப்படுத்துகிறது.

**7.** பழைய ஏற்பாட்டின் பலிகள், புதிய ஏற்பாட்டில் எந்த இரு அனுபவங்களுக்கு நிழலாட்டமாயிருக்கின்றன?.
பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டு வந்து பலிகள் யாவும்

1) முதலாவதாக, மனிதனைத் தேனோடு ஒப்புரவாகும்படி கிறிஸ்து தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்ததற்கு நிழலாட்டமாய் இருக்கின்றன.

2) இரண்டாவதாக, அவை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது தான் பூரணப்படுவதற்காகச் செலுத்த வேண்டிய ஆவிக்குரிய பலிகளைக் காண்பிக்கின்றன.

**8.** கிறிஸ்துவின் பூரணத்தை அடைய விரும்புகிற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் என்ன செய்ய வேண்டும்?
கிறிஸ்துவின் பூரணத்தை அடைய விரும்புகிற ஒவ்வொரு தேவபிள்ளையும் தன்னைத்தானே பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் . அதாவது இப்பலிகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் அனுபவங்கள் அவனில் ஆவிக்குரிய பிரகாரம் நிறைவேறப்பட வேண்டும்.

**9.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மொத்தம் எத்தனை பலிகள் செலுத்தப்பட்டன? அவைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டன?
பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பத்து பலிகள் செலுத்தப்பட்டன. அவைகைள் ஐந்து பெரிய பலிகள், ஐந்து சிறிய பலிகள் என பிரிக்கப்பட்டன.

**10.** ஐந்து பெரிய பலிகள் யாவை?

1) சர்வாங்க தகனபலி (லேவி. 1 ; 6 :, 9 - 13)

2) போஜன பலி (லேவி. 2 ; 6 : 14 - 23)

3) சமாதான பலி (லேவி. அதி. 3)

4) பாவநிவாரண பலி (லேவி. அதி. 4)

5) குற்ற நிவாரண பலி (லேவி. 5 ; 7 : 1 - 7)

**11.** ஐந்து சிறிய பலிகள் யாவை?

1) அசைவாட்டும் பலி (லேவி. 8 : 29)

2) ஏறெடுத்துப் படைக்கும்பலி (லேவி. 7 : 14)

3) பானபலி (லேவி. 29 : 40)

4) ஸ்தோத்திர பலி (லேவி. 22 : 29 )

5) உற்சாக பலி (லேவி. 7 : 16)

**12.** மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் செலுத்தப்பட வேண்டிய பலிகள் யாவை?
சர்வாங்க தகனபலி, போஜன பலி, சமாதான பலி

**13.** மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் செலுத்தப்பட்ட பலிகள் என்ன நோக்கத்திற்காக செலுத்தப்பட்டது?
ஸ்தோத்திரத்திற்காகவும், தேவனைக் கனம் பண்ணுவதற்காகவும் செலுத்தப்பட்டன.

**14.** பாவ நிவாரணத்திற்காக கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய பலிகள் யாவை?
பாவநிவாரண பலி, குற்ற நிவாரண பலி.

**15.** மகா பரிசுத்தமான பலிகள் யாவை?
போஜன பலி, பாவநிவாரண பலி, குற்றநிவாரண பலி (லேவி. 6 : 14 - 17)

**16.** அசைவாட்டும் பலியைப் பற்றிய ஆவிக்குரிய கருத்தை எழுது.
இது, பரிசுத்தவான்கள் மனித வர்க்கத்தின் இரட்சிப்புக்காகத் தங்களை ஒப்புக் கொடுப்பதைக் காட்டுகிறது. (மாற்கு 16 : 15 , அப். 1 : 8)

**17.** ஏறெடுத்துப் படைக்கும் பலியைப் பற்றிய ஆவிக்குரிய விளக்கம் என்ன?
இது பரிசுத்தவான்கள் தங்களைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுப்பதைக் காட்டுகிறது. (2 தீமோ. 1 : 12)

**18.** பானபலியைக் குறித்த ஆவிக்குரிய கருத்தை எழுது.
இது, பரிசுத்தவான்கள் ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஊற்றுவதைக் காட்டுகிறது. (பிலி. 2 : 17, மத். 16 : 25)

**19.** ஸ்தோத்திர பலியின் ஆவிக்குரிய விளக்கத்தை எழுது.
இது, பரிசுத்தவான்கள், தேவன் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து நன்றியுள்ள இருதயத்தோடு ஜீவிப்பதைக் காட்டுகிறது. (எபி. 13 : 15)

**20.** உற்சாக பலியைப் பற்றிய ஆவிக்குரிய கருத்தை எழுது.
இது, தேவ ஜனங்கள் தங்கள் மனதில் நியமித்ததின்படியே, கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் காணிக்கைகளைச் செலுத்துவதைக் காண்பிக்கிறது. (11 கொரி. 9 : 7)

**21.** பரிசுத்தவான்கள் மனித வர்க்கத்தின் இரட்சிப்புக்காகத் தங்களை ஒப்புக் கொடுத்து ஜீவிப்பதை நிழலாட்டமாய் கூறும் பலி யாது? வசன ஆதாரம் தருக.
அசைவாட்டும் பலி (லேவி 8 : 29)

**22.** பரிசுத்தவான்கள் தங்களைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுப்பதை நிழலாட்டமாக கூறப்பட்ட பலி எது? வசன ஆதாரம் தருக
ஏறெடுத்துப் படைக்கும் பலி (லேவி. 7 : 14)

**23.** பரிசத்தவான்கள் ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஊற்றுவதற்கு நிழலாட்டமாக கூறப்பட்ட பலி எது? வசன ஆதாரம் தருக.
பானபலி (யாத். 29 : 40)

**24.** நன்றியுள்ள இருதயத்தோடு ஜீவிப்பதற்கு நிழலாட்டமாய் கூறப்பட்ட பலி எது? வசன ஆதாரம் தருக.
ஸ்தோத்திர பலி (லேவி. 22 : 29)

**25.** கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் காணிக்கைகளைச் செலுத்துவதை நிழலாட்டமாய் கூறும் பலி எது? வசன ஆதாரம் தருக.
உற்சாக பலி (லேவி. 7 : 16)

**III** ***<u>சுருக்கமானவிடையளி:</u>*** (5 Marks)

**1.** தேவன் தம்மை திரித்துவராக வெளிப்படுத்தினதின் நோக்கம் என்ன?

பலியின் சிந்தை முதலாவது தேவனிடத்திலேயே காணப்பட்டது. இதற்காக அவர் திரித்துவ தேவனாகத் தம்மைத்தாமே வெளிப்படுத்தினார். எப்படியெனில் பலி செலுத்துவது என்று சொல்லும் போது, பலி செலுத்துபவரும், பலிப்பொருளும் பலியை அங்கிகரிப்பவரும் தேவை. ஆகையால் பிதாவாகிய தேவன் பலி செலுத்துபவராகவும், இயேசு கிறிஸ்து பலிப்பொருளாகவும் நித்திய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் பலியை அங்கிகரிப்பவராகவும கிரியை செய்தார்கள்.

**2.** பஸ்கா ஆட்டுக் குட்டியைப் பற்றிய பிரமாணத்தை இஸ்ரவேலருக்குத தேவன் கொடுத்தது ஏன்?
தேவன் தாம் ஆபிரகாமுடன் பண்ணின உடன்படிக்கையின்படியே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அவனுடைய சந்ததிக்குக் கொடுக்கச் சித்தமானார். ஆனால் அவர்களோ எகிப்தில் அடிமைகளாயிருந்தார்கள். அவர்களை மீட்டுக் கொள்ளும்படியாக ஒரு பலி அவசியமாயிருந்தது. இதற்காக தேவன் அவர்களுக்குப் பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றிய பிரமாணத்தைக் கொடுத்தார். இந்தப் பலியினால் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்டனர். (யாத் 12 : 43 - 51)

**3.** பழைய ஏற்பாட்டுக் காலத்தில் செலுத்தப்பட்டு வந்த ஐந்து பெரிய பலிகள் யாவை? அவற்றில் மனப்பூர்வமாய் செலுத்தப்பட வேண்டிய பலிகள் யாவை? கட்டாயத்தினால் லெுத்தப்பட வேண்டிய பலிகள் யாவை? மகா பரிசுத்தமான பலிகள் யாவை?

பழைய ஏற்பாட்டு காலத்தில் கீழ்க்கண்ட ஐந்து பெரிய பலிகள் செலுத்தப்பட்டு வந்தன.

1) சர்வாங்க தகனபலி (லேவி. 1 ; 6 : 9 - 13)
2) போஜன பலி (லேவி. 2 ; 6 : 14 - 23)
3) சமாதான பலி (லேவி. அதி. 3)

இம் மூன்றுபலிகளும் கட்டாயத்தில் அல்ல, மனப்பூர்வமாக உற்சாகத்துடன் செலுத்தப்பட வேண்டும்.

4) பாவநிவாரண பலி ( லேவி. அதி. 4)
5) குற்ற நிவாரண பலி (லேவி. 5 ; 7 : 1 - 7)

இவ்விரண்டு பலிகளும் பாவ நிவாரணத்திற்காக கட்டாயமாக செலுத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட ஐந்து பெரிய பலிகளில் மகா பரிசுத்தமான பலிகள் மூன்று ஆகும்.

1) போஜன பலி (லேவி. 2 : 3)
2) பாவ நிவாரண பலி (லேவி. 6 : 17)
3) குற்ற நிவாரண பலி (லேவி. 6 : 17)

**IV** *__விரிவான விடையளி__* : (10 Marks)

**1.** பலிகளை தேவன் ஏற்படுத்தினதின் நோக்கத்தை தெளிவாக விவரி?

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலிகள் மூலமாகவே மனுஷன் தேவனோடு கிட்டிச் சேரக்கூடியவனாயிருந்தான். பலிகள் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் ஒரு ஒப்புரவாகுதலைக் கொண்டு வந்தது.

பழைய ஏற்பாட்டின் பலிகள் புதிய ஏற்பாட்டின் அனுபவங்களுக்கு நிழலாட்டமாய்ச செலுத்தப்பட்டு வந்தன (எபி 10 : 1)

பலியின் சிந்தை முதலாவது தேவனிடத்திலேயே காணப்பட்டது. இதற்காக அவர் திரித்துவ தேவனாகத் தம்மைத்தாமே வெளிப்படுத்தினார். உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர் (வெளி 13 : 8) நித்திய ஆவியினாலே (பரிசுத்தாவியானவர் - ஆசாரியன்) தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார். (எபி. 9 : 14)

தேவன் தாம் ஆபிரகாமுடன் பண்ணின உடன்படிக்கையின்படியே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அவனுடைய சந்ததிக்குக் கொடுக்கச் சித்தமானார். ஆனால் அவர்களோ எகிப்தில் அடிமைகளாயிருந்தார்கள். அவர்களை மீட்டுக் கொள்ளும்படியாக ஒரு பலி அவசியமாயிருந்தது. இதற்காக தேவன் அவர்களுக்குப் பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றிய பிரமாணத்தைக் கொடுத்தார். இந்தப் பலியினால் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்டனர் (யாத். 3 : 7,8 ; 12 : 43 - 51)

தேவனாகிய கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்துக்குரிய பிரமாணங்களைக் கொடுத்தபோது ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக, அதாவது வெளிப்பிரகாரத்தில் முதலாவது வெண்கல பலிபீடத்தை வைக்கும்படி கட்டளையிட்டார்.(யாத். 40 : 6) இது, பலிபீடத்தின் (பலிகளின்) ஊழியமே ஆசரிப்புக் கூடாரத்தின் மற்றெல்லா ஊழியங்களிலும் முதன்மையானது என்பதை வெளிப்படுத்துகிறது.

பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டு வந்த பலிகள் யாவும், முதலாவதாக மனிதனைத் தேவனோடு ஒப்புரவாக்கும்படி கிறிஸ்து தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுத்ததற்கு நிழலாட்டமாய் இருக்கின்றன. இரண்டாவதாக, அவை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது தான் பூரணப்படுத்தப்படுவதற்காகச் செலுத்த வேண்டிய ஆவிக்குரிய பலிகளைக் காண்பிக்கின்றன.

கிறிஸ்துவின் பூரணத்தை அடைய விரும்புகிற ஒவ்வொரு தேவ பிள்ளையும் தன்னைத் தானே பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். அதாவது இப்பலிகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் அனுபவங்கள் அவனில் ஆவிக்குரிய பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஐந்து பெரிய பலிகளும் ஐந்து சிறிய பலிகளும் செலத்தப்பட்டு வந்தன.

**2.** ஐந்து சிறிய பலிகள் யாவை? அவைகளின் ஆவிக்குரிய கருத்துகளை எழுது.

பழைய எற்பாட்டு காலத்தில் கீழ்க்கண்ட ஐந்து பெரிய பலிகள் செலுத்தப்பட்டு வந்தன.

1) அசைவாட்டும் பலி
2) ஏறெடுத்துப் படைக்கும் பலி
3) பானபலி
4) ஸ்தோத்திர பலி
5) உற்சாக பலி

*1.* அசைவாட்டும் பலி (லேவி 8 : 29) : இது, பரிசுத்தவான்கள் உலகத்தின் நான்கு திசைகளுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்து ஜீவிப்பதைக் காட்டுகிறது. (மாற்கு 16 : 15 , அப். 1 : 8)

*2.* ஏறெடுத்துப் படைக்கும் பலி (லேவி 7 : 14): இது பரிசுத்தவான்கள் தங்களைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுப்பதைக் காட்டுகிறது. (2 தீமோ. 1 : 12)

*3.* பானபலி (யாத். 29 : 40): இது, பரிசுத்தவான்கள் ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஊற்றுவதைக் காட்டுகிறது. (பிலி. 2 : 17, மத். 16 : 25)

*4.* ஸ்தோத்திர பலி(லேவி. 22 : 29) : இது, பரிசுத்தவான்கள், தேவன் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து நன்றியுள்ள இருதயத்தோடு ஜீவிப்பதைக் காட்டுகிறது. (எபி. 13 : 15)

*5.* உற்சாக பலி (லேவி 7 : 16) : இது, தேவ ஜனங்கள் தங்கள் மனதில் நியமித்ததின்படியே, கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் காணிக்கைகளைச் செலுத்துவதைக் காண்பிக்கிறது. (11 கொரி. 9 : 7)

*******************

வகுப்பு :11

பாடம்-2

# பஸ்கா ஆட்டுக்குட்டி

(யாத். அதி. 12)

**I** ***முக்கியமானவசனம் :*** (2 Marks)

1 கொரிந்தியர் 5 : 7

ஆகையால் நீங்கள் புளிப்பில்லதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, , பழைய புளித்த மாவைப்புறம்பே கழித்துப்போடுங்கள . ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகபலியிடப்பட்டிருக்கிறாரே.

1 யோவான் 1 : 7 - 9

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம் , சத்தியம் நமக்குள் இராது.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**II** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*** (2 Marks)

**1.** பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டதின் காரணங்கள் யாவை?

1) இஸ்ரவேலரின் தலைப்பிள்ளைகளைனைத்தையும் சங்காரத்தில் இருந்து பாதுகாக்கவும்,

2) இஸ்ரவேலர் அனைவரும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்படும் பொருட்டாகவும் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது.

**2.** பஸ்காவாக நமக்காக பலியானவர் யார்? வசன ஆதாரம் தருக.

பஸ்காவாக நமக்காக பலியானவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (1 கொரி. 5 : 7)

**3.** பஸ்காவாகிய இயேசு கிறிஸ்து நமக்காக பலியானபடியால் நாம் பெற்றுக் கொள்ளும் ஆவிக்குரிய நன்மைகள் யாவை?

பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியானபடியால் அவருடைய பலியில் நாம் விசவாசம் வைத்து நம்முடைய பாவங்களை மனங்கசந்து அறிக்கை செய்யும் போது நாம் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்கிறோம். பாவங்களிலிருந்தும் பாவிகளிலிருந்தும் விடுதலையாகிறோம்.

**4.** பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப்பட்ட முதலாம் மாதம் சம்பவித்த இரு காரியங்கள் யாவை? அவை நம்முடைய ஆவிக்குரிய அனுபவத்தில எதைக் காட்டுகிறது?

1) அவர்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டனர் . இது பாவ மன்னிப்பாகிய இரட்சிப்பையும் ,

2) அவர்கள் கானானனைநோக்கிப் புறப்பட்டனர்˙. இது ஆவிக்குரிய வளர்ச்சியின துவக்கத்தையும் காண்பிக்கிறது.

**5.** யூதர்கள் எத்தனை விதமான நாட்காட்டிகளை உபயோகித்தனர்? அவை யாவை?

யூதர்கள் இருவித நாட்காட்டிகளை உபயோகித்தனர். அவையாவன :

1) மதச்சார்பற்ற, சமூக சம்பந்தமான நாட்காட்டி

2) புனித நாட்காட்டி

**6.** மதச்சார்பற்ற நாட்காட்டி எப்பொழுது துவங்கிற்று? புனித நாட்காட்டி எப்பொழுது துவங்கிற்று?

1) மதச்சார்பற்ற, சமூக சம்பந்தமான வருடம் எத்தானிம் அல்லது டிஷ்ரி மாதத்தில் துவங்கிற்று.

2) புனித நாட்காட்டி இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமாயிற்று(யாத். 12 : 2). அது ஆபிப் அல்லது நிசான் மாதத்தில் துவங்கிற்று.

**7.** முதலாம் மாதம் என்பதன் ஆவிக்குரிய கருத்து என்ன?

முதலாம் மாதம் என்பது இஸ்ரவேலரின் புனித வருடத்தின் பிரதான மாதமாக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. (யாத். 12 : 2) பிரதான மாதமான இது நம்முடைய ஆவிக்குரிய அனுபவங்களின் துவக்கத்தைக் காண்பிக்கிறது. அதாவது நாம் கர்த்தராகிய இயேசுவை நம்முடைய சொந்த இரட்சகராக எற்றுக் கொள்ளும் நாளைக் குறிக்கிறது.

**8.** நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் எப்பொழுது துவங்குகிறது? நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி எது முதல் கணக்கிடப்படுகிறது?

1) நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் இரட்சிப்பில், நாம் கர்த்தராகிய இயேசுவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் நாளன்று துவங்குகிறது.

2) நாம் இரட்சிக்கப்பட்ட நாள் முதல் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. (பாடத்திட்டம்)

**9.** பஸ்காவை ஒவ்வொரு வருடமும் ஆசரிப்பது எதைக் காண்பிக்கிறது?

பஸ்காவை ஒவ்வொரு வருடமும் ஆசரிப்பது என்பது தேவனுடைய சமூகத்தில் நம்முடைய இரட்சிப்பின் அனுபவத்தை நினைவு கூருவதையும் அந்த அனுபவத்தை புதுப்பித்துக் கொள்ளுவதையும் காண்பிக்கிறது (யாத் 12 : 14)

**10.** பத்தாம் தேதி என்பது எதைக் குறிக்கிறது? அதன் முடிவிலே வந்தது யார்?

பத்து என்பது நியாயப் பிரமாணத்தைக் குறிக்கிறது. அந்த நியாயப்பிரமாண காலத்தின் முடிவிலேதான் இயேசு இவ்விலகிற்கு வந்தார். (ரோ. 10 : 4). அவரே மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டி (1 கொரி. 5 : 7)

**11.** நியாயப்பிரமாண காலத்தின் முடிவைக் குறித்தது எது?

கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தது நியாயப்பிரமாண காலத்தின் முடிவைக் குறித்தது. (ரோமர் 10 : 4)

**12.** நியாயப் பிரமாணத்தின் மூலம் எதை அறிந்து கொள்கிறோம்? நாம் எப்பொழுது இயேசு கிறிஸ்துவை தெரிந்து கொள்கிறோம்?

நியாயப்பிரமாணத்தின் மூலம் பாவம் இன்னதென்று நாம் அறிந்து கொள்கிறோம். (ரோமர். 7 : 7 - 9) தேவ வசனத்தின் மூலம் நாம் பாவிகள் என்று உணர்த்தப்படும் போது, பாவங்களிலிருந்து விடுதலையாக்கப்பட வேண்டும் என்கிற தவிப்பு நமக்குள் ஏற்படுகிறது. அப்போது தான் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தெரிந்து கொள்கிறோம். அதாவது அவரை நம் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறோம்.

**13.** யாத். 12 : 3ல் கூறப்பட்டுள்ள வீடு என்றால் என்ன? அதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

வீடு என்பது நம் சரீரத்தை அல்லது தனிப்பட்ட ஒரு ஆளைக் காட்டுகிறது. (11 கொரி. 5 : 1)

**14.** வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டி என்பதன் ஆவிக்குரிய கருத்து என்ன?

இரட்சிப்பு என்பது ஒவ்வொருவரும் தனித்தனியே பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரு அனுபவமாய் இருக்கிறது. (யோவான். 1 : 12, 13) ஒவ்வொருவருக்காகவும் ஒவ்வொரு தனி மனிதனின் இரட்சிப்புக்காகவும் கிறிஸ்து மரணத்தை ருசி பார்த்தார். (எபி. 2 : 9)

**15.** பஸ்கா ஆட்டுக்குட்டி எத்தன்மை உடையதாய் இருக்க வேண்டும்?

பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதும், ஆணும், ஒரு வயதுள்ளதுமான செம்மறி ஆடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது தெரிந்து கொள்ளப்பட்டதாய இருக்க வேண்டும். (யாத். 12 : 5)

**16.** பஸ்கா ஆட்டுக்குட்டி ஆணாக இருக்க வேண்டும் என்பதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன? அதை புதிய ஏற்பாட்டு பஸ்காவாகிய இயேசு கிறிஸ்துவோடு எவ்வாறு ஒப்பிடுவாய்?

ஆண் என்பது ஜெயஜீவியத்தைக் காட்டுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகம், மாம்சம், சுயம், பாவம், சாத்தான் யாவற்றையும் ஜெயித்தார். அவர் மரணத்தையும பாதாளத்தையும் ஜெயித்தார்.(ஏசாயா 25 : 8)(1 கொரி. 15 : 54, 55)

அவர் ஜெயங்கொண்டு பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந்தது போல நாமும் ஜெயங்கொண்டு அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட உட்காரும்படி வாஞ் சிக்கிறார். (வெளி 3 : 21)

**17.** பஸ்கா ஆட்டுக்குட்டி ஒரு வயதுள்ளது - ஆவிக்குரிய கருத்தை விவரி.

ஒரு வயது என்பது களங்கமற்ற சுபாவத்தைக் காட்டுகிறது. நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய கர்த்தராகிய இயேசுவும் களங்கமற்றவராயிருந்தார். ஒரு சிறு குழந்தை பாவம் அறியாததாயிருப்பது போல தீமையைப் பொறுத்த விஷயத்தில் நாம் குழந்தைகளாயிருக்க வேண்டுமென வேதவசனம் நமக்கு அறிவுறுத்துகிறது. துர்க்குணத்திலே நாம் குழந்தைகளாயிருக்க வேண்டும். (1 கொரி. 14 : 20)

**18.** பஸ்கா ஆட்டுக்குட்டி எப்பொழுது தெரிந்து கொள்ளப்பட வேண்டும்? எவ்வளவு நாட்கள் வைக்கப்பட வேண்டும்?

1) முதலாம் மாதம் பத்தாம் தேதி தெரிந்து கொள்ளப்பட வேண்டும்

2) பதினான்காம் தேதி வரை நான்கு நாட்கள் வைக்கப்பட வேண்டும் (யாத். 12 : 6)

**19.** பஸ்கா ஆட்டுக்குட்டியின் மாம்சத்தில் ஒன்றும் விடியற்காலம் வரை மீதியாக வைக்கலாகாது - ஆவிக்குரிய அர்த்தம் கூறு.

சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு (விடியற்கால வெளிச்சம்) எந்தப் பாவத்தையும் அறிக்கை செய்யாமல் விட்டு வைக்கக் கூடாது. முழுவதுமாய் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடக்கும்படி அவற்றை அறிக்கை செய்து விட்டுவிட வேண்டும். (நீதி. 28 : 13, 1 யோவான் 1 : 7 - 9)

**II** *__சுருக்கமான விடையளி :__* **(5** Marks)

**1.** 'பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றது. நம் பஸ்காவாகிய இயேசுவும் பழுதற்றவர்' என்பதை வசன ஆதாரத்துடன் நிருபி.

1) கர்த்தராகிய இயேசு குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக இருந்தார். (1 பேதுரு 1 : 19)

2) அவர் பிறப்பு பரிசுத்தமானதாயிருந்தது. (லூக்கா 1 : 35)

3) அவர் பாவஞ் செய்யவில்லை (1 பேதுரு 2 : 22)

4) அவர் பாவமறியாதவராயிருந்தார் (2 கொரி. 5 : 21)

5) அவரிடத்தில் பாவமில்லை (1 யோவான் 3 : 5)

**2.** பஸ்கா ஆட்டுக்குட்டி தெரிந்து கொள்ளப்பட்ட பின்பு நான்கு நாட்கள் வைக்கப்பட்டு அடிக்கப்பட வேண்டும் என்பதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

1) அடிக்கப்படும் படியாக தெரிந்து கொள்ளப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டி நான்கு நாட்கள் வைக்கப்பட்டதன் காரணம் - முதலாவதாக, அந்த பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றது என்று அந்நாட்களில் சோதிக்கப்பட்டு நிருபிக்கப்படும்படியாகவே ஆகும்.

இதற்கு ஒப்பனையாக நம்முடைய பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் வெளிப்படையாக ஊழியம் செய்த கிட்டத்தட்ட நான்கு வருடங்களும் அவருடைய சத்துருக்கள் அவருடைய ஜீவியத்தை நன்கு ஆழ்ந்து ஆராய்ந்தனர். அந்த நாட்கள் அவருடைய பழுதற்ற தன்மையை நிருபிக்கும் சோதனையின் நாட்களாகவே இருந்தன. (லூக்கா 11 : 53, 54) (யோவான் 8 : 46, 18 : 38)

2) இரண்டாவதாக நான்கு நாட்கள் என்பது அறியாமையின் காலம், மனச்சாட்சியின் காலம், நியாயப்பிரமாண காலம், கிருபையின் காலம் ஆகிய நான்கு காலங்களைக் குறிக்கிறது. இந்த நான்கு காலங்களிலும் ஜீவித்த மனிதவர்க்கத்திற்காக அடிக்கப்படும்படியாகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பஸ்கா ஆட்டுக்குட்டியாக வெளிப்பட்டார் என்பது இதன் ஆவிக்குரிய அர்த்தம் ஆகும்.

3. பஸ்கா ஆட்டுக்குட்டி சாயங்காலத்தில் அடிக்கப்பட்டதின் ஆவிக்குரிய அர்த்தம் கூறு.

சாயங்காலம் என்பது ஒரு பகலின் முடிவாகும். ஆட்டுக்குட்டி சாயங்காலத்தில் அடிக்கப்பட்டது கர்த்தராகிய இயேசு இக்கடைசிக் காலங்களில் (கிருபையின் காலத்தில்) மாம்சத்தில்வெளிப்பட்டு அடிக்கப்பட்டதைக்குறிக்கிறது. ( 1 பேதுரு 1 : 20, வெளி 5 : 9) சாயங்காலம் என்பது, ஒரு பகல் முழுவதும் நாம் பிரயாசப்பட்டு உழைத்தபின்பு இளைப்பாறும் நேரத்தைக் காட்டுகிறது.

அதுபோலவே(பாவத்தின் நுகத்தின் கீழ்) வருத்தப்பட்டு பாரஞ் சுமந்த நாம் கிறிஸ்துவின் மரணத்தை விசுவாசிப்பதின் மூலம் ஒரு இளைப்பாறதலுக்குள் பிரவேசிக்கிறோம்.

4. இரத்தத்தைத் தெளித்தல் - குறிப்பு வரைக. (அல்லது) பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் எங்கெல்லாம் தெளிக்கப்பட வேண்டும்? அதன் ஆவிக்குரிய அர்த்தத்தை வசன ஆதாரத்துடன் விளக்கு.

வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் இரத்தம் தெளிக்கப்படுவது (யாத். 12 : 22) என்பது நம்முடைய இருதயமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படுவதைக் காட்டுகிறது. (எபி. 9 : 14,10 : 19 - 22) இரத்தம் தெளிக்கப்பட்ட வீடுகளில் சங்காரக்காரன் பிரவேசிப்பதில்லை என்பது பாவ மன்னிப்புப் பெற்றவர்களுக்கு அந்தப் பாவத்தின் நிமித்தம் தண்டனை இல்லை என்பதைக் காண்பிக்கிறது.

## III <u>*விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி*</u> : (15 Marks)

1. பஸ்கா ஆட்டுக்குட்டி தெரிந்து கொள்ளப்பட வேண்டிய விதத்தையும் அதன் ஆவிக்குரிய அர்த்தத்தையும் வசனத்துடன் விவரி.

<u>ஆட்டுக்குட்டி தெரிந்து கொள்ளப்பட வேண்டிய விதம் :</u>

<u>A) வருடத்தின் முதலாம் மாதம் பத்தாம் தேதி தெரிந்து கொள்ளப்பட வேண்டும். (யாத். 12 : 2, 3)</u>

<u>முதலாம் மாதம் :</u>

1) முதலாம் மாதம் என்பது பிரதான மாதம். இது இஸ்ரவேலரின் புனித வருடத்தின் பிரதான மாதமாயிற்று. இதுவே வருடத்தின் முதலாம் மாதமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது (யாத். 12 : 2) அந்த மாதத்தில் இரண்டு காரியங்கள் சம்பவித்தன. ஒன்று அவர்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டனர். மற்றொன்று அவர்கள் கானானை நோக்கிப் புறப்பட்டனர்.

2) இது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் இரட்சிப்பில், நாம் கர்த்தராகிய இயேசுவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் நாளன்று துவங்குகிறது.

3) நாம் இரட்சிக்கப்பட்ட நாள் முதல் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி கணக்கிடப்படுகிறது என்பதைக் குறிக்கிறது.

<u>பஸ்காவை ஒவ்வொரு வருடமும் ஆசரிப்பது</u> : (யாத் 12 : 14)
தேவனுடைய சமூகத்தில் நம்முடைய இரட்சிப்பின் அனுபவத்தை நினைவு கூருவதையும் அந்த அனுபவத்தை புதுப்பித்துக் கொள்ளுவதையும் குறிக்கிறது.

<u>பத்தாம் தேதி</u> :

1) பத்து என்பது நியாயப் பிரமாணத்தைக் குறிக்கிறது

2) கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தது நியாயப்பிரமாண காலத்தின்முடிவைக் குறிக்கிறது. (ரோமர் 10 : 4) அவரே மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டியாயிருக்கிறார். (1 கொரி 5 : 7)

3) நியாயப்பிரமாணத்தின் மூலம் பாவம் இன்னதென்று அறிவு ஒருவனுக்கு உண்டாகிறது. (ரோமர். 7 : 7 - 9) அவ்வாறு தேவ வசனத்தின் மூலம் நாம் பாவிகள் என்று உணர்த்தப்படும் போது, பாவங்களிலிருந்து விடுதலையாக்கப்பட வேண்டும் என்கிற தவிப்பு நமக்குள் ஏற்படுகிறது. அப்போது தான் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தெரிந்து கொள்கிறோம். அதாவது அவரை நம் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறோம்.

<u>**B)** வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டி</u> : (யாத். 12 : 3)

1) வீடு என்பது நம் சரீரத்தை அல்லது தனிப்பட்ட ஒரு நபரைக் காட்டுகிறது. (11 கொரி. 5 : 1)

2) இரட்சிப்பு என்பது ஒவ்வொருவரும் தனித்தனியே பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரு அனுபவமாய் இருக்கிறது. (யோவான். 1 : 12, 13)

3) ஒவ்வொருவருக்காகவும் ஒவ்வொரு தனி மனிதனின் இரட்சிப்புக்காகவும் கிறிஸ்து மரணத்தை ருசி பார்த்தார். (எபி. 2 : 9)

<u>**C)** ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமான செம்மறி ஆடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது தெரிந்து கொள்ளப்பட்டதாய் இருக்க வேண்டும் (யாத் 12 : 5)</u>

<u>பழுதற்றது</u> :

1) கர்த்தராகிய இயேசு குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக இருந்தார். (1 பேதுரு 1 : 19)

2) அவர் பிறப்பு பரிசுத்தமானதாயிருந்தது. (லூக்கா 1 : 35)

3) அவர் பாவஞ் செய்யவில்லை (1 பேதுரு 2 : 22)

4) அவர் பாவமறியாதவராயிருந்தார் (2 கொரி. 5 : 21)

5) அவரிடத்தில் பாவமில்லை (1 யோவான் 3 : 5)

<u>ஆண்</u> :

1) ஆண் என்பது ஜெயஜீவியத்தைக் காட்டுகிறது.

2) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகம் , மாம்சம், சுயம், பாவம் சாத்தான் யாவற்றையும் ஜெயித்தார்.

3) அவர் ஜெயங்கொண்டு பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந்தது போல நாமும் ஜெயங்கொண்டு அவருடைய சிங்காசனத்தில் அவரோடுகூட உட்காரும்படி வாஞ்சிக்கிறார். (வெளி 3 : 21)

4) அவர் மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தார்.(ஏசாயா 25 : 8) (1 கொரி. 15 : 54, 55)

<u>ஒரு வயதுள்ளது</u> :

கர்த்தராகிய இயேசு களங்கமற்றவராயிருந்தார். ஒரு சிறு குழந்தை பாவம் அறியாததாயிருப்பது போல தீமையைப் பொறுத்த விஷயத்தில் நாம் குழந்தைகளாயிருக்க வேண்டுமென வேதவசனம் நமக்கு அறிவுறுத்துகிறது போல துர்க்குணத்திலே நாம் குழந்தைகளாயிருக்க வேண்டும். (1 கொரி. 14 : 20)

**2.** பஸ்காவை புசிக்கும் விதத்தையும் அதன் ஆவிக்குரிய அர்த்தத்தையும் வசன ஆதாரத்துடன் விவரி.

i) <u>பஸ்கா ஆட்டுக்குட்டியை நெருப்பினால் சுடுதல்</u> (யாத். 12 : 9)

a) இது கர்த்தராகிய இயேசு நமக்காகப் பலியான போது, அவர் நமக்காகச் சகிக்க வேண்டியதாயிருந்த பாடுகளைக் காட்டுகிறது(ஏசாயா 53 : 5)

b) நெருப்பினால் சுட்ட மாம்சத்தைப் புசித்தல் கர்த்தராகிய இயேசு சிலுவையில் சகித்த பாடுகளின் மூலம் நமக்குக் கிடைக்கும் இரட்சிப்பில் நாம் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களைக் குறிக்கிறது.

ii) புளிப்பில்லா அப்பத்தோடும் கசப்பான கீரையோடும் பஸ்காவை புசிக்கக் கடவர்கள் (யாத். 12 : 8)

a)புளிப்பு என்பது துர்க்குணம் பொல்லாப்பு என்பனவற்றைக் காட்டுகிறது.

b)இவைகளை விட்டுத் துப்புரவும் உண்மையும் உள்ளவர்களாய் நாம் ஜீவிக்க வேண்டும் (1 கொரி 5 : 8)

c)கசப்பான கீரை என்பது நொருங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தைக் காட்டுகிறது. (பாவத்துக்காக மனஸ்தாபம் ) (2 கொரி. 7 : 10, சங்கீதம் 51 : 17)

iii) பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் புசிக்கக் கூடாது (யாத். 12 : 9)

a)எழுத்திற்குரிய ஒரு சிலுவை ஒரு விஷயமல்ல. இரட்சிப்பின் அனுபவம், சிலுவையின் (கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும்) ஆவிக்குரிய கருத்தை விளங்கிக் கொள்வதின் மூலமாக உண்டாகிறது.

b) எவ்விதத்திலும் நாம் சத்தியத்தின் ஆவிக்குரிய கருத்தின் சாரத்தைக் குறைக்கக் கூடாது.

iv) அதின் தலையும், தொடைகளும், அதற்குள்ள யாவும்' புசிக்கப்பட வேண்டும்(யாத்12:9)

a)இது கிறிஸ்து தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, நம் ஜீவியங்களில் தேவ ஞானமும், தேவ பெலனுமாவதைக் காண்பிக்கிறது. (1 கொரி. 1 : 24)

b) தலை - ஞானம்,தொடைகள் - பெலன்

v)அரைகளில் கச்சை கட்டுக்கொண்டும், கால்களில் பாதரட்சை தொடுத்துக் கொண்டும், கையில் தடி பிடித்துக் கொண்டு அதைத் தீவிரதாய்ப் புசிக்க வேண்டும் (யாத் 12:11)

a)அரைகளில் கச்சைச் கட்டுக் கொள்ளுதல்:
இது சத்தியத்தால் நமது மனதின் அரையைக் கட்டிக் கொள்வதையும் பரம கானானை நோக்கிச் செல்லும் பிரயாணத்தை உறுதியான தீர்மானத்துடன் நாம் துவங்குவதையும் காட்டுகிறது. (1 பேதுரு 1:13, நீதி 16:32, எபே 6:14)

b)கால்களில் பாதரட்சை: இது நம் ஆவிக்குரிய பிரயாணத்தின் துவக்கம் முதல் தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படிவதற்கு ஆயத்தமாயிருப்பதைக் காட்டுகிறது.

c)கையில் தடி பிடித்துக் கொண்டு:
இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்கு தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு தேவனுடைய வாக்குத்தத்தங்களை உறுதியாகப் பிடித்துக் கொள்வதை இது காட்டுகிறது. ( 2 பேதுரு 1 :4)

d)தீவிரமாய்ப் புசிப்பது: இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற நாம் தாமதிக்கக்கூடாது (2 கொரி 6:2) அசதியாயிருக்கக்கூடாது (ரோமர் 12 :11)

**********************

வகுப்பு :11

பாடம்-3

# சர்வாங்க தகனபலி

(லேவி. 1 ; 6 : 9 - 13)

**I** ***முக்கியமானவசனம் :*** (2 Marks)

எபேசியர் 5 : 2

கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள். .

ரோமர் 12 : 1

அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

**II** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*** (2 Marks)

**1.** நம் பாவங்களுக்காக சர்வாங்க தகனபலியானது யார்? எவ்வாறு? வசன ஆதாரத்துடன் எழுது.

(i) நம் பாவங்களுக்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சர்வாங்க தகனபலியானார்.

(ii) அவர் நம்முடைய பாவங்களைச்சுமந்து நமக்காகப் பாவமாகி சர்வாங்க தகன பலியானார். (எபே. 5 : 2)

**2.** சர்வாங்க தகனபலி எதைக் குறிக்கிறது? இந்த அனுபவத்தை நாம் எப்பொழுது பெற்றுக் கொள்கிறோம் ?

1) நம் சரீரத்தின் அவயவங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுப்பதை சர்வாங்க தகனபலி குறிக்கிறது. (ரோமர் 12 : 1)

2) பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக இவ்வனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறோம்.

**3.** சர்வாங்க தகனபலி என பெயர் வரக் காரணம் என்ன?

கொண்டுவரப்படும் பலிமிருகம் முழுவதுமாய் தகனிக்கப்படுவதால் இப்பலிக்குச் சர்வாங்க தகனபலி என்று பெயர்.

**4.** சர்வாங்க தகனபலியின் பலிப்பொருட்கள் யாவை?

காளை, செம்மறியாடு, வெள்ளாடு, புறா.

**5.** பலிப்பொருட்கள் பொதுவாக எதை வெளிப்படுத்துகிறது?

பலிப்பொருட்கள் பொதுவாக விழுந்து போன மனிதனுடைய சுபாவங்களை வெளிப்படுத்துகின்றன.

**6.** சர்வாங்க தகன பலியில் காளை எதைக் குறிக்கிறது?

காளை என்பது உலக சிந்தையுடன் ஜீவித்து, உலகத்திற்குரிய காரியங்களுக்காகவே உழைத்து, உலகத்திற்குரிய சிற்றின்பங்களை அனுபவிக்கிற மனுஷனுடைய மாம்ச சுபாவத்தை வெளிப்படுத்துகின்றன.

**7.** சர்வாங்க தகனபலியில் செம்மறியாடு எதைக் குறிக்கிறது?.

செம்மறியாடு மந்தை மந்தையாய் ஜீவிக்கும் மிருகம் தங்கள் இனம் ஜாதி இவைகளை விட்டுப் பிரியாமல் தேசம், பாஷை போன்ற வித்தியாசங்களுக்கு அடிமைப்பட்டு, பூமிக்குரிய காரியங்களில் ஒன்று சேர்ந்து ஒரு மந்தை போல கூட்டங் கூட்டமாக ஜீவிக்கிற மனுஷரைக் காண்பிக்கிறது.

**8.** சர்வாங்க தகனபலியில் வெள்ளாடு எதைக் குறிக்கிறது?
வெள்ளாடு மேய்ப்பனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இராமல் அங்கும் மிங்கும் ஒடி திரியும் மிருகமாகும். இது மனுஷனுக்குள்ளிருக்கும் கீழ்படியாமையின் சுபாவத்தை வெளிப்படுத்துகிறது.

**9.** சர்வாங்க தகனபலியில் புறா எதைக் குறிக்கிறது?
புறா - சுயாதீனமாய்ப் பறக்கும் ஒரு பறவையாகும். இது சிலருக்குள் காணப்படும் சுயாதீன ஆவியைக் குறிக்கிறது.

**10.** சர்வாங்க தகனபலியில் - பலிமிருகத்தின் தலையின் மேல் கை வைத்தல் என்பதின் ஆவிக்குரிய கருத்தை எழுது.
மிருகத்தின் தலையின் மேல் கை வைத்தல் என்பது நமக்காகப் பாவமாக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவின் மீது நம்முடைய பாவங்கள் சுமத்தப்படுவதைக் குறிக்கிறது. ( ஏசாயா 53 : 6)

**11.** சர்வாங்க தகனபலியில் மிருகம் கொல்லப்படுதல்' என்பதின் ஆவிக்குரிய கருத்தை எழுது.
மிருகம் கொல்லப்படுதல் - பாவிக்கு பதிலாக மிருகம் கொல்லப்படுகிறது. பாவத்தின் சம்பளம் மரணமாயிருப்பதால் (ரோமர் 6 : 23) இது ஒவ்வொருக்காகவும் மரணத்தை ருசி பார்த்த கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது. (எபி.2 : 9)

**12.** சர்வாங்க தகனபலியில் இரத்தம் தெளிக்கப்படுதல் என்பதின் ஆவிக்குரிய கருத்தை எழுது.
பலிபீடத்தின் மேல் சற்றிலும் இரத்தம் தெளிக்கப்படுதல் என்பது முழு உலகத்திலும் உள்ள ஜனங்களின் பரிசுத்தமாகுதலுக்காகச் சிந்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைக் காட்டுகிறது. (எபி. 13 : 12)

**13.** சர்வாங்க தகனபலியில் மிருகத்தின் தோலுரித்தல் என்பதின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?.
மிருகத்தின் தோலுரித்தல் என்பது ஒரு மிருகத்தைத் தோலுரித்த பின்பு, அம்மிருகத்தின் நிறத்தைக் கண்டுபிடிக்க முடியாது. இது ஜாதி நிறம், தேசம், பாஷை முதலிய எல்லா வித்தியாசங்களும் நீக்கப்படுவதைக் குறிக்கிறது. (1 கொரி. 12 : 13)

**14.** சர்வாங்க தகனபலியில் 'சந்து சந்தாகத் துண்டித்தல" என்பதின் ஆவிக்குரிய கருத்தை எழுது
சந்து சந்தாகத் துண்டித்தல் என்பது நாம் நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் பிரதிஷ்டை செய்வதைக் காட்டுகிறது. இதன்மூலம் நாம் சிலுவையில் தொங்கிய கர்த்தராகிய இயேசுவைப் போல அழகும் சௌந்தரியமற்றவர்களாகிறோம். (ஏசாயா 53 : 2)

**15.** சர்வாங்க தகனபலியில் குடல்களையும் தொடைகளையும் கழுவுதல் என்பதின் ஆவிக்குரிய கருத்தை எழுது
குடல்களையும் தொடைகளையும் கழுவுதல் என்பது தேவனுடைய வழிகளில் நடக்கும்படியான உள்ளான தீர்மானத்துடன், நம் சொந்த நினைவுகளையும் சொந்த வழிகளையும் விட்டு விடுவதால் உண்டாகும் சுத்திகரிப்பை காட்டுகிறது.(ஏசாயா 55 : 7, 8)

**16.** சர்வாங்க தகனபலியில் அக்கினி போடுதல் என்பதின் ஆவிக்குரிய கருத்து என்ன?
இது பரிசுத்தாவியின் பரிசுத்தமாக்கும் அக்கினியைக் காண்பிக்கிறது.(ரோமர் 15 : 15)

**17.** சர்வாங்க தகனபலியில் செலுத்தப்படும் தலையும் கொழுப்பும் என்பதின் ஆவிக்குரிய கருத்து என்ன?
தலை உலக ஞானத்தின் இருப்பிடமாயிருக்கிறது. கொழுப்பு - சுக போகமான ஜீவியத்தை வெளிப்படுத்துகிறது.

**18.** அக்கினியின் மேல் கட்டைகளை அடுக்கி வைத்தல் என்பதன் ஆவிக்குரிய கருத்தை கூறு.
கட்டை உபதேசத்தைக் காட்டுகிறது. கட்டைகள் அக்கினியின் மேல் அடுக்கி வைக்கப்பட வேண்டும். இந்தக் கட்டைகளின் மேல் தலையையும் துண்டங்களையும், கொழுப்பையும், குடல்களையும், தொடைகளையும் அடுக்கி வைத்து தகனிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒருவனுடைய ஜீவியம் உபதேசத்தின் படி ஒழுங்குக்குள் அல்லது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டால் மாத்திரமே, அவன் பரிசுத்தாவியின் அக்கினியினால் பூரணமாய்ப் பரிசுத்தமாக்கப்படுவான் என்பதை இது காண்பிக்கிறது.

19. சர்வாங்க தகனபலியில் காட்டுப்புறா அல்லது புறாக்குஞ்சு செலுத்தப்படும் போது புறாவின் தலையைக் கிள்ளுதல் என்பதின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
சுயசித்தம் , சுயாதீன ஆவி முதலியவை நீக்கப்படுவதைக் காண்பிக்கிறது.

20. சர்வாங்க தகனபலியில் புறாவினை செட்டைகளுடன் பிளப்பது என்பதின் ஆவிக்குரிய கருத்து என்ன?
இது தேவனுடைய வசனத்தால் நாம் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, நம்முடைய ஜீவியங்கள் மறைவில்லாமல் தேவனுக்கு முன்பாகத் திறந்துவைக்கப் படுவதைக் காண்பிக்கிறது. (எபி. 4 : 12, 13)

21. இராமுழுவதும் விடியற்கால மட்டும், சர்வாங்க தகனபலி, பலிபீடத்தின் மேல் எரிந்து கொண்டிருக்க வேண்டும என்பதின் ஆவிக்குரிய கருத்து யாது?
விடியற்காலம் என்பது கர்த்தருடைய இரகசிய வருகையைக் குறிக்கிறது. (வெளி. 6 : 9) இராமுழுவதும் என்பது சோதனை பாடுகளைக் குறிக்கிறது. அக்கினி எரிவது - என்பது கர்த்தருடைய இரகசிய வருகை மட்டும் சோதனைகளின் மத்தியிலுங்கூட பரிசுத்தமாக்கப்பட்டதும் பரிசுத்த ஆவியினால் நிறைந்ததுமான ஜீவியத்தைப் பாதுகாத்து கொள்வதைக் காட்டுகிறது.

22. பலிபீடத்தின் சாம்பல் எதைக் குறிக்கிறது? அதை எங்கு கொட்டி வைக்க வேண்டும்? அதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
சாம்பல் - சாட்சியின் ஜீவியத்தைக் குறிக்கிறது.
சாம்பல் பலிபீடத்தின் பக்கத்தில் கொட்டுவது - சபையில் சாட்சியாய் இருப்பதையும்,
பாளத்துக்குப் புறம்பே கொட்டுவது - வெளியுலகத்தில் சாட்சியாய் இருப்பதையும் காட்டுகிறது. (எபி. 13 : 10) (லேவி. 6 : 10,11)

23. பரிசுத்தாவியின் அபிஷேகமில்லாமல் பலியின் ஜீவியமில்லை என்பதை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்கிறோம்?
சர்வாங்க தகனபலியே பலிபீடத்தில் முதலாவது வைக்கப்படும் பலியாகும். சுர்வாங்க தகன பலியின் மேலேயே மற்ற பலிகளெல்லாம வைக்கப்பட்டு தகனிக்கப்படுகின்றன. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் பலியின் ஜீவியம் இல்லை என்பதை இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்கிறோம்.

24. சர்வாங்க தகனபலியில் பலிப்பொருள் அக்கினியில் முற்றிலுமாய் எரிந்து சாம்பலாக்கப்படுகிறது என்பதின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
தகனபலியில் பலிப்பொருள் அக்கினியில் முற்றிலுமாய் எரிந்து சாம்பலாக்கப்படுகிறது. அதுபோலவே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாய் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும்.

**III** *<u>சுருக்கமான விடையளி:</u>* (5 Marks)

1. சர்வாங்க தகனபலியில் செலுத்தப்படும் பலிப்பொருட்கள் வெளிப்படுத்தும் விழுந்து போன மனிதனுடைய சுபாவங்களை எழுது. இந்த சுபாவங்கள் எதினால் சுட்டெரிக்கப்பட வேண்டும்?.
சர்வாங்க தகனபலியில் செலுத்தப்படும் பலிப்பொருளான காளை, செம்மறியாடு, வெள்ளாடு, புறா முதலிய பிராணிகளும், பறவைகளும் சுத்தமானவைகளாய் இருந்தாலும் அவை விழுந்து போன மனுஷனுடைய சுபாவங்களை வெளிப்படுத்துகிறது.

<u>காளை</u> : காளை என்பது உலக சிந்தையுடன் ஜீவித்து, உலகத்திற்குரிய காரியங்களுக்காகவே உழைத்து, உலகத்திற்குரிய சிற்றின்பங்களை அனுபவிக்கிற மனுஷனுடைய மாம்ச சுபாவத்தை வெளிப்படுத்துகிறது.

<u>செம்மறியாடு</u> : இது மந்தை மந்தையாய் ஜீவிக்கும் மிருகம் தங்கள் இனம் ஜாதி இவைகளை விட்டுப் பிரியாமல் தேசம், பாஷை போன்ற வித்தியாசங்களுக்கு அடிமைப்பட்டு, பூமிக்குரிய காரியங்களில் ஒன்று சேர்ந்து ஒரு மந்தை போல கூட்டங் கூட்டமாக ஜீவிக்கிற மனுஷரைக் காண்பிக்கிறது

<u>வெள்ளாடு</u> : இது மேய்ப்பனுடைய கட்டுப்பாட்டின் கீழ் இராமல் அங்கும் மிங்கும் ஒடி திரியும் மிருகமாகும். இது மனுஷனுக்குள்ளிருக்கும் கீழ்படியாமையின் சுபாவத்தை வெளிப்படுத்துகிறது

புறா : இது சுயாதீனமாய்ப் பறக்கும் ஒரு பறவையாகும். இது சிலருக்குள் காணப்படும் சுயாதீன ஆவியைக் குறிக்கிறது.
இந்த விழுந்து போன மனிதனுடைய சுபாவங்கள் பரிசுத்த ஆவியின் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

2. சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணத்தையும் அதின் ஆவிக்குரிய அர்த்தத்தையும் எழுது..

சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம் :
சர்வாங்க தகனபலி ஒவ்வொரு நாள் காலையும் செலுத்தப்பட்டு, பலிபீடத்தின் மேல் இராமுழுவதும் விடியற்கால மட்டும் எரிந்து கொண்டிருக்க வேண்டும்.(லேவி. 6 : 9)

விடியற்காலம் என்பது கர்த்தருடைய வருகையை குறிக்கிறது. (வெளி. 22 : 12, 16)

இராமுழுவதும் விடியற்கால மட்டும் அக்கினி எரிதல் என்பது கர்த்தருடைய இரகசிய வருகை மட்டும் சோதனைகளின் மத்தியிலுங்கூட பரிசுத்தமாக்கப்பட்டதும் பரிசுத்த ஆவியினால் நிறைந்ததுமான ஜீவியத்தைப்பாதுகாத்துக் கொள்வதைக் காட்டுகிறது. (2 தீமோ. 3 : 12)

3. சாம்பலைக் குறித்த பிரமாணத்தையும் அதன் ஆவிக்குரிய கருத்தையும் எழுது.
சாம்பலைக் குறித்த பிரமாணம், ஆசாரியன் சர்வாங்க தகனபலியின் சாம்பலை எடுத்து, பலிபீடத்தின் பக்கத்தில் கொட்ட வேண்டும். பின்பு தன் வஸ்திரங்களைக் கழற்றி, வேறு வஸ்திரங்களை, உடுத்திக் கொண்டு அந்தச் சாம்பலைப் பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டு போய் கொட்ட வேண்டும்.(லேவி. 6 : 10, 11) இங்கு பலிபீடத்துக்குப் பக்கத்தில் என்பது சபையையும் பாளத்துக்குப் புறம்பே என்பது வெளிஉலகத்தையும்(எபி. 13 : 10, 13) காட்டுகிறது. தன்னை பலியாக ஒப்புக்கொடுக்கும் மனுஷன் இவ்விரு இடங்களிலும் கர்த்தருக்குச் சாட்சியாய் இருக்க வேண்டும்.
எரிந்து சாம்பலாகுதல், பரிசுத்த ஆவியால் பரிசுத்தமாக்கப்பட்டு சுயமில்லாத நிலவரத்தை அடைவதைக் காட்டுகிறது

**IV** *விரிவாக, தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி:* (15 Marks)

1. சர்வாங்க தகனபலியில் காளை, செம்மறியாடு, வெள்ளாடு, காட்டுப்புறா, புறாக்குஞ்சு இவைகள் பலியாக செலுத்தப்படும் முறைகளையும் அதன் ஆவிக்குரிய அர்த்தங்களையும் வசன ஆதாரத்துடன் விவரித்து எழுது.

**(A)** காளை, செம்மறியாடு, வெள்ளாடு போன்றவைகள் சர்வாங்க தகனபலியாக செலுத்தப்பட வேண்டிய முறைகளும் அதின் ஆவிக்குரிய அர்த்தங்களும் :

**i)** மிருகத்தின் தலையின் மேல் கை வைத்தல் : இது நமக்காகப் பாவமாக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுவின மீது நம்முடைய பாவங்கள் சுமத்தப்படுவதைக் குறிக்கிறது. ( ஏசாயா 53 : 6)

**ii)** மிருகம் கொல்லப்படுதல்: பாவிக்கு பதிலாக மிருகம் கொல்லப்படுகிறது. பாவத்தின் சம்பளம் மரணமாயிருப்பதால் (ரோமர் 6 : 23) இது ஒவ்வொருக்காகவும் மரணத்தை ருசி பார்த்த கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது. (எபி.2 : 9)

**iii)**இரத்தம் தெளிக்கப்படுதல் : பலிபீடத்தின் மேல் சற்றிலும் இரத்தம் தெளிக்கப்படுதல் என்பது முழு உலகத்திலும் உள்ள ஜனங்களின் பரிசுத்தமாகுதலுக்காகச் சிந்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைக் காட்டுகிறது. (எபி. 13 : 12)

**iv)** மிருகத்தின் தோலுரித்தல் : ஒரு மிருகத்தைத் தோலுரித்த பின்பு, அம்மிருகத்தின் நிறத்தைக் கண்டுபிடிக்க முடியாது. இது ஜாதி, நிறம், தேசம், பாஷை முதலிய எல்லா வித்தியாசங்களும் நீக்கப்படுவதைக் குறிக்கிறது. (1 கொரி. 12 : 13)

**v)** சந்து சந்தாகத் துண்டித்தல் : நாம் நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் பிரதிஷ்டை செய்வதைக் காட்டுகிறது. இதன்மூலம் நாம் சிலுவையில் தொங்கிய கர்த்தராகிய இயேசுவைப் போல அழகும் சௌந்தரியமுமற்றவர்களாகிறோம். (ஏசாயா 53 : 2)

**vi)** குடல்களையும் தொடைகளையும் கழுவுதல் : தேவனுடைய வழிகளில் நடக்கும்படியான உள்ளான தீர்மானத்துடன், நம் சொந்த நினைவுகளையும் சொந்த

வழிகளையும் விட்டு விடுவதால் உண்டாகும் சத்திகரிப்பை காட்டுகிறது. (ஏசாயா 55 : 7, 8)

**vii)** அக்கினி போடுதல்: இது பரிசுத்தாவியின் பரிசுத்தமாக்கும் அக்கினியைக் காண்பிக்கிறது. (ரோமர் 15 : 15)

**viii)** தலையும் கொழுப்பும: தலை உலக ஞானத்தின் இருப்பிடமாயிருக்கிறது. கொழுப்பு - சுக போகமான ஜீவியத்தை வெளிப்படுத்துகிறது.

**ix)** அக்கினியின் மேல் கட்டைகளை அடுக்கி வைத்தல் :
கட்டை உபதேசத்தைக் காட்டுகிறது. கட்டைகள் அக்கினியின் மேல் அடுக்கி வைக்கப்பட வேண்டும். இந்தக் கட்டைகளின் மேல் தலையையும் துண்டங்களையும், கொழுப்பையும், குடல்களையும், தொடைகளையும் அடுக்கி வைத்து தகனிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒருவனுடைய ஜீவியம் உபதேசத்தின் படி ஒழுங்குக்குள் அல்லது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டால் மாத்திரமே, அவன் பரிசுத்தாவியின் அக்கினியினால் பூரணமாய்ப் பரிசுத்தமாக்கப்படுவான் என்பதை இது காண்பிக்கிறது.

**(B)** காட்டுப்புறா அல்லது புறாக்குஞ்சு சர்வாங்க தகனபலியாக செலுத்தப்படும் முறையும் அதன் ஆவிக்குரிய அர்த்தங்களும் :

**i)** புறாவின் தலையைக் கிள்ளுதல்: இது சுயசித்தம், சுயாதீன ஆவி முதலியவை நீக்கப்படுவதைக் காண்பிக்கிறது.

**ii)** செட்டைகளுடன் பிளப்பது: இது தேவனுடைய வசனத்தால் நாம் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, நம்முடைய ஜீவியங்கள் மறைவில்லாமல் தேவனுக்கு முன்பாகத் திறந்து வைக்கப்படுவதைக் காட்டுகிறது(எபி. 4 : 12, 13)

****************

வகுப்பு 11 பாடம்-4

# போஜன ப-

(லேவி. அதி 2; 6:14-23)

## I. முக்கியமானவசனம் :

1 கொரிந்தியர் 5:8

ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம்.

கொலோசெயர் 4:6

அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.

மாற்கு 9:50

உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள் என்றார்.

## II. ஓரிரு வாக்கியங்களில் விடையளி: (2 Marks)

1. இயேசு கிறிஸ்து எதை தனது போஜனம் என்று கூறினார்? வசன ஆதாரத்துடன் எழுது,

   இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தம் செய்வதே தம்முடைய போஜனம் என்று கூறினார். (யோவான் 4:34; எபி 10:7-9)

2. யார் போஜனப- யாக்கப்பட முடியும்? எப்படி?

   பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் போஜனப- ஆக்கப்பட முடியும். எப்படியெனில் அவர்கள் தேவனுடைய சித்தம் செய்ய தங்களை ஒப்புக் கொடுப்பதினால் போஜனப- யாக்கப் படுகிறார்கள். (பாடத்திட்டம்)

3. தேவசித்தம் செய்து. போஜனப- யாவதின் அவசியம் என்ன?

   தேவனுடைய சித்தம் செய்து, போஜனப- யானால் மாத்திரமே, நாம் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படமுடியும். (மத் 7:21-27)

4. போஜனப- யி- ருந்து நாம் கற்றுக் கொள்ளும் சத்தியம் என்ன?

   பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் தேவசித்தம் செய்கிற ஜீவியத்தின் மூலமாக ஒன்றாக்கப்படுவதினால் மட்டுமே, கர்த்தருடைய நோக்கம் நம்மில் நிறைவேறும் என்கிற சத்தியத்தையும் போஜனப- யி- ருந்து நாம் கற்றுக்கொள்கிறோம்.

5. போஜனப- யின் ப- ப்பொருட்கள் என்ன? வசன ஆதாரம் தருக,

   1) மெல்- ய மாவு, 2) எண்ணெய், 3) ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம் (லேவி 2:1,2), 4) உப்பு (லேவி 2:13) என்பவைகள் போஜனப- யின் ப- ப்பொருட்களாகும்.

6. போஜனப- செலுத்தும் முறையை எழுது,

   ஒருவன் போஜன ப- யாகிய காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால்,

   1. காணிக்கையானது மெல்- ய மாவாய் இருக்கவேண்டும்.
   2. அதின்மேல் எண்ணெய் வார்க்க வேண்டும்.
   3. தூபவர்க்கம் போட வேண்டும்.
   4. அதில் உப்பு சேர்க்க வேண்டும்.
   5. அதை ஆசாரியர்கள், ஆரோனின் குமாரர்களிடத்தில் கொண்டுவரவேண்டும்.

   ஆசாரியன் அந்த மாவிலும், எண்ணெயிலும். ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம், உப்பு எல்லாவற்றோடும் எடுத்து ப- பீடத்தின் மேல் ஞாபகக்குறியாகத் தகனிக்ககடவன். இது கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனப- . (லேவி 2 : 1, 2. 13)

7. போஜன ப- யின் தானியமானது மெல்- ய மாவாகும் வரை இடிக்கப்பட வேண்டும் என்பதின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

   கோதுமை இடிக்கப்படும்போது, மணிகள் யாவும் ஒன்று சேர்ந்து மெல்- ய மாவாவது போல், தேவசித்தம் செய்கிறவர்கள் தங்கள் சுயசித்தம் உடைக்கப்பட இடங்கொடுப்பதினால் மெல்- ய மாவைப்போல ஒன்றாக்கப்படுகிறார்கள். அதின் நிமித்தம், பாடுகள், கஷ்டங்கள், நிந்தை, அவமானம் உண்டாகும்போது யாவற்றையும் ஒன்றாக

அனுபவித்து (எபி 11:24-26) முறுமுறுப்பும், தர்க்கிப்பும் இல்லாமல் (பி- 2:16) பொறுமையாய் சகித்து, தங்களை ஒப்புக் கொடுக்கிறார்கள்.

**8.** போஜனப- யில் ‘எண்ணெய்’ என்பதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
மெல்- ய மாவுடன் எண்ணெய் சேர்க்கப்படும் போது, அது பிசைந்த மாவாக ஒன்றாவது போல பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற மெல்- ய மாவுக்கு ஒப்பான பரிசுத்தவான்கள் எண்ணெய் என்னும் பிரதிஷ்டையின் ஜீவியத்தின்மூலம் தேவசித்தம் செய்யும்படி ஒன்றாக்கபடுகிறார்கள். (பாடத்திட்டம்)

**9.** போஜனப- , தூபவர்க்கத்தோடு ஒரு கைப்பிடி நிறையக் கர்த்தருக்குச் செலுத்துவது என்பதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
தூபம் என்பது இருதயத்தின் ஆழத்தி- ருந்து உண்டாகும் நன்றியைக் காட்டுகிறது. கைப்பிடி நிறைய என்பது முழு இருதயத்தோடு அதாவது தன்னால் எவ்வளவதிகமாய் நன்றி செலுத்தக்கூடுமோ அவ்வளவதிகமாய்ச் செலுத்துவதைக் காண்பிக்கிறது. ஒருவனுடைய இருதயத்தின் அளவும் அவனுடைய கைப்பிடியின் அளவும் ஒன்றே என்று கூறப்படுகிறது. (லேவி 2:29)

**10.** ப- பீடத்தின் மேல் தகனிப்பது என்பது எதை காட்டுகிறது?
ப- பீடத்தின் மேல் தகனிப்பது என்பது நாம் நம்முடைய சுயசித்தத்தைப் ப- யாக்குவதைக் காட்டுகிறது.

**11.** போஜனப- புளிப்பில்லாததாகச் செய்யப்பட வேண்டும் என்பதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
போஜனப- புளிப்பில்லாததாகச் செய்யப்பட வேண்டும். (லேவி 2:11) அதாவது, தேவசித்தம் செய்யும்போது, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்த மாவோ (1கொரி 5:8), துர்ப்போதனை (மத் 16:12) என்னும் புளித்த மாவோ காணப்படக் கூடாது என்பதை இது காண்பிக்கிறது. (1கொரி 5:8, மத் 16:12)

**12.** போஜனப- யில் தேன் சேர்க்கக்கூடாது என்பதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
போஜனப- யில் தேன் சேர்க்கப்படக் கூடாது. இதில் இனிப்பு சேர்க்கப்படக் கூடாது (லேவி 2:11) என்பது, தேவசித்தம் செய்யும்போது ஒருவன் தன்னையோ, மற்றவர்களையோ, பிரியப்படுத்த முடியாது என்பதைக் காண்பிக்கிறது.

**13.** போஜனப- யில் உப்புச் சேர்க்கப்பட வேண்டும் என்பதன் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
உப்பானது பாதுகாக்கும் தன்மையை உடையது. அதுபோல தேவனோடும் பரிசுத்தவான்களோடும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நாம் பாதுகாத்துக் கொண்டு, தேவகிருபையினால் தேவசித்தம் செய்வதைப் போஜனப- யில் உப்பு சேர்க்கப்பட வேண்டும் என்பது காண்பிக்கிறது (மாற்கு 9:50 ; கொலோ 4:6 ; லேவி 2:13)

**14.** பல விதங்களில் பாகம் பண்ணப்பட்ட நிலையில் செலுத்தப்பட்ட போஜன ப- களை வசன ஆதாரத்துடன் எழுது? அவைகளின் ஆவிக்குரிய அர்த்தத்தையும் எழுது,
1. அடுப்பில் பாகம் பண்ணப்பட்டது (லேவி 2:4)
2. தட்டையான சட்டியில் பாகம் பண்ணப்பட்டது (லேவி 2:5)
3. பொரிக்குஞ் சட்டியில் பாகம் பண்ணப்பட்டது (லேவி 2:7)

இவைகள் தேவசித்தம் செய்கிறவர்களுக்கு வருகிற பலவிதமான உபத்திரவங்களையும் அக்கினி போன்ற பரீட்சைகளையும் காண்பிக்கின்றன.

**15.** மகா பரிசுத்த ஸ்தலம் செல்ல நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை போஜன பலியிலிருந்து கற்றுக்கொள்கிறோம்?
மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு நாம் மகா பரிசுத்த போஜனப- யாகிய (லேவி 6:14,17) தேவசித்தத்தை செய்து பூரணமாக்கப்பட வேண்டும்.

## III. <u>*சுருக்கமான விடையளி:*</u> (5 Marks)

**1.** போஜனப- புளித்தமாவினால் செய்யப்படலாகாது, போஜன ப- யில் தேன் சேர்க்கப்படலாகாது, போஜன ப- யில் உப்பு சேர்க்கப்பட வேண்டும் - இவைகளின் ஆவிக்குரிய கருத்து என்ன?

a. போஜனப- புளித்தமாவினால் செய்யப்படலாகாது, (லேவி 2:11)
இது தேவ சித்தம் செய்யும்போது துர்க்குணம், பொல்லாப்பு (1கொரி5:8) என்னும் புளித்த மாவோ, துர்ப்போதனை என்னும் புளித்த மாவோ (மத்16:12) காணப்படக் கூடாது என்பதைக் காண்பிக்கிறது.

b. தேன் சேர்க்கப்படக்கூடாது.

தேன் சேர்க்கப்படக் கூடாது. இனிப்பு சேர்க்கப்படக்கூடாது என்பது (லேவி2:11), தேவசித்தம் செய்கிறவர்கள் ஒருவன் தன்னையோ மற்றவர்களையோ பிரியப்படுத்த முடியாது என்பதைக் காண்பிக்கிறது.

c. உப்புச் சேர்க்கப்பட வேண்டும். (லேவி 2:13)

உப்பு பாதுகாக்கும் தன்மை உடையது. அதுபோல தேவனோடும் பரிசுத்தவான்களோடும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும், நாம் பாதுகாத்துக் கொண்டு தேவ கிருபையினால் தேவசித்தம் செய்வதைக் காண்பிக்கிறது.(மாற்கு 9:50;கொலோ4:6)

## IV. *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி:* (15 Marks)

**1.** போஜனப- செலுத்தும் முறையையும் மற்றும் போஜனப- செலுத்தும் வேறுபல விதங்களையும் ஆவிக்குரிய அர்த்தத்துடன் விவரி,

போஜனப- செலுத்தும் முறை லேவி 2:1, 2ல் கூறப்பட்டுள்ளது.

ஒருவன் போஜனப- யாகிய காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்த வேண்டுமானால் அவன் காணிக்கை மெல்- ய மாவாயிருக்க வேண்டும். அவன் அதின் மேல் எண்ணெய் வார்த்து, அதின் மேல் தூபவர்க்கம் போட்டு, அதை ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களிடத்தில் கொண்டு வரவேண்டும். அப்பொழுது ஆசாரியர் அந்த மாவிலும், எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய தூபவர்க்கம் எல்லாவற்றோடும் எடுத்து அதை ப- பீடத்தின் மேல் ஞாபகக்குறியாக தகனிக்கவேண்டும். எந்த போஜனப- யும் உப்பினால் சாரமாக்கப்பட வேண்டும். அது கர்த்தருக்கு சுகந்த வாசனையானத் தகனப- .

போஜனப- யின் ஆவிக்குரிய அர்த்தம்:

i. தானியமானது மெல்- ய மாவாகும் வரை இடிக்கப்பட வேண்டும்,

கோதுமை இடிக்கப்படும் போது மணிகள் யாவும் ஒன்று சேர்ந்து, மெல்- ய மாவாவது போல் தேவசித்தம் செய்கிறவர்கள் தங்கள் சுயசித்தம் உடைக்கப்பட இடங்கொடுத்து மெல்- ய மாவாகிறார்கள். இதன் நிமித்தம் உண்டாகும் பாடுகள், கஷ்டங்கள், நிந்தை, அவமானம் போன்றவற்றை ஒன்றாக அனுபவித்து (எபி 11: 24,26) முறுமுறுப்பும் தர்க்கிப்பும் இல்லாமல் பொறுமையாய்ச் (பி- 2: 16) சகிக்க தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

ii. எண்ணெய்:

எண்ணெய் என்பது பிரதிஷ்டையை குறிக்கிறது. மெல்- யமாவுடன் எண்ணெய் சேர்க்கப்படும் போது அது பிசைந்த மாவாக ஒன்றாயிருப்பது போல, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற, மெல்- ய மாவுக்கு ஒப்பான பரிசுத்தவான்கள், எண்ணெய் என்னும் பிரதிஷ்டையின் மூலம் தேவசித்தம் செய்யும்படி ஒன்றாக்கப்படுகின்றனர்.

iii. தூபவர்க்கத் தோடும் ஒரு கைப்பிடி நிறையக் கர்த்தருக்குச் செலுத்துவது:

தூபம் என்பது இருதயத்தின் ஆழத்தி- ருந்து உண்டாகும் நன்றியைக் காட்டுகிறது. கைப்பிடி நிறைய என்பது முழு இருதயத்தோடு அதாவது தன்னால் எவ்வளவுக்கதிகமாய் நன்றி செலுத்தக் கூடுமோ அவ்வளவு அதிகமாய் செலுத்துவதைக் காண்பிக்கிறது. (லேவி 2:29) (ஒருவனுடைய இருதயத்தின் அளவும் அவனுடைய கைப்பிடியின் அளவும் ஒன்றே என்று கூறப்படுகிறது).

போஜனப- வேறு பல விதங்களிலும் செலுத்தப்படுகிறது, அவையாவன:

i. அடுப்பில் பாகம் பண்ணப்பட்டது (லே- 2:4)

ii. தட்டையான சட்டியில் பாகம் பண்ணப்பட்டது(லேவி 2:5)

iii. பொரிக்குஞ் சட்டியில் பாகம் பண்ணப்பட்டது (லேவி 2:7)

இவைகள் தேவசித்தம் செய்கிறவர்களுக்கு வருகிற பலவிதமான உபத்திரவங்களையும் அக்கினி போன்ற பரீட்சைகளையும் காண்பிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

வகுப்பு 11

பாடம்-5

# சமாதான ப-

(லேவி அதி.3)

## I. *முக்கியமானவசனம் :*

*கொலோசெயர் 1:20,21*

அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.

## II. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி:* (2 Marks)

**1.** சமாதன ப- எதை வெளிப்படுத்துகிறது?

கர்த்தருடைய இரகசிய வருகையில் அவருடைய சந்நிதியில் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் பூரண சமாதானத்துடன் காணப்பட நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சமாதான ப- வெளிப்படுத்துகிறது. (2 பேதுரு 3:14)

**2.** சமாதான ப- யின் ப- ப்பொருட்கள் யாவை? வசன ஆதாரத்துடன் எழுது,

சமாதான ப- யின் ப- ப்பொருட்கள்:

i. காளை அல்லது பசு (லேவி 3:1)
ii. ஆட்டுக்குட்டி (லேவி 3:7)
iii. வெள்ளாடு (லேவி 3:12)

**3.** கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனப- எது? வசன ஆதாரத்துடன் எழுது,

கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனப- சமாதான ப- யாகும். (லேவி 3: 1,5,6)

**4.** சமாதான ப- யில் ப- மிருகத்தின் மேல் கை வைத்தல் எதைக் குறிக்கிறது?

மிருகத்தின் தலையின்மேல் கை வைத்தல் என்பது ஆவிக்குரிய பிரகாரமாக நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை கர்த்தராகிய இயேசுவின்மேல் சுமத்தப்பட்டதை குறிக்கிறது. (ஏசாயா 53:5)

**5.** சமாதான ப- யில் மிருகத்தைக் கொன்று அதின் இரத்தத்தைப் ப- பீடத்தின் மேல் சுற்றிலும் தெளித்தல் எதைக் காட்டுகிறது?

சமாதான ப- யில் மிருகத்தைக் கொன்று அதின் இரத்தத்தைப் ப- பீடத்தின் மேல் சுற்றிலும் தெளித்தல் என்பது தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் யாவையும் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்வதை குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு தாம் சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் சமாதானத்தை உண்டாக்கி, தம்முடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே நம்மைத் தேவனோடு ஒப்புரவாக்கினார். (கொலோ 1:20,21)

**6.** சமாதான ப- யில் குடல்களை மூடிய கொழுப்பு எதைக்குறிக்கிறது?

குடல்கள் மனதுருக்கத்தைக் காட்டுகின்றன. (யோபு 30:27-31, ஏசாயா 16:11) குடல்கள், இங்கு மற்றவர்கள் மீதுள்ள மனதுருக்கம் அல்ல. ஒருவன் தனக்காக மற்றவர்கள் கவலைப் படுவதில்லை என்று சிந்தித்து சுய அனுதாபத்திற்கு இடங்கொடுத்து, சமாதானத்தை இழந்து போவதைக் காட்டுகிறது. ஒரு மனுஷனுடைய சமாதானம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் குடல்களை மூடிய கொழுப்பு என்னும் சுய அனுதாபமாகிய மனதுருக்கத்தை முற்றிலும் நீக்கிவிட வேண்டும்.

**7.** சமாதானப- யில் குறிப்பிடப்பட்டுள்ள குடல்களிலுள்ள கொழுப்பு எதைக் குறிக்கிறது?

குடல்களிலுள்ள கொழுப்பு ஒருவன் சொகுசான, சுகபோகமான ஜீவியம் செய்ய வேண்டும் என்று தன் இருதயத்தின் ஆழத்தில் கொண்டிருக்கும் வாஞ்சையைக் காட்டுகிறது. இது நம்மி- ருந்து நீக்கப்பட வேண்டும். (பாடத்திட்டம்)

8. சமாதானப- யில் இரண்டு குண்டிக்காய்கள் (சிறுநீரகங்கள்) எதைக் குறிக்கின்றன?

இரண்டு குண்டிக்காய்கள் (சிறுநீரகங்கள்) மனுஷனின் இரகசிய பாவ ஜீவியத்தின் ஆழத்தைக் குறிக்கின்றன. ஒரு மனுஷன் தனக்குள் ஆழமான சமாதானத்தை அனுபவிக்க வேண்டுமாயின் அவன் தன் இருதயத்தின் ஆழத்தில் மறைந்திருக்கும் பாவத்தை ப- பீடத்தின் மேல் வைக்க வேண்டும். (சங்கீதம் 19:12)

9. குண்டிக்காய்கள் (சிறுநீரகங்கள்) மேல் சிறுகுடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பு எதைக் காட்டுகிறது?

இது ஒருவன் தன்னைத்தானே பெரியவன் என எண்ணி, தன் பதவியையும் நிலையையும், பாதுகாத்துக் கொள்ளப் பிரயாசப்படுவதைக் காட்டுகிறது. எல்லாச் சூழ்நிலைகளிலும், நாம் தாழ்த்தப்படும் போதுங்கூட நம்முடைய சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் இந்த மனப்பான்மை நம்மை விட்டு நீங்க வேண்டும்.

10. சமாதான ப- யில் குண்டிக்காய்களோடேகூட (சிறுநீரகத்தோடே) கல்லீர- ன் மேல் இருக்கிற ஜவ்வு எதை வெளிப்படுத்துகிறது என்பதை ஒரு வசனம் தந்து விளக்குக,

குண்டிக்காய்களோடே (சிறுநீரகம்) கூடக் கல்லீர- ன் மேல் இருக்கிற ஜவ்வு, ஒருவன் தன் சொந்த ஜீவனைப் பாதுகாப்பதற்காகப் பிரயாசப்படுவதைக் காட்டுகிறது. கர்த்தராகிய இயேசுவும் தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான் (மத்தேயு 16:25) என எச்சரித்துள்ளார். இச்சுபாவம் நம்மிலிருக்குமாயின் நாம் நம்முடைய சமாதானத்தை இழந்து போவோம். எனவே இச்சுபாவம் சுட்டெரிக்கப்பட வேண்டும்.

## III. <u>*சுருக்கமான விடையளி:*</u> (5 Marks)

1. கர்த்தரைச் சந்திப்பதற்கு நாம் காத்துக் கொள்ள வேண்டிய சமாதானத்தின் நான்கு அனுபவங்களைக் குறிப்பிட்டு வசன ஆதாரத்துடன் எழுது,

கர்த்தரை சமாதானத்துடன் சந்திக்க நாம் சமாதானத்தின் நான்கு அனுபவங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்,

i. நமக்கும் தேவனுக்கும் இடையில் சமாதானம் (ரோமர் 5:1)
ii. நமக்குள் சமாதானம் (கொலோ 3:15)
iii. (சபையில்) ஒருவரோடொருவர் சமாதானம்.(மாற்கு 9:50)
iv. எல்லா மனுஷரோடும் சமாதானம். (ரோமர் 12:18)

2. சமாதான ப- செலுத்தும் முறையை எழுதுக,

<u>சமாதான ப- செலுத்தப்படும் முறை: (லேவி 3:2-5)</u>

(a) சமாதான ப- யை கர்த்தருடைய சந்நிதியில் செலுத்துகிறவன் தன் ப- யின் தலைமேல், தன்கையை வைத்து, ஆசாரிப்புக் கூடார வாசலுக்கு முன்பாக அதைக் கொல்லக்கடவன்.

(b) அப்பொழுது ஆசாரியர் அதின் இரத்தத்தைப் ப- பீடத்தின் மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

(c) பின்பு சமாதான ப- யிலே,
- குடல்களை மூடிய கொழுப்பையும்
- குடல்களிலுள்ள கொழுப்பு முழுவதையும்
- இரண்டு குண்டிக்காய்களையும்
- குண்டிக்காய்களின் மேல் சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும்
- குண்டிக்காய்களோடே கூடக் கல்லீர- ன்மேல் இருக்கிற ஜவ்வையும், எடுத்து கர்த்தருக்குத் தகனப- யாகச் செலுத்துவானாக.

அதை ஆரோனின் குமாரர் ப- பீடத்தின் அக்கினியிலுள்ள கட்டைகளின் மேல் போட்டிருக்கும் சர்வாங்க தகனப- யின் மீதில் போட்டுத் தகனிக்கக் கடவர்கள்.

(d) இது கர்த்தருக்கு சுகந்த வாசனையான தகனப- .

3. சமாதான ப- யில் குறிப்பிட்டுள்ள குடல்களிலுள்ள கொழுப்பு என்பதன் ஆவிக்குரிய கருத்து என்ன?

i) குடல்களிலுள்ள கொழுப்பு, ஒருவன் சொகுசான, சுகபோகமான ஜீவியம் செய்ய வேண்டும் என்று தன் இருதயத்தின் ஆழத்தில் கொண்டிருக்கும் வாஞ்சையைக் காட்டுகிறது. இது நம்மி- ருந்து நீக்கப்படவேண்டும். இதையே பரிசுத்த பவுல் தீமோத்தேயுக்கு எழுதும் போது, 'சுகபோகமாய் வாழ்ந்தவள் உயிரோடே செத்தவள்' என்று 1 திமோ 5:6 ல் எச்சரிக்கிறார். எனவே நாம் சொகுசான சுகபோகமான ஜீவியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையை சுட்டெரிக்க வேண்டும்.

ii) இல்லையெனில் என்னுடைய சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை (யோவான் 14:27) என்று கர்த்தராகிய இயேசு குறிப்பிடும் பூரண சமாதானத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியாது.

iii) மேலும், அவர் தம்மிடத்தில் நமக்குச் சமாதானம் உண்டாயிருக்கிறது என்றும் , ஆயினும் உலகத்தில் நமக்கு உபத்திரவம் உண்டு என்றும் கூறினார். (யோவான் 16 : 33)

## IV. *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி:* (15 Marks)

**1.** சமாதான ப- செலுத்தும் முறையில் அடங்கியுள்ள ஆவிக்குரிய அர்த்தங்களை வசன ஆதாரத்துடன் எழுதுக,

<u>சமாதான ப- செலுத்தும் முறையில் அடங்கியுள்ள ஆவிக்குரிய அர்த்தங்கள்:</u>

i. சமாதான ப- மிருகத்தின் தலையின் மேல் கை வைத்தல்:

ஆவிக்குரிய பிரகாரமாக நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை இயேசுவின் மேல் சுமத்தப்பட்டதை இது குறிக்கிறது. (ஏசாயா 53:5)

ii. ப- மிருகத்தைக் கொன்று, அதின் இரத்தத்தைப் ப- பீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்தல்:

கர்த்தராகிய இயேசு தாம் சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலம் சமாதானத்தை உண்டாக்கினார். அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே நம்மை தேவனோடே ஒப்புரவாக்கினார். இவ்வாறாக தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலம் யாவையும் தமக்கு ஒப்புரவாக்கினார் என்பதை இது காட்டுகிறது (கொலோ 1 : 20, 21)

iii. குடல்களை மூடிய கொழுப்பு:

குடல்கள் மனதுருக்கத்தைக் காட்டுகின்றன ((யோபு 30:27-31,ஏசாயா 16:11) இங்கு குடல்கள் மற்றவர்கள் மீதுள்ள மனதுருக்கம் அல்ல. தனக்காக மற்றவர்கள் கவலைப்படுவதில்லை என்று சிந்தித்து சுய அனுதாபத்திற்கு இடங்கொடுத்து சமாதானத்தை இழந்து போவதைக் காட்டுகிறது. ஒரு மனுஷனுடைய சமாதானம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், இது அவனை விட்டு முற்றிலும் நீக்கப்பட வேண்டும்.

iv. குடல்களிலுள்ள கொழுப்பு:

இது ஒருவன் சொகுசான, சுகபோகமான ஜீவியம் செய்ய வேண்டும் என்று தன் இருதயத்தின் ஆழத்தில் கொண்டிருக்கும் வாஞ்சையைக் காட்டுகிறது.

இதையே பரிசுத்த பவுல் 1 தீமோ 5:6ல் எழுதும் போது சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் என்று எச்சரிக்கிறார். எனவே நாம் சொகுசான சுகபோகமான ஜீவியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையை சுட்டெரிக்க வேண்டும். இல்லையெனில் என்னுடைய சமாதானத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை (யோவான் 14:27) என்று கர்த்தராகிய இயேசு குறிப்பிடுகிற பூரண சமாதானத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியாது. மேலும் , அவர், தம்மிடத்தில் நமக்குச் சமாதானம் உண்டாயிருக்கிறது என்றும், ஆயினும் உலகத்தில் நமக்கு உபத்திரவம் உண்டு என்றும் கூறினார். (யோவான் 16 : 33)

v. இரண்டு குண்டிக்காய்கள் (சிறுநீரகம்):

குண்டிக்காய்கள் (சிறுநீரகங்கள்) மனுஷனின் இரகசிய பாவ ஜீவியத்தின் ஆழத்தைக் குறிக்கின்றன. ஒரு மனுஷன் தனக்குள் ஆழமான சமாதானத்தை அனுபவிக்க வேண்டுமாயின், அவன் தன் இருதயத்தின் ஆழத்தில் மறைந்திருக்கும் பாவத்தை ப- பீடத்தின் மேல் வைக்க வேண்டும். (சங்கீதம் 19:12)

vi. குண்டிக்காய்கள் (சிறுநீரகம்)மேல் சிறுகுடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பு:

இது ஒருவன் தன்னைத்தானே பெரியவன் என எண்ணி, தன் பதவியையும், நிலையையும், பாதுகாத்துக் கொள்ளப் பிரயாசப்படுவதைக் காட்டுகிறது. எல்லா சூழ்நிலையிலும் நாம் தாழ்த்தப்படும் போதுங்கூட நம்முடைய சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், இந்த மனப்பான்மை நம்மைவிட்டு நீங்க வேண்டும். (1 இராஜா. 1:5)

vii. குண்டிக்காய்களோடேகூடக் (சிறுநீரகம்) கல்லீர- ன் மேல் இருக்கிற ஜவ்வு:

இது, ஒருவன் தன் சொந்த ஜீவனைப் பாதுகாப்பதற்காகப் பிரயாசப்படுவதைக் காட்டுகிறது. கர்த்தராகிய இயேசுவும், தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான் (மத்தேயு 16:25) என எச்சரித்துள்ளார். இச்சுபாவம் நம்மி- ருக்குமாயின் நாம் நம்முடைய சமாதானத்தை இழந்து போவோம். எனவே இச்சுபாவம் சுட்டெரிக்கப்பட வேண்டும் .

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்பட நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்பதை சமாதானப- வெளிப்படுத்துகிறது.(2 பேதுரு 3 : 14)

*********

வகுப்பு 11 பாடம்-6

# பாவ நிவாரணப-

(லேவி. அதி 4)

**I.** ***முக்கியமானவசனம் :***

*எபிரேயர் 10:26.27*

சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு ப- இனியிராமல்,

நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பாக்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.

**II.** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி:*** (2 Marks)

**1.** பாவ நிவாரண ப- எதைக் குறிக்கிறது?

நாம் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப்பட்டு பாவநிவாரண ப- யானதை பாவ நிவாரண ப- குறிக்கிறது. இந்த தேவநீதி பாவம் அறியாத நிலவரமாகும்.(2 கொரி 5:21)

**2.** யார் செய்யும் பாவங்களுக்கு நிவாரணமில்லை (அல்லது) மன்னிப்பு இல்லை?

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறதில்லை. ஆனாலும் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் மனப்பூர்வமாய் பாவஞ்செய்தால் அப்படிப்பட்ட பாவங்களுக்கு நிவாரணமில்லை. (எபி 10:26)

**3.** எந்தெந்த பாவங்களை நிவர்த்தி செய்யும்படியாக பாவநிவாரணப- செலுத்தப்பட வேண்டும்?

தேவனுடைய பிள்ளைகள் தங்கள் அறியாமையினால் செய்யும் பாவங்களுக்காகவும், தங்கள் சிந்தனை மண்டலத்தை மேற்கொள்ளும் பாவங்களுக்காகவும் (கொலோ 3:5), தங்கள் பழக்க வழக்கங்களில் (ரோமர் 8:13) செய்யும் பாவங்களுக்காகவும் பாவநிவர்த்தி செய்யும்படி பாவநிவாரண ப- செலுத்தப்படுகிறது.

**4.** ஒரு ஆசாரியனுடைய பாவம் எதற்கு சமமாயிருக்கிறது. அதை எதினால் அறியலாம்?

ஒரு ஆசாரியன் செய்யும் பாவம் முழுச்சபையின் பாவத்திற்கும் சமமாயிருக்கிறது. இதை நாம் அவர்கள் பலிசெலுத்தும் படி கொண்டு வரும் மிருகங்களின் மூலம் அறியலாம். ஏனெனில் ஒரு ஆசாரியன் பாவம் செய்தால் அவன் பழுதற்ற ஒரு இளங்காளையைக் கொண்டு வரவேண்டும். (லேவி 4:3) அதைப் போலவே முழு சபையார் பாவஞ்செய்தாலும் ஒரு இளங்காளையைக் கொண்டு வரவேண்டும். (லேவி 4:13,14)

**5.** ஆசரிப்புக் கூடாரத்தில். ஆசாரியன். சபையார் இவர்களின் பாவத்தினால் தீட்டுப்படும் இடங்கள் எத்தனை? அவைகள் யாவை?

ஆசாரியன், சபையார் இவர்களின் பாவத்தினால் ஆசரிப்புக் கூடாரத்தில் மூன்று இடங்கள் தீட்டுப்படுகின்றன. (லேவி 4:6,7,17,18) அவையாவன:

1. திரைச்சீலை
2. தூப பீடம்
3. வெண்கல ப- பீடம்

**6.** திரைச்சீலை எதை குறிக்கிறது? அது எவ்வாறு பரிசுத்தக் குலைச்சலாகிறது?

திரைச்சீலை கிறிஸ்துவின் சரீரத்தைக் (சபையை) குறிக்கிறது. ஒரு ஆசாரியன் அல்லது சபையார் பாவம் செய்தால் சபை பரிசுத்தக் குலைச்சலாகிறது. (பாடத்திட்டம்)

**7.** திரைச்சீலையில் இரத்தம் எத்தனை தரம் தெளிக்கப்பட வேண்டும்? அதனுடைய ஆவிக்குரிய அர்த்தம் என்ன?

திரைச்சீலையில் இரத்தம் ஏழுதரம் தெளிக்கப்படவேண்டும். (லேவி4:6,17) ஏழு என்பது பூரணத்தைக் குறிக்கிறது. சபையானது, பரிசுத்தத்தின் பூரண நிலைக்குக் கொண்டு வரப்படுமளவும் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்பதை இது வெளிப்படுத்துகிறது. (எபி 10:19,20)

8. தூபபீடம் எதை காண்பிக்கிறது?
தூபபீடம் நன்றியுள்ள இருதயத்தையும் (1 நாளா 29:13,14) ஒருவர் ஜெபத்தில் தன் ஜீவனை ஊற்றும் அனுபவத்தையும் காண்பிக்கிறது. (1 சாமு 1:10,15)

9. சபையிலுள்ள ஒருவனுடைய பாவத்தினிமித்தம தூபபீடத்தின் எந்த அனுபவங்கள் சபையில் நஷ்டமடைகின்றன?
சபையிலுள்ள ஒருவனுடைய பாவத்தினிமித்தம் சபையின் நன்றியுள்ள இருதயமும் ஜெப ஜீவியமும் நஷ்டமடைகின்றன. (பாடத்திட்டம்)

10. தூபபீடத்தின் கொம்புகள் எதைக் காட்டுகிறது? அவற்றில் இரத்தம் பூசப்படுதல் எதை வெளிப்படுத்துகிறது?
தூபபீடத்தின் கொம்புகள் நன்றியுள்ள ஜீவியத்தினாலும், ஜெப ஜீவியத்தினாலும் நாம் பெற்றுக்கொள்ளும் "பெலனைக்" காட்டுகிறது. தூபீடத்தின் கொம்புகளின் மேல் இரத்தம் பூசப்படுதல் என்பது பரிசுத்தமாகுத- ன் மூலம் சபை தன் வல்லமையை மீண்டும் பெற்றுக்கொள்வதைக் காட்டுகிறது. (லேவி 4:7)

11. வெண்கல ப- பீடம் எதைக் குறிக்கிறது? அது எப்போது தீட்டுப்படுகிறது?
வெண்கல ப- பீடம் என்பது கிறிஸ்துவையும், சபையையும் குறிக்கிறது. நாம் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றுக்கொள்ளும்போது (1கொரி12:13,27) நாம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு அங்கமாகிறோம். எனவே சபையின் அங்கமாகிய நாம் பாவஞ் செய்யும் போது சபையாகிய வெண்கல ப- பீடம் தீட்டுப்படுகிறது. (பாடத்திட்டம்)

12. பாவத்தினால் தீட்டுப்பட்ட ப- பீடமான சபையானது, தன் முந்தின நிலவரத்திற்கு திரும்பவும் கொண்டு வர என்ன செய்ய வேண்டும்?
பாவ நிவாரணப்ப- மிருகத்தின் இரத்தம் முழுவதும் வெண்கல ப- பீடத்தின் அடியிலேயே ஊற்றப்பட்டு செலவழிக்கப்படுவது போல (லேவி 4:18), சபையானது தன் முந்தின நிலவரத்திற்குத் திரும்பவும் கொண்டு வரப்படவேண்டுமேயானால் அக்கிரமம் சுமக்கும் பரிசுத்தவான்கள் (லேவி 10:17), எல்லாவற்றையும் தங்கள் இரத்தத்தையுங் கூட செலவழிக்க வேண்டும். (பி- 2:17)

13. பாவ நிவாரண ப- யின் காளையில் தகனிக்கப்பட வேண்டிய உள் அவயங்கள் என்ன?
பாவ நிவாரண ப- யின் காளையில் கீழ்க்கண்ட உள் அவயங்கள் தகனிக்கப்பட வேண்டும்.

- i. குடல்களை மூடிய கொழுப்பு
- ii. அவைகள் மே- ருக்கிற கொழுப்பு
- iii. இரண்டு குண்டிக்காய்கள்
- iv. அவைகள் மேல் சிறுகுடல்களினிடத்தில் இருக்கும் கொழுப்பு.
- v. குண்டிக்காய்களோடே கூடக் கல்லீர- ன் மேல் இருக்கும் ஜவ்வு

14. பாவ நிவாரண ப- க்கான காளையின் உள் அவயங்களும் சரீரமும் தகனிக்கப் படவேண்டும் என்பதின் ஆவிக்குரிய அர்த்தம் என்ன?
நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பாவத்தி- ருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதைக் காண்பிக்கும்படியாகவே காளையின் உள் அவயங்களும் சரீரமும் சுட்டெரிக்கப்படுகின்றன.

15. பாவ நிவாரண ப- க்கான காளையில் எவை பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட வேண்டும்? அதன் ஆவிக்குரிய கருத்து என்ன?
காளையின் சரீரமும், அதன் தோலும், மீதியான சகலமும் பாளயத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்படுவதென்பது (லேவி 4:11,12) நாம் கிறிஸ்துவுடன் நிந்தைகளையும் பாடுகளையும் அனுபவிப்பதைக் காட்டுகிறது. (எபி 13:12,13

## III. *சுருக்கமான விடையளி:* (5 Marks)

1. யாருடைய பாவங்களுக்கு நிவாரணம் இல்லை? விவரி,
பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபின்பு, தேவனுடைய பிள்ளைகள் மனப்பூர்வமாய் பாவம் செய்கிறதில்லை. ஏனென்றால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறும்போது நாம் அவருடைய ஆலயமாகிறோம். (1 கொரி 6:19) நமக்குள் வாசம் பண்ணும் ஆவியானவர் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்திக் கொடுக்கிறார் (யோ 16:8). சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகிறார். (யோவான் 16:13) இப்படியாக தேவனால் கண்டிக்கப்பட்டும், உணர்த்தப்பட்டும், சத்தியத்திற்குள் வழி நடத்தப்பட்டும் இருக்கிற தேவனுடைய பிள்ளைகள் துணிகரமாய்

பாவம் செய்ய முடியாது. ஆனாலும் சிலர் இருதயத்தைக் கடினப்படுத்தி தேவனுடைய வார்த்தைகளுக்கும், ஆவியானவருடைய ஆலோசனைக்கும் கீழ்படியாமல் மனப்பூர்வமாய் பாவம் செய்தால் அப்படிப் பட்ட பாவங்களுக்கு நிவாரணம் அல்லது மன்னிப்பு இல்லை. உதாரணமாக அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியனாகிய ஏ- யைக்கூறலாம். அவனை தேவன் எச்சரித்தும் அவன் தன் குமாரரை கண்டித்து அடக்காமல் போனான். (1 சாமு 3:16) <u>அபிஷேகம் பண்ணப்பட்ட</u> ஆசாரியராகிய அவனுடைய குமாரரும் துணிகரமாய் தொடர்ந்து பாவஞ்செய்தார்கள். இதினிமித்தம் ஏ- யின் குடும்பத்தார் செய்யும் அக்கிரமம் ஒருபோதும் ப- யினாலாவது காணிக்கையினாலாவது நிவர்த்தி ஆவதில்லை என்று தேவன் கூறிவிட்டார். இதி- ருந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் மனப்பூர்வமாக துணிகரமாக பாவம் செய்வார்களேயானால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட மாட்டாது என்று நிதானிக்கிறோம்.

2. பாவ நிவாரண ப- செலுத்தும்போது யார் யார் எப்படிப்பட்ட ப- ப் பொருட்களை செலுத்த வேண்டும்?

பாவம் செய்யும் நபர்கள் அவர்கள் செலுத்த வேண்டிய ப- ப் பொருட்கள்

| | |
|---|---|
| i. ஆசாரியன் (லேவி 4:3) | பழுதற்ற ஒரு இளங்காளை |
| ii. சபையார் (லேவி 4:13,14) | பழுதற்ற ஒரு இளங்காளை |
| iii. பிரபு (லேவி 4:22,23) | பழுதற்ற இளம் வெள்ளாட்டுக்கடா |
| iv. சாதாரண ஜனங்களில் ஒருவன் (லேவி4:27,28) | பழுதற்ற வெள்ளாடுகளில் ஒருபெண்குட்டி. |

## IV. *விரிவான விடையளி:* (10 Marks)

1. ஆசாரியன் சபையார் இவர்களின் பாவத்தினால் ஆசரிப்புக் கூடாரத்தில் தீட்டுப்படும் இடங்கள் எத்தனை? அவை யாவை? அவை மீண்டும் அவற்றின் பூரண பரிசுத்தமான நிலவரத்திற்கு கொணடு வர என்ன செய்யப்பட வேண்டும்?

ஆசாரியர், சபையார் இவர்களின் பாவத்தினால் ஆசரிப்புக் கூடாரத்தில் மூன்று இடங்கள் தீட்டுப்படுகின்றன. (லேவி 4:6,7,17,18) 1. திரைச்சீலை 2. தூபபீடம் 3. வெண்கல ப- பீடம்.

*திரைச்சீலை:*

இது கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கிறது. ஒரு ஆசாரியன் அல்லது சபையார் பாவம் செய்தால் சபை பரிசுத்தக் குலைச்சலாகிறது. காளையின் இரத்தம் திரைக்கு எதிரே ஏழுதரம் தெளிக்கப்படுகிறது. (லேவி 4:6, 17) சபையானது, பரிசுத்தத்தின் பூரண நிலைக்குக் கொண்டு வரப்படுமளவும் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். (எபி 10:19,20)

*தூபபீடம்:*

இரத்தம் தூபபீடத்துக் கொம்புகளின் மேல பூசப்பட்டது. தூபபீடம் நன்றியுள்ள இருதயத்தையும், ஒருவர் ஜெபத்தில் தன் ஜீவனை ஊற்றும் அனுபவத்தையும் காண்பிக்கிறது. சபையிலுள்ள ஒருவனுடைய பாவத்தினிமித்தம் சபையின் நன்றியுள்ள இருதயமும் , ஜெப ஜீவியமும் சபையில் நஷ்டமடைகின்றன. (2 நாளா 29:13,14) (1 சாமு 1:10,15) தூப பீடத்தின் கொம்புகள் அப்படிப்பட்ட நன்றியுள்ள ஜீவியத்தினாலும் ஜெப ஜீவியத்தினாலும் நாம் பெற்றுக் கொள்ளும் 'பெலனைக்' காட்டுகிறது. தூபபீடத்தின் கொம்புகளின் மேல் இரத்தம் பூசப்படுதல் என்பது பரிசுத்தமாகுத- ன் மூலம் சபை தன் வல்லமையை மறுபடியும் பெற்றுக்கொள்வதைக் காட்டுகிறது. (லேவி 4:7)

*வெண்கல ப பீடம்:*

பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்கு பிரியமான ப- யாக வேண்டிய புறஜாதியாராகிய ப- (சபை), பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற ஒருவனுடைய பாவத்தினால் தீட்டுப்படுகிறது. மிருகத்தின் இரத்தம் முழுவதும் வெண்கல ப- பீடத்தின் அடியிலேயே ஊற்றப்பட்டு செலவழிக்கப்படுகிறது போல (லேவி 4:18) சபையானது தன் முந்தின நிலவரத்திற்குத் திரும்பவும் கொண்டுவரப்பட வேண்டுமேயானால் அக்கிரமம் சுமக்கும் பரிசுத்தவான்கள் எல்லாவற்றையும் தங்கள் இரத்தத்தையுங்கூட செலவழிக்க வேண்டும. (லேவி 10:17; பி- 2:17)

❖❖❖❖❖❖❖❖❖

வகுப்பு 11 பாடம்-7

# குற்ற நிவாரண ப-

(லேவி.5 ; 7 : 1-7 )

## I. *முக்கியமானவசனம் :*

*ஏசாயா 53: 6.5*

நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

## II. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி:* (2 Marks)

1. குற்ற நிவாரண ப- என்றால் என்ன? அல்லது குற்ற நிவாரண ப- எப்பொழுது செலுத்தப்பட வேண்டும்?

   குற்ற நிவாரண ப- என்பது ஒரு மனிதன் அறியாமையினால் செய்த ஒரு காரியத்தைப் பின்பு தன் அறிவின் வளர்ச்சிக்கேற்ப தேவனுக்கு விரோதமான குற்றம் அல்லது மீறுதல் என்று உணர்ந்து கொண்டால், அதற்காக அவன் செலுத்தப்படும் பலியாகும்.

2. பழைய ஏற்பாட்டில் எல்லையை மீறிக் கிரியை செய்து குற்றத்துக்குட்பட்டவர்கள் யார்? அவர்களின் பெயர்களை குறிப்பிடுக,

   பழைய ஏற்பாட்டில் எல்லைக்குள் தங்கியிராமல் அதற்கு மீறிப்போய் கிரியை செய்தவர்கள்: மிரியாம், ஆரோன் (எண் 12:1,2) தாவீது (2 சாமு 24 : 1-10 )

3. எப்பொழுது மீறுதல் ஆகிய பாவம் ஏற்படுகிறது?

   குற்ற நிவாரண ப- ஆங்கிலத்தில் **'Tresspass offering'** என்று சொல்லப்பட்டுள்ளது. **'Tresspass'**என்ற வார்த்தையின் பொருள் எல்லையை மீறு செல்லுதல் என்பதாகும். பரிசுத்தவான்கள் தங்களுடைய எல்லையை மீறிப் போய் கிரியை செய்வதால் 'மீறுதல்" ஆகிய பாவம் ஏற்படுகிறது.

4. புதிய ஏற்பாட்டில் கர்த்தருக்கு ஊழியம் செய்யும் ஒருவர் மீறுதலுக்குள் உட்படுவது எப்படி?

   புதிய ஏற்பாட்டில் அவரவர் அழைக்கப்பட்ட நிலவரத்திலே தங்கள் ஊழியத்தைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் அவர்கள் மீறுதலுக்கு உட்படுவார்கள்.

5. குற்ற நிவாரண ப- யின் ப- ப்பொருட்கள் யாவை? வசன ஆதாரம் தருக,

| ப- செலுத்துபவர் | குற்ற நிவாரணத்திற்கான ப- ப் பொருட்கள் |
|---|---|
| i. ஐசுவரியவான்கள் | ஆடுகளிலாவது, வெள்ளாடுகளிலாவது ஒரு பெண்குட்டி |
| ii. ஏழை | இரண்டு காட்டுப்புறாக்கள் அல்லது இரண்டு புறாக்குஞ்சுகள் |
| iii. மிகுந்த ஏழை | ஒரு எப்பா அளவான மெல்- ய மாவில் பத்தில் ஒரு பங்கு (லேவி 5:6-11) |

6. பாவம் ஒரே அளவாய் இருந்தாலும் செலுத்தப்பட வேண்டிய குற்ற நிவாரண ப- எப்படி இருக்க வேண்டும்?

   பாவம் ஒரே அளவாயிருந்தாலும், செலுத்தப்பட வேண்டிய ப- அவனவனுடைய திராணிக்குத்தக்கதாய் இருக்க வேண்டும்.

## III. *சுருக்கமான விடையளி:* (5 Marks)

1. எப்பொழுது மீறுதல் ஆகிய பாவம் ஏற்படுகிறது? பழைய ஏற்பாட்டில் எல்லையை மீறிக் கிரியை செய்து குற்றத்துக்குட்பட்டவர்கள் யார்? பெயர்களை குறிப்பிடுக, வசன ஆதாரம் தருக,

   குற்ற நிவாரண ப- ஆங்கிலத்தில் **'Tresspass offering'** என்று சொல்லப்பட்டுள்ளது. **'Tresspass'** என்ற வார்த்தையின் பொருள் எல்லையை மீறுதல் என்பதாகும். பரிசுத்தவான்கள் தங்களுடைய எல்லையை மீறிப் போய்க் கிரியை

செய்வதால் 'மீறுதல்'' ஆகிய பாவம் ஏற்படுகிறது. பழைய ஏற்பாட்டில் எல்லைக்குள் தங்கியிராமல் அதற்கு மீறிப்போய் கிரியை செய்து குற்றத்திற்குட்பட்டவர்கள்:

i. மிரியாம், ஆரோன் (எண் 12:1,2)

ii. தாவீது (2 சாமு 24:1-10)

**2.** புதிய ஏற்பாட்டில் அவரவர் அழைக்கப்பட்ட நிலவரத்தில் தங்கள் ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டில் எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது?

புதிய ஏற்பாட்டில் அவரவர் அழைக்கப்பட்ட நிலவரத்தில் தங்கள் ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்பது பழைய ஏற்பாட்டில் பல சந்தர்ப்பங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பாளயம் புறப்படும்போது ஆரோனும் அவன் குமாரரும் வந்து மறைவின் திரைச்சிலையை இறக்கி அதினாலே சாட்சியின் பெட்டியை மூட வேண்டும். அவர்கள் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளையும் மூடித்தீர்ந்த பின்னர் அதை சுமக்கும்படியாய் நியமிக்கப்பட்டிருந்த கோகாத் புத்திரர் வந்து அவற்றைச் சுமக்கும்படியாக எடுக்க வேண்டியதாயிருந்தது. அவைகள் மூடப்படுவதற்கு முன்பாக கோகாத் புத்திரர் வந்து பார்த்தால், அது ஒரு மீறுதல் அல்லது குற்றமாகும்.(எண் 4:5,15,20) இதி- ருந்து புதிய ஏற்பாட்டில் ஒவ்வொருவரும் தாங்கள் அழைக்கப்பட்ட நிலவரத்திலே தங்கள் ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்று உணர்த்தப்படுகிறோம்.

**3.** நாம் எவ்வாறு ஆடுகளைப் போல வழிதப்பிக் குற்றம் செய்கிறவர்களாகிறோம்? இந்த அக்கிரமங்களி- ருந்து நாம் எவ்வாறு நம்மை சுத்திகரித்துக் கொண்டு மகாபரிசுத்த ஸ்தலம் செல்ல தகுதியாகிறோம்?

செம்மறி ஆடு, எப்போதும் மந்தையைப் பின் செல்லும் இயல்புடையது., நாமுங்கூட கூட்டத்தோடு கூட்டமாக சேர்ந்துக் கொள்வதாலும் மற்றவர்களுடைய பாவங்களில் அறியாமையினால் சிக்குண்டு போவதாலும், மீறுதலுக்குட்படக் கூடியவர்களாயிருக்கிறோம். இவ்விதம் நாம் ஆடுகளைப் போல வழிதப்பித்திரியக் கூடியவர்களாகலாம்.

அப்படிப்பட்ட அக்கிரமங்கள் அனைத்தும், நம்மைப் பரிசுத்தப்படுத்தும்படியாக குற்ற நிவாரண ப- யான கர்த்தராகிய இயேசுவின் மீது சுமத்தப்பட்டன.(ஏசாயா 53:6) நம்முடைய குற்றங்களை (மீறுதல்களை) நாம் அறிக்கை செய்து, நம்மைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டு, நம் சொந்த ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொள்வதால் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்க நாம் தகுதியுள்ளவர்களாக்கப்படுகிறோம்.

**4.** லேவியராகமம் 5:1-4ல், குற்ற நிவாரண ப- யினால் நிவர்த்தி செய்யக் கூடியவைகளாக குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் யாவை? அல்லது குற்றநிவாரணப- எந்தெந்தக் குற்றங்களுக்காக செலுத்தப் படவேண்டும்?

கீழ்க்கண்ட பாவங்கள் குற்ற நிவாரண ப- யினால் நிவர்த்தி செய்யக்கூடியவைகளாக இருக்கின்றன.

i. சாட்சியாகிய ஒருவன், இடப்பட்ட ஆணையைக் கேட்டிருந்தும் தான் கண்டதையும், அறிந்ததையும் தெரிவியாதிருந்து பாவம் செய்தவனாயிருக்கும் போது;

ii. அசுத்தமான காட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான நாட்டு மிருகத்தின் உடலையாவது, அசுத்தமான ஊரும் பிராணிகளின் உடலையாவது, இவ்வித அசுத்தமான யாதொரு வஸ்துவையாவது, ஒருவன் அறியாமல் தொட்டு தீட்டும் குற்றமும் உள்ளவனாயிருக்கும்போது;

iii. எந்த அசுத்தத்தினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை ஒருவன் அறியாமல் தொட்டு, பின்பு அதை அறிந்துக்கொண்டு குற்றமுள்ளவனாக இருக்கும்போது;

iv. மனிதர் பதறி ஆணையிடும் எந்தக் காரியத்திலானாலும், ஒருவன் தீமை செய்கிறதற்காவது நன்மை செய்கிறதற்காவது தன்மனம் அறியாமல், தன் உதடுகளினால் பதறி ஆணையிட்டு, பின்பு அவன் அதை அறிந்துக் கொண்டு அதை குறித்துக் குற்றமுள்ளவனாயிருக்கும்போது;

❖❖❖❖❖❖❖❖❖

வகுப்பு : 11 | பாடம்-8

# கால நியமங்கள்

## ( பகுதி I )

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*: (2 Marks)

**1.** கால நியமம் என்றால் என்ன?

*1.* கால நியமம் என்பது தேவன் தம்முடைய ஜனங்களுடன் ஒரு குறிப்பிட்ட பிரமாணத்தின் மூலம் இடைப்படுகிற காலவரையறையை குறிக்கிறது.

*2.* தேவன் அந்தந்த காலவரைக்கு ஒரு பிரமாணத்தைக் கொடுக்கிறார்.

*3.* அந்தந்த காலத்திலிருந்த ஜனங்கள் அந்தந்த காலத்திலுள்ள நியமத்தைக் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது.

*4.* அப்படி கைக்கொள்ளாவிட்டால் அந்தந்த கால வரையின் பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

**2.** மத்தேயு 28 : 20ல் கூறப்பட்ட உலகம் என்பது எதைக் குறிக்கிறது?

மத்தேயு 28 : 20ல் உலகம் எனக் கூறப்பட்டிருப்பது ஒரு குறிப்பிட்ட காலத்தின் முடிவைக் காட்டுகிறது.

**3.** தேவன் தூதர்களை எப்பொழுது உண்டாக்கினார்? வசன ஆதாரம் தருக.

மனுஷனை உண்டாக்கும் முன் தேவன் தூதர்களை உண்டாக்கினார். (யோபு38: 4 - 7)

**4.** தூதர்கள் பணிவிடை ஆவிகள் என்று ஏன் அழைக்கப்படுகிறார்கள்?

தூதர்கள் தேவனுக்கு பணிவிடை செய்வதினாலும் (சங்கீதம்103 : 21) இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தம் ஊழியம் செய்யும்படி பணிவிடை ஆவிகளாக சிருஷ்டிக்கப்பட்டதினாலும் (எபி 1:14) அவ்வாறு அழைக்கப்படுகிறார்கள்.

**5.** தேவ தூதர்களுக்கு ஏன் பூரணத்தைப் படிப்படியாகப் பெறவேண்டும் என்ற அவசிமில்லாதிருந்தது?

தூதர்கள் தங்களுக்குரிய பூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்கள். ஆதலால் அவர்கள் பூரணத்தைப்படிப்படியாகப் அடைய வேண்டிய அவசியமில்லாதிருந்தது. (எசேக்கியல் 28 : 14,15)

**6.** தேவதூதர்களின் அரசாட்சியில் உள்ள நான்கு வகுப்புகள் யாவை?

தேவதூதர்களின் அரசாட்சியில் நான்கு வகுப்புகள் உள்ளன. அவையாவன:

1. சிங்காசனம்
2. கர்த்தத்துவங்கள்
3. துரைத்தனங்கள்
4. அதிகாரங்கள் (கொலோ 1 : 16 , எபே 1 : 20)

**7.** தூதர்களின் சோதனைக் காலத்தில் அவர்களுக்கு சம்பவித்தது என்ன?

தூதர்களுக்கு ஒரு சோதனைக் காலம் இருந்தது. அதிலே உண்மையாயிருந்து ஜெயம் பெற்றவர்கள் பரிசுத்த தூதர்களாக இன்றைக்கும் இருக்கிறார்கள். மற்றவர்களோ சோதனையில் விழுந்து பிசாசாகவும் அவன் சேனைகளாகவும் மாறிவிட்டார்கள். (ஏசாயா 14 : 12 - 15 ; எசேக்கியல் 28 : 12 - 17 ; 2 பேதுரு 2 : 4)

**8.** தூதர்களின் விழுகையினால் பூமிக்கு என்ன சம்பவித்தது? விழுந்து போன தூதர்களுக்கு நித்தியத்தில் என்ன ஆயத்தமாக்கப்படிருக்கிறது?

தூதர்களின் விழுகையினால் பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாக மாறியது. (ஆதி 1 : 2)

விழுந்து போன தூதர்களுக்காக நித்திய அக்கினி ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 25 : 41)

**9.** பின்வரும் காலநியமங்கள் எது முதல் எதுவரையுள்ள காலத்தைக் குறிக்கின்றன?

1. தூதர்களின் காலநியமம் 2. அறியாமையின் காலநியமம்
3. மனச்சாட்சியின் காலநியமம் 4. நியாயப் பிரமாண காலநியமம்

1. 'தூதர்களின் காலநியமம்' என்பது மனுஷனை உண்டாக்கும் முன் தேவன் தூதர்களை உண்டாக்கிய காலம் முதல், தூதர்களின் விழுகை வரை உள்ள காலமாகும்.

2. 'அறியாமையின் காலநியமம" என்பது தூதர்களின் விழுகை முதல் மனுஷனுடைய விழுகை வரையுள்ளக் காலம் ஆகும்.

3. ‘மனச்சாட்சியின் காலநியமம’ என்பது மனுஷன் விழுந்தது முதல் மோசே வரையுள்ள காலம் ஆகும்.(ரோமர் 5 : 12, 14)

4. ‘நியாயப் பிரமாண காலநியமம்’ என்பது மோசே முதல் யோவான்ஸ்நானன் வரையுள்ள காலமாகும். (பாடத்திட்டம்)

**10.** மனுஷன் எவ்வாறு எப்படி வளரவேண்டும் என்று தேவன் விரும்பினார்?

மனுஷன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து தேவனுடைய பூரணத்திற்கு வளர வேண்டுமென்று தேவன் விரும்பினார்.(பாடத்திட்டம்)

**11.** மனுஷன் எப்போது ஆவிக்குரிய மரணத்தை அடைந்தான்? (அல்லது) மனுஷன் எவ்வாறு தான் பெற்ற எல்லா ஆசீர்வாதங்களையும் இழந்தான்?

மனுஷன் தேவனால் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்து ஆவிக்குரிய மரணத்தை அடைந்தான். அதனால் தான் பெற்றிருந்த எல்லா ஆசீர்வாதங்களையும் இழந்தான். (பாடத்திட்டம்)

**12.** மனச்சாட்சியின் காலநியமத்தில் ஜீவித்த ஜனங்கள் எவ்வாறு நியாயந்தீர்க்கப்பட்டார்கள்?

மனச்சாட்சியின் காலத்தில் ஜீவித்த ஜனங்களின் மனச்சாட்சியே அவர்களுக்கு பிரமாணமாய் இருந்தது. அக்காலத்தில் மனச்சாட்சி சாட்சியிட்டு, குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்ப்புச் செய்தது.(ரோமர் 2 : 15)

**13.** மனச்சாட்சி காலநியமத்தில் வாழ்ந்த நீதிமான்களின் பெயர்களை எழுது?

ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகிய நீதிமான்கள் மனச்சாட்சி கால நியமத்தில் வாழ்ந்தார்கள். (பாடத்திட்டம்)

**14.** மனுஷனை எப்பொழுது பாவமும் மரணமும் ஆண்டுக்கொண்டன?

மனுஷன் மனச்சாட்சிக்கு விரோதமாய்த் துணிகரமாய்ப் பாவஞ்செய்தபடியால் அவனைப் பாவமும் மரணமும் ஆண்டுக் கொண்டன.

**15.** நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?

மனுஷனுடைய இருதயக்கடினத்தினிமித்தம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. (மத்தேயு 19 : 8)

**16.** நியாயப்பிரமாணம் யாருக்காக கொடுக்கப்பட்டது?

நியாயப்பிரமாணம் அக்கிரமக்காரரும், அடங்காதவர்களான இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. (1 தீமோ 1 : 9 - 11) ( உபா 4 : 8)

**17.** பாவம் எப்போது உயிர் கொண்டது?

கற்பனை வந்தபோது பாவம் உயிர் கொண்டது. (ரோமர் 7 : 9)

**18. a.** நியாயப்பிரமாணத்தால் மனுஷனை பூரணப்படுத்த முடிந்ததா?

**b.** நியாயப்பிரமாணத்தின் முடிவு யார்?

a. இல்லை. எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தினால் பூரணமாக்கப்படவில்லை. (எபி 7 : 19)

b. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். (ரோமர் 10 : 4)

**19.** கால நியமங்கள் மொத்தம் எத்தனை ? அவையாவை?

காலநியமங்கள் 10 ஆகும். அவையாவன :

1. தூதர்களின் காலநியமம்
2. அறியாமையின் காலநியமம்
3. மனச்சாட்சியின் காலநியமம்
4. நியாயப்பிரமாண காலநியமம்
5. இடைக்கால நியமம்
6. கிருபையின் காலநியமம்
7. உபத்திரவ காலநியமம்
8. மகா உபத்திரவ காலநியமம்
9. ஆயிர வருஷ அரசாட்சி
10. நித்தியம் (பாடத்திட்டம்)

**II** *<u>சுருக்கமான விடையளி :</u>* *(5 Marks)*

**1.** தேவ தூதர்களின் தன்மைகள் யாவை?

*1.* தூதர்கள் தங்களுக்குரிய பூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்கள். ஆதலால் அவர்கள் பூரணத்தைப் படிப்படியாக அடைய வேண்டிய அவசியமில்லாதிருந்தது. (எசே 28 : 14, 15)

*2.* தூதர்கள் பலத்த சவுரியவான்களாய் சிருஷ்டிக்கப்பட்டார்கள்.(சங்கீதம்103 : 20) உதாரணமாக ஒரே இரவில் 1,85,000 அசீரியர்களை ஒரே தூதன் சங்கரித்தான்.

(2இராஜா 19 : 35)

3. தூதர்கள் ஞானத்தால் நிறைந்திருந்தார்கள். (எசே 28 : 12)
4. தூதர்கள் பூரண அழகுள்ளவர்களாயிருந்தார்கள்.விலையேறப்பெற்ற கற்களினால் மூடப்பட்டிருந்தார்கள். (எசே 28 : 12, 13) ஒரே தூதனுடைய மகிமையால் பூமி பிரகாசமாயிற்று. (வெளி 18 : 1)
5. தூதர்களுக்கு சுயாதீன சித்தம் இருந்தது. (ஏசாயா 14 : 13, 14)
6. தூதர்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தம் ஊழியஞ்செய்யும் பணிவிடை ஆவிகளாயிருக்கும்படி சிருஷ்டிக்கப்பட்டனர். (எபி 1 : 14)

**2.** மனச்சாட்சியின் காலநியமம் பற்றி எழுது.

1. மனுஷன் விழுந்தது முதல் மோசே வரையுள்ள காலம் மனச்சாட்சியின் கால நியமமாகும்.(ரோமர் 5 : 12, 14)
2. அக்காலத்தில் மனச்சாட்சி சாட்சியிட்டு குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்ப்பு செய்தது.(ரோமர்2 : 15)
3. ஏனோக்கு, ஆபேல், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகிய நீதிமான்கள் தங்கள் மனச்சாட்சியின்படியே ஜீவித்தார்கள்.
4. அவர்கள் மனச்சாட்சியே அவர்களுக்குப் பிரமாணமாயிருந்தது.
5. மனுஷன் மனச்சாட்சிக்கு விரோதமாய்த் துணிகரமாய்ப் பாவஞ்செய்தபடியால் அவனைப் பாவமும் மரணமும் ஆண்டுகொண்டன. (ரோமர் 5 : 12, 14)

**3.** நியாயப்பிரமாண கால நியமம் பற்றி எழுது.

நியாயப்பிரமாண காலம் என்பது மோசே முதல் யோவான்ஸ்நானன் வரையுள்ள காலமாகும்.. (லூக்கா 16 : 16) இந்தக் காலத்தில் மனுஷன் நியாயப்பிரமாணத்தின்படி நீதிமான், அநீதியுள்ளவன் என்று தீர்க்கப்பட்டான். மனுஷனுடைய இருதயக்கடினத்தினிமித்தம் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது.(மத்தேயு19:8) நியாயப்பிரமாணம் அக்கிரமக்காரருக்கும் அடங்காதவர்களுக்கும் விதிக்கப்பட்டிருந்தது. (1 தீமோ 1 : 9 - 11) இது இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. (உபா 4 : 8) கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது. (ரோமர் 7 : 9) எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தினால் பூரணமாக்கப்படவில்லை. (எபி7:19) ஆபிரகாமின் சந்ததியாகிய கிறிஸ்து வெளிப்படுமட்டும் இது அருளப்பட்டிருந்தது. (கலா 3 : 18, 19). கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். (ரோமர் 10 : 4)

**4.** அறியாமையின் காலத்தில் ஜீவித்த மனிதனுக்கு உண்டாயிருந்த 7 ஆசீர்வாதங்களைப்பற்றி எழுது.

மனிதனுக்கு உண்டாயிருந்த 7 ஆசீர்வாதங்கள்:

1. நித்திய ஜீவன்: மனிதன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து ஜீவனிலே வளர வேண்டியவனாய் இருந்தான்.
2. தேவ சாயல் : தேவன் தமது அன்பின் சாயலாக மனுஷனை உண்டாக்கினார். (ஆதி 1 : 26, 27)
3. தேவனோடுள்ள ஐக்கியம்: பகலில் குளிர்ச்சியான நேரத்தில் தோட்டத்தில் உலாவினார். (ஆதி 3 : 8). மனுஷன் தேவனோடு ஐக்கியமுள்ளவனாய் இருந்தான்.
4. ஆளுகை: தேவன் மனுஷனிடம் சகலத்தையும் ஆளுகை செய்யும்படி சொன்னார். (ஆதி 1 : 26 , 28)
5. தேவ மகிமை : மனுஷனை தேவ மகிமை மூடியிருந்ததால் அவன் தான் நிர்வாணியாயிருந்தும் வெட்கப்படாதிருந்தான். (ஆதி 2 : 25)
6. அழியாமை : அவனுக்கு வியாதியோ பெலவீனமோ வயோதிபமோ மரணமோ இல்லாதிருந்தது.
7. சுதந்தரம் : எல்லாம் மனுஷனுக்குச்சுதந்தரமாககையளிக்கப்பட்டது.(ஆதி 1: 28)

## III *<u>விரிவான விடையளி :</u>* (10 Marks)

**1.** தூதர்களின் கால நியமத்தைப் பற்றி எழுதுக.

1. தேவன் மனுஷனை சிருஷ்டிக்கும் முன் தூதர்களை சிருஷ்டித்தார். (யோபு38:4-7)
2. தூதர்கள் தங்களுக்குரிய பூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தார்கள். ஆதலால் அவர்கள்பூரணத்தைப் படிப்படியாகப் அடையவேண்டிய அவசியமில்லாதிருந்தது. (எசே 28 : 14, 15)
3. தூதர்கள் பலத்த சவுரியவான்களாய் சிருஷ்டிக்கப்பட்டார்கள். (சங் 103 : 20) ஒரே இரவில் 1,85,000 அசீரியர்களை ஒரே தூதன் சங்கரித்தான்.(2இராஜா 19 :35)
4. தூதர்கள் ஞானத்தால் நிறைந்திருந்தார்கள். (எசே28:12)

5. தூதர்கள் பூரண அழகுள்ளவர்களாயிருந்தார்கள். விலையேறப்பெற்ற கற்களினால் மூடப்பட்டிருந்தார்கள்.(எசே 28 : 12, 13). ஒரே தூதனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. (வெளி 18 : 1)
6. தூதர்களுக்கு சுயாதீன சித்தம் இருந்தது. (ஏசாயா 14 : 13, 14)
7. தூதர்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தம் ஊழியஞ்செய்யும் பணிவிடை ஆவிகளாயிருக்கும்படி சிருஷ்டிக்கப்பட்டனர். (எபி 1 : 14)

தேவதூதர்கள் அரசாட்சியில் நான்கு வகுப்புகள் உள்ளன. அவைகள்:

1. சிங்காசனங்கள் 2. கர்த்தத்துவங்கள்
3. துரைதனங்கள் 4. அதிகாரங்கள் (கொலோ 1 : 16 , எபே 1 : 20)

தூதர்களுக்கு ஒரு சோதனைக் காலம் இருந்தது. அதிலே உண்மையாயிருந்து ஜெயம் பெற்றவர்கள் பரிசுத்த தூதர்களாக இன்றைக்கும் இருக்கிறார்கள். மற்றவர்களோ சோதனையில் விழுந்து பிசாசாகவும், அவன் சேனைகளாகவும் மாறிவிட்டார்கள். (ஏசாயா 14 : 12 - 15 , எசே 28 : 12 - 17, 2பேதுரு 2 : 4)

தூதர்களின் விழுகையினால் பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாக மாறியது. (ஆதி 1 : 2) பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் நித்திய அக்கினி ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 25 : 41)

**2.** அறியாமையின் கால நியமத்தைப் பற்றி எழுதுக.

1. தூதர்களின் விழுகைமுதல் மனுஷனுடைய விழுகை மட்டும் உள்ளக் காலம் அறியாமையின் கால நியமாகும்.
2. தூதர்களின் விழுகையினால் ஒழுங்கின்மையும் வெறுமையுமாக மாறிய பூமியைத் தேவன் சீர்ப்படுத்தி புதிப்பிப்பதைக் குறித்து ஆதியாகமம் அதி1,2 இல் நாம் காண்கிறோம்.
3. ஆறாம் நாளில் தேவனுடைய சாயலின்படியும் ரூபத்தின்படியும் மனுஷன் உண்டாக்கப்பட்டான்.
4. அவனுக்குண்டாயிருந்த ஏழு ஆசீர்வாதங்கள்:
    - *a.* நித்திய ஜீவன் : மனிதன் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து ஜீவனிலே வளர வேண்டியவனாய் இருந்தான்.
    - *b.* தேவ சாயல்: தேவன் தமது அன்பின் சாயலாக மனுஷனை உண்டாக்கினார். (ஆதி 1 : 26, 27)
    - *c.* தேவனோடுள்ள ஐக்கியம் - பகலில் குளிர்ச்சியான நேரத்தில் தோட்டத்தில் உலாவினார். (ஆதி 3 : 8). மனுஷன் தேவனோடு ஐக்கியமுள்ளவனாய் இருந்தான்.
    - *d.* ஆளுகை:. தேவன் மனுஷனிடம் சகலத்தையும் ஆளுகை செய்யும்படி சொன்னார். (ஆதி 1 : 26 , 28)
    - *e.* தேவ மகிமை : மனுஷனை தேவ மகிமை மூடியிருந்ததால் அவன் நிர்வாணியாயிருந்தும் வெட்கப்படாதிருந்தான். (ஆதி 2 : 25)
    - *f.* அழியாமை : அவனுக்கு வியாதியோ பெலவீனமோ வயோதிபமோ மரணமோ இல்லாதிருந்தது.
    - *g.* சுதந்தரம் : எல்லாம் மனுஷனுக்குச் சுதந்தரமாக கையளிக்கப்பட்டது. (ஆதி 1 : 28)
5. மனுஷன் ஜீவ விருட்சத்தின் கனியை புசித்து, தேவனுடைய பூரணத்திற்கு வளரவேண்டுமென்று தேவன் விரும்பினார்.
6. அதற்குப் பதிலாக அவன் தேவனால் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்து ஆவிக்குரிய மரணத்தை அடைந்தான். அவன் தான் பெற்றிருந்த எல்லா ஆசீர்வாதங்களையும் இழந்தான்.

**********

வகுப்பு : 11

பாடம்-9

# கால நியமங்கள்

(பகுதி II)

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** இயேசு எந்த கால நியமத்தில் ஜீவித்தார்? இயேசு எந்த சந்ததியில் பிறந்தார்?
இயேசு இடைக்கால நியமத்தில் ஜீவித்தார். இயேசு ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தார். (கலா 3 : 18, 19)

**2.** கிறிஸ்துவின் சரீரமான சபை எப்பொழுது உருவானது?
பரிசுத்த ஆவி முதலாவது வந்து இறங்கின பொழுது (அப்2:1-4) கிறிஸ்துவின் சரீரமான சபை (1 கொரி 12 : 13) உருவானது.

**3.** பரிசுத்தாவியைப் பெற்றவர்கள் எவற்றில் உறுதியாய் தரிக்க வேண்டும் என்று அப் 2 : 42 இல் கூறப்பட்டுள்ளது?
அப் 2 : 42 இல் பரிசுத்தாவியைப் பெற்றவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**4.** சபையானது கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி தேவன் சபையில் ஏற்படுத்தியுள்ள ஊழியங்கள், உத்தியோகங்கள், வரங்கள் எத்தனை?
சபையானது கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி தேவன் சபையில் எட்டு ஊழியங்களையும் (1 கொரி 12 : 28) ஐந்து உத்தியோகங்களையும் (எபே 4 : 13) ஒன்பது வரங்களையும் (1 கொரி 12 : 7 - 10) ஏற்படுத்தியிருக்கிறார்.

**5.** தேவன் ஏற்படுத்தியுள்ள ஊழியங்கள், உத்தியோகங்கள், வரங்கள் மூலமாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எவ்வாறு வளர்ச்சியடைகிறது?
தேவன் ஏற்படுத்தின ஊழியங்கள், உத்தியோகங்கள், வரங்கள் மூலமாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை ஜெயங்கொண்ட சபையாக மாறி சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. (வெளி 12 : 1-5)

**6.** பிசாசும் அவனுடைய தூதர்களும் எப்பொழுது பூமிக்குத் தள்ளப்படுவார்கள்? உபத்திரவ காலம் எப்பொழுது ஆரம்பமாகும்?
இயேசுவின் இரகசிய வருகையில் ஆண் "பிள்ளை" அல்லது பூரணமாக்கப்பட்ட சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின் பிசாசும் அவனது தூதர்களும் பூமிக்குத் தள்ளப்படுவார்கள். (வெளி 12 : 5 - 9) இதன் பின்பு உபத்திரவ காலம் ஆரம்பமாகும்.

**7.** அந்தி கிறிஸ்து என்பவன் யார்?
பிசாசு தன்னுடைய சிங்காசனத்தையும் வல்லமையையும் மிகுந்த அதிகாரத்தையும் கொடுரமான மிருகம் போன்ற சுபாவம் உள்ள (2 தெச 2 : 9) ஒரு மனிதனுக்குக் கொடுப்பான். அந்த மனிதனே அந்திகிறிஸ்து. (வெளி 13:1,2)

**8.** அந்தி கிறிஸ்து யாரை உபத்திரபடுத்துவான்? இது எவ்வளவு காலம் நீடிக்கும்?
ஸ்திரீயை அதாவது சபையில் கைவிடப்பட்டவர்களை அந்திகிறிஸ்து உபத்திரவப்படுத்துவான். (வெளி 12 : 13) இது உபத்திரவ கால யுகத்தின் ஆரம்பமாகும். இது மூன்றரை வருட காலம் நீடிக்கும். (வெளி 12 : 6, 14)

**9.** அந்தி கிறிஸ்து யாரை கொலை செய்வான்?
மிருகத்தின் சொருபத்தை வணங்காதவர்களை கொலை செய்வான்.(வெளி 13 : 15)

**10.** அந்திகிறிஸ்துவின் காலத்தில் வாங்கவும், விற்கவும் என்ன செய்ய வேண்டும்?
அந்திகிறிஸ்துவாகிய மிருகத்தின் முத்திரையையாவது, அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது (666) (வெளி 13 : 16-18) தரித்து கொள்ள வேண்டும்.

**11.** அந்திகிறிஸ்துவாகிய மிருகத்தின் சொருபத்தை யார் வணங்குவார்கள்?
உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அந்திகிறிஸ்துவாகிய மிருகத்தின் சொருபத்தை வணங்குவார்கள். (வெளி 13 : 8)

**12.** உபத்திரவ காலத்தில் இரட்சிப்புக்கான ஒரே வழி என்ன?

கைவிடப்பட்ட சபையின் மத்தியில் அந்திகிறிஸ்துவின் முத்திரையை தரித்துக் கொள்ளாமல், மிருகத்தின் சொருபத்தை வணங்காமல் இரத்தசாட்சியாய் மரிப்பது மாத்திரமே உபத்திரவ காலத்தில் இரட்சிப்புக்கான ஒரே வழியாகும். (வெளி 13 : 15, 16)

**13.** உபத்திரவ காலத்தில் அந்திகிறிஸ்துவுக்கும் யூதருக்கும் ஏற்படும் உடன்படிக்கை என்ன?

1. அந்தி கிறிஸ்து யூதரோடு ஒரு கள்ளத்தனமான உடன்படிக்கை பண்ணி எருசலேமில் அவர்களுடைய தேவாலயம் திரும்பக்கட்டப்பட உதவி செய்வான். (தானி9:25)

2. யூதர்களும் இவன்தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என எண்ணி ஏற்றுக் கொள்வார்கள். (யோவான் 5 : 43)

**14.** உபத்திரவ காலத்தில் யூதர்கள் அந்திகிறிஸ்துவுடன் செய்யும் உடன்படிக்கையை எப்போது, ஏன் முறித்துபோடுவார்கள்?

1. உபத்திரவ காலத்தின் முதல் மூன்றரை வருட கால முடிவில் அந்திகிறிஸ்து தேவாலயத்தில் நுழைந்து தேவன் போல் உட்கார்ந்து தன்னைத் தேவனென்று காண்பிப்பான். (2 தெச 2 : 4)

2. பின்பு அவன் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி, பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணுவான். (தானி 9 : 27 மத் 24 : 15) இதனால் யூதர்கள் முதல் மூன்றரை வருட உபத்திரவ காலத்தின் முடிவில் அந்தி கிறிஸ்துவுடன் தாங்கள் செய்திருந்த உடன்படிக்கையை முறித்துப் போட்டு அவனை எதிர்ப்பார்கள்.

**15.** முதல் மூன்றரை ஆண்டு உபத்திரவ கால முடிவிலே என்ன சம்பவிக்கும்?

முதல் மூன்றரை ஆண்டு உபத்திரவ கால முடிவிலே, இயேசு வானத்தின் மேகங்கள் மேல் தோன்றி, உபத்திரவ காலத்தின் இரத்த சாட்சிகளைச் சேர்க்கும்படி தமது தூதர்களை அனுப்புவார். (மத் 24 : 29 - 31 )

**16.** மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இருவர் யார்? அவர்கள் எந்தக்கால நியமத்தில் மீண்டும் பூமிக்கு வருவார்கள்? அவர்களுக்கு சம்பவிப்பது என்ன?

1. மரணத்தைக் காணாமல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இருவர் - ஏனோக்கும், எலியாவுமாகும்.

2. ஏனோக்கும், எலியாவும் மகா உபத்திரவகால நியமத்தில் பூமிக்கு வருவார்கள். அவர்கள் வந்து யூதர்களுக்கு ஊழியஞ்செய்து அந்திக்கிறிஸ்துவினால் கொல்லப்பட்டு, தேவனால் உயிர்ப்பிக்கப்பட்டு பரலோகம் செல்வார்கள். (வெளி 11 : 3 - 12)

**17.** மகா உபத்திரவ காலத்தில் எத்தனை யூதர்கள் முத்தரிக்கப்படுவார்கள்? எதற்காக முத்தரிக்கப்படுவார்கள்?

1. மகா உபத்திரவ காலத்தில் 1,44,000 யூதர்களை தேவன் முத்தரிப்பார்.
2. 1,44,000 யூதர்களைப் பாதுகாப்பதற்காக தேவன் அவர்களை முத்திரை போடுவார். (வெளி 7 : 3 - 8)
3. அவர்கள் ஆயிரவருட அரசாட்சியில் பங்கெடுப்பார்கள்.

**18.** கீழ்க்காணும் சம்பவங்கள் எந்த காலநியமத்திற்குட்பட்டவைகள்?

a. ஸ்திரீ வனாந்திரத்திற்கு ஓடிப் போகுதல்.
b. சிலுவையில் இயேசுவின் மரணம்.
c. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஊற்றப்படுதல்
d. அர்மகெதோன் யுத்தம்

*a.* ஸ்திரீ வனாந்திரத்திற்கு ஓடிப்போகுதல் - வெளி 12 : 6 - உபத்திரவ கால நியமம்
*b.* சிலுவையில் இயேசுவின் மரணம் - மாற்கு 15 : 24 - இடைக்கால நியமம்
*c.* பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஊற்றப்படுதல் -அப் 2 : 1 - 4 -கிருபையின் கால நியமம்.
*d.* அர்மகெதோன் யுத்தம் - வெளி 16 : 16 - மகா உபத்திரவ கால நியமம்.

**19.** அர்மகெதோன் என்னுமிடத்தில் யார் யாருக்கு யுத்தம் நடைபெறும்?

அர்மகெதோன் என்னுமிடத்தில் கிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தவான்களும், அந்தி கிறிஸ்துவோடும் அவனுடைய சேனைகளோடும் யுத்தம் செய்வார்கள்.(வெளி 16 : 16)

**20.** அர்மகெதோன் யுத்தத்தின் முடிவிலே யார் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள்?

மிருகமும்(அந்தி கிறிஸ்துவும்) கள்ளத் தீர்க்கத்தரிசியும் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள். (வெளி 19 : 20)

**21.** அர்மகெதோன் யுத்தத்திற்குப் பிறகு யார் எத்தனை வருடம் அகாதமான பாதாளத்தில் தள்ளியடைக்கப்படுவான்?

சாத்தான் ஆயிரம் வருஷம் கட்டப்பட்டு அகாதமான பாதாளத்தில் வைக்கப்படுவான். (வெளி 20 : 1, 2 ஏசாயா 14 : 12 - 15)

**22.** ஏனோக்கு, எலியா உயிரடைந்து எடுத்துக் கொள்ளப்பட்டபின் எருசலேமில் சம்பவிப்பது என்ன?

1. ஏனோக், எலியா உயிரடைந்து எடுத்துக் கொள்ளப்பட்ட அந்நேரத்திலே பூமி மிகவும் அதிரும்.
2. உடனே அந்த நகரத்தில் பத்திலொரு பங்கு இடிந்து விழும்.
3. மனுஷரில் ஏழாயிரம் பேர் பூமியதிர்சியினால் அழிவார்கள்.
4. மீதியானவர்கள் பயமடைந்து, பரலோகத்தின் தேவனைமகிமைப்படுத்துவார்கள். (வெளி 11 : 13)

## II <u>*சுருக்கமான விடையளி*</u> : (5 Marks)

**1.** பின்வரும் கால நியமங்கள் எது முதல் எதுவரையுள்ள காலத்தைக் குறிப்பிடுகின்றன?

1. இடைக்கால நியமம் 2. கிருபையின் கால நியமம்
3. உபத்திரவ காலநியமம் 4. மகா உபத்திரவ கால நியமம்

1. இடைக்கால நியமம் : இடைக்கால நியமம் என்பது யோவான்ஸ்நானன் காலம் முதல் சபை ஸ்தாபிக்கப்பட்டது வரையுள்ள காலமாகும்.

2. கிருபையின் கால நியமம் : கிருபையின் கால நியமம் என்பது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டு சபை ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்து, கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகை வரையுள்ள காலமாகும்.

3. உபத்திரவ கால நியமம் : உபத்திரவ காலநியமம் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் ஆண்பிள்ளையான பூரணமாக்கப்பட்ட சபை எடுத்துக் கொள்ளப்பட்டது முதல் கைவிடப்பட்ட சபையில் இரத்தசாட்சியாய் மரிப்பவர்களை சேர்க்கும் வரை உள்ள முதல் மூன்றரை வருட காலமாகும்.

4. மகா உபத்திரவ கால நியமம் : மகா உபத்திரவ காலநியமம் என்பது உபத்திரவ கால இரத்தசாட்சிகளை மனுஷ குமாரன் சேர்க்கும் காலம் முதல் மகா உபத்திரவ காலத்தின் முடிவில் உள்ள இயேசுவின் பகிரங்கமான வருகை வரை உள்ள காலமாகும்.

**2.** இடைக்கால நியமம் பற்றி குறிப்பு வரைக.

<u>இடைக்கால நியமம் :</u>

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| 1. பழைய ஏற்பாட்டு நியாயபிரமாணம் கைக்கொள்ளப்பட்டது. | 1. புதிய ஏற்பாட்டுப் பிரமாணம் கைக் கொள்ளப்பட்டது. |
| 2. பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது. | 2. நம்முடைய பஸ்காவாகிய இயேசுவும் அடிக்கப்பட்டார்.(1 கொரி 5 : 7) |
| 3. விருத்தசேதனம் இருந்தது (லூக் 2 : 21) | 3. ஜனங்கள் மனந்திரும்பினார்கள்.(லூக் 3: 6) |
| 4. ஆசாரியர் தொட்டியில் கைக் கால்களை கழுவினர் ( யாத் 30 : 19) | 4. ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.(மத் 3: 6) |
| 5. பலிகள் செலுத்தப்பட்டன. (லூக் 2:24) | 5. இயேசுகிறிஸ்து பலியானார்.(1 கொரி 5 : 7) |
| 6. ஓய்வு நாள் ஆசரிக்கப்பட்டது | 6. ஜனங்கள் ஆவிக்குரிய இளைப்பாறுதலை பெற்றுக் கொண்டிருந்தார்கள். |

**3.** மகா உபத்திரவ காலநியமத்தின் ஆரம்பத்தில் யூதருக்கு சம்பவிப்பது என்ன?

மகா உபத்திரவ காலத்தின் ஆரம்பத்தில் உபத்திரவ கால இரத்தச் சாட்சிகளைச் சேர்க்கும்படியாக மனுஷகுமாரன் மேகங்கள் மேல் வருவதைக் யூதர்கள் கண்டு, அவர்தான் தாங்கள் குத்தினவர் என்று அடையாளங்கண்டு சகல கோத்திரத்தாரும் புலம்புவார்கள். (மத் 24 : 30). அவர் அவர்கள்மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார்.(சக 12 : 10) இக்காலத்தில் யூதர்கள் தாங்கள் அந்திக் கிறிஸ்துவோடு செய்திருந்த உடன்படிக்கையை முறித்துப்போடுவதால் யூதர்களை அவன் உபத்திரவப்படுத்த ஆரம்பிப்பான்.

**4.** மகா உபத்திரவ காலத்தில் ஏனோக், எலியாவிற்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தையும், அதிகாரத்தையும் பற்றி எழுது.

மகா உபத்திரவ காலத்தில் ஏனோக், எலியாவின் ஊழியம்:

அந்திக் கிறிஸ்துவுடன் உடன்படிக்கையை உடைத்த யூதர்கள் மகா உபத்திரவத்தின் பாதையில் கடந்து சென்ற போது தேவனுடைய இரண்டு சாட்சிகளாயிருக்கும் எலியாவும், ஏனோக்கும் இரட்டு வஸ்திரம் உடுத்தினவர்களாய் அவர்களின் மத்தியில் ஊழியம் செய்ய மீண்டும் உலகத்திற்கு அனுப்பப்படுவார்கள். அவர்களின் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாக உரைத்து, யூதர்களை தைரியப்படுத்துவார்கள். (வெளி 11:3)

ஏனோக், எலியாவிற்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள்: (வெளி 11 : 5,6)

1. ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்.

2. மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும்.

3. அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும்

4. தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும்.

**5.** அர்மகெதோன் யுத்தம் பற்றி குறிப்பு வரைக:

அர்மகெதோன் யுத்தம் : (வெளி 16 : 16 : 19 : 17 - 21)

அர்மகெதோன் என்னுமிடத்தில் இந்த யுத்தம் நடைபெறும். கிறிஸ்துவும் அவருடைய பரிசுத்தவான்களும், அந்திக்கிறிஸ்துவின் சேனைகளை ஜெயித்து அவர்களை அழிப்பார்கள். மிருகமும் (அந்திக்கிறிஸ்துவும்) கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள். (வெளி 19 : 20) சாத்தான் ஆயிரம் வருஷம் கட்டப்பட்டு அகாதமான பாதாளத்தில் தள்ளியடைக்கப்படுவான். (வெளி 20 : 1, 2 ஏசாயா 14 : 12 - 15)

**III** *__விரிவான விடையளி :__* (10 Marks)

**1.** கிருபையின் காலத்திலிருக்கிற கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு இருக்க வேண்டிய நியமங்கள் யாவை?

கிருபையின் காலத்திலிருக்கிற கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு இருக்க வேண்டிய நியமங்கள் :

*1.* எல்லாரும் மனந்திரும்பவேண்டும் (அப் 17 : 30 ; 1 தீமோ 2 : 4)
*2.* சகல ஜாதிகளும் சீஷராக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற வேண்டும். (மத்28:19)
*3.* மாம்சமான யாவர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட வேண்டும். (யோவேல்2:28,29 □ அப் 2 : 17)
*4.* புற ஜாதிகள் சுவிசேஷத்தினால் பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக ஒரே சரீரத்திற்குள்ளானவர்களாக வேண்டும். (எபே 3 : 3 □1கொரி 12 : 13)
*5.* பரிசுத்தாவியை பெற்றவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும். (அப் 2 : 42)
*6.* சபை கிறிஸ்துவின் பூரணத்தை அடைய வேண்டும். (கொலோ 1 : 28) சபையானது கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்படி. தேவன் சபையில எட்டு ஊழியங்களையும் (1கொரி 12 : 28) ஐந்து உத்தியோகங்களையும்: (எபே4:13), அவர்கள் மூலம் ஆழமான உபதேசங்களையும், சபையின் பக்திவிருத்திக்காக ஆவிக்குரிய ஒன்பது வரங்களையும் (1 கொரி 12: 7-10) ஏற்படுத்தியிருக்கிறார். இவ்விதம் பூரணமாக்கப்படும் ஜெய கொண்ட சபை, சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். (வெளி 12:1-5)

**2.** சபையானது பூரண புருஷராகும்படி தேவன் சபையில் ஏற்படுத்திய ஊழியங்கள், உத்தியோகங்கள், வரங்கள் யாவை? அவைகள் ஒவ்வொன்றையும் வரிசையாக எழுதுக.

சபையானது பூரண புருஷராகும்படி, தேவன் சபையில் ஏற்படுத்தியது

1. ஊழியங்கள் - எட்டு (1 கொரி 12 : 28)
2. உத்தியோகங்கள் - ஐந்து (எபே 4 : 13)
3. வரங்கள் - ஒன்பது (1கொரி 12 : 7 - 10)

எட்டு ஊழியங்கள் : (1 கொரி 12 : 28)

| | |
|---|---|
| 1. அப்போஸ்தலர் | 5. குணமாக்கும் வரங்கள் |
| 2. தீர்க்கதரிசிகள் | 6. ஊழியங்கள் |
| 3. போதகர்கள் | 7. ஆளுகைகள் |
| 4. அற்புதங்கள் | 8. பலவித பாஷைகள் |

ஐந்து உத்தியோகங்கள் : (எபே 4 : 13)

| | | |
|---|---|---|
| 1. அப்போஸ்தலர் | 3. சுவிசேஷகர் | 5. போதகர் |
| 2. தீர்க்கதரிசிகள் | 4. மேய்ப்பர் | |

ஒன்பது வரங்கள் : (1 கொரி 12 : 7 - 10)

1.ஆவியினாலே ஞானத்தை போதிக்கும் வரம்.
2.ஆவியினாலே அறிவை உணர்த்தும் வரம்
3.ஆவியினாலே விசுவாசம்
4.ஆவியினாலே குணமாக்கும் வரம்
5.அற்புதங்களைசெய்யும்சக்தி
6. தீர்க்கதரிசனம் உரைத்தல்
7. ஆவிகளை பகுத்தறிதல்
8. பற்பல பாஷைகளைப் பேசுதல்
9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்.

**3.** உபத்திரவ கால நியமம் பற்றி தொகுத்து எழுதுக.

<u>உபத்திரவ கால நியமம்</u> : (வெளி 6 □7 :9 - 17 □12 :6 - 17 அதி13 □14 :6-16)

கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் ஆண்பிள்ளை அல்லது பூரணமாக்கப்பட்ட சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின் பிசாசும் அவனது தூதர்களும் பூமிக்குத் தள்ளப்படுவார்கள். அதன் பின்பு பிசாசு தன்னுடைய சிங்காசனத்தையும், வல்லமையையும் அதிகாரத்தையும் மிகுந்த கொடுரமான மிருகம் போன்ற சுபாவம் உள்ள ஒரு மனிதனுக்குக் கொடுத்து (அந்திக் கிறிஸ்து) (வெளி 13 : 1, 2) ஸ்திரீக்கு அதாவது சபையில் கைவிடப்பட்டவர்களுக்கு, அந்திக் கிறிஸ்துவின் மூலமாய் உபத்திரவங்களை உண்டாக்குவான். (வெளி 12 : 13) இதுவே உபத்திரவ கால யுகத்தின் ஆரம்பமாகும். இது மூன்றரை வருட காலம் நீடிக்கும். (வெளி 12 : 6, 14) மிருகத்தின் (அந்திக்கிறிஸ்துவின்) முத்திரையைத்தரித்துக் கொள்ள மறுக்கிறவர்களால் வாங்கவும் விற்கவும் முடியாது. அதன் சொரூபத்தை வணங்காதவர்கள் கொலை செய்யப்படுவார்கள். (வெளி 13 : 15-17) இச்சமயத்தில் சபையில் கைவிடப்பட்டவர்களின் மத்தியில் அநேகர் இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள். ஏனென்றால் அக்காலத்தில் இரத்த சாட்சிகளாக மரிப்பது மாத்திரமே, அவர்கள் இரட்சிப்பிற்கு ஒரே வழியாக இருக்கும்.

அந்திக் கிறிஸ்து யூதரோடு எப்படியும் ஒரு கள்ளத்தனமான உடன்படிக்கை பண்ணி எருசலேமில் அவர்களுடைய தேவாலயம் திரும்பக் கட்டப்பட அவர்களுக்கு உதவி செய்வான். (தானி 9 : 25) யூதர்கள் இவன்தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று எண்ணுவார்கள். முதல் மூன்றரை வருடத்தின் முடிவில் அந்தி கிறிஸ்து தேவாலயத்தில் நுழைந்து தேவனைப் போல் உட்கார்ந்து தன்னைத் தேவனென்று காண்பிப்பான். (2 தெச 2 : 4) பின்பு அவன் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவான். (தானி 9:27 ,மத்24:15) அப்பொழுது யூதர்கள் அவனோடுள்ள தங்கள் உடன்படிக்கையை முறித்துப் போட்டு அவனை எதிர்ப்பார்கள்.

அப்போது இயேசு வானத்தின் மேகங்கள் மேல் தோன்றி இந்த உபத்திரவகாலத்தின் இரத்த சாட்சிகளை சேர்க்கும்படி தமது தூதர்களை அனுப்புவார். இது உபத்திரவகால நியமத்தின் முடிவைக் குறிக்கிறது. (மத் 24 : 29 - 31)

**4.** மகா உபத்திரவ கால நியமம் பற்றி எழுதுக.

<u>மகா உபத்திரவ கால நியமம்</u> : (வெளி 7 : 1 - 8 ; 8 ; 9 ; 10 ; 11 : 1 - 14;16)

இக் காலத்தின் ஆரம்பத்தில் உபத்திரவ கால இரத்தச் சாட்சிகளை சேர்க்கும் படியாக மனுஷகுமாரன் மேகங்கள் மேல் வருவதை யூதர்கள் கண்டு, அவர்தான் தாங்கள் குத்தினவர் என்று அடையாளங்கண்டு, சகல கோத்திரத்தாரும், புலம்புவார்கள்.(மத்24:30) அவர் அவர்கள் மேல் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார். (சக 12 : 10) இக்காலத்தில் யூதர்கள் தாங்கள் அந்திக் கிறிஸ்துவோடு செய்திருந்த உடன்படிக்கையை முறித்துப் போடுவதால் யூதர்களை அவன் உபத்திரப்படுத்த ஆரம்பிப்பான்.

ஏனோக்கும், எலியாவும் இக்காலத்தில் வந்து யூதர்களுக்கு ஊழியஞ்செய்து, அந்திக் கிறிஸ்துவினால் கொல்லப்பட்டு, தேவனால் உயிர்ப்பிக்கப்பட்டு, பரலோகத்திற்கு ஏறிச்செல்வார்கள். (வெளி 11 : 3 - 12) தேவன் 1,44,000 யூதர்களைப் பாதுகாப்பதற்காக முத்திரை போடுவார். (வெளி 7 : 3 - 8) தேவகோபாக்கினை இந்த பூமியின் மீது ஊற்றப்படும். உலகமுண்டானது முதல் இதுவரைக்கும், சம்பவித்திராததுமான மிகுந்த உபத்திரவம் அப்போது உண்டாகும். (மத் 24 : 21) மகா உபத்திரவ காலத்தின் முடிவில் கர்த்தராகிய இயேசு பகிரங்கமாக வருவார். (சக 14 : 4, 5 : யூதா 14, 15)

**5.** மகா உபத்திரவ கால முடிவில் தங்கள் சாட்சியை சொல்லி முடித்த போது ஏனோக்கிற்கும் எலியாவிற்கும் சம்பவிப்பது என்ன?

மகா உபத்திரவ கால முடிவில் தங்கள் சாட்சியை சொல்லி முடித்த போது ஏனோக் எலியாவிற்கும் சம்பவிப்பது : (வெளி 11 : 7 - 13)

1. பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம் பண்ணி அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்று போடும்.
2. அவர்களுடைய உடல்கள் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும்.
3. ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்கள் உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள்.

4. அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்க வொட்டார்கள்.
5. அவர்கள் பூமியின் குடிகளை வேதனைப் படுத்தினபடியால் அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் களி கூர்ந்து ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள்.
6. மூன்றரை நாளைக்குப் பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்து, காலூன்றி நின்றார்கள்.
7. பின்பு, இங்கே வாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்குண்டான பெரிய சத்தத்தை கேட்டு அவர்கள் மேகத்தில் ஏறி வானத்திற்கு போவார்கள்.

**IV** *விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :* (15 Marks)

**1.** உபத்திரவ கால நியமம், மகா உபத்திரவ கால நியமம் பற்றி எழுதுக.

உபத்திரவ கால நியமம் : (வெளி 6 ; 7 :9 - 17 ; 12 :6 - 17 ; 13 ; 14 :6 - 16)

கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் ஆண் பிள்ளை அல்லது பூரணமாக்கப்பட்ட சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின் பிசாசும் அவனது தூதர்களும் பூமிக்கு தள்ளப்படுவார்கள். (வெளி 12 : 5 - 9)

அதன்பின்பு பிசாசு தன்னுடைய சிங்காசனத்தையும் வல்லமையையும், அதிகாரத்தையும் மிகுந்த கொடுரமான மிருகம் போன்ற சுபாவம் உள்ள ஒரு மனிதனுக்கு (1 தெச 2 : 7) (அந்திகிறிஸ்து) கொடுத்து (வெளி 13 : 1, 2) ஸ்திரீக்கு அதாவது சபையில் கைவிடப்பட்டவர்களுக்கு, அந்திக்கிறிஸ்துவின் மூலமாய் உபத்திரவங்களை உண்டாக்குவான். (வெளி 12 : 13) இதுவே உபத்திரவகால யுகத்தின் ஆரம்பமாகும். இது மூன்றரை வருட காலம் நீடிக்கும். (வெளி 12 : 6, 14) மிருகத்தின் (அந்திக்கிறிஸ்துவின்) முத்திரையைத் தரித்துக் கொள்ள மறுக்கிறவர்களால் வாங்கவும், விற்கவும் முடியாது. அதன் சொருபத்தை வணங்காதவர்கள் கொலை செய்யப்படுவார்கள்.(வெளி 13 : 15 - 17) இச்சமயத்தில் சபையில் கைவிடப்பட்டவர்களின் மத்தியில் அநேகர் இரத்தசாட்சிகளாக மரிப்பார்கள். ஏனென்றால் அக்காலத்தில் இரத்தசாட்சிகளாக மரிப்பது மாத்திரமே, அவர்கள் இரட்சிப்பிற்கு ஒரே வழியாக இருக்கும்.

அந்திக் கிறிஸ்து யூதரோடு எப்படியும் ஒரு கள்ளத்தனமான உடன்படிக்கைப் பண்ணி, எருசலேமில் அவர்களுடைய தேவாலயம் திரும்பக் கட்டப்பட அவர்களுக்கு உதவி செய்வான் (தானி 9 : 25) யூதர்கள், இவன்தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று எண்ணுவார்கள். முதல் மூன்றரை வருடத்தின் முடிவில் அந்திகிறிஸ்து தேவாலயத்தில் நுழைந்து தேவன் போல் உட்கார்ந்து தன்னைத் தேவனென்று காண்பிப்பான். (2 தெச 2 : 4) ) பின்பு அவன் தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவான். (தானி 9 : 27, மத் 24 : 15) இதனால் யூதர்கள் தங்கள் உடன்படிக்கையை முறித்துப் போட்டு அவனை எதிர்ப்பார்கள்.

அப்போது இயேசு வானத்தின் மேகங்கள் மேல் தோன்றி இந்த உபத்திரவகாலத்தின் இரத்த சாட்சிகளை சேர்க்கும்படி தமது தூதர்களை அனுப்புவார். இது உபத்திரவகால நியமத்தின் முடிவைக் குறிக்கிறது. (மத் 24 : 29 - 31)

மகா உபத்திரவ கால நியமம்: (வெளி 7:1-8: அதி 8, அதி 9, அதி 10 , 11:1-14, அதி16)

மகா உபத்திரவ காலத்தின் ஆரம்பத்தில் உபத்திரவ கால இரத்தச் சாட்சிகளைச் சேர்க்கும்படியாக மனுஷகுமாரன் மேகங்கள் மேல் வருவதைக் யூதர்கள் கண்டு, அவர்தான் தாங்கள் குத்தினவர் என்று அடையாளங்கண்டு சகல கோத்திரத்தாரும் புலம்புவார்கள். (மத்24:30). அவர் அவர்கள்மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார். (சக 12 : 10) இக்காலத்தில் யூதர்கள் தாங்கள் அந்திக் கிறிஸ்துவோடு செய்திருந்த உடன்படிக்கையை முறித்துப் போடுவதால் யூதர்களை அவன் உபத்திரவப்படுத்த ஆரம்பிப்பான்.

ஏனோக்கும், எலியாவும் இக்காலத்தில் வந்து யூதர்களுக்கு ஊழியஞ்செய்து, அந்திக் கிறிஸ்துவினால் கொல்லப்பட்டு, தேவனால் உயிர்ப்பிக்கப்பட்டு, பரலோகத்திற்கு ஏறிச் செல்வார்கள். (வெளி 11 : 3 - 12) தேவன் 1,44,000 யூதர்களைப் பாதுகாப்பதற்காக முத்திரை போடுவார். (வெளி 7 : 3 - 8) தேவகோபாக்கினை இந்த பூமியின் மீது ஊற்றப்படும். உலகமுண்டானது முதல் இதுவரைக்கும், சம்பவித்திராததும், மிகுந்த உபத்திரவம் அப்போது உண்டாகும். (மத் 24 : 21) மகா உபத்திரவ காலத்தின் முடிவில் கர்த்தராகிய இயேசு பகிரங்கமாக வருவார். (சக 14 : 4, 5 : யூதா 14, 15)

***************

வகுப்பு : 11

பாடம்-10

# கால நியமங்கள்

(பகுதி III)

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** ஆயிர வருட அரசாட்சியின் போது இப்பூமியின் ராஜ்யங்களுக்கு என்ன சம்பவிக்கும்?

ஆயிர வருட அரசாட்சியின் போது இப்பூமியின் ராஜ்யங்களெல்லாம் கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாக மாறும். (வெளி 11 : 15)

**2.** ஆயிர வருட அரசாட்சியில் யார் ராஜாதி ராஜாவாக அரசாட்சி செய்வார்? யார் பிரபுக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருப்பார்கள்?

ஆயிர வருட அரசாட்சியில் இயேசு ராஜாதி ராஜாவாகவும் முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள் (மணவாட்டி சபை, உபத்திரவ காலத்து இரத்தசாட்சிகள், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், பொதுவான இரத்தசாட்சிகள்) இந்த பூமியில் எங்கும் பிரபுக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருப்பார்கள். (சங்கீதம் 45 : 16, ஏசாயா 32 : 1, தானியேல் 7 : 21 - 27 ;வெளி. 1 : 6, 5 : 10. 20 : 4 - 6)

**3.** மனுஷன் இழந்து போன ஏதேனின் சீரை எப்போது திரும்பப் பெற்றுக் கொள்வான்? பூமியும் வானமும் எவ்வாறு ஏதேனின் சீரை திரும்ப பெற்றுக் கொள்ளும்?

மனுஷன் தான் ஏதேன் தோட்டத்தில் இழந்து போன ஆளுகையையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுவான். இந்த பூமியும் இந்த வானமும் புதுப்பிக்கப்பட்டு அவை ஏதேனின் சீரைத் திரும்பவும் பெற்றுக் கொள்ளும்.

**4.** ஆயிர வருட அரசாட்சியில் எருசலேமின் சிறப்பு என்ன?

ஆயிர வருட அரசாட்சியில் எருசலேம் தலைநகராகவும், பூமியின் மகிழ்ச்சியாகவும் விளங்கும். (மத்தேயு 5:35, ஏசாயா 62:7, எரேமியா 3:17, சகரியா 6:13)

சீயோனிலிருந்து வேதமும் எருசலேமில் இருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். (ஏசாயா 2 : 3, மீகா 4 : 2,).

**5.** ஆயிர வருட அரசாட்சி ஏன் நீதியுள்ள ராஜ்யம் என்று அழைக்கப்படும்?

ஆயிர வருட அரசாட்சியில் கர்த்தராகிய இயேசுவும் பரிசுத்தவான்களும் ஆட்சி செய்வதால் இந்த ராஜ்யத்தில் அநீதி காணப்படாது. எல்லா இடங்களிலும் நியாயமும், நீதியும் உண்டாயிருக்கும். (ஏசாயா11:4,5,எரேமியா23:5,6,; 33:15) பாவத்துக்குக் காரணனாகிய சாத்தான் இக்காலத்தில் கட்டப்பட்டு, ஆயிரம் வருடங்களுக்கு அகாதமான பாதாளத்தில் தள்ளி அடைக்கப்பட்டிருப்பான். எனவே இக்காலத்தில் பாவிகள் இருந்தாலும் கூட அவர்கள் பாவஞ் செய்ய தூண்டப்படாமல் இருப்பார்கள். எனவே ஆயிர வருட அரசாட்சி நீதியுள்ள ராஜ்யம் என்று அழைக்கப்படும்.

**6.** ஆயிர வருட அரசாட்சி சாபமில்லாத ராஜ்யம் என்பதை வசனத்துடன் விளக்குக.

மனுஷனுடைய பாவத்தின் நிமித்தமாக பூமியும் சர்வ சிருஷ்டியும் சாபத்திற்குட்பட்டு இப்போது தவித்துக் கொண்டிருக்கின்றன. ஆயிர வருட அரசாட்சியில் சாத்தான் கட்டப்பட்டு இருப்பதால் சகல சிருஷ்டியும் சாபத்தினின்று விடுதலை அடைந்து தாங்கள் பெற்றுக் கொள்ளும் மகிமையான சுயாதீனத்தில் களிகூரும். (ஏசாயா 55 : 12, 13, ரோமர் 8 : 19 - 21)

இவ்வாறாக ஆயிர வருட அரசாட்சி சாபமில்லாத இராஜ்யமாக இருக்கும்.

**7.** ஆயிர வருட அரசாட்சி செழிப்பான ராஜ்யம் என அழைக்கப்படக் காரணமென்ன?

ஆயிர வருட அரசாட்சியில் இப்போதுள்ள பசி, பட்டினி, தாகம், வேலையில்லாத் திண்டாட்டம், வியாதிகள் போன்றவை இராமல், எல்லாம் செழிப்பாக ஆரோக்கியமாக ஏராளமாக தாராளமாக இருக்கும். (ஏசாயா 33 : 24;அதி35) ஆகவே அது செழிப்புள்ள இராஜ்யம் என்று அழைக்கப்படும்.

8. ஆயிர வருட அரசாட்சியில் மனுஷரின் ஆயுசுநாட்கள் எவ்வளவு? சீதோஷ்ண நிலை எவ்வாறிருக்கும்?

விருட்சத்தின் நாட்களைப் போல மனுஷர் நீண்ட ஆயுசுள்ளவர்களாக வாழுவார்கள் (ஏசாயா 65 : 20 - 22). சீதோஷ்ண நிலை மனுஷனுடைய சுக வாழ்வுக்கு ஏற்றவாறு இருக்கும். (ஏசாயா 4 : 6)

9. ஆயிர வருட அரசாட்சி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்த ராஜ்யம் என்பதை வசனத்துடன் விளக்குக.

ஆயிர வருட அரசாட்சி காலத்தில் உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் கர்த்தராகிய இயேசுவை வணங்கி சேவிப்பார்கள். அவரைத் தொழுது கொள்ள எருசலேமுக்குப் போவார்கள். (ஏசாயா 11 : 9, ஆப: 2 : 14, சகரி. 14 : 16)

10. வேதத்தில் கூறப்பட்டிருக்கிற கடைசி யுத்தம் எது? அது யார் யார்க்கிடையில் நடைப்பெறும்?ர

வேதத்தில் கூறப்பட்டிருக்கிற கடைசி யுத்தம் கோகு மாகோகு யுத்தம் ஆகும். இந்த யுத்தத்தில் சாத்தான் பூமியெங்கும் உள்ளதான மனுஷரைத் தன்னோடு கூட்டிக் கொண்டு தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணுவான். (வெளி 20 : 7, 8)

11. கோகு மாகோகு யுத்தத்தின் விளைவு என்ன?

கோகு மாகோகு யுத்தத்தில் இயேசுவும் அவருடைய பரிசுத்தவான்களும் சாத்தானை தோற்கடிப்பார்கள். அவன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவான். (வெளி. 20 : 7, 8)

## II *<u>சுருக்கமான விடையளி</u>* : (5 Marks)

1. ஆயிர வருட அரசாட்சிக்கு கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்கள் யாவை? வசன ஆதாரம் தருக.

*1.* நீதியுள்ள ராஜ்யம் ( ஏசாயா 11 : 4, 5, எரேமியா 23 : 5, 6 ; 33 : 15)

*2.* சமாதான ராஜ்யம் (சகரியா 6 : 13, ஏசாயா 2 : 3, மீகா 4 : 3, சகரியா9 : 10, ஏசாயா 11 : 6, 7, 8 ; 65 : 25)

*3.* சாபமில்லாத ராஜ்யம் (ஏசாயா 55 : 12, 13 ரோமர் 8 : 19 - 21)

*4.* செழிப்புள்ள ராஜ்யம் (ஏசாயா 33 : 24;அதி 35)

*5.* ஜனங்கள் நீண்ட ஆயுசுள்ளவர்களாக வசிக்கும் ராஜ்யம். (ஏசாயா66:20-22,;4:6)

*6.* கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்த ராஜ்யம்.(ஏசாயா 11:9, ஆப.2:14, சகரியா14:16) என்று பல்வேறு பெயர்களால் ஆயிர வருட அரசாட்சி அழைக்கப்படுகிறது.

2. ஆயிர வருட அரசாட்சி எவ்வாறு சமாதான ராஜ்யமாக இருக்கும்?

ஆயிர வருட அரசாட்சியின் போது சமாதானத்தின் பிரபுவான இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக இருப்பதால் முழு உலகமும் சமாதானத்தினால் நிறைந்திருக்கும். (சகரியா 6 : 13)

*1.* மனுஷனுக்கும் மனுஷனுக்குமிடையே இருக்கும் சத்துருத்துவம் நீங்கிப் போகும். யுத்த ஆயுதங்களெல்லாம் விவசாய அபிவிருத்திக்கான ஆயுதங்களாக மாற்றப்படும் (ஏசாயா 2 : 4, மீகா 4 : 3, சகரியா 9 : 10)

*2.* மனுஷனுக்கும் மிருகத்துக்குமிடையேயுள்ள சத்துருத்துவம் நீங்கிப் போகும். (ஏசா. 11 : 8)

*3.* மிருகத்துக்கும் மிருகத்துக்குமிடையேயுள்ள சத்துருத்துவம் நீங்கிப் போகும். (ஏசாயா 11 : 6,7 ;65: 25) இவ்வாறாக ஆயிர வருட அரசாட்சி சமாதானமுள்ள ராஜ்யமாக இருக்கும்.

3. கோகு மாகோகு யுத்தம் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் எழுதுக.

ஆயிரம் வருடம் முடியும் போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாக்கப்படுவான். அவன் பூமியின் சகல தேசங்களையும் தன்னோடு கூட்டிக் கொண்டு தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணும்படியாகப் புறப்படுவான். இந்த யுத்தம் கோகு மாகோகு யுத்தம் என்று அழைக்கப்படுகிறது.

அதன் விளைவுகள்: இந்த யுத்தத்தில் கர்த்தராகிய இயேசுவும் அவருடைய பரிசுத்தவான்களும் சாத்தானைத் தோற்கடிப்பார்கள். அவன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவான். இதுவே கடைசி யுத்தமாகும். (வெளி 20 : 7,8)

4. பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத் தீர்ப்பு பற்றி குறிப்பு வரைக?

சாத்தான் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்ட பின்பு இந்த வானமும் பூமியும் ஒழிந்து போகும். தேவன் தம்முடைய சிங்காசனத்தில் வீற்றிருப்பார். அப்பொழுது மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் அவருக்கு முன்பாக வருவார்கள், புஸ்தகங்கள் திறக்கப்படும். தேவன் அவர்களை நியாயந்தீர்ப்பார். நீதிமான்கள் புதிய பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளும் படி செல்வார்கள். துன்மார்க்கர் அக்கினிக் கடலில் தள்ளப்படுவர்.. இதன் பின்பு நித்தியம் ஆரம்பமாகும். (வெளி 20 : 11 - 13)

## III *விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :* (15 Marks)

1. ஆயிர வருட அரசாட்சியின் தன்மைகள் யாவை ? வசன ஆதாரத்துடன் எழுது.

1. நீதியுள்ள ராஜ்யம்: கர்த்தராகிய இயேசுவும் பரிசுத்தவான்களும் ஆட்சி செய்வதால் இந்த ராஜ்யத்தில் அநீதி காணப்படாது. எல்லா இடங்களிலும் நியாயமும் நீதியும் உண்டாயிருக்கும் (ஏசாயா11:4,5;எரே.23:5,6,;33:15) பாவத்துக்குக் காரணனாகிய சாத்தான் இக்காலத்தில் கட்டப்பட்டு ஆயிரம் வருடங்களுக்குப் அகாதமான பாதாளத்தில் தள்ளி அடைக்கப் பட்டிருப்பான். எனவே, இக்காலத்தில் பாவிகள் இருந்தாலும் கூட அவர்கள் பாவஞ் செய்யத் தூண்டப்படாமல் இருப்பார்கள்.

2. சமாதான ராஜ்யம்: சமாதானத்தின் பிரபுவான இயேசு ராஜாதி ராஜாவாக இருப்பதால் முழு உலகமும் சமாதானத்தினால் நிறைந்திருக்கும்.(சகரியா 6: 13)

1. மனுஷனுக்கும் மனுஷனுக்குமிடையே இருக்கும் சத்துருத்துவம் நீங்கிப் போகும். யுத்த ஆயுதங்களெல்லாம் விவசாய அபிவிருத்திக்கான ஆயுதங்களாக மாற்றப்படும்(ஏசாயா 2 : 4, மீகா 4 : 3, சகரியா 9 : 10)

2. மனுஷனுக்கும் மிருகத்துக்குமிடையேயுள்ள சத்துருத்துவம் நீங்கிப் போகும் (ஏசா. 11 : 8)

3. மிருகத்துக்கும் மிருகத்துக்குமிடையேயுள்ள சத்துருத்துவம் நீங்கிப் போகும் (ஏசாயா 11 : 6,7 ; 65 : 25)

3. சாபம் இல்லாத ராஜ்யம்: மனுஷனுடைய பாவத்தின் நிமித்தமாக பூமியும் சர்வ சிருஷ்டியும் சாபத்திற்குட்பட்டு இப்போது தவித்துக் கொண்டிருக்கின்றன. ஆயிர வருட அரசாட்சியில் சாத்தான் கட்டப்பட்டிருப்பதால் சகல சிருஷ்டியும் சாபத்தினின்று விடுதலையடைந்து தாங்கள் பெற்றுக்கொள்ளும் மகிமையான சுயாதீனத்தில் களிகூரும். (ஏசாயா 55 : 12, 13 ரோமர் 8 : 19 - 21)

4. செழிப்புள்ள ராஜ்யம் : ஆயிர வருட அரசாட்சியில் இப்போதுள்ள பசி, பட்டினி, தாகம், வேலையில்லாத் திண்டாட்டம், வியாதிகள் போன்றவை இராமல், எல்லாம் செழிப்பாக ஆரோக்கியமாக ஏராளமாக தாராளமாக இருக்கும். (ஏசாயா33 : 24, அதி 35)

5. ஜனங்கள் நீண்ட ஆயுசுள்ளவர்களாக வசிக்கும் ராஜ்யம்: விருட்சத்தின் நாட்களைப் போல மனுஷர் நீண்ட ஆயுசுள்ளவர்களாக வாழுவார்கள். (ஏசா 65:20-22) சீதோஷ்ண நிலை மனுஷனுடைய சுக வாழ்வுக்கு ஏற்றவாறு இருக்கும் (ஏசாயா 4 : 6)

6. கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்த ராஜ்யம் :(ஏசா.11:9 ; ஆப. 2 : 14) உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் கர்த்தராகிய இயேசுவை வணங்கி சேவிப்பார்கள். அவரைத் தொழுதுக் கொள்ள எருசலேமுக்குப் போவார்கள்.(சகரியா 14 : 16) இவைகளே ஆயிர வருட அரசாட்சியின் முக்கிய தன்மைகளாகும்.

************

வகுப்பு : 11

பாடம்-11

# கால நியமங்கள்

(பகுதி IV)

**I** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** : (2 Marks)

**1.** நித்தியம் என்றால் என்ன?

நித்தியம் என்பது தேவனும், தேவஜனங்களும் நித்தியமாய் ஒருமித்து வாசஞ் செய்வார்கள். (2 பேதுரு 3 : 12, 13 □ வெளி 14 : 1 – 5 □ 21 : 1, 2) பிசாசும் அவனுடைய தூதர்களும் நித்திய ஆக்கினையை அடைவார்கள். (தானி. 12 : 2 □ மத். 25 : 41 □வெளி 20 : 10, 15)

**2.** நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்கள் யாவை ? வசன ஆதாரம் தருக.

1. புதிய பூமி (வெளி 21 : 24)
2. புதிய வானம் (வெளி 7 : 9 – 15)
3. புதிய எருசலேம் (வெளி 21 : 9, 10)
4. சீயோன் (வெளி 14 : 1 – 5)

**3.** புதிய பூமியை சுதந்தரிப்பவர்கள் யார்?

எல்லாக் கால நியமங்களுக்கும் உட்பட்டவர்களில் இரட்சிக்கப்பட்டவர்கள் புதிய பூமியை சுதந்தரிப்பார்கள். (வெளி 21 : 24)

**4.** புதிய வானத்தை யார் சுதந்தரிப்பார்கள்?

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், பொதுவான இரத்த சாட்சிகளும் உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகளும் புதிய வானத்தை சுதந்தரிப்பார்கள். (வெளி 7 : 9 – 15 □11 : 18, 19)

**5.** புதிய எருசலேமை யார் சுதந்தரிப்பார்கள் ?

புதிய எருசலேம் மணவாட்டி (வெளி 21 : 9, 10) அதாவது ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டு (வெளி 21 : 27) கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடைந்து (எபே 4 : 11 – 13) சிங்காசனத்துக்கு எடுத்துக் கொள்ளபட்டவர்கள் (வெளி 12 : 1 – 5) புதிய எருசலேமை சுதந்தரிப்பார்கள்.

**6.** யார் சீயோனை சுதந்தரிப்பார்கள் ?

தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்ட பிரதிஷ்டையும், தியாகமும், உண்மையும் உள்ள ஊழியர்கள் சீயோனை சுதந்தரிப்பார்கள் (மத்தேயு 19 : 12 வெளி 14 : 1 – 5)

**7.** அக்கினிக் கடலுக்கு கொடுக்கப்பட்டுள்ள மறுபெயர் என்ன? அதினுடைய தன்மைகள் யாவை?

அக்கினிக் கடலுக்கு கொடுக்கப்பட்டுள்ள மறுபெயர் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடல் ஆகும்.(வெளி 21:8)

அக்கினிக் கடலின் தன்மைகளாவன :

1. அங்கே அக்கினியும் கந்தகமும் எரிந்து கொண்டிருக்கும்.
2. அக்கினி அவியாமலும் அவர்கள் புழு சாவாமலும் இருக்கும்.(வெளி19:20;20:10)

**8.** சாத்தான் எப்பொழுது அக்கினி கடலில் தள்ளப்படுவான்?

சாத்தான் கோகு மாகோகு யுத்தத்தின் முடிவிலே பிடிக்கப்பட்டு வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்னதாகவே அக்கினிக்கடலில் தள்ளப்படுவான். (வெளி20:10)

**9.** நீதிமான்கள் மரித்தவுடன் எங்குக் கொண்டு செல்லபடுகிறார்கள்?.

நீதிமான்கள் மரித்தவுடன் இளைப்பாறுதல் இடத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். (ஏசா 57 : 2 ; தானி. 12 : 13 ; லூக். 16 : 23)

**II** ***சுருக்கமான விடையளி :*** (5 Marks)

**1.** அக்கினிக் கடலில் பங்கு அடைபவர்கள் பூமியில் எந்தெந்த தாழ்விடங்களிலிருந்து வருவார்கள்? வசன ஆதாரம் தருக.

1. அகாதமான பாதாளம் (ஏசா 14 : 12 - 15)
2. பாதாளம் (லூக். 16 : 23, 24)
3. புறம்பான இருள் (மத். 22 : 13) என்னும் மூன்று இடங்களிலிருந்து வருவார்கள்.

**2.** அக்கினி கடலில் யார் தள்ளப்பட்டு சதா காலமும் வாதிக்கப்படுவார்கள்?

*1.* அந்திக் கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் அர்மகெதோன் யுத்தத்தின் முடிவில் (ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்னதாக) உயிரோடே அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள்.

*2.* அதன்பின்னர் மனுஷரை மோசம் போக்கின பிசாசானவன் கோகு மாகோகு யுத்தத்தின் முடிவில் (வெள்ளைச் சிங்காசன நியாயதீர்ப்புக்கு முன்னதாக) அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான்.

*3.* கடைசியாக வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பின்னர் பாவிகளும் பின்மாற்றக்காரரும் (பாதாளம், புறம்பான இருள்) அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். இவ்வாறாக இக்கூட்டத்தார் அனைவரும் அக்கினிக் கடலில் தள்ளப்பட்டு சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள்

**3.** அகாதமான பாதாளம் பற்றி குறிப்பு வரைக.

விழுந்துபோன லூசிபராகிய அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியும், விழுந்துபோன அபிஷேகம் பண்ணப்பட்ட கேருபும், சாத்தானின் சேனையும் இங்கு இருப்பார்கள். சாத்தான் ஆயிர வருட அரசாட்சியின் போது கட்டப்பட்டு அந்த ஆயிரம் வருடங்கள் முடியும் வரை அகாதமான பாதாளக் குழியில் தள்ளப்படுவான். (வெளி. 20 : 2 ஏசாயா 14 : 12 - 15, வெளி 9 : 1 - 11)

**4.** பாதாளம் பற்றி குறிப்பு வரைக.

*1.* துன்மார்க்கரும் தேவனை மறக்கிறவர்களான பாவிகளைனவரும் (சங் 9 : 17) (பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் துன்மார்க்கர் என்னும் பட்டியலுக்குட்படுவர்). (வெளி 21 : 8)

*2.* லூக். 16 : 23, 24 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஐசுவரியவான் ஜீவித்தது போல, இவ்வுலகத்தின் சிற்றின்பங்களை அனுபவிப்பதற்காக மாத்திரம் ஜீவித்தவர்கள் அனைவரும் பாதாளத்தில் தள்ளப்படுவார்கள்.

**5.** பாவிகளுக்கும் பின்மாற்றக்காரரும் மரித்தவுடன் சம்பவிப்பது என்ன?அவர்கள் எப்பொழுது அக்கினி கடலில் பங்கடைவார்கள்?

*1.* பாவிகள் மரித்தவுடன் பாதாளத்திற்கும் (லூக். 16 : 23, 24) பின்மாற்றக்காரர் புறம்பான இருளுக்கும் கொண்டுப் போகப்பட்டு வேதனை அனுபவிப்பார்கள்.

*2.* வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பின் போது பாதாளமும், (Grave) புறம்பான இருளும் தங்களிலுள்ள பாவிகளையும் பின்மாற்றக்காரர்களையும், வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக ஒப்புவிக்கும். (வெளி 20 : 13)

*3.* அவர்கள் வெள்ளை சிங்காசன நியாயதீர்ப்பில் மனுஷகுமாரனுடைய இடது பக்கத்தில் நிறுத்தப்படுவார்கள். இவர்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. அவர்களை வெள்ளாடுகள் என்று வேதம் அழைக்கிறது.

*4.* இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயந்தீர்க்கப்பட்டு நித்திய ஆக்கினையை அடைவார்கள் - அவர்கள் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள்.

**III** ***விரிவான விடையளி :*** (10 Marks)

**1.** நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்களை பற்றி எழுதுக.

<u>நீதிமான்களின் நித்திய வாசஸ்தலங்கள்</u>

1. புதிய பூமி
2. புதிய வானம்
3. புதிய எருசலேம்
4. சீயோன் என்று நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

<u>புதிய பூமி</u>: இங்கு எல்லாக் கால நியமங்களுக்கும் உட்பட்டவர்களில் இரட்சிக்கப்பட்டவர்கள் புதிய பூமியை சுதந்தரிப்பார்கள் . (வெளி 21 : 24)

புதிய வானம் : பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், பொதுவான இரத்த சாட்சிகளும் உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகளும் புதிய வானத்தை சுதந்தரிப்பார்கள்.(வெளி 7 : 9 - 15 ; 11 : 18, 19)

புதிய எருசலேம் : இது மணவாட்டி இருக்குமிடமாகும் (வெளி 21 : 9, 10) அதாவது ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்பட்டு (வெளி 21 : 27) கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடைந்து (எபே 4 : 11 - 13) சிங்காசனத்துக்கு எடுத்துக் கொள்ளபட்டவர்கள் (வெளி 12 : 1 - 5) புதிய எருசலேமை சுதந்தரிப்பார்கள்.

*சீயோன்*: புதிய எருசலேமிலுள்ள உன்னத இடம் - தேவன் வாசஞ் செய்யுமிடம் (சங். 132 : 13, 14) தேவனுடைய இராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்ட பிரதிஷ்டையும், தியாகமும், உண்மையும் உள்ள ஊழியர்கள் சீயோனை சுதந்தரிப்பார்கள் (எசாயா56: 4, 5 மத்தேயு 19 : 12 வெளி 14 : 1 - 5)

**2.** புறம்பான இருள் பற்றி வசன ஆதாரத்துடன் எழுது.

புறம்பான இருள் அழுகையும் பற்கடிப்பும் உள்ள இடமாகும். பின்வரும் கூட்டத்தார் இதில் பங்கடைவார்கள்.

1. தங்களுடைய ஆதிமேன்மையை காத்துக் கொள்ளாத தூதர்கள் (யூதா 6)
2. கர்த்தராகிய இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் என்று விசுவாசியாத யூதர்கள் (இராஜ்யத்தின் புத்திரர்) (மத்தேயு 8 : 12)
3. கலியாண வஸ்திரம் தரித்திராதவர்கள் - தங்கள் சுயநீதியினாலும் சன்மார்க்கமான கிரியைகளினாலும் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப் பிரயாசப்படுபவர்கள். (மத். 22 : 2, 11 - 13)
4. பொல்லாத ஊழியக்காரர் (மத். 24 : 48 - 51)
5. தங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் மாய்மாலமுள்ளவர்கள் (மத். 24 : 51)
6. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளை பிரயோஜனப்படுத்தாத பொல்லாதவர்களும், சோம்பற்காரரும் பிரயோஜனமற்றவர்களுமான ஊழியக்காரர். (மத் 25 : 15, 24 - 30)
7. ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும் பின் மறுதலித்துப் போன பின்மாற்றக்காரர். (எபி 6 : 4 -8) இவர்களைக் குறித்து அப். யூதா, மாம்சத்தை அசுசிப்படுத்தும் சொப்பனக்காரர், மகத்துவங்களை தூஷிக்கிறவர்கள், காயீன், பிலேயாம் என்பவர்களின் வழியில் நடந்து கோரா எதிர்த்து பேசின பாவத்துக்குள்ளானவர்கள். அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக் கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறவர்கள். முறுமுறுக்கிறவர்கள், முறையிடுகிறவர்கள், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்கள் இறுமாப்பானவைகளைப் பேசி தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்கிறவர்கள் என்று குறிப்பிடுகிறார். (யூதா8,13,16)

பின்மாற்றக்காரர் மரித்தவுடன் புறம்பான இருளில் வேதனை அனுபவிக்கிறார்கள். வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்புக்கு பின்னர் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள்.

**IV** *விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :* (15 Marks)

**1.** நித்தியத்தில் பிசாசும் அவனுடைய தூதர்களும் பிசாசின் பிள்ளைகளும் வாசஞ் செய்யுமிடம் பற்றி எழுது.

அக்கினிக்கடல்:

இது பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இடமாகும். (மத். 25 : 41) அக்கினிக்கடலானது, அக்கினியினாலும் கந்தகத்தினாலும் எரிகிறது. இது இரண்டாம் மரணம் எனவும் அழைக்கப்படுகிறது (வெளி. 21 : 8) அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும் (மாற்கு 9 : 44 - 48) அந்திக்கிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசி, சாத்தான் ஆகியோர் இந்த அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள். அவர்கள் சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள் (வெளி.19 : 20 '. 20 : 10)

அக்கினிக் கடலில் பங்கடைபவர்கள், பூமியின் தாழ்விடங்களாகிய

a. அகாதமான பாதாளம் (ஏசா 14 : 12 - 15 )

b. பாதாளம் (லூக். 16 : 23, 24)

c. புறம்பான இருள் (மத். 22: 13) என்னும் மூன்று இடங்களிலிருந்து வருவார்கள்.

a. அகாதமான பாதாளம்: (ஏசாயா14:12-15 வெளி 9:1-11  20:1-3) விழுந்துபோன லூசிபராகிய அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியும், விழுந்துபோன அபிஷேகம் பண்ணப்பட்ட கேருபும், சாத்தானின் சேனையும் இங்கு இருப்பார்கள். சாத்தான் ஆயிர

வருட அரசாட்சியின் போது கட்டப்பட்டு அந்த ஆயிரம் வருடங்கள் முடியும் வரை அகாதமான பாதாளக் குழியில் தள்ளப்படுவான். (வெளி. 20:2,3)

b. பாதாளம் (நரகம்)

1. துன்மார்க்கரும் தேவனை மறக்கிறவர்களான பாவிகனைவரும் (சங் 9 : 17) (பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் துன்மார்க்கர் என்னும் பட்டியலுக்குட்படுவர்.) (வெளி21:8)

2. லூக். 16 : 23, 24 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஐசுவரியவான் ஜீவித்தது போல, இவ்வுலகத்தின் சிற்றின்பங்களை அனுபவிப்பதற்காக மாத்திரம் ஜீவித்தவர்கள் அனைவரும் பாதாளத்தில் தள்ளப்படுவார்கள்.

c. புறம்பான இருள் (மரணம்)

புறம்பான இருள் அழுகையும் பற்கடிப்பும் உள்ள இடமாகும். பின்வரும் கூட்டத்தார் இதில் பங்கடைவார்கள்.

1. தங்களுடைய ஆதிமேன்மையை காத்துக் கொள்ளாத தூதர்கள் (யூதா 6)
2. கர்த்தராகிய இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் என்று விசுவாசியாத யூதர்கள் (இராஜ்யத்தின் புத்திரர்) (மத்தேயு 8 : 12)
3. கலியாண வஸ்திரம் தரித்திராதவர்கள் - தங்கள் சுயநீதியினாலும் சன்மார்க்கமான கிரியைகளினாலும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப் பிரயாசப்படுபவர்கள். (மத். 22 : 2, 11 - 13)
4. பொல்லாத ஊழியக்காரர் (மத். 24 : 48 - 51)
5. தங்கள் ஜீவியத்திலும் ஊழியத்திலும் மாய்மாலமுள்ளவர்கள் (மத். 24 : 51)
6. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளை பிரயோஜனப்படுத்தாத பொல்லாதவர்களும், சோம்பற்காரரும் பிரயோஜனமற்றவர்களுமான ஊழியக்காரர். (மத் 25 : 15, 24 - 30)
7. ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும் பின் மறுதலித்துப் போன பின்மாற்றக்காரர் (எபி 6 : 4 -8) இதில் பங்கடைவார்கள்.

பாவிகளும் பின்மாற்றக்காரரும் மரித்தவுடன் முறையே பாதாளம், புறம்பான இருள் ஆகிய இடங்களில் வேதனை அனுபவிக்கிறார்கள். வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பின்னர் இவர்கள் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவர். மரணமும் (புறம்பான இருள் ) பாதாளமும் (grave) தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயந்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் (பின்மாற்றக்காரரும், பாவிகளும்) அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இவ்விதமாக,

1. அந்திக் கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் அர்மகெதோன் யுத்தத்தின் முடிவில் (ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்னதாக) உயிரோடே அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள்.
2. அதன்பின்னர் மனுஷரை மோசம் போக்கின பிசாசானவன் கோகு மாகோகு யுத்தத்தின் முடிவில் (வெள்ளைச் சிங்காசன நியாயதீர்ப்புக்கு முன்னதாக) அக்கினிக் கடலிலே தள்ளப்படுவான்.
3. கடைசியாக வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பின்னர் பாவிகளும் பின்மாற்றக்காரரும் (பாதாளம், புறம்பான இருள்) அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள்.

************

வகுப்பு : 11

பாடம்-12

# பழைய ஏற்பாட்டின் ஊழியம்

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து கானான் வரை செய்த பிரயாணத்தை எத்தனை பகுதிகளாக பிரிக்கலாம்?

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து கானான் வரை செய்த பிரயாணத்தை இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம்.

அவையாவன :

*i.* இஸ்ரவேலர் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டது முதல் சீனாய் மலை அடிவாரம் வரை செய்த பிரயாணம்.

*ii.* சீனாய் மலை அடிவாரத்திலிருந்து கானான் வரை செய்த பிரயாணம். (பாடத்திட்டம்)

**2.** பழைய ஏற்பாட்டின் ஊழியத்தை செய்யும்படி எத்தனை பிரிவினரை தேவன் ஏற்படுத்தினார்? அவர்கள் யார் ? அவர்களின் தலைவன் யார்?.

பழைய ஏற்பாட்டின் ஊழியத்தை செய்யும்படி மூன்று பிரிவினரை தேவன் ஏற்படுத்தினார்.

அவர்கள் : 1. பிரதான ஆசாரியன் 2. ஆசாரியர் 3. லேவியர்.

அவர்களின் தலைவன் : பிரதான ஆசாரியன் (பாடத்திட்டம்)

**3.** முதலாவது பிரதான ஆசாரியன் யார்? ஆசாரியர்கள் யாருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்?

முதலாவது பிரதான ஆசாரியன் - ஆரோன்.

ஆசாரியர்கள் - ஆரோனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

**4.** பிரதான ஆசாரியனாகிய ஆரோன் எந்த வம்சத்தையும் கோத்திரத்தையும் சேர்ந்தவன்?

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் கோகாத் வம்சத்தையும் லேவி கோத்திரத்தையும் சேர்ந்தவன்.

**5.** தமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படி கர்த்தர் யாரை தெரிந்து கொண்டார்?

லேவி கோத்திரத்திலுள்ள கோகாத்தியர் வம்சத்தை சேர்ந்த ஆரோனையும், அவனுடைய குமாரரையும் ஆசாரிய ஊழியம் செய்யும்படி கர்த்தர் தெரிந்து கொண்டார். (1 நாளா 6 : 1 - 3)

**6.** பிரதான ஆசாரியன் எப்பொழுது யாருக்காக மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பான்?

பிரதான ஆசாரியன் வருஷத்தில் ஒருநாள் ஏழாம் மாதம் பத்தாம் தேதியில் தனக்காகவும் ஆசாரியருக்காகவும் சபையின் சகல ஜனங்களுக்காகவும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து பாவ நிவிர்த்தி செய்வான் (லேவி 16 : 29 - 34)

**7.** கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேறான யாவற்றையும் எப்போது தனக்கென்று தெரிந்தெடுத்தார்?

கர்த்தர் எகிப்து தேசத்தில் முதற்பேறான யாவையும் சங்கரித்த நாளில், இஸ்ரலேலில் மனிதன் முதல் மிருக ஜீவன் மட்டுமுள்ள முதற்பேறான யாவையும் தனக்கென்று தெரிந்தெடுத்தார். (எண். 3 : 13)

**8.** லேவியரின் சுதந்திரம் யார்?

1, தேவனாகிய கர்த்தரே அவர்களுடைய சுதந்திரம் (உபா 10 : 9)

2. கர்த்தர் இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசம பாகத்தை அவர்களுக்கு சுதந்தரமாக கொடுத்தார். (எண். 18 : 9)

**9.** கர்த்தர் லேவியரை யாருக்கு பதிலாகத் தெரிந்தெடுத்தார்? அவர்கள் யாருக்கு தத்தமாக கொடுக்கப்பட்டார்கள்?

இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேறான அனைவருக்கும் பதிலாக கர்த்தர் லேவியரைத் தெரிந்தெடுத்தா. (எண்.3 : 45)

லேவியர், ஆரோனுக்கும், அவன் குமாரருக்கும் தத்தமாய்க் கொடுக்கப்பட்டார்கள். (எண். 3 : 9 ; 18 : 6)

**10.** லேவியரின் மூன்று பிரிவுகள் யாவை?

லேவியரின், கோகாத்தியர், கெர்சோனியர், மெராரியர் என்னும் மூன்று குமாரர் இருந்தனர் (1 நாளா 6 : 1) அவர்கள் தங்கள் வம்சத்தின்படியே மூன்று பிரிவுகளாக கர்த்தருக்கு ஊழியம் செய்து வந்தனர்.

**11.** ஆசரிப்புக்கூடாரத்தில் கோகாத்தியரின் சுமக்க வேண்டிய ஊழியம் என்ன? புதிய ஏற்பாட்டு ஊழியத்தில் இவர்கள் யாருக்கு அடையாளமாயிருக்கிறார்கள்?

கோகாத்தியர் ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்தமான பொருட்களைத் தங்கள் தோள்மேல் சுமந்தார்கள். (எண். 4 : 1 - 4 □7 : 9)

இவர்கள் புதிய ஏற்பாட்டில், ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஊற்றுகிற போதகர்களுக்கு அடையாளமாயிருக்கிறார்கள்.

**12.** ஆசரிப்புக் கூடாரத்தில் கெர்சோனியர் சுமக்க வேண்டிய ஊழியம் என்ன? புதிய ஏற்பாட்டு ஊழியத்தில் இவர்கள் யாருக்கு அடையாளமாயிருக்கிறார்கள்?

கெர்சோனியர் தொங்குதிரைகளையும் மூடுதிரைகளையும், கயிறுகளையும் சுமக்கிறவர்கள் (எண். 4 : 24 - 26) இவர்கள் அவற்றை நான்கு மாடுகளால் இழுக்கப்பட்ட இரண்டு வண்டில்களில் வைத்து சுமந்தார்கள்.

கெர்சோனியர் புதிய ஏற்பாட்டில், தங்கள் ஜெபத்தினால் ஊழியஞ் செய்யும் 'தீர்க்கதரிசிகளுக்கு' அடையாளமாயிருக்கிறார்கள்.

**13.** ஆசரிப்புக் கூடாரத்தில் மெராரியர் சுமக்க வேண்டிய ஊழியம் என்ன? புதிய ஏற்பாட்டு ஊழியத்தில் இவர்கள் யாருக்கு அடையாளமாயிருக்கிறார்கள் ?

மெராரியர் ஆசரிப்புக் கூடாரத்தின் பலகைகளையும் தாழ்ப்பாள்களையும், தூண்களயைும், பாதங்களையும் மூளைகளையும் சுமந்தனர். (எண் 4:31-33) மெராரியர், புதிய ஏற்பாட்டில் சுவிசேஷகர்களுக்கு நிழலாட்டமாய் இருக்கிறார்கள்.

**14.** வனாந்தரத்தில் இஸ்ரவேலர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பிரயாணமாய் போகும்போதெல்லாம் தாங்கள் தங்குகிற இடத்தில் ஆசரிப்புக் கூடாரத்தை எவ்வாறு நிறுவினார்கள்?

இஸ்ரவேலரின் பிரயாணத்தில் கெர்சோனியரும் மெராரியரும் முன் சென்று கூடாரத்தை நிறுவினார்கள். பின்பு தங்கள் தோள்களின்மேல் அதன் பணிமுட்டுகளைச் சுமந்து கொண்டு வந்து கோகாத்தியர் அவைகளை ஆரோனிடத்தில் ஒப்படைத்தனர். ஆரோனும் அவனுடைய குமாரரும் ஆராதனை முறைமைகளுக்கு ஏற்ற விதமாய் அவைகளை நிறுவினார்கள். (பாடத்திட்டம்)

**15.** பிரதான ஆசாரியன், ஆசாரியர்கள், லேவியர் - இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் எந்தெந்த இடத்தில் ஊழியஞ் செய்தனர்?

லேவியர் - வெளிப்பிரகாரத்திலும்

ஆசாரியர்கள் - பரிசுத்த ஸ்தலத்திலும்

பிரதான ஆசாரியன் - மகா பரிசுத்த ஸ்தலம் , பரிசுத்த ஸ்தலம், பிரகாரம் ஆகிய மூன்று இடங்களிலும் ஊழியஞ் செய்தனர்.

**II** *சுருக்கமான விடையளி* : (5 Marks)

**1.** இஸ்ரவேலரின் பிரயாணத்தின் போது நிறைவேற்றப்பட்ட இரண்டு விதமான ஊழியங்கள் யாவை?.

இஸ்ரவேலரின் பிரயாணத்தின் போது நிறைவேற்றப்பட்ட இரண்டு விதமான ஊழியங்களாவன :

*1.* இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து செங்கடலைக் கடக்கப்பண்ணி சீனாய் மலை அடிவாரம் வரை கொண்டு வந்த ஊழியம் (யாத். 12 : 40, 41 □19 : 1, 2) இது மோசேயினாலும் ஆரோனாலும் செய்யப்பட்ட விடுதலையின் ஊழியமாகும்.

*2.* ஜனங்களைக் கானானுக்கு வழிநடத்தும்படியாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தில் நிறைவேற்றப்பட்டு வந்த ஆரோனுடைய முறைமைக்குட்பட்ட ஊழியம் (எண். 10 : 11 - 13 □யோசுவா 4 : 11). இது பிரதிஷ்டையுடன் செய்யப்பட்ட அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியமாகும்.

**2.** பிரதான ஆசாரியனின் தகுதிகள் என்ன?

பிரதான ஆசாரியன்,

1. விருத்தசேதனம் பெற்ற இஸ்ரவேலனாகவும்
2. கானான் தேசத்தில் எவ்வித பங்கும் சுதந்தரமும் இல்லாத லேவியனாகவும்
3. அபிஷேகம் பண்ணபட்டவனாகவும்
4. பரிசுத்தமாக்கப்பட்டவனாகவும்
5. பிரித்தெடுக்கப்பட்டவனாயுமிருக்கவேண்டும்.

(எண்.18:20 ; லேவி 8:6-12 ; யாத்.40:12-16)

**3.** இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேறான அனைவருக்கும் பதிலாக கர்த்தர் யாரை தெரிந்தெடுத்தார்? ஏன்?.

1. இஸ்ரவேலரின் முதற்பேறானவர்களுக்கு பதிலாக கர்த்தர் லேவியரை தெரிந்தெடுத்தார். (எண். 3 : 45)
2. இஸ்ரவேலர் பொன் கன்றுக்குட்டியை செய்து வணங்கி கர்த்தருக்கு கோபமூட்டினார்கள். அப்பொழுது மோசே கர்த்தருடைய பட்சத்தில் இருப்பவன் யார் ? (யாத் 32 : 27) என்று கேட்ட பொழுது லேவியின் புத்திரர் யாவரும் கர்த்தருடைய பட்சத்தில் நின்றார்கள்.
3. அவர்கள் கர்த்தருக்கென்று வைராக்கியத்துடன் மோசேக்குக் கீழ்படிந்து பொன் கன்று குட்டியாகிய விக்கிரகத்தை வணங்கிய பாவத்தில், யார் யாருடைய கைமுந்தி இருந்ததோ, அவர்களை தன்னுடைய சகோதரன் என்றோ, சிநேகிதன் என்றோ, அயலான் என்றோ பாராமல் கொன்று போட்டார்கள்.
4. இவ்வாறாக அவர்கள் கர்த்தருடைய நாமத்திற்கென்று வைராக்கியம் காண்பித்தபடியால் கர்த்தர் அவர்களை சகல இஸ்ரவேலரின் முதற்பேரானவர்களுக்கு பதிலாக தெரிந்தெடுத்தார். (யாத்32:29 ;எண். 3 : 12)

**4.** லேவியன் சாதாரண இஸ்ரவேலரைக் காட்டிலும் தேவனுடைய பார்வையில் விலையேற பெற்றவன் என்பதை நிரூபி?

*i.* சாதாரணமான ஒரு இஸ்ரவேலன் தன் பாவ நிவர்த்திக்காக அரை சேக்கல் செலுத்த வேண்டியதாயிருந்தது. (யாத் 30 : 15)

*ii.* இஸ்ரவேல் புத்திரரின் முதற்பேறான அனைவருக்கும் பதிலாக லேவியர் பிரித்தெடுக்கப்பட்டனர்.

*iii.* லேவியரின் தொகைக்கு அதிகமாயிருந்த 273 இஸ்ரவேலரின் முதல் பேறானவர்கள் தங்கள் மீட்பின் கிரயமாக 5 சேக்கல் செலுத்த வேண்டியதாயிருந்தது. (எண். 3 : 46, 47)

*iv.* இவ்வாறாக லேவியரை தேவன் பெலத்திலும், உத்திரவாதத்திலும் ஒரு மேலான நிலைக்கு உயர்த்தினார்.

**5.** பழைய ஏற்பாட்டு ஊழியம் எவ்விதம் புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கு நிழலாயிருக்கிறது?

பழைய ஏற்பாட்டு ஊழியம், புதிய ஏற்பாட்டு ஊழியத்திற்கு நிழலாட்டமாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாக இருந்தது. (எபி. 10 : 1).

| பழைய ஏற்பாடு ஊழியம் | புதிய ஏற்பாடு ஊழியம் |
|---|---|
| 1. பிரதான ஆசாரியன் மோசே. | 1. கிறிஸ்துவுக்கு நிழல்.(எபி. 9 : 11) (எபி. 10 : 28, 29). |
| 2. பலிகளும் , காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள், இவற்றின் இரத்தம். | 2. இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளம். (எபி. 9 : 10 - 14) |
| 3. பூமிக்குரிய கூடாரம் | 3. பரலோகத்திற்கு நிழலாயிருந்தது. (எபி. 8 : 1, 2) |
| 4. போஜனங்கள் , பானங்கள், கழுவுதல், வஸ்திரங்கள், சடங்காச்சாரங்கள் | 4. புதிய ஏற்பாட்டின் உண்மையான ஊழியத்திற்கு நிழலாயிருந்தன |

அதனாலேயே, ‘இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது’ என்று எபிரெயர் 8 : 5ல் நாம் வாசிக்கிறோம்.

**6.** லேவியரின் மூன்று பிரிவுகள் பற்றி எழுது.

லேவியர், கோகாத்தியர், கெர்சோனியர், மெராரியர் என்னும் மூன்று பிரிவினராயிருந்தனர்.

1. <u>கோகாத்தியர்</u>: கோகாத்தியர் ஆசரிப்புக் கூடாரத்தின் மகா பரிசுத்தமான பொருட்களைத் தங்கள் தோள்மேல் சுமந்தார்கள் (எண் 4 : 1-4 ; 7 : 9) இவர்கள் புதிய ஏற்பாட்டில், ஊழியத்தில் தங்கள் ஜீவனை ஊற்றுகிற 'போதகர்களுக்கு' அடையாளமாயிருக்கிறார்கள்.

2. <u>கெர்சோனியர்</u>: தொங்குதிரைகளையும் மூடுதிரைகளையும், கயிறுகளையும் <u>சுமக்கிறவர்கள்</u> (எண். 4 : 24 - 26) இவர்கள் அவற்றை நான்கு மாடுகளால் இழுக்கப்பட்ட இரண்டு வண்டில்களில் வைத்து சுமந்தார்கள். கெர்சோனியர் புதிய ஏற்பாட்டில், தங்கள் ஜெபத்தினால் ஊழியஞ் செய்யும் 'தீர்க்கதரிசிகளுக்கு' அடையாளமாயிருக்கிறார்கள்.

3. <u>மெராரியர்</u>: மெராரியர் ஆசரிப்புக் கூடாரத்தின் பலகைகளையும் <u>தாழ்ப்பாள்களையும்</u>, தூண்களையும், பாதங்களையும் மூளைகளையும் சுமந்தனர். (எண். 4 : 31 - 33) மெராரியர், புதிய ஏற்பாட்டில் சுவிசேஷகர்களுக்கு நிழலாட்டமாய் இருக்கிறார்கள்.

4. இஸ்ரவேலரின் பிரயாணத்தில் கெர்சோனியரும் மெராரியரும் முன் சென்று கூடாரத்தை நிறுவினார்கள்.

5. பின்பு கோகாத்தியர் தங்கள் தோள்களின்மேல் அதன் பணிமுட்டுகளைச் சுமந்து கொண்டு வந்த கோகாத்தியர் அவைகளை ஆரோனிடத்தில் ஒப்படைத்தனர்.

ஆரோனும் அவனுடைய குமாரரும் ஆராதனை முறைமைகளுக்கு ஏற்ற விதமாய் அவைகளை நிறுவினார்கள்.

## III *<u>விரிவான விடையளி :</u>* (10 Marks)

**1.** பிரதான ஆசாரியன் மற்றும் ஆசாரியர்களின் கடமைகள் என்ன?

<u>பிரதான ஆசாரியன், ஆசாரியர்கள் இவர்களது கடமைகள் :</u>

1. ஆசாரிப்புக் கூடாரத்தின் காவலைக் காத்தல் (எண். 18 : 3 - 5)
2. ஜனங்களுக்காகப் பலி செலுத்துதல் (லேவி. 7 : 8)
3. தூபங்காட்டுதல் (யாத். 30 : 7, 8)
4. குத்து விளக்கை எரிய வைத்தல் (யாத். 27 : 20, 21 ; லேவி. 24 : 2 - 4)
5. தீட்டுப்பட்டவர்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்தல் (லேவி. 14 : 19, 20)
6. நியாயப்பிரமாணத்தைப் போதித்தல் (உபா. 33 : 8 - 10)
7. சமூகத்தப்பங்களை அடுக்கி வைத்தல் (லேவி. 24 : 5 - 9)
8. உடன்படிக்கை பெட்டியைச் சுமத்தல் (யோசுவா 3 : 6)
9. பல சந்தப்பங்களிலும் எக்காளங்களை ஊதுதல் (எண். 10 : 1 - 10)

பிரதான ஆசாரியன் வருஷத்தில் ஒரு நாள், ஏழாம் மாதம், பத்தாம் தேதியிலே தனக்காகவும், ஆசாரியருக்காகவும் சபையின் சகல ஜனங்களுக்காகவும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்துப் பாவ நிவிர்த்தி செய்வான். (லேவி. 16 : 29 - 34)

*************

வகுப்பு : 11

பாடம்-13

# புதிய ஏற்பாட்டின் ஊழியம்

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** மகிமையின் ஊழியத்தை யார் செய்ய முடியும் ?

கர்த்தரால் அழைக்கப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, தங்களுக்குண்டான யாவற்றையும் விட்டுவிட்ட பிரதிஷ்டையுள்ள ஊழியர்களே இம்மகிமையான ஊழியத்தைச் செய்ய முடியும். (லுக்கா 14 : 26, 33 ; மாற்கு 10 : 28, 29 )

**2.** இஸ்ரவேல் புத்திரருக்கு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை கொண்டு வந்தது என்ன? இது புதிய ஏற்பாட்டில் எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?

மோசேயும் ஆரோனும் எகிப்து தேசத்தில் செய்த அற்புதங்களுடனும் அடையாளங்களுடனும் கூடிய ஊழியம், இஸ்ரவேல் புத்திரருக்கு அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொண்டு வந்தது. இது புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் முதலாவது அம்சமாகிய விடுதலையின் ஊழியத்திற்கு - இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்குவதும், சிறைப்பட்டவர்களை அதாவது பாவம், வியாதி, சாத்தான், மரண பயம் முதலிய அடிமைத்தனங்களில் இருக்கும் ஜனங்களை விடுதலையாக்குவதுமான ஊழியத்திற்கு நிழலாயிருக்கிறது. (லூக். 4 : 18 ; மாற்கு 3 : 14, 15)

**3.** இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடத்தப்பட்டு, சீனாய் மலை அடிவாரத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்பது புதிய ஏற்பாட்டில் எதை காட்டுகிறது?

இது ஆத்துமாக்கள் தாங்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு, பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டு, சபையுடன் சேர்க்கப்படுவதைக் காட்டுகிறது. (அப். 2 : 41, 47)

**4.** சீனாய் மலை அடிவாரத்தினின்று இஸ்ரவேல் புத்திரரைக் கானானுக்கு நடத்திய ஊழியம் எதற்கு நிழலாயிருக்கிறது?

இது புதிய ஏற்பாட்டின் ஊழியத்தின் இரண்டாம் அம்சமாகிய மகிமையின் ஊழியத்திற்கு - அதாவது பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற சபையைப் பூரணத்திற்கு நடத்துகிற ஊழியத்திற்கு நிழலாயிருக்கிறது. (2 கொரி 3 : 8 ; 4 : 1)

**5.** கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக நாம் என்ன செய்ய வேண்டும்?

கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக நமக்கு லாபமாயிருக்கிறவைகளை எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டு அவற்றைக் குப்பையுமாக எண்ண வேண்டும்.. (பிலி. 3 : 7 - 11)

**6.** சபையைப் பூரணத்திற்கு வழிநடத்தும்படியாக, சபைக்கு கிறிஸ்துவின் ஈவாகிறவர்கள் யார்?

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகியோர் சபையைப் பூரணத்திற்கு வழி நடத்தும்படியாக சபைக்குக் கிறிஸ்துவின் ஈவாகிறார்கள். (எபே. 4 : 7 - 13)

**7.** பிதாவின் பூரண சித்தம் செய்யும்படியாக இயேசு என்ன செய்தார்?

பிதாவின் பூரண சித்தம் செய்யும்படியாக, இயேசு பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு, தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்தார். (பிலி. 2 : 5, 8)

**8.** கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் என்று சாட்சி கூறிய பரிசுத்தவான் யார்? பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளாமல் தேவ ஊழியரை பாதுகாப்பது எது?

1. அப்போஸ்தலனாகிய பவுல் (பிலி. 3 : 7 - 11)
2. பிரதிஷ்டையின் ஜீவியம்.

9. பரலோக ராஜ்யத்தின் சகல இரகசியங்களும் யாருக்கு வெளிப்படுத்தப்படுகிறது? ஆழமான சத்தியங்கள் யாருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது?

1. பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியருக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது. (மத். 13 : 10, 11)
2. ஆழமான சத்தியங்கள் புதிய ஏற்பாட்டின் பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (எபே. 3 : 3, 6)

## II <u>*சுருக்கமான விடையளி*</u> : (5 Marks)

1. பழைய ஏற்பாட்டு ஊழியம் புதிய ஏற்பாட்டு ஊழியத்தில் எதற்கு நிழலாட்டமாய் இருக்கிறது? ஒப்பிடுக.

| பழைய ஏற்பாடு ஊழியம் | புதிய ஏற்பாடு ஊழியம் |
|---|---|
| 1. மோசேயும் ஆரோனும் எகிப்து தேசத்தில் செய்த அற்புதங்களுடனும் அடையாளங்களுடனும் கூடிய ஊழியம், இஸ்ரவேல் புத்திரருக்கு முடிவில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை கொண்டு வந்தது. | 1. விடுதலையின் ஊழியம் - இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்குவதும், சிறைப்பட்டவர்களை அதாவது பாவம், வியாதி, சாத்தான், மரணபயம் முதலிய அடிமைத்தனங்களிலிருக்கும் ஜனங்களை விடுதலையாக்குவதுமான ஊழியத்திற்கு நிழலாயிருக்கிறது.(லூக். 4 : 18 ;மாற்கு 3 : 14, 15) |
| 2. இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடத்தப்பட்டு, சீனாய் மலை அடிவாரத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். | 2. ஆத்துமாக்கள் தாங்கள் விடுதலையாக்கப்பட்ட பின்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டு சபையுடன் சேர்க்கப்படுவதைக் காட்டுகிறது. (அப். 2 : 41, 47) |
| 3. சீனாய் மலை அடிவாரத்தினின்று இஸ்ரவேல் புத்திரரைக் கானானுக்கு நடத்திய ஊழியம் | 3. புதிய ஏற்பாட்டின் ஊழியத்தின் இரண்டாம் அம்சமாகிய மகிமையின் ஊழியத்திற்கு - அதாவது பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்ற சபையைப் பூரணத்திற்கு நடத்துகிற ஊழியத்திற்கு நிழலாயிருக்கிறது. (2 கொரி. 3 : 8 ; 4 : 1) |

## III <u>*விரிவான விடையளி :*</u> (10 Marks)

1. புதிய ஏற்பாட்டு ஊழியர்களுக்கு பிரதிஷ்டையின் ஜீவியம் ஏன் மிகவும் அவசியமானது? வசன ஆதாரத்துடன் விவரி?

1. கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களிடம் , 'பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன்' எனக் கூறினார். (யோவான் 20 : 21) பிதாவின் பூரண சித்தம் செய்யும்படியாக, கர்த்தராகிய இயேசு பரலோகத்தின் சகல மகிமைகளையும் விட்டு, தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ருபமெடுத்தார். (பிலி. 2 : 5 - 8) தம்முடைய ஊழியரிடமிருந்து அதையே அவர் எதிர்பார்க்கிறார்.

2. இப்பிரதிஷ்டையானது, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளாமல் ஒருவளைப் பாதுகாத்து, தன்னுடைய சகல தேவைகளுக்காவும் தேவனை மாத்திரம் சார்ந்து கொண்டு, விசுவாசத்தினால் ஜீவிக்க அவனுக்கு உதவி செய்கிறது. (2 தீமோ 2 : 4)

3. ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்ற இது அவர்களுக்கு உதவி செய்கிறது. (வெளி. 14 : 4)

4. அப். பவுல் கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக, தான் எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டு, அவற்றைக் குப்பையுமாக எண்ணினதாகச் சாட்சி கூறுவது போல, அவரைப் பற்றிய அறிவின் மேன்மையை அடைந்து கொள்ள இப்பிரதிஷ்டை ஒருவனுக்கு உதவி செய்கிறது. (பிலி. 3 : 7 - 11)

5. பரலோக ராஜ்யத்தின் சகல இரகசியங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியருக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது. (மத். 13 : 10, 11).

மற்றகாலங்களில் மனுபுத்திரருக்கு வெளிப்படுத்தப்படாத ஆழமான சத்தியங்கள், இப்போது புதிய ஏற்பாட்டின் பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (எபே. 3 : 3, 6)

6. இப்பிரதிஷ்டையின் மூலம் தேவ ஊழியர் தங்களைக் கிறிஸ்துவுக்கு நிபந்தனையின்றி ஒப்புக்கொடுக்கின்றனர். அதினிமித்தம், பரிசுத்தவான்கள் சீர்ப்பொருந்தும் பொருட்டு, அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போகதராகவும் ஏற்படுத்தினார் என்று எழுதப்பட்டிருப்பது போல, சபையைப் பூரணத்திற்கு வழிநடத்தும்படியாக, அவர்கள் தாமே சபைக்குக் கிறிஸ்துவின் ஈவாகிறார்கள். (எபே. 4 : 7 - 13)

எனவே புதிய ஏற்பாட்டின் ஊழியருக்கு பிரதிஷ்டையின் ஜீவியம் மிகவும் அவசியமானதாகும்.

**2.** புதிய ஏற்பாட்டு ஊழியருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு பெயர்களை வசன ஆதாரத்துடன் எழுது.

புதிய ஏற்பாட்டு ஊழியக்காரர்,:

*i)* சிற்பாசாரிகள் (1 கொரி 3 : 10)

*ii)* கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் (2 கொரி 5 : 20)

*iii)* தேவனுடைய இரகசியங்களை அறிவிக்கும் உக்கிராணக்காரர். (1 கொரி. 4 : 1)

*iv)* சபைக்குத் தகப்பனும் தாயும் (1 தெச 2 : 7, 12)

*v)* சபையை நடத்துகிறவர்கள் (எபி. 13 : 17)

*vi)* சபையிலுள்ள ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள். (எபி. 13 : 17)

*vii)* கண்காணிகள் (அப். 20 : 28)

*viii)* மேய்ப்பர்கள் (1 பேதுரு 5 : 1 - 4)

*ix)* மூப்பர்கள் (1 பேதுரு 5 : 1)

*x)* திராட்சத்தோட்டத்தின் வேலையாட்கள் (மத். 20 : 1)

*xi)* புது உடன்படிக்கையின் ஊழியக்காரர் (2 கொரி. 3 : 6)

*xii)* தேவனுக்கு உடன் வேலையாட்கள் (1 கொரி. 3 : 9) என்ற பல பெயர்களால்

அழைக்கப்படுகின்றனர்.

*************

# மெல்கிசேதேக்கின் முறைமை

**I** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** : (2 Marks)

**1.** லேவிய ஆசாரியத்துவம் எதற்காக ஸ்தாபிக்கப்பட்டது?
மோசேயின் நாட்களில், அக்காலத்தில் தேவன் ஜனங்களிடத்தில் எதிர்பார்த்த பரிசுத்தத்திற்கு நேராக அவர்களை நடத்தும்படியாக லேவிய ஆசாரியத்துவம் ஸ்தாபிக்கப்பட்டது. (பாடத்திட்டம்)

**2.** லேவிய ஆசாரியத்துவத்தினால் கூடாதிருந்தது என்ன?
லேவிய ஆசாரியத்துவத்தினால் ஜனங்களினுடைய மனச்சாட்சியையும் சுபாவத்தையும் முற்றிலுமாக பரிசுத்தப்படுத்தவும், பூரணப்படுத்தவும் கூடாதிருந்தது. (பாடத்திட்டம்)

**3.** பழைய ஏற்பாட்டின் 12 கோத்திரங்கள், புதிய ஏற்பாட்டில் யாருக்கு அடையாளமாயிருக்கிறார்கள்?
பழைய ஏற்பாட்டின் 12 கோத்திங்கள் புதிய ஏற்பாட்டில், இருதயத்தின் விருத்த சேதனமாகிய மனந்திரும்புதலின் அனுபவம் பெற்று, தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்து கொள்ளும் இரட்சிக்கப்பட்ட தேவ ஜனத்துக்கு அடையாளமாயிருக்கிறார்கள். (பாடத்திட்டம்)

**4.** பழைய ஏற்பாட்டின் லேவியர், புதிய ஏற்பாட்டில் யாரை காண்பிக்கிறார்கள்?
பழைய ஏற்பாட்டின் லேவியர் பூமிக்குரிய காரிங்களில் பற்றுதலற்றவர்களாக, விசுவாசத்தில் ஜீவிப்பவர்களாயிருந்து, அப்போஸ்தலருடைய (புதிய ஏற்பாட்டு ஆசாரியர்களுடைய) உபதேசத்திலும், ஐக்கியத்திலும், உறுதியாய் தரித்திருக்கும் விசுவாசிகளைக் காண்பிக்கிறார்கள். (பாடத்திட்டம்)

**5.** பழைய ஏற்பாட்டின் ஆசாரியர்கள், புதிய ஏற்பாட்டில் யாருக்கு நிழலாட்டமாயிருக்கிறார்கள்?
ஆசாரியர்கள் எல்லா மாம்சீக உறவுகளையும் வெறுத்து தங்களுக்குண்டான எல்லாவற்றையும் விட்டுவிட்டவர்களான அபிஷேகம் பண்ணப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டின் ஊழியருக்கு நிழலாட்டமாயிருக்கிறார்கள். (பாடத்திட்டம்)

**6.** பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியன், புதிய ஏற்பாட்டில் யாரை குறிக்கிறது?
பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியன், புதிய ஏற்பாட்டின் ஆசாரியத்துவத்தில் பிரதான இடம் பெற்று விளங்கும் அப்போஸ்தலரின் உத்தியோகத்தைக் குறிக்கிறது. (எபி 3 : 1 ; 1 கொரி 12 : 28)

**7.** ‘உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்’ என்று கர்த்தராகிய இயேசு கூறியதின் கருத்தென்ன?
முன்மாரி காலத்தில் இருந்த அப்போஸ்தலர்கள் மாத்திரமல்ல பின்மாரி காலத்திலுங்கூட எழும்பும் அவர்களைப் போன்ற தியாகிகளான பரிசுத்தவான்களைக் குறித்தும் இங்கு குறிப்பிடுகிறார். (மத்தேயு 28 : 20)

**8.** சபையானது எந்த அஸ்திபாரத்தின் மேல் கூட்டிக் எழுப்பப்பட்டு வருகிறது?
அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் சபையானது கூட்டிக் எழுப்பப்பட்டு வருகிறது (எபே. 2 : 20)

**II** ***சுருக்கமான விடையளி :*** (5 Marks)

**1.** லேவிய ஆசாரியத்துவம் ஏன் மனிதனை பூரணப்படுத்தவில்லை ? (அல்லது) லேவிய ஆசாரியத்துவம் மாற்றப்பட்டு, மெல்கிசேதேக்கின் முறைமைக்குட்பட்ட வேறொரு ஆசாரியத்துவம் கொண்டு வர காரணம் என்ன? (அல்லது) ஏன் லேவிய ஆசாரியத்துவத்தால் ஜனங்களுடைய மனச் சாட்சியையும் சுபாவத்தையும் முற்றிலுமாக பரிசுத்தப்படுத்தவும், பூரணப்படுத்தவும் கூடாமல் போயிற்று?

லேவிய ஆசாரியத்துவத்தால் ஜனங்களுடைய மனச்சாட்சியையும் சுபாவத்தையும் முற்றிலுமாக பரிசுத்தப்படுத்தவும் பூரணப்படுத்தவும் கூடாமல் போயிற்று. ஏனெனில்,

1) மிருக பலிகள் போதுமானவையாயும், பூரணமானவையாயும் இருக்க வில்லை. ஆகவே அவற்றினால் பாவத்தை நீக்க முடியவில்லை (எபி. 10 : 1 - 4)
2) மோசேயினால் அருளப்பட்ட நியாயப்பிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. (எபி. 7 : 19)
3) ஆசாரியத்துவத்திற்கு அதற்கான எல்லைகள் இருந்தன. அது மற்றவர்களைப் பூரணத்திற்கு நடத்த கூடாததாயிருந்தது. (எபி. 7 : 11)
4) ஆசாரியர்கள் செலுத்தி வந்த பலிகள் அவர்களது சொந்த மனச்சாட்சியையே பூரணப்படுத்த முடியவில்லை. (எபி. 9 : 9)

**2.** மெல்கிசேதேக்கு யார்? ‘பரிசுத்த ஆவியானவரே - மெல்கிசேதேக்கு’ என்பது எவ்வாறு தெளிவாகிறது?

1) மெல்கிசேதேக்கு நீதியின் ராஜா, சாலேமின் ராஜா, சமாதானத்தின் ராஜா,
2) தகப்பனும், தாயும் வம்ச வரலாறும் இல்லாதவர்.
3) வம்ச வரலாறு இல்லாதவராய் இருப்பதால், அவர் ஆதாமாயிருக்க முடியாது. (எபி. 7 : 2) ஏனென்றால் ஆதாமுக்கு வம்ச வரலாறு உண்டு. (ஆதி. 5 : 1)
4) அவர் நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவுமில்லாதவராய் இருப்பதால், தேவதூதனாயிருக்க முடியாது. ஏனெனில் தூதர்களுக்கு நாட்களின் துவக்கம் உண்டு. (எசே. 28 : 5)
5) அவர் தேவனுடைய ஆசாரியனாயிருப்பதால் அவர் பிதாவாகிய தேவனாகவும் இருக்க முடியாது.
6) அவர் தேவ குமாரனுக்கொப்பானவராய் இருப்பதால், கிறிஸ்துவும் அல்ல. மேற்குறிய காரணங்களை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது, அவர் நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவுமில்லாத ‘பரிசுத்த ஆவியானவரே - மெல்கிசேதேக்கு’ என்பது தெளிவாகிறது.

**3.** மெல்கிசேதேக்கின் முறைமைக்குட்பட்ட ஊழியம் லேவிய ஆசாரிய முறைமையைக் காட்டிலும் ஏன் மேன்மையானது?

ஒருமுறை ஆபிரகாம் நான்கு ராஜாக்களை முறியடித்துத் திரும்பி வந்த போது, மெல்கிசேதேக்கு அவனைச் சந்திக்கும்படியாக வந்து, அவனுக்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்தார் என்று ஆதியாகமம் 14 ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். ஆபிரகாம் அவருக்குத் தசமபாகம் கொடுத்தான். அப்போது லேவி ஆபிரகாமின் அரையிலிருந்தபடியால் (லேவி ஆபிரகாமின் சந்ததியாக வெளிப்படப் போவதை இது குறிக்கிறது) ஒரு விதத்தில் அவனுங்கூட மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் செலுத்தினான் என்று நாம் சொல்லலாம். (எபி 7 : 9, 10) சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான் என்பதற்கு சந்தேகமே இல்லை (எபி 7 : 7) எனவே மெல்கிசேதேக்கின் முறைமைக்குட்பட்ட ஆசாரியத்துவம் லேவிய ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேன்மையானது.

**4.** மெல்கிசேதேக்கின் முறைமை என்றால் என்ன?

மெல்கிசேதேக்கு தகப்பனும், தாயும் வம்ச வரலாறும், நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் இல்லாதவராக, தேவனுடைய குமாரனுக்கொப்பானவராய் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறார். அதுபோல மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் மாம்ச சம்பந்தமான எல்லா உறவுகளையும், வெறுத்தவராக இருந்தார். (மத்தேயு 12 : 48) புதிய ஏற்பாட்டின் காலத்தில், பூமியில் கர்த்தர் ஏற்படுத்தும் ஆசாரியத்துவம், ஆசாரியன் பிரதிஷ்டையின் மூலம் தகப்பனும், தாயும் வம்ச வரலாறும் அற்றவனாயிருக்கும் ஒரு முறைமையாகும். இதுவே மெல்கிசேதேக்கின் முறைமையாகும்.

**III** <u>*விரிவான விடையளி :*</u> (10 Marks)

**1.** ஆரோனின் முறைமையையும் மெல்கிசேதேக்கின் முறைமையையும் ஒப்பிட்டு எழுது.

| ஆரோனின் முறைமை | மெல்கிசேதேக்கின் முறைமை |
|---|---|
| 1. ஆரோனிய முறைமையில் உள்ள முதல் பிரதான ஆசாரியன் ஆரோன். | 1. மெல்கிசேதேக்கின் முறைமையில் உள்ள முதல் பிரதான ஆசாரியர் இயேசு கிறிஸ்து. |
| 2. இம்முறைமையில் ஆசாரியத்துவம் ஆரோனின் குடும்பத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்டது. அது பிறப்பினால் உண்டானது. | 2. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் பிறப்பினால் அல்ல, அழைப்பினால் உண்டாயிருக்கிறது. (எபி. 7 : 11) |
| 3. ஆரோனின் முறைமை என்றென்றும் நிலைத்திருக்க வில்லை. மரணத்தினிமித்தம் அது மாற்றப்பட்டது. (எபி. 7 : 23) | 3. இம்முறைமையின்படியான பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து மரித்தாலும், உயிர்த்தெழுந்து என்றென்றும் ஆசாரியராக நிலைத்திருக்கிறார். (எபி 7 : 24, 25) இம்முறைமைக்குட்பட்ட புதிய ஏற்பாட்டு ஊழியம் நித்தியத்திலும் தொடருகிறது. |
| 4. ஆரோனின் முறைமை ஆணையினாலே கொடுக்கப்படவில்லை. | 4. புதிய ஏற்பாட்டு ஆசாரியத்துவம் ஆணையினால் கொடுக்கப்படுகிறது. (எபி. 7 : 20, 21 : சங்கீதம் 110 : 4) |
| 5. இம்முறைமை மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயபிரமாணத்தினால் உண்டானதாக இருந்தது. | 5. மெல்கிசேதேக்கின் முறைமையின்படி உண்டான பிரமாணம் அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே இருக்கிறது.(எபி. 7 : 16, 17) |
| 6. ஆசாரியர்கள் அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் செய்யப்பட்டனர். இத்தைலம் குறிக்கப்பட்ட அளவின்படியான சில பொருட்களைக் கொண்டு தயாரிக்க வேண்டியதாயிருந்தது.(யாத்.30 : 23 - 25,30) | 6. இந்த முறைமையில் அளவில்லாமல் கொடுக்கப்படுகிற, பரிசுத்த ஆவியினால் நாம் அபிஷேகம் பண்ணப்படுகிறோம். (யோவான். 3 : 34) |
| 7. இம்முறைமையின்படியான ஆசாரியத்துவம் எந்த மனுஷனையும் பூரணப்படுத்துவதில்லை. ஏனெனில் அதன்படி உண்டான ஆசாரியர்கள் பெலவீனரான மனுஷராயிருந்தனர். | 7. இம்முறைமையின் ஆசாரியத்துவம் மனிதனைப் பூரணப்படுத்துகிறது. ஏனெனில் கர்த்தராகிய இயேசு பெலவீனர் அல்ல. அவர் சோதிக்கப்பட்டு பாவமில்லாதவராய்க் காணப்பட்டார். (எபி. 7 : 28 , 4 : 15) |
| 8. இம்முறைமையின்படியான ஆசாரியத்துவம் கைகளினால் செய்யப்பட்ட கூடாரத்தில் செய்யப்படும் ஊழியமாயிருந்தது. | 8. மெல்கிசேதேக்கின் முறைமையின்படி உண்டான ஊழியம் பெரிதும் உத்தமுமான கூடாரத்தில் செய்யப்படுகிறது. (எபி. 9 : 11, 12) |
| 9. மரிக்கிற மனுஷர் ஆரோனின் முறைமையில் தசமபாகம் வாங்கினார்கள். | 9. மெல்கிசேதேக்கின் முறைமையில் 'பிழைத்திருக்கிறார்கள்' என்ற சாட்சி பெற்றவர்கள் (ஜெய ஜீவியம் செய்கிறவர்கள்) தசமபாகம் வாங்குகிறார்கள். (எபி 7 : 8) |

*************

வகுப்பு : 11

பாடம்-15

# விசுவாச ஜீவியம்

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** மெய்யான தேவ ஜனங்கள் தங்கள் சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் தேவையான சகலத்தையும் எவ்வாறு பெற்றுக் கொள்ள வேண்டும்? (அல்லது) உண்மையுள்ள தேவஜனங்கள் விசுவாசத்தினால் எவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்?

மெய்யான தேவ ஜனங்கள் தங்கள் சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் தேவையான சகலத்தையும் விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ள வேண்டும் .(பாடத்திட்டம்)

**2.** ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் எந்த அளவின்படி விசுவாசத்தை அனுபவிக்க முடியும்?

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் அவரவருடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் நிலைக்குத்தக்கதாகவே விசுவாசத்தை அனுபவிக்க முடியும் (பாடத்திட்டம்)

**3.** விசுவாச ஜீவியம் செய்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் நான்கு பேரின் பெயர்களை எழுது.

நோவா, ஆபிரகாம், யோசேப்பு, எலியா.

**4.** பூரணமான விசுவாச ஜீவியம் செய்யும்படி யார் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்?

புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் பூரணமான விசுவாச ஜீவியம் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறார்கள். (பாடத்திட்டம்)

**5.** தேவன் எப்பொழுது ஆவியின் கனியாகிய விசுவாசத்தை தன்னுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கிறார்?

ஒரு தேவனுடைய பிள்ளை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறும்பொழுது, தேவன் அவனுக்கு ஆவியின் கனியாகிய விசுவாசத்தைக் கொடுக்கிறார். (கலா. 5 : 22)

**6.** தேவன் தேவ பிள்ளைகளுக்குள் இருக்கும் விசுவாசத்தின் வரத்தை எப்பொழுது கிரியை செய்யும்படி செய்கிறார்?

தேவன் அசாதாரணமான ஒரு காரியத்தை ஒரு தேவபிள்ளையின் மூலம் செய்ய விரும்பும்போதெல்லாம், அக்குறிப்பிட்ட வேளையில் அவனுக்குள் இருக்கும் விசுவாசத்தின் வரம் கிரியை செய்யும்படி செய்கிறார். (பாடத்திட்டம்)

**7.** தற்காலத்தில் எந்த சபை ஊழியக்காரர் விசுவாச ஜீவியத்தின் ஒழுங்கை கடைபிடித்து வருகிறார்கள்? அவர்கள் தங்கள் தேவைகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளுகிறார்கள்?

பெந்தெகொஸ்தே மிஷினிலுள்ள கர்த்தருடைய ஊழியக்காரர் விசுவாச ஜீவியத்தின் ஒழுங்கை கடைபிடித்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் புசிப்பு, குடிப்பு, உடை, விசுவாசவீடுகள், பிரயாணச்செலவு, மற்றும் ஜீவனத்திற்குத் தேவையான சகலத்தையும் விசுவாசத்தினால் பெற்றுக் கொள்ளுகிறார்கள். (பாடத்திட்டம்)

**8.** விசுவாசத்தின் படிகள் எத்தனை ? அவையாவை?

விசுவாசத்தின் படிகள் ஐந்து. அவையாவன :

1) அற்ப விசுவாசம் 2) பெரிய விசுவாசம் 3) கடுகு விதையளவு விசுவாசம்
4) மகா பரிசுத்த விசுவாசம் 5) தேவ குமாரனின் விசுவாசம்.(பாடத்திட்டம்)

**9.** பெரிய விசுவாசம் என்றால் என்ன?

பெரிய விசுவாசம் என்பது, குறிப்பிட்ட சிலருக்குள் சாதாரணமாக ஒருவர் அவர்களிடத்தில் அதை எதிர்பாராத சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அசாதாரணமான அளவில் காணப்படும் விசுவாசமாகும். (பாடத்திட்டம்)

**10.** கடுகு விதையளவு விசுவாசம் என்பது எதைக் காட்டுகிறது?

கடுகுவிதை என்பது மற்ற விதைகளுக்கு இருப்பதைப் போல காற்றுத் துவாரங்கள் உள்ளே இல்லாத பூரணமான ஒரு விதையாகும். எனவே, கடுகு விதையளவு விசுவாசம் என்பது உறுதியான விசுவாசத்தைக் காட்டுகிறது (பாடத்திட்டம்)

**11.** தேவ குமாரனின் விசுவாசம் என்றால் என்ன?

பாவியான மனுஷனை தேவசாயலுக்கு ஒப்பாக மறுரூபப்படுத்த தேவகுமாரனாகிய இயேசு தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுத்த போது அவருக்கிருந்த விசுவாசமே தேவ குமாரனின் விசுவாசம் என்று அழைக்கப்படுகிறது. (பாடத்திட்டம்)

**12.** விசுவாசம் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது ? ஏன்?

விசுவாசம் பொன்னுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் பொன்னானது சுத்திகரிக்கப்பட்டு, புடமிடப்படுவது போல, விசுவாசமும் அக்கினி சோதனைகளின் மூலம் விலையேறப் பெற்றதாகிறது. (பாடத்திட்டம்)

**13.** பல நிலவரங்களிலிருக்கிற விசுவாசம் விலையேறப் பெற்றதாய் மாறும்படி என்ன செய்ய வேண்டியதாயிருக்கிறது?

பல நிலவரங்களிலிருக்கிற விசுவாசம் விலையேறப் பெற்றதாய் மாறும்படியாக அது சோதனையினூடாகச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. (பாடத்திட்டம்)

**II** *சுருக்கமான விடையளி* : (5 Marks)

**1.** இயற்கையான விசுவாசம் பற்றி குறிப்பு வரைக.

இயற்கையான விசுவாசம் : இது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் விசுவாசமாகும். இது ஒவ்வொருவருக்குள்ளும் வித்தியாசமான அளவுகளில் காணப்படுகிறது. இது இன்றி மனுஷனால் இவ்வுலகத்தில் ஜீவிக்க முடியாது. உதாரணமாக, ஒரு மனுஷன் தன் அலுவலகத்திற்குப் புறப்படும் போது அவன் தன் அலுவலகத்தைச் சென்றடைந்து சுகமாகத் திரும்பி வருவான் என்ற விசுவாசம் அவனுக்கு இருக்க வேண்டும். இயற்கையான மனுஷனுக்கு இவ்வுலகத்தில் தான் எதைச் செய்ய தீர்மானிக்கிறானோ அதைச் செய்து நிறைவேற்றுவதற்காக இயற்கையான விசுவாசம் இருக்கிறது. இவ்விசுவாசத்திற்கு அதற்குரிய எல்லைகள் உண்டு. இருப்பினும், மனிதன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள இவ்விசுவாசத்தை உபயோகிக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்

**2.** விசுவாச ஜீவியம் என்றால் என்ன?

கர்த்தராகிய இயேசு, உலகத்தில் தம்முடைய ஊழியத்தை முடித்தபின் தம்முடைய ஊழியத்தைத் தம் சீஷர்கள் தொடர்ந்து செய்யும்படி கட்டளையிட்டுப் பரத்திற்குப் ஏறிப்போனார். அவர் அவர்களுக்கு எவ்வித பூமிக்குரிய ஆசீர்வாதத்தையும் வைத்துச் செல்லவில்லை. யோவான் 14 : 1, 27 - இல் , அவர்களுக்கு அவர் விசுவாசம், சமாதானம் ஆகிய ஐசுவரியங்களையே கொடுத்தார். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் புதிய ஏற்பாட்டு சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, புதிய ஏற்பாட்டு ஊழியக்காரர் ( ஆதி அப்போஸ்தலர் காலத்தில் ஜீவித்த ஊழியக்காரர்) இந்த விசுவாச ஜீவியத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தார்கள். அக்காலத்தில் ஜீவித்த அப்போஸ்தலர் அல்லது சீஷர்களுக்குச் சம்பளமோ, உதவித்தொகையோ (Allowance) கொடுக்கப்படவில்லை (1 கொரி. 9 : 9, 10). சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளையாயிருந்தது. (1கொரி. 9 : 14 ; லூக்கா 10 : 7)

அவ்வாறாக கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் புசிப்பு, குடிப்பு, உடை, விசுவாசவீடுகள், பிரயாணச்செலவு, மற்றும் ஜீவனத்திற்குத் தேவையான சகலத்தையும் விசுவாசத்தினால் பெற்று ஜீவிப்பதையே விசுவாச ஜீவியம் என்று அழைக்கிறோம்.

**3.** அற்ப விசுவாசமுள்ள விசுவாசிகள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறார்கள்?

முதலாவதாக, அற்ப விசுவாசமுள்ளவர்கள் தங்கள் தனிப்பட்ட தேவைகளைக் குறித்து எப்போதும் கவலைப்படுகின்றனர் (மத்தேயு 6 : 30, 31)

இரண்டாவதாக, அவர்கள் சோதனைகளையும் பரீட்சைகளையும் குறித்துப் பயப்படுகின்றனர். (மத். 8 : 23 - 27)

மூன்றாவதாக, அவர்கள் தாங்கள் முற்றுமுடிய இயேசுவை அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே பின்பற்றக் கூடுமோ என்ற சந்தேகமுள்ளவர்களாயிருக்கின்றனர். (மத். 14 : 28 - 32)

நான்காவதாக, அவர்கள் ஆரோக்கியமான உபதேசங்களை விளங்கிக் கொள்ளக் கூடாதவர்களாகவும், துர் உபதேசங்களைப் பகுத்தறியக் கூடாதவர்களாகவும் இருக்கின்றனர். (மத். 16 : 8, 12)

**4.** கடுகு விதையளவு விசுவாசம் ஏன் நமக்குத் தேவையாயிருக்கிறது?

முதலாவதாக, நாம் ஊழியம் செய்யவும், பிசாசுகளைத் துரத்தவும், மற்றவர்களை இரட்சிப்புக்குள்ளே நடத்தவும் இந்த விசுவாசம் நமக்குத் தேவையாயிருக்கிறது (மத். 17 : 14 - 21)

இரண்டாவதாக, பிறர் செய்யும் தீமைகளை மன்னித்து மறப்பதற்கும், நம்முடைய சத்துருக்களை நேசிப்பதற்கும், நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிப்பதற்கும், கிறிஸ்துவின் சுபாவத்தில் வளருவதற்கும் இப்படிப்பட்ட விசுவாசம் அவசியம். (லூக்கா 17 : 3 - 6 ; 23 : 34)

**5.** மகா பரிசுத்த விசுவாசம் எவ்வாறு நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது?

மகா பரிசுத்த ஸ்தலம், அதாவது, சீயோன், புதிய எருசலேமுக்குள் பிரவேசிப்பதற்கு ஒருவருக்கு மகா பரிசுத்த விசுவாசம் தேவையாயிருக்கிறது. இந்த விசுவாசம் நாம் பாவங்களையும், தீய பழக்க வழக்கங்களையும், தீய எண்ணங்களையும் மேற்கொண்டு, ஜெய ஜீவியம் செய்வதற்கு நமக்கு உதவி செய்கிறது. இது நம்முடைய மனதில் எவ்வித போராட்டமுமில்லாமல் நாம் இளைப்பாற நமக்கு உதவி செய்கிறது. நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாகக் கூடும் என்ற நம்பிக்கையையும், அவர் பரிசுத்தமுள்ளவராயிருக்கிறது போல நாமும் பரிசுத்தமுள்ளவர்களாகக் கூடும் என்ற நம்பிக்கையையும் இது நமக்கு நல்குகிறது. (யூதா 20 ; 1பேதுரு 1 : 15 , 16)

## III *விரிவான விடையளி :* (10 Marks)

**1.** விசுவாசத்தை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம்? அவை யாவை? வசன ஆதாரத்துடன் எழுது.

விசுவாசத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
அவை : 1) இயற்கையான விசுவாசம் 2) ஆவியின் கனியாகிய விசுவாசம்
3) விசுவாசத்தின் வரம்

1. இயற்கையான விசுவாசம் : இது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் விசுவாசமாகும். இது ஒவ்வொருவருக்குள்ளும் வித்தியாசமான அளவுகளில் காணப்படுகிறது. இது இன்றி மனுஷனால் இவ்வுலகத்தில் ஜீவிக்க முடியாது. உதாரணமாக, ஒரு மனுஷன் தன் அலுவலகத்திற்குப் புறப்படும் போது அவன் தன் அலுவலகத்தைச் சென்றடைந்து சுகமாகத் திரும்பி வருவான் என்ற விசுவாசம் அவனுக்கு இருக்க வேண்டும். இயற்கையான மனுஷனுக்கு இவ்வுலகத்தில் தான் எதைச் செய்ய தீர்மானிக்கிறானோ அதைச் செய்து நிறைவேற்றுவதற்காக இயற்கையான விசுவாசம் இருக்கிறது. இவ்விசுவாசத்திற்கு அதற்குரிய எல்லைகள் உண்டு. இருப்பினும், மனிதன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள இவ்விசுவாசத்தை உபயோகிக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

2. ஆவியின் கனியாகிய விசுவாசம் : ஒரு தேவனுடைய பிள்ளை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறும்பொழுது, தேவன் அவனுக்கு ஆவியின் கனியாகிய விசுவாசத்தைக் கொடுக்கிறார். (கலா. 5 : 22) விசுவாசத்தின் இந்த அம்சம் அவனில் தேவனால் நாட்டப்பட்டிருக்கிறது. அது அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது.

3. விசுவாசத்தின் வரம் : தேவன் அசாதாரணமான ஒரு காரியத்தை ஒரு தேவபிள்ளையின் மூலம் செய்ய விரும்பும்போதெல்லாம், அக்குறிப்பிட்ட வேளையில் இருக்கும் அவனுக்குள் இவ்விசுவாசத்தின் வரம் கிரியை செய்யும்படி செய்கிறார். அந்த மனுஷனுடைய இயற்கையான விசுவாசத்தைக் கொண்டு தேவனால் அற்புதங்களையும் சுகமாகுதல்களையும் நடப்பிக்க முடியாது. இந்த விசுவாசத்தோடுதான், அப்.பேதுரு சப்பாணியிடம், ‘நீ எழுந்து நட’ என்று சொன்னான், (அப். 3 : 6 - 8)

**2.** விசுவாசத்தின் அம்சங்களை வசன ஆதாரத்துடன் எழுது.

விசுவாசத்திற்கு பல அம்சங்கள் உண்டு. :

*i)* இரட்சிப்புக்கேதுவான விசுவாசம் (அப்.16 : 31)

*ii)* அனுதின தேவைகளுக்கான விசுவாசம் (ரோமர் 1 : 17)

*iii)* குணமாக்கும் விசுவாசம் (யாக். 5 : 15)

*iv)* மரித்தோரை உயிர்ப்பிக்கிற விசுவாசம் (ரோமர் 4 : 18, 19)

*v)* சோதனைகள், பரீட்சைகள், உபத்திரவங்கள், ஆபத்துகள் முதலியவற்றிலிருந்து விடுதலை தரும் விசுவாசம் (எபி. 11 : 32 - 34)

*vi)* வருங்கால சம்பவங்களை முன்னறியும் விசுவாசம் (எபி. 11 : 22)

*vii)* ஜெய ஜீவியம் செய்வதற்காக ஒருவருக்கு உதவி செய்யும் விசுவாசம். (1 யோவான் 5 : 4)

**IV** ***விரிவாக தெளிவாக வசன ஆதாரத்துடன் விடையளி :*** (15 Marks)

**1.** விசுவாசத்தின் பல நிலைகளை அல்லது படிகளை வசன ஆதாரத்துடன் எழுது.

விசுவாசத்தின் பல படிகள் :

அற்ப விசுவாசம் :

முதலாவதாக அற்ப விசுவாசமுள்ளவர்கள் தங்கள் தனிப்பட்ட தேவைகளைக் குறித்து எப்போதும் கவலைப்படுகின்றனர் (மத்தேயு 6 : 30, 31)

இரண்டாவதாக, அவர்கள் சோதனைகளையும் பரீட்சைகளையும் குறித்துப் பயப்படுகின்றனர். (மத். 8 : 23 - 27)

மூன்றாவதாக, அவர்கள் தாங்கள் முற்றுமுடிய கர்த்தராகிய இயேசுவை அவருடைய அடிச்சுவடுகளின் வழியிலே பின்பற்றக் கூடுமோ என்ற சந்தேகமுள்ளவர்களாயிருக்கின்றனர் (மத். 14 : 28 - 32)

நான்காவதாக, அவர்கள் ஆரோக்கியமான உபதேசங்களை விளங்கிக் கொள்ளக் கூடாதவர்களாயும், துர் உபதேசங்களைப் பகுத்தறிக் கூடாதவர்களாயும், இருக்கின்றனர். (மத். 16 : 8, 12)

பெரிய விசுவாசம் :

பெரிய விசுவாசம் என்பது, குறிப்பிட்ட சிலருக்குள் சாதாரணமாக ஒருவர் அவர்களிடத்தில் அதை எதிர்பாராத சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அசாதரணமாக அளவில் காணப்படும் விசுவாசமாகும்.

புறஜாதியானான நூற்றுக்கு அதிபதி தன் வேலைக்காரன் சுகமாகும்படி கர்த்தராகிய இயேசு ஒரு கட்டளை கொடுத்தால் மாத்திரம் போதும் என்று சொன்னது அவனுடைய பெரிய விசுவாசத்தைக் காண்பிக்கிறது (மத். 8 : 10) கானானிய ஸ்திரீயுங் கூட தன் மகள் சுகமாக்கப்படும்படி கர்த்தராகிய இயேசுவை விடாப்பிடியாகத் தொந்தரவு செய்து கொண்டிருந்ததும் அவளுக்குள் இந்தப் பெரிய விசுவாசம் இருந்தபடியாலேயே ஆகும். (மத். 15 : 28)

கடுகுவிதையளவு விசுவாசம் :

கடுகுவிதை என்பது மற்ற விதைகளுக்கு இருப்பதைப் போல காற்றுத் துவாரங்கள் உள்ளே இல்லாத பூரணமான ஒரு விதையாகும். எனவே, கடுகு விதையளவு விசுவாசம் என்பது உறுதியான விசுவாசத்தைக் காட்டுகிறது

முதலாவதாக, நாம் ஊழியம் செய்யவும், பிசாசுகளைத் துரத்தவும், மற்றவர்களை இரட்சிப்புக்குள்ளே நடத்தவும் இந்த விசுவாசம் நமக்குத் தேவையாயிருக்கிறது (மத். 17 : 14 - 21)

இரண்டாவதாக, பிறர் செய்யும் தீமைகளை மன்னித்து மறப்பதற்கும், நம்முடைய சத்துருக்களை நேசிப்பதற்கும், நம்மைத் துன்பப்படுத்ததுகிறவர்களை ஆசீர்வதிப்பதற்கும், கிறிஸ்துவின் சுபாவத்தில் வளருவதற்கும் இப்படிப்பட்ட விசுவாசம் அவசியம். (லூக்கா 17 : 3 - 6 ; 23 : 34)

மகா பரிசுத்த விசுவாசம் :

மகா பரிசுத்த ஸ்தலம், அதாவது, சீயோன், புதிய எருசலேமுக்குள் பிரவேசிப்பதற்கு ஒருவருக்கு மகா பரிசுத்த விசுவாசம் தேவையாயிருக்கிறது. இந்த விசுவாசம் நாம் பாவங்களையும், தீய பழக்க வழக்கங்களையும், தீய எண்ணங்களையும் மேற்கொண்டு, ஜெய ஜீவியம் செய்வதற்கு நமக்கு உதவி செய்கிறது. இது நம்முடைய மனதில் எவ்வித போராட்டமுமில்லாமல் நாம் இளைப்பாற நமக்கு உதவி செய்கிறது. நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாகக் கூடும் என்ற நம்பிக்கையையும், அவர் பரிசுத்தமுள்ளவராயிருக்கிறது போல நாமும் பரிசுத்தமுள்ளவர்களாகக் கூடும் என்ற நம்பிக்கையையும் இது நமக்கு நல்குகிறது. (யூதா 20 : 1பேதுரு 1 : 15 , 16)

தேவ குமாரனின் விசுவாசம் :

பாவியான மனுஷனை தேவ சாயலுக்கு ஒப்பாக மறுரூபப்படுத்த தேவ குமாரனாகிய இயேசு தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுத்த போது அவருக்கிருந்தது இந்த விசுவாசமே. அவர் தமக்கென்று ஒரு மணவாட்டியை அல்லது தம்முடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வளர்ந்த பூரணமாக்கப்பட்ட ஒரு கூட்டம் பரிசுத்தவான்களை தாம் உருவாக்கக் கூடும் என்று விசுவாசித்தார். இந்த விசுவாசத்தின் மூலமாக நாமும் மற்றவர்களும் கிறிஸ்துவின் பூரணத்திற்கு வளர்ந்து மறுரூபப்பட முடியும் என்று நாம் விசுவாசிக்கிறோம். (கொலோ 1 : 28)

விசுவாசம் பல தரப்பட்ட நிலைகளையுடையது. இருப்பினும் அது விலையேறப்பெற்ற விசுவாசமாகும்படியாக அது சோதனையினூடாகச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. விசுவாசம் பொன்னுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. பொன்னானது சுத்திகரிக்கப்பட்டு, புடமிடப்படுவது போல, விசுவாசமும் அக்கினி சோதனைகளின் மூலம் விலையேறப் பெற்றதாகிறது.(1 பேதுரு 1 : 7)

*********

வகுப்பு : 11

பாடம்-16

# பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல்

**I** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி :*** (2 Marks)

**1.** பரிசுத்தமாகுதல் என்பதின் பொருள் என்ன?
பரிசுத்தமாகுதல் என்பதற்கு வேறுபிரிதல் என்று பொருள் (பாடத்திட்டம்).

**2.** இரத்தத்தினால் உண்டாகும் பரிசுத்தமாகுதல் என்றால் என்ன? அது நம்முடைய ஜீவியத்தில் எப்பொழுது ஆரம்பமாகிறது?
பாவத்திலிருந்தும் பாவிகளிலிருந்தும் வேறுபிரிவது இரத்தத்தினால் உண்டாகும் பரிசுத்தமாகுதலாகும். இது இரட்சிப்பில் ஆரம்பமாகிறது (பாடத்திட்டம்).

**3.** வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன? அது நம்முடைய ஜீவியத்தில் எப்பொழுது ஆரம்பமாகிறது?
உலகத்திலிருந்தும் உலகப்பொருட்களிலிருந்தும் வேறுபிரிவது வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படுதலாகும். இது, ஞானஸ்நானத்தில் நாம் தேவனுடைய வசனத்திற்குக் கீழ்ப்படியும்போது ஆரம்பமாகிறது (பாடத்திட்டம்).

**4.** ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன? அது நம்முடைய ஜீவியத்தில் எப்பொழுது ஆரம்பமாகிறது?
நாம் நம் சுயத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொள்வதே ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதலாகும். இது, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறும்போது ஆரம்பமாகிறது (பாடத்திட்டம்).

**5.** ஆவி எவைகளின் இருப்பிடமாயிருக்கிறது? அவை எதனால் பரிசுத்தமாக்கப்படவேண்டும்?
ஆவி என்பது, சிந்தனைகள், கற்பனைகள், நோக்கங்கள், திட்டமிடுதல், அறிவு போன்றவற்றின் இருப்பிடமாகும். இவை பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படவேண்டும் (பாடத்திட்டம்).

**6.** அப். பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது, 'உண்மையான விருத்தசேதனமுள்ளவர்கள்' என்று யாரைக் குறிப்பிடுகிறார்?
''மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்'' என்று கூறுகிறார் (பிலி. 3 : 3).

**7.** கிறிஸ்து நமக்கு எல்லாரிலும் எல்லாமுமாயிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
(i) மாம்சத்தில் மேன்மைபாராட்டுதல் (1 கொரி. 1 : 29) என்று அழைக்கப்படுகிற சுயத்தின்சகல மேன்மைபாராட்டுதல்களையும் நாம் விட்டுவிட வேண்டும்.
(ii) தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவுடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை நாம் தரித்துக்கொள்ளவேண்டும் (கொலோ.3 : 10).

**8.** 'இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்' என்பது எதைக் காட்டுகிறது?
இது, நம்முடைய மனதில் அல்லது ஆவியில் மாம்சத்தின்படி ஒருவரையும் அறியாதிருப்பதை, அதாவது, ஜாதி, நிறம், பாஷை, தேசம், ஒருவருடைய பெலவீனம் இவைகளின்படி ஒருவரையும் அறியாதிருப்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்).

**9.** நாம் எப்பொழுது ஜீவனிலும் சமாதானத்திலும் பெருகுகிறவர்களாயிருப்போம்?
மாம்சீகமும் சுயமுமான யாவற்றையும் நாம் குப்பையாக எண்ண ஆயத்தமாயிருப்பதை அன்றாடம் நம் ஆவியில் நாம் பயிற்சிக்கும்போது ஜீவனிலும் சமாதானத்திலும் பெருகுகிறவர்களாயிருப்போம் (ரோமர் 8 : 6).

**10.** ஆவியில் பரிசுத்தமாக்கப்படுதல் யாருக்கு பாரமாயிராது?
சுயத்தை மேற்கொள்ள, வேறுபிரிய ஒப்புக்கொடுக்கும்போது எதிர்பாராத சில பாடுகளின் வழியாகப் போக நேரிடலாம். ஆனால் தங்கள் ஆவியில் பரிசுத்தமாக்கப்பட வாஞ்சித்து ஒப்புக்கொடுக்கிறவர்கள் பாடுபடும் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்வார்களாதலால் இவர்களுக்கு ஆவியில் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பாரமாயிராது (பாடத்திட்டம்).

**11.** ஆத்துமா எவைகளின் இருப்பிடமாயிருக்கிறது?
ஆத்துமாவானது எழுச்சி, பாசம், விருப்பம், வாஞ்சை, நாடுதல், தேடுதல், உணர்வு என்பவைகளின் இருப்பிடமாயிருக்கிறது (பாடத்திட்டம்).

12. ஆத்துமா எதற்காக சிருஷ்டிக்கப்பட்டது? பரிசுத்தமாக்கப்படாத ஆத்துமா எவற்றால் மயக்கப்படுகிறது?

ஆத்துமா அன்பு, பரிசுத்தமான உணர்வுகள், வாஞ்சைகள், இவற்றிற்காக சிருஷ்டிக்கப்பட்டது. பரிசுத்தமாக்கப்படாத ஆத்துமா, தன் சுய இச்சையினால் இலகுவாக இழுக்கப்பட்டு அந்நிய அன்பினாலும் உலகத்திலுள்ளவைகளினாலும் மயக்கப்படுகிறது (பாடத்திட்டம்).

13. பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்படும்போது, ஆத்துமாவில் நடைபெறுவது என்ன?

நம்முடைய ஆத்துமா சுயநலமான வாஞ்சைகள், மாம்சஅன்பு ஆகியவை நீங்க பரிசுத்தமாக்கப்படுகிறது.

14. சுயம் அல்லது மாம்சீக அன்புக்கு எப்பொழுது நம்மில் இடமில்லாமல் போகிறது?

பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் இவற்றில் நாம் வளர ஆரம்பிக்கும்போது (எபே. 3 : 18) சுயம் அல்லது மாம்சீக அன்புக்கு நம்மில் இடமில்லாமற்போகிறது.

15. பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டு வந்த சர்வாங்க தகனபலி, எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?

ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நம்முடைய சரீரம், பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படும்போது நாம் பெற்றுக்கொள்ளும் அனுபவத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது (பாடத்திட்டம்).

16. பரிசுத்த ஆவியானவருக்கு நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் நாம் ஏன் அன்றாடம் ஒப்புக்கொடுக்கவேண்டும்?

பாவம், வியாதி, சாபம், மரணம் ஆகியவை நம் சரீரங்களை ஆளாமல் இருப்பதற்காக பரிசுத்த ஆவியானவருக்கு நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் அன்றாடம் ஒப்புக்கொடுக்கவேண்டும் (பாடத்திட்டம்).

17. ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலின் மூலம் நாம் எப்படி பூரணத்திற்குக் கடந்து செல்லக்கூடியவர்களாய் இருக்கிறோம்?

ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலின் மூலம் பழைய மனுஷனை நாம் களைந்து மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம் (எபே. 4 : 24). அதன்பின்னர், நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்பட்டுப் பூரணத்திற்குக் கடந்து செல்லக்கூடியவர்களாகிறோம் (2 கொரி. 3 : 18).

18. நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்கென்று காக்கப்பட என்ன செய்யவேண்டும்?

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலும் தேவ வசனத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நம் ஆவி ஆத்துமா சரீரம் ஆகிய மூன்றும் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்கென்று காக்கப்படவேண்டும் (1 தெச. 5 : 23).

## II *<u>சுருக்கமான விடையளி</u>*: (5 Marks)

1. நமது ஆத்துமா பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதலைப் பற்றி எழுது.

ஆத்துமாவானது எழுச்சி, பாசம், விருப்பம், வாஞ்சை, நாடுதல், தேடுதல், உணர்வு இவற்றின் இருப்பிடமாகும். அன்பு, பரிசுத்தமான உணர்வுகள், வாஞ்சைகள் இவற்றிற்காக அது சிருஷ்டிக்கப்பட்டது. பரிசுத்தமாக்கப்படாத ஆத்துமா, தன் சுய இச்சையினால் இலகுவாக இழுக்கப்பட்டு, அந்நிய அன்பினாலும் உலகத்தின் பொருட்களாலும் மயக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டு (ரோமர் 5: 5), நம்முடைய ஆத்துமா சுயநலமான வாஞ்சைகள், மாம்ச அன்பு ஆகியவை நீங்க பரிசுத்தமாக்கப்படுகிறது. பரி. பவுல் எபேசியருக்கு எழுதும்போது, அறிவுக்கெட்டாத அன்பைக்குறித்துக் கூறுகிறார் (எபே. 3 : 19). பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் இவற்றில் நாம் வளர ஆரம்பிக்கும்போது (எபே. 3 : 18), சுயம் அல்லது மாம்சீக அன்புக்கு நம்மில் இடமில்லை. நம் ஆத்துமாவானது முற்றிலும் தேவனுடைய அன்புக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதால் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழுப் பலத்தோடும் கர்த்தரில் நாம் அன்புகூர்ந்து பூரண பரிசுத்தமாகுதலை அடையலாம்.

## III *<u>விரிவான விடையளி</u>* : (10 Marks)

1. நமது ஆவி பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதலைப்பற்றி விரிவாக எழுது.

ஆவி என்பது, சிந்தனைகள், கற்பனைகள், நோக்கங்கள், திட்டமிடுதல், அறிவு போன்றவற்றின் இருப்பிடமாகும். பரிசுத்த ஆவியினால் இவை பரிசுத்தமாக்கப்படவேண்டும். அப். பவுல், பிலிப்பியருக்கு எழுதும்போது, ''மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்துஇயேசுவுக்குள்

மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்'' என்று கூறுகிறார் (பிலி. 3 : 3). இவ்வேதபகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'மாம்சம'' என்பது, மனுஷனிலிருக்கும் 'சுயமாகும்'. பரிசுத்த ஆவியினால் நாம் நம்முடைய ஆவியில் பரிசுத்தமாக்கப்படும்போது, மாம்சத்தில் மேன்மைபாராட்டுதல் (1 கொரி. 1 : 29) என்று அழைக்கப்படுகிற சுயத்தின் சகல மேன்மைபாராட்டுதல்களையும் நாம் விட்டுவிட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை நாம் தரித்துக்கொண்டு (கொலோ.3:10) கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிறோம். கிறிஸ்து நமக்கு எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார் (கொலோ 3 : 11).

'இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்' (2 கொரி. 5 : 16) என்று அப். பவுல் கூறுகிறார். இது நம்முடைய மனதில் அல்லது ஆவியில் மாம்சத்தின்படி ஒருவரையும் அறியாதிருப்பதை, அதாவது, ஜாதி, நிறம், பாஷை, தேசம், அல்லது ஒருவருடைய பெலவீனம் இவைகளின்படி ஒருவரையும் அறியாமலிருப்பதைக் காட்டுகிறது. இது நம்முடைய மனதில் அல்லது ஆவியில் நாம் பரிசுத்தமாக்கப்படுதலாகும். நம் ஆவியில் நாம் பரிசுத்தமாக்கப்படும்போது, தேவனுடைய மகிமையின் அறிவாகிய ஒளி நம் இருதயங்களில் பிரகாசிக்கிறது (2 கொரி. 4 : 6). இது கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மையாயிருக்கிறது. இதினிமித்தம் மாம்சீகமும் சுயமுமான யாவற்றையும் நாம் குப்பையாக எண்ண ஆயத்தமாயிருக்கிறோம். இதை அன்றாடம் நம் ஆவியில் நாம் பயிற்சிக்கும்போது ஜீவனிலும் சமாதானத்திலும் பெருகுகிறவர்களாயிருப்போம் (ரோமர் 8 : 6). இவ்விதமாய் நாம் மாம்சத்தின்படி ஒருவரையும் அறியாமலிருந்து சுயத்தை மேற்கொள்ளும்போது, எதிர்பாராத சில பாடுகளின் வழியாகப்போக நேரிடலாம். ஆனால் தங்கள் ஆவியில் பரிசுத்தமாக்கப்பட வாஞ்சித்து ஒப்புக்கொடுக்கிறவர்கள் பாடுபடும் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்வார்கள், எனவே இவர்களுக்கு ஆவியில் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பாரமாயிராது.

**2.** நம் சரீரம் பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதலைப் பற்றி விரிவாக எழுது.

பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டுவந்த சர்வாங்க தகனபலி, ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நம்முடைய சரீரம், பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படும்போது நாம் பெற்றுக்கொள்ளும் அனுபவத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது. சர்வாங்க தகனபலியில், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து புறப்பட்ட அக்கினி, பலி முழுவதையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கினது. அவ்விதமே நம் நாவில் அக்கினியாகக் (அக்கினிமயமான நாவுகளாக) காணப்படும் பரிசுத்த ஆவியின் அக்கினி, நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் நாம் ஒப்புக்கொடுக்கும்போது. நம் சரீரம் முழுவதையும் பரிசுத்தமாக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. இவ்வக்கினி சகல மாம்ச சுபாவங்களையும், சரீரத்தின் இச்சைகளையும் சுட்டெரித்து, ஒரு மனுஷனாலும் அடக்கக்கூடாததும், முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தக் கூடியதுமாகிய நாவையுங்கூட பரிசுத்தமாக்கக் கூடியதாயிருக்கிறது (யாக். 3 : 6 – 8; ரோமர் 12 : 1; 15 : 15)

நம் சரீரம் பூரண பரிசுத்தத்தை அடையும்படி ஆவியினாலே மாம்சத்தின் கிரியைகளை அழிக்கவேண்டும். அப்படிச் செய்தால் நாம் பிழைப்போம் (ரோமர் 8 : 13). பாவம், வியாதி, சாபம், மரணம் ஆகியவை நம் சரீரங்களை ஆளாமல் இருப்பதற்கு பரிசுத்த ஆவியானவருக்கு நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் அன்றாடம் ஒப்புக்கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் சாவுக்கேதுவான நம் சரீரத்தின் அவயவங்களை அவர் தம் ஆவியினால் உயிர்ப்பிப்பார். நம் பெலவீனத்தில் அவர் பெலன் பூரணமாய் விளங்கும்.

ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலின் மூலம் பழைய மனுஷனை நாம் களைந்து மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம் (எபே. 4 : 24). அதன் பின்னர், நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்பட்டுப் பூரணத்திற்குக் கடந்து செல்லக்கூடியவர்களாகிறோம் (2 கொரி. 3 : 18).

## IV <u>*விரிவாகவும் தெளிவாகவும் விடையளி :*</u> (15 Marks)

**1.** பரிசுத்த ஆவியினால் நம் ஆவி, ஆத்துமா, சரீரம் பரிசுத்தமாக்கப்படுவதைக்குறித்து விரிவாகவும் தெளிவாகவும் எழுதுக.

<u>நமது ஆவி பரிசுத்தமாக்கப்படுதல் :</u>

ஆவி என்பது, சிந்தனைகள், கற்பனைகள், நோக்கங்கள், திட்டமிடுதல், அறிவு போன்றவற்றின் இருப்பிடமாகும். பரிசுத்த ஆவியினால் இவை பரிசுத்தமாக்கப்படவேண்டும். அப். பவுல், பிலிப்பியருக்கு எழுதும்போது, ''மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்துஇயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்'' என்று கூறுகிறார் (பிலி. 3 : 3). இவ்வேதபகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் 'மாம்சம'' என்பது, மனுஷனிலிருக்கும் 'சுயமாகும்'. பரிசுத்த ஆவியினால் நாம் நம்முடைய ஆவியில் பரிசுத்தமாக்கப்படும்போது, மாம்சத்தில் மேன்மைபாராட்டுதல் (1 கொரி. 1 : 29) என்று அழைக்கப்படுகிற சுயத்தின்

சகல மேன்மைபாராட்டுதல்களையும் நாம் விட்டுவிட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை நாம் தரித்துக்கொண்டு (கொலோ.3:10) கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிறோம். கிறிஸ்து நமக்கு எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார் (கொலோ 3 : 11).

'இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம் ' (2 கொரி. 5 : 16) என்று அப். பவுல் கூறுகிறார். இது நம்முடைய மனதில் அல்லது ஆவியில் மாம்சத்தின்படி ஒருவரையும் அறியாதிருப்பதை, அதாவது, ஜாதி, நிறம், பாஷை, தேசம், அல்லது ஒருவருடைய பெலவீனம் இவைகளின்படி ஒருவரையும் அறியாமலிருப்பதைக் காட்டுகிறது. இது நம்முடைய மனதில் அல்லது ஆவியில் நாம் பரிசுத்தமாக்கப்படுதலாகும். நம் ஆவியில் நாம் பரிசுத்தமாக்கப்படும்போது, தேவனுடைய மகிமையின் அறிவாகிய ஒளி நம் இருதயங்களில் பிரகாசிக்கிறது (2 கொரி. 4 : 6). இது கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மையாயிருக்கிறது. இதினிமித்தம் மாம்சீகமும் சுயமுமான யாவற்றையும் நாம் குப்பையாக எண்ண ஆயத்தமாயிருக்கிறோம். இதை அன்றாடம் நம் ஆவியில் நாம் பயிற்சிக்கும்போது ஜீவனிலும் சமாதானத்திலும் பெருகுகிறவர்களாயிருப்போம் (ரோமர் 8 : 6). இவ்விதமாய் நாம் மாம்சத்தின்படி ஒருவரையும் அறியாமலிருந்து சுயத்தை மேற்கொள்ளும்போது, எதிர்பாராத சில பாடுகளின் வழியாகப்போக நேரிடலாம். ஆனால் தங்கள் ஆவியில் பரிசுத்தமாக்கப்பட வாஞ்சித்து ஒப்புக்கொடுக்கிறவர்கள் பாடுபடும் சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்வார்கள், எனவே இவர்களுக்கு ஆவியில் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது பாரமாயிராது.

<u>நமது ஆத்துமா பரிசுத்தமாக்கப்படுதல் :</u>

ஆத்துமாவானது எழுச்சி, பாசம், விருப்பம், வாஞ்சை, நாடுதல், தேடுதல், உணர்வு இவற்றின் இருப்பிடமாகும். அன்பு, பரிசுத்தமான உணர்வுகள், வாஞ்சைகள் இவற்றிற்காக அது சிருஷ்டிக்கப்பட்டது. பரிசுத்தமாக்கப்படாத ஆத்துமா, தன் சுய இச்சையினால் இலகுவாக இழுக்கப்பட்டு, அந்நிய அன்பினாலும் உலகத்தின் பொருட்களாலும் மயக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டு (ரோமர் 5 : 5), நம்முடைய ஆத்துமா சுயநலமான வாஞ்சைகள், மாம்ச அன்பு ஆகியவை நீங்க பரிசுத்தமாக்கப்படுகிறது. பரி. பவுல் எபேசியருக்கு எழுதும்போது, அறிவுக்கெட்டாத அன்பைக்குறித்துக் கூறுகிறார் (எபே. 3 : 19). பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு, அவருடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் இவற்றில் நாம் வளர ஆரம்பிக்கும்போது (எபே. 3 : 18), சுயம் அல்லது மாம்சீக அன்புக்கு நம்மில் இடமில்லை. நம் ஆத்துமாவானது முற்றிலும் தேவனுடைய அன்புக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதால் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழுப் பலத்தோடும் கர்த்தரில் நாம் அன்புகூர்ந்து பூரண பரிசுத்தமாகுதலை அடையலாம்.

<u>நமது சரீரம் பரிசுத்தமாக்கப்படுதல் :</u>

பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்டுவந்த சர்வாங்க தகனபலி, ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நம்முடைய சரீரம், பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்படும்போது நாம் பெற்றுக்கொள்ளும் அனுபவத்திற்கு நிழலாட்டமாயிருக்கிறது. சர்வாங்க தகனபலியில், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து புறப்பட்ட அக்கினி, பலி முழுவதையும் சுட்டெரித்துச் சாம்பலாக்கினது. அவ்விதமே நம் நாவில் அக்கினியாகக் (அக்கினிமயமான நாவுகளாக) காணப்படும் பரிசுத்த ஆவியின் அக்கினி, நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் நாம் ஒப்புக்கொடுக்கும்போது. நம் சரீரம் முழுவதையும் பரிசுத்தமாக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. இவ்வக்கினி சகல மாம்ச சுபாவங்களையும், சரீரத்தின் இச்சைகளையும் சுட்டெரித்து, ஒரு மனுஷனாலும் அடக்கக்கூடாததும், முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தக் கூடியதுமாகிய நாவையுங்கூட பரிசுத்தமாக்கக் கூடியதாயிருக்கிறது (யாக். 3 : 6 – 8; ரோமர் 12 : 1; 15 : 15)

நம் சரீரம் பூரண பரிசுத்தத்தை அடையும்படி ஆவியினாலே மாம்சத்தின் கிரியைகளை அழிக்கவேண்டும். அப்படிச் செய்தால் நாம் பிழைப்போம் (ரோமர் 8 : 13). பாவம், வியாதி, சாபம், மரணம் ஆகியவை நம் சரீரங்களை ஆளாமல் இருப்பதற்கு பரிசுத்த ஆவியானவருக்கு நம் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்தையும் அன்றாடம் ஒப்புக்கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் சாவுக்கேதுவான நம் சரீரத்தின் அவயவங்களை அவர் தம் ஆவியினால் உயிர்ப்பிப்பார். நம் பெலவீனத்தில் அவர் பெலன் பூரணமாய் விளங்கும்.

ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலின் மூலம் பழைய மனுஷனை நாம் களைந்து மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம் (எபே. 4 : 24). அதன் பின்னர், நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்பட்டுப் பூரணத்திற்குக் கடந்து செல்லக்கூடியவர்களாகிறோம் (2 கொரி. 3 : 18).

********************

# ஜெய ஜீவியம்

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** கிறிஸ்தவ ஜீவியத்தின் இலக்கு எது? தேவன் ஏன் விழுந்துபோன மனிதனில் தொடர்ந்து கிரியைசெய்து வருகிறார்?

கிறிஸ்தவ ஜீவியத்தின் இலக்கு பூரணமான ஜெயஜீவியம் ஆகும். விழுந்துபோன மனிதன் தம்மோடு நித்தியத்தில் ஆளுகைசெய்ய தகுதியுள்ளவனாய் விளங்கும்படி அவனுக்கு மறுபடியும் ஜெய ஜீவியத்தைக் கொடுக்கும்படி தேவன் தொடர்ந்து கிரியை செய்து கொண்டிருக்கிறார் (பாடத்திட்டம்).

**2.** ஜெய ஜீவியம் என்றால் என்ன?

ஜெய ஜீவியம் என்பது ஒருவர் தனது ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் விரோதமாகப் பாவம். சாத்தான், உலகம் ஆகியவற்றின் மூலம் வரும் சோதனைகளையும் பரீட்சைகளையும் ஜெயித்து அவற்றினின்று ஜெயங்கொண்டவராக வெளியே வருவது ஆகும் (பாடத்திட்டம்).

**3.** கர்த்தராகிய இயேசு எவ்விதத்தில் எப்பொழுது சோதிக்கப்பட்டார்?

கர்த்தராகிய இயேசு எல்லாவிதத்திலும் அதாவது, எண்ணம், வார்த்தை, சித்தம், செயல், ஆகியவற்றில் சோதிக்கப்பட்டு. பரீட்சிக்கப்பட்டு, பரிசோதித்தறியப்பட்டார். அவர் அவையெல்லாவற்றையும் ஜெயித்தார் (எபி 4:15)

கர்த்தராகிய இயேசு தம் ஊழியத்தின துவக்கம் முதல் தாம் சிலுவையில் மரிக்கும் வரை சோதிக்கப்பட்டார். இவ்வெல்லா சோதனைகளிலும் அவர் ஜெயம் பெற்றார். (வெளி 3:21)

**4.** நாம் ஏன் சோதிக்கப்படவேண்டும்?சோதனையில் நமக்கு உதவி செய்பவர் யார்?

நாம் ஜெயங்கொண்டவர்கள் என்று நிரூபிக்கப்பட நம் ஜீவியத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் சோதிக்கப்பட வேண்டும்.

நாம் பலவித சோதனைகளின் வழியாகக் கடந்து செல்லும் போது,அவற்றை நாம் ஜெயிக்கும்படி நமக்கு உதவி செய்ய கர்த்தராகிய இயேசு நம்முடனேகூட இருக்கிறார். (எபி 2:18)

**5.** இஸ்ரவேலர் கானான் தேசத்தை சுதந்தரிக்கும் முன்பு அவர்கள் யுத்தம்செய்து ஜெயிக்க வேண்டியதாயிருந்த ஏழு ஜாதிகளும், முப்பத்தொரு இராஜாக்களும் எதற்கு நிழலாயிருக்கின்றன?

நாம் நம்முடைய பரம சுதந்தரத்தைச் சொந்தமாக்குவதற்காக ஜெயிக்கவேண்டிய சோதனைகளுக்கு நிழலாயிருக்கின்றன (பாடத்திட்டம்).

**6.** நமக்கு விரோதமாக வரும் சோதனைகளும் பரீட்சைகளும் முக்கியமாக எந்த முகாந்தரங்கள் மூலம் வருகின்றன?

*i)* பாவம்
*ii)* சாத்தான்
*iii)* உலகம் (பாடத்திட்டம்).

**7.** பாவ சுபாவத்திலிருந்து நாம் விடுதலையாக்கப்படும்படியாக நாம் என்ன செய்யவேண்டும்?

ஞானஸ்நானத்தில் இயேசுவின் மரணத்துடன் இணைக்கப்படவேண்டும் (ரோ 6:4,5).

**8.** உண்மையாக ஜெய ஜீவியம் எங்கு ஆரம்பிக்கிறது? ஜெய ஜீவியம் செய்யும்படியாக நாம் யாரால் வழிநடத்தப்படவேண்டும்?

ஞானஸ்நானத்தில் பாவம் அல்லது பாவ சுபாவம் மாம்சத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு (ரோமர் 6 : 6, 7, 12, 14 ; 8 : 3) அதுமுதல் உண்மையாக ஜெய ஜவீயம் ஆரம்பிக்கிறது.

ஜெய ஜவியம் செய்யும்படியாக நாம் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படவேண்டும் (ரோமர் 8 : 14).

**9.** சாத்தானின் மறுபெயர்கள் யாவை?

(i) குற்றஞ்சாட்டுகிறவன்
(ii) சோதனைக்காரன்
(iii) மரணத்திற்கு அதிகாரி
(iv) கொலைபாதகன் (பாடத்திட்டம்).

**10.** எவற்றின் மூலம் நாம் சாத்தானை ஜெயிக்கலாம்?

(i) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்
(ii) நம் சாட்சியின் வசனத்தினால்
(iii) மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி நம் ஜீவனையும் பாராதிருப்பதன் மூலம் சாத்தானை ஜெயிக்கலாம். (வெளி. 12 : 11).

**11.** நம்மை குற்றஞ்சாட்டுகிற சாத்தானிடம் எப்போது நாம் தைரியமாகச் சவால்விடலாம்?

நாம் நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்துடன் நம்முடைய குறைகளுக்காக உண்மையாக மனஸ்தாபப்படும்போது, இயேசுவின் இரத்தம் நமக்காகப் பரிந்துபேசி, நம்மை மன்னித்து சுத்திகரித்து, நீதிமான்களாக்குகிறது. அப்போது நாம் பிசாசிடம் தைரியமாகச் சவால்விடலாம் (ரோமர் 8 : 33).

**12.** சாட்சியின் வசனத்தின்மூலம் சோதனைக்காரனாகிய சாத்தனை நாம் எவ்வாறு ஜெயிக்க முடியும்?

தேவனுடைய வசனத்தை நம்முடைய அனுபவமாக்கி, சாத்தானை எதிர்க்கும்படியாக, அதை ஆவியின் பட்டயமாக நாம் உபயோகிக்கக் கற்றுக்கொள்ளும்போது சோதனைக்காரனாகிய சாத்தானை நம்மால் ஜெயிக்கக்கூடும் (1 யோவான் 2 : 14 – 16).

**13.** மரணத்திற்கு அதிகாரியாகிய சாத்தானை நாம் எவ்வாறு ஜெயிக்கலாம்?

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி நம் ஜீவனையும் பாராமல் அதை இழக்க ஆயத்தமாயிருந்து, நாம் நம்மீது நம்பிக்கை வையாமல், மரித்தோரை உயிர்ப்பிக்கிற தேவனிலும் தம்முடைய மரணத்தினாலே சாத்தானை அழித்தவரும், நமக்கு ஜீவனையும் பரிபூரண ஜீவனையும் தரும்படியாய் (யோவான் 10 : 10) என்றென்றைக்குமாய் உயிரோடிருக்கிறவருமாகிய கர்த்தராகிய இயேசுவிலும் நம்பிக்கை வைப்போமாயின், நாம் மரணத்திற்கு அதிகாரியாகிய சாத்தானை ஜெயிக்கலாம்.

**14.** நாம் எப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாகிறோம்? நாம் எப்பொழுது விசுவாசத்தினால் தேவ புத்திரராகிறோம்?

நாம் இரட்சிக்கப்பட்டு, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (யோவான் 1 : 12).

ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு விசுவாசத்தினால் தேவபுத்திரராகிறோம் (கலா. 3 : 26, 27).

**15.** உலகத்தின் ஆவி வேறு எந்தப் பெயரில் அழைக்கப்படுகிறது? அது ஜனங்களுக்குள் நடப்பிக்கும் தீமைகள் யாவை?

உலகத்தின் ஆவி லௌகீகம் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆவிதான் ஜனங்களை மற்றவர்களைப் பார்த்து அவர்கள் செய்வதுபோலவே காரியங்களைச் செய்யச்செய்வதும் (imitate), தீமையான பழக்கங்கள், பாரம்பரியங்கள், உலக வழிபாடுகள், உலக நாகரீகங்கள் ஆகியவற்றைப் பின்பற்றச் செய்வதும் ஆகும்.

**16.** நாம் எவ்வாறு உலகத்தின் ஆவி / லௌகீகத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறோம்?

நாம் கர்த்தரோடும் பரிசுத்தவான்களோடும் ஐக்கியமாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவஅன்பில் இவ்விதம் வளரும்போது அவருடைய அன்பின் அக்கினி நம்மிலுள்ள லௌகீகத்தின் சகல சுவடுகளையும் சுட்டெரிக்கிறது. இவ்விதம் நாம் உலகத்தின் ஆவியிலிருந்து/லௌகீகத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறோம்.

**17.** ஜெய ஜீவியம் செய்ய நம் ஜீவியத்திற்குத் தேவையானவைகள் எவை?

i) இயேசுவின் இரத்தம்
ii) தேவனுடைய வசனம்
iii) விசுவாசம்
iv) தேவ அன்பு
v) அபிஷேகத்தின் வல்லமை

vi) ஜெபத்தில் தரித்திருக்கும் ஜீவியம்
vii) கிறிஸ்துவுக்குள் மறைந்திருத்தல்
viii) பாடுபடுகிற சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுதல்
ix) தேவ சித்தம் செய்தல் (பாடத்திட்டம்).

## II *சுருக்கமான விடையளி*: (5 Marks)

**1.** நாம் பாவத்தை எவ்வாறு ஜெயிக்கலாம்?

ஒவ்வொரு பாவத்திற்கும் பின்னாகக் கிரியைசெய்கிற ஒரு பொல்லாத ஆவி உண்டு. இந்த ஆவி நம்மை அடிமைத்தனத்தின்கீழ் கொண்டுவருகிறது (யோவான் 8 : 34). நாம் நம் பாவங்களை அறிக்கையிடும்போது கர்த்தராகிய இயேசு தம்முடைய இரத்தத்தினாலே நம்மைச் சுத்திகரித்து மீட்டுக்கொண்டு, நம்மை விடுதலையாக்குகிறார் (யோவான் 8 : 36). மேலும், பாவ சுபாவத்திலிருந்து நாம் விடுதலையாக்கப்படும்படியாக ஞானஸ்நானத்தில் நாம் கர்த்தராகிய இயேசுவின் மரணத்துடன் இணைக்கப்படவேண்டும் (ரோமர் 6 : 4, 5). இங்கு (ஞானஸ்நானத்தில்) பாவம் அல்லது பாவ சுபாவம் மாம்சத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டு (ரோமர்6:6,7,12,14 ; 8:3), அதுமுதல் உண்மையில் ஜெய ஜீவியம் ஆரம்பிக்கிறது. அதன்பின்னர் நம்முடைய மனதில் பாவத்திற்கு எதிர்த்து நிற்கவும், நீதியை நிறைவேற்ற அல்லது நமது சரீரத்தில் தேவசித்தம் செய்யும்படியாகவும் (எபி.12:4;ரோமர்6:16). நாம் நம்மைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் தோடர்ந்து எண்ணிக்கொண்டிருந்து, நம் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் (ரோமர்6:11,13). அப்படிப்பட்ட ஜெய ஜீவியம் செய்யும்படியாக நாம் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படவேண்டும் (ரோமர் 8 : 14)

**2.** நாம் ஜெயஜீவியம் செய்வதினால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் யாவை?

*i)* நாம் ஜெயஜீவியம் செய்யும்போது கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகராகிறோம்.
*ii)* பரலோக சுதந்தரங்களும், பிரதிபலன்களும், தேவ சிங்காசனமும், சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் உரிமையும் ஜெயங்கொண்டவர்களுக்குமாத்திரமே அளிக்கப்பட்டிருக்கிறது [வாக்குப்பண்ணப்பட்டுள்ளது] (வெளி. 2 :7, 11, 17,26-28; 3 :5, 12, 21).
*iii)* ஜெயஜீவியம் நம்மைக் கிறிஸ்துவுக்குள் எப்போதும் வெற்றி சிறக்கப்பண்ணுகிறது (2 கொரி. 2 : 14).
*iv)* ஜெயஜீவியம் நம்மை விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடச் செய்கிறது.
*v)* ஜெயஜீவியம், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளச் செய்கிறது.
*vi)* கர்த்தராகிய இயேசு வரும்போது ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட ஆயத்தமாயிருக்கும்படியாக ஜெயஜீவியம் நமக்கு உதவிசெய்கிறது.

## III *விரிவான விடையளி :* (10 Marks)

**1.** சாத்தானை ஜெயிப்பது எப்படி என்பதை விவரித்து எழுதுக.

(a) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் :

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் நாம், சகோதரரைக் குற்றஞ்சாட்டுகிறவனாகிய சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12 : 10, 11). நாம் நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்துடன் நம்முடைய குறைகளுக்காக உண்மையாக மனஸ்தாபப்படும்போது, காத்தராகிய இயேசுவின் இரத்தம் நமக்காகப் பரிந்துபேசி, நம்மை மன்னித்து, சுத்திகரித்து, நீதிமான்களாக்குகிறது. அப்போது நாம் பிசாசிடம் தைரியமாகச் சவால் விடுக்கலாம் (ரோமர் 8 : 33).

(b) நம் சாட்சியின் வசனத்தினால் :

தேவனுடைய வசனத்தை நம்முடைய அனுபவமாக்கி, சாத்தானை எதிர்க்கும்படியாக, அதை ஆவியின் பட்டயமாக நாம் உபயோகிக்கக் கற்றுக்கொள்ளும்போது சோதனைக்காரனாகிய சாத்தானை நம்மால் ஜெயிக்கக்கூடும் (1 யோவான் 2 : 14 - 16).

(c) மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி நம் ஜீவனையும் பாராதிருப்பதன் மூலம்:

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி நம் ஜீவனையும் பாராமல் அதை இழக்க ஆயத்தமாயிருந்து, நாம் நம்மீது நம்பிக்கை வையாமல், மரித்தோரை உயிர்ப்பிக்கிற தேவனிலும் தம்முடைய மரணத்தினாலே சாத்தானை அழித்தவரும், நமக்கு ஜீவனையும் பரிபூரண ஜீவனையும் தரும்படியாய்

(யோவான் 10 : 10) என்றென்றைக்குமாய் உயிரோடிருக்கிறவருமாகிய கர்த்தராகிய இயேசுவிலும் நம்பிக்கை வைப்போமாயின், நாம் மரணத்திற்கு அதிகாரியாகிய சாத்தானை ஜெயிக்கலாம். கர்த்தராகிய இயேசு, "தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான் இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" என்றார் (யோவான் 12 : 25).

சாத்தானை எதிர்ப்பதற்காக, எல்லாவற்றிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிற ஜீவியமும் (யாக். 4 : 7), உபவாசமும் ஜெபமுமுள்ள ஜீவியமும் (மத். 17 : 21), விசுவாசத்தின் உறுதியும் (1 பேதுரு 5 : 9), முடிவாக கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலுள்ள வல்லமையில் விசுவாசமும் (மாற்கு 16 : 17) நமக்குத் தேவை.

**2.** நாம் உலகத்தை எவ்வாறு ஜெயிக்கலாம்?

உலகத்தில் ஜாதி, நிறம், தேசம், பாஷை போன்ற எல்லாவிதமான வித்தியாசங்களையும் நாம் காண்கிறோம். நாம் இரட்சிக்கப்பட்டு, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (யோவான் 1 : 12). அப்பொழுது இவ்வித்தியாசங்கள் நம்மைவிட்டு நீங்கத் துவங்குகின்றன (ரோமர் 2 : 28, 29). ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, விசுவாசத்தினால் தேவபுத்திரராகிறோம்; அப்பொழுது இப்படிப்பட்ட வித்தியாசங்கள் இன்னும் அதிகமாக அகற்றப்படுகின்றன (கலா. 3 : 26 – 28). பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தில் இவ்வித்தியாசங்கள் அறவே நீக்கப்பட்டு, நாமெல்லாரும் ஒரே சரீரமாக, அதாவது கிறிஸ்துவின் சரீரமாக மாற்றப்படுகிறோம் (1 கொரி. 12 : 13). கிறிஸ்து நமக்கு எல்லாரிலும் எல்லாமாகிறார் (கொலோ. 3 : 11).

உலகத்தின் ஆவி அல்லது லௌகீகம் என்றழைக்கப்படும் ஒன்று உண்டு. அதைக்குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், இந்த ஆவிதான் ஜனங்களை மற்றவர்களைப் பார்த்து அவர்கள் செய்வதுபோலவே காரியங்களைச் செய்யச்செய்வதும் (imitate), தீமையான பழக்கங்கள், பாரம்பரியங்கள், உலக வழிபாடுகள், உலக நாகரீகங்கள் ஆகியவற்றைப் பின்பற்றச் செய்வதும் ஆகும். கர்த்தராகிய இயேசு இந்தப்பொல்லாத பிரபஞ்சத்தினின்று நம்மை விடுவிக்கும்படியாக மரித்தார் (கலா. 1 : 4). "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" என்று எழுதப்பட்டுள்ளது (யாக். 4 : 4). நாம் கர்த்தரோடும் பரிசுத்தவான்களோடும் ஐக்கியமாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவஅன்பில் இவ்விதம் வளரும்போது அவருடைய அன்பின் அக்கினி நம்மிலுள்ள லௌகீகத்தின் சகல சுவடுகளையும் சுட்டெரித்து, உலகத்தின் ஆவியிலிருந்து நம்மை முற்றிலும் விடுதலையாக்குகிறது.

## IV <u>*விரிவாகவும் தெளிவாகவும் விடையளி :*</u> (15 Marks)

**1.** ஜெயஜீவியம் என்றால் என்ன? சாத்தானையும் உலகத்தையும் ஜெயிப்பது எப்படி என்பதை விரிவாகவும் தெளிவாகவும் எழுது.

ஜெய ஜீவியம் என்பது ஒருவர் தனது ஆவிக்குரிய ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் விரோதமாகப் பாவம். சாத்தான், உலகம் ஆகியவற்றின் மூலம் வரும் சோதனைகைளையும் பரீட்சைகளையும் ஜெயித்து அவற்றினின்று ஜெயங்கொண்டவராக வெளியே வருவது ஆகும்.

<u>சாத்தானை ஜெயித்தல் :</u>

(a) <u>ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் :</u>

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் நாம், சகோதரரைக் குற்றஞ்சாட்டுகிறவனாகிய சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12 : 10, 11). நாம் நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்துடன் நம்முடைய குறைகளுக்காக உண்மையாக மனஸ்தாபப்படும்போது, காத்தராகிய இயேசுவின் இரத்தம் நமக்காகப் பரிந்துபேசி, நம்மை மன்னித்து, சுத்திகரித்து, நீதிமான்களாக்குகிறது. அப்போது நாம் பிசாசிடம் தைரியமாகச் சவால் விடுக்கலாம் (ரோமர் 8 : 33).

(b) <u>நம் சாட்சியின் வசனத்தினால் :</u>

தேவனுடைய வசனத்தை நம்முடைய அனுபவமாக்கி, சாத்தானை எதிர்க்கும்படியாக, அதை ஆவியின் பட்டயமாக நாம் உபயோகிக்கக் கற்றுக்கொள்ளும்போது சோதனைக்காரனாகிய சாத்தானை நம்மால் ஜெயிக்கக்கூடும் (1 யோவான் 2 : 14 – 16).

(c) <u>மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி நம் ஜீவனையும் பாராதிருப்பதன் மூலம்:</u>

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி நம் ஜீவனையும் பாராமல் அதை இழக்க ஆயத்தமாயிருந்து, நாம் நம்மீது நம்பிக்கை வையாமல், மரித்தோரை உயிர்ப்பிக்கிற தேவனிலும் தம்முடைய மரணத்தினாலே சாத்தானை அழித்தவரும், நமக்கு ஜீவனையும் பரிபூரண ஜீவனையும் தரும்படியாய் (யோவான் 10 : 10) என்றென்றைக்குமாய் உயிரோடிருக்கிறவருமாகிய கர்த்தராகிய இயேசுவிலும் நம்பிக்கை வைப்போமாயின், நாம் மரணத்திற்கு அதிகாரியாகிய சாத்தானை ஜெயிக்கலாம். கர்த்தராகிய இயேசு, “தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான் இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்” என்றார் (யோவான் 12 : 25).

சாத்தானை எதிர்ப்பதற்காக, எல்லாவற்றிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிற ஜீவியமும் (யாக். 4 : 7), உபவாசமும் ஜெபமுமுள்ள ஜீவியமும் (மத். 17 : 21), விசுவாசத்தின் உறுதியும் (1 பேதுரு 5 : 9), முடிவாக கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலுள்ள வல்லமையில் விசுவாசமும் (மாற்கு 16 : 17) நமக்குத் தேவை.

<u>உலகத்தை ஜெயித்தல் :</u>

உலகத்தில் ஜாதி, நிறம், தேசம், பாஷை போன்ற எல்லாவிதமான வித்தியாசங்களையும் நாம் காண்கிறோம். நாம் இரட்சிக்கப்பட்டு, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்போது தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (யோவான் 1 : 12). அப்பொழுது இவ்வித்தியாசங்கள் நம்மைவிட்டு நீங்கத் துவங்குகின்றன (ரோமர் 2 : 28, 29). ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு, விசுவாசத்தினால் தேவபுத்திரராகிறோம்; அப்பொழுது இப்படிப்பட்ட வித்தியாசங்கள் இன்னும் அதிகமாக அகற்றப்படுகின்றன (கலா. 3 : 26 - 28). பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தில் இவ்வித்தியாசங்கள் அறவே நீக்கப்பட்டு, நாமெல்லாரும் ஒரே சரீரமாக, அதாவது கிறிஸ்துவின் சரீரமாக மாற்றப்படுகிறோம் (1 கொரி. 12 : 13). கிறிஸ்து நமக்கு எல்லாரிலும் எல்லாமாகிறார் (கொலோ. 3 : 11).

உலகத்தின் ஆவி அல்லது லௌகீகம் என்றழைக்கப்படும் ஒன்று உண்டு. அதைக்குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், இந்த ஆவிதான் ஜனங்களை மற்றவர்களைப் பார்த்து அவர்கள் செய்வதுபோலவே காரியங்களைச் செய்யச்செய்வதும் (imitate), தீமையான பழக்கங்கள், பாரம்பரியங்கள், உலக வழிபாடுகள், உலக நாகரீகங்கள் ஆகியவற்றைப் பின்பற்றச் செய்வதும் ஆகும். கர்த்தராகிய இயேசு இந்தப்பொல்லாத பிரபஞ்சத்தினின்று நம்மை விடுவிக்கும்படியாக மரித்தார் (கலா. 1 : 4). “உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை” என்று எழுதப்பட்டுள்ளது (யாக். 4 : 4). நாம் கர்த்தரோடும் பரிசுத்தவான்களோடும் ஐக்கியமாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் தேவஅன்பில் இவ்விதம் வளரும்போது அவருடைய அன்பின் அக்கினி நம்மிலுள்ள லௌகீகத்தின் சகல சுவடுகளையும் சுட்டெரித்து, உலகத்தின் ஆவியிலிருந்து நம்மை முற்றிலும் விடுதலையாக்குகிறது.

*********************

வகுப்பு : 11

பாடம்-18

# புதிய எருசலேம்

(பகுதி 1)

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** புதிய எருசலேம் யாருக்குரிய வாசஸ்தலமாயிருக்கிறது?

புதிய எருசலேம், பூரணமாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு சபை அல்லது கிறிஸ்துவின் மணவாட்டியின் நித்திய வாசஸ்தலமாயிருக்கிறது (வெளி. 21 : 2).

**2.** இயேசு தம்முடைய மணவாட்டிக்காக ஆயத்தம்பண்ணுகிற இடமும், பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையும் எது? வசன ஆதாரம் தருக.

இயேசு தம் மணவாட்டிக்காக ஆயத்தம் பண்ணுகிற இடமும், பரலோகத்தில் நம் நம்பிக்கையும் புதிய எருசலேம் ஆகும் (யோவான் 14 : 2, 3 , கொலோ. 1 : 4).

**3.** பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்பட்ட மூன்று இடங்கள் யாவை? அவற்றில் புதிய எருசலேமுக்கு நிழலாயிருப்பது எது?

வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம்.

புதிய எருசலேமுக்கு நிழலாயிருப்பது மகா பரிசுத்த ஸ்தலம் ஆகும்.

**4.** இயேசு சிலுவையில் மரித்தபோது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது எதைக் காட்டுகிறது? நாம் எப்போது ஆவிக்குரியபிரகாரமாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறோம்?

இப்போது ஆவிக்குரிய பிரகாரமாக நமக்குப் பரலோகத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் கிடைத்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது(எபி10:19,20)

நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறும்போது ஆவிக்குரிய பிரகாரமாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறோம் (எபே. 2 : 18).

**5.** பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டவர்கள் புதிய எருசலேமைச் சுதந்தரிக்க என்ன செய்ய வேண்டும்?

கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு வளரவேண்டும் (எபே. 4 : 11).

**6.** பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர்கள் எழுதப்படும் புஸ்தகத்தின் பெயர் என்ன?

ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகம் (வெளி. 21 : 27).

**7.** தேவன் எவற்றால் புதிய எருசலேமை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்?

பரிசுத்தவான்களுடைய பரிசுத்தமாக்கப்பட்ட சுபாவங்களாலும், பரீட்சிக்கப்பட்ட விசுவாசத்தாலும் தேவன் புதிய எருசலேமை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

**8.** நகரம் சுத்தப்பொன்னாயிருந்தது என்பதும் விலையேறப்பெற்ற கற்களும் ஆவிக்குரிய பிரகாரம் எதை வெளிப்படுத்துகிறது?

நகரம் சுத்தப்பொன்னாயிருந்தது என்பது (வெளி. 21 : 18), பரிசுத்தவான்களின் பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதுமான விசுவாசத்தையும், அஸ்திபாரங்களிலுள்ள விலையேறப்பெற்ற கற்கள், ஆவிக்குரிய பிரகாரம் கட்டி எழுப்பப்பட்ட அவர்களது திவ்விய சுபாவத்தையும் வெளிப்படுத்துகின்றன.

**9.** புதிய எருசலேமின் வடிவம் என்ன? புதிய எருசலேமின் மூலைக்கல் எங்கே வைக்கப்பட்டிருக்கிறது?

புதிய எருசலேம் கனசதுர வடிவமான நகரம். அதன் மூலைக்கல் சீயோனில் வைக்கப்பட்டிருக்கிறது (எபே. 2 : 19, 20; ஏசாயா 28 : 16; 1 பேதுரு 2 : 6).

**10.** புதிய எருசலேமின் மறுபெயர்கள் யாவை?

*i)* பரிசுத்த நகரம் ( வெளி, 21 : 2)
*ii)* புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டி (வெளி. 21 : 2)
*iii)* ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி (வெளி. 21 : 9)

**11.** புதிய எருசலேம் நகரத்தின் ஒவ்வொரு திசையிலும் அமைக்கப்பட்ட வாசல்கள் எத்தனை?

கிழக்கே மூன்று; வடக்கே மூன்று; தெற்கே மூன்று; மேற்கே மூன்று(வெளி.21 : 12).

**12.** நகரத்தின் மதிலுக்கு இருந்த அஸ்திபாரக் கற்கள் எத்தனை? அதின் மேல் யாருடைய, எத்தனை நாமங்கள் பதிந்திருந்தன?

*iv)* 12 அஸ்திபாரங்கள்
*v)* 12 அப்போஸ்தலருடைய 12 நாமங்கள் பதிந்திருந்தன (வெளி. 21 : 14).

13. புதிய எருசலேம் நகரத்தின் அமைப்பு என்ன? அதின் அளவுகள் என்ன?
புதிய எருவலேம் நகரத்தின் அமைப்பு சதுரமாயிருந்தது; அதின் அகலமும் நீளமும் உயரமும் முறையே சமமாக பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது (வெளி,21: 16)

14. புதிய எருசலேம் நகரத்தின் மதிலின் அளவு என்ன?
தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்று நாற்பத்து நான்கு முழமாயிருந்தது (வெளி. 21 : 17).

15. நகரத்தின் மதில் எந்நதக் கல்லினால் கட்டப்பட்டிருந்தது?
வச்சிரக்கல்லினால் கட்டப்பட்டிருந்தது (வெளி. 21 : 18).

16. நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் எதினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன?
சகலவித இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன (வெளி. 21 : 19).

17. பன்னிரண்டு அஸ்திபாரக்கற்களின் பெயர்களை எழுது.
முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திரநீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழுாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே.

18. தெளிந்த பளிங்குபோலச் சுத்தப் பொன்னாயிருந்தது எது?
நகரத்தின் வீதி (வெளி. 21 : 21).

19. புதிய எருசலேம் நகரத்தில் முத்துக்களாயிருந்தவை எவை?
12 வாசல்கள் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது (வெளி, 21 : 21).

20. புதிய எருசலேமின் வாசல்கள் எப்போது அடைக்கப்படுவதில்லை? ஏன்?
அங்கே இராக்காலம் இல்லாதபடியால் அதன் வாசல்கள் அடைக்கபடுவதே இல்லை (வெளி. 21 : 25).

21. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிற நதி எப்படிப்பட்டதாக இருந்தது?
அது பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி(வெளி.22 : 1).

22. நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரைகளிலும் இருக்கும் விருட்சத்தின் பெயர் என்ன? அது எத்தனை விதமான கனிகளைக் கொடுக்கும்?
ஜீவ விருட்சம் ; பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் (வெளி. 22 : 2).

23. ஜீவ விருட்சம் தன் கனியைக் கொடுக்கும் காலவரை என்ன?
மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும் (வெளி. 22 : 2).

24. ஜீவ விருட்சத்தின் இலைகள் எதற்கு ஏதுவானவைகள்?
ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள் (வெளி. 22 : 2).

25. புதிய எருசலேம் நகரத்தின் பிரகாசம் எவற்றைப்போல இருந்தது?
புதிய எருசலேம் நகரத்தின் பிரகாசம் விலையுயர்ந்த இரத்தினக் கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது(வெளி.21: 11)

26. புதிய எருசலேம் நகரத்தைப் பிரகாசிக்கச் செய்தது எது? அதன் விளக்கு யார்?
தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசித்தது.
ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு (வெளி. 21 : 23).

27. புதிய எருசலேம் நகரத்தின் வெளிச்சத்தில் நடப்பவர்கள் யார்? அந்த நகரத்திற்குள் மகிமையையும் கனத்தையும் கொண்டுவருபவர்கள் யார்?
இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் அதின் வெளிச்சத்தில் நடப்பார்கள்; பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள் (வெளி. 21 : 24).

## II <u>*விரிவாகவும் தெளிவாகவும் விடையளி :*</u> (15 Marks)

1. புதிய எருசலேமைப் பற்றிய பொதுவான வர்ணனையை விவரித்து தெளிவாக எழுதுக.
1. <u>நகரத்தின் பிரகாசமும் மகிமையும் :</u>
    i. நகரத்தின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப் போலவும், பளிங்குனொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது (வெளி. 21 : 11).
    ii. நகரத்திற்கு வெளிச்சத்தைக் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு (வெளி. 21 : 23).

iii. இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் இராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள்(வெளி21:24).

iv. அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள் (வெளி. 22 : 5).

2. நகரத்தின் அலங்காரம் :

யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்திலின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது (வெளி. 21 : 2).

3. நகரத்தின் மறுபெயர்கள் :

i. பரிசுத்த நகரம் (வெளி. 21 : 2)

ii. தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது (வெளி. 21 : 2).

iii. ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி (வெளி. 21 : 9).

4. நகரத்தின் மதில்கள் :

i. நகரத்திற்குப் பெரிதும் உயரமுமானன மதில் இருந்தது (வெளி. 21 : 12).

ii. நகரத்தின் மதிலுக்கு பன்னிரண்டு அஸ்திபாரக்கற்களிருந்தன. அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன (வெளி. 21 : 14).

iii. என்னுடனே பேசினவன், நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான். (வெளி. 21 : 15).

iv. அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது (வெளி. 21 : 17).

v. அதின் மதில்கள் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது. (வெளி. 21 : 18).

5. நகரத்தின் வீதி :

நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குப்போலச் சுத்தப் பொன்னாயிருந்தது(வெளி.21:21)

6. நகரத்தின் வாசல்கள் :

i. நகரத்திற்கு கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கு மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன (வெளி. 21 : 12).

ii. பன்னிரண்டு வாசல்களும் பன்னரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது (வெளி. 21 : 21).

iii. அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை. (வெளி. 21 : 25).

7. நகரத்தின் அளவுகள் :

i. நகரம் சதுரமாயிருந்தது. அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது. ...... அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது (வெளி. 21 : 16).

ii. அவன் அதின் மதிலை அளந்தபோது, அது தூதனுடைய அளவாகிய மனுஷ அளவின்படியே நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது (வெளி. 21 : 17).

8. நகரத்தின் அஸ்திபாரங்கள் :

i. நகரத்தின் மதிலுக்கு பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன. அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன (வெளி. 21 : 14).

ii. நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திரநீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி.

9. நகரத்தின் ஜீவத்தண்ணீருள்ள நதி :

i. பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தார் (வெளி. 22 : 1).

ii. நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் கரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தில் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமாவதற்கு ஏதுவானவைகள் (வெளி. 22 : 2).

10. தேவ சிங்காசனம் :

தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்(வெளி. 22:3).

************

வகுப்பு : 11

பாடம்-19

# புதிய எருசலேம்

(பகுதி II)

**I** *ஓரிரு வாக்கியங்களில் விடையளி* : (2 Marks)

**1.** நித்தியத்தில் யார் கிறிஸ்துவின் மணவாட்டியாவார்கள்?

இரட்சிக்கப்பட்டு, முழுக்கு ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவின் பூரணத்திற்கு வளருகிறவர்கள் மட்டுமே நித்தியத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியவார்கள் (பாடத்திட்டம்).

**2.** புதிய எருசலேமை சுதந்தரிக்கிறவர்கள் எவற்றில் உறுதியாக தரித்திருக்கவேண்டும்?

அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ஐக்கியத்திலும் உறுதியாக தரித்திருக்கவேண்டும் (பாடத்திட்டம்).

**3.** புதிய எருசலேமை சுதந்தரிக்கிறவர்கள் யார் யாருக்கெல்லாம் கீழ்ப்படியவேண்டும்?

தேவ ஆவியானவருக்கும், தேவனுடைய வசனத்திற்கும், தங்களுடைய ஆத்துமாக்களுக்காக் விழித்திருக்கும் தேவ ஊழியருக்கும் கீழ்ப்படியவேண்டும். (ரோமர் 8 : 14 ;அப். 20 : 32; எபி. 13 : 17).

**4.** கிறிஸ்துவின் மணவாட்டியாகத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிறவர்களுக்கு தேவையானவைகள் யாவை?

(அல்லது)

புதிய எருசலேமின் பெரிதும் உயரமுமான மதில் எவைகளைக் காட்டுகிறது?

ஜெப ஜீவியத்தையும்' (ஏசா. 62 : 6), வேறுபாட்டின் ஜீவியத்தையும் காட்டுகிறது (பாடத்திட்டம்).

**5.** புதிய எருசலேம் 'பரிசுத்த நகரம்' என்று அழைக்கப்படுவது ஏன்?

புதிய எருசலேமைச் சுதந்தரிக்கிறவர்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்க வேண்டியதால் (1 தெச. 5 : 23), இது 'பரிசுத்த நகரம" என்று அழைக்கப்படுகிறது.

**6.** புதிய எருசலேமில் 'தீட்டுள்ளது ...... ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை' - குறிப்பு வரைக.

நாம் புதிய எருசலேமில் பிரவேசிக்க வேண்டுமானால், எல்லா அசுத்தங்களினின்றும் வேறுபிரிக்கப்பட்டவர்களாகவும், சகல அசுசிகளும் நீங்க சுத்திகரிக்கப்பட்டவர்களாகவும் (2 கொரி. 7 : 1) கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். எனவே தான் புதிய எருசலேமுக்கு தீட்டுள்ளது ஒன்றும் பரவேசிக்கமுடியாது என்று எழுதப்பட்டிருக்கிறது.

**7.** நமக்கு எவ்வெவற்றிற்கு விரோதமாக யுத்தம் உண்டு? அவற்றை ஜெயிக்கிறவர்கள் சுதந்தரித்துக்கொள்வது என்ன?

பாவம், வியாதி, சாத்தான், உலகம், மரணம் இவற்றிற்கு விரோதமாக நமக்கு யுத்தம் உண்டு. இவற்றை ஜெயிக்கிறவர்கள் புதிய எருசலேமில் தேவ சிங்காசனத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (வெளி. 3 : 21).

**8.** கிறிஸ்துவின் மணவாட்டி பூரணப்பட்டிருக்க வேண்டிய சுபாவங்கள் யாவை?

விசுவாசம், அன்பு, பரிசுத்தம், தேவ சித்தம் செய்தல் ஆகிய நான்கு சுபாவங்களில் பூரணப்பட்டிருக்கவேண்டும் (யாக். 2 : 22; 1 யோவான் 4 : 17,18 ; 2 கொரி 7 : 1; கொலோ. 4 : 12).

**9.** புதிய எருசலேம் 'சதுரமாயிருந்தது' என்று ஏன் சொல்லப்பட்டுள்ளது?

கிறிஸ்துவின் மணவாட்டி விசுவாசம், அன்பு, பரிசுத்தம், தேவ சித்தம் செய்தல் ஆகிய நான்கு சுபாவங்களிலும் பூரணப்பட்டிருக்கவேண்டும் (யாக். 2 : 22; 1 யோவான் 4 : 17,18 ; 2 கொரி. 7 : 1; கொலோ. 4 : 12). ஆகவேதான், புதிய எருசலேம் சதுரமாயிருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது.

**10.** ‘எடுத்துக்கொள்ளப்படுதல் ’ என்றால் என்ன?

கிறிஸ்துவின் மணவாட்டி அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுகிறாள். இது, ‘எடுத்துக்கொள்ளப்படுதல் ’(rapture) என்று அழைக்கப்படுகிறது (பாடத்திட்டம்).

**11.** கிறிஸ்துவின் சபை இயேசுவின் இரண்டாம் வருகைக்காக எவ்விதம் காத்துக்கொண்டிருக்கவேண்டும்?

ஒரு மணவாட்டி தன் மணவாளனுக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருப்பதுபோல, கிறிஸ்துவின் சபையானது தேவ அன்பினால் நிறைந்து தன் மணவாளனாகிய கர்த்தராகிய இயேசுவின் இரண்டாம் வருகைக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கவேண்டும் (பாடத்திட்டம்).

## II *சுருக்கமான விடையளி*: (5 Marks)

**1.** புதிய எருசலேமை சுதந்தரிக்கிறவர்கள் ஏன் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் ஐக்கியத்திலும் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும்?

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிற எல்லா சபைகளும் கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்தமுடியாது. எபேசியர் 2 : 20 - இல் கூறப்பட்டிருப்பதைப் போன்று நாம் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டி எழுப்பப்பட வேண்டும். இந்த உத்தியோகஸ்தர்கள் சபையின் பூரணத்திற்காக அளிக்கப்பட்ட கிறிஸ்துவின் ஈவாயிருக்கிறார்கள் (எபே. 4 : 11 - 13). தங்களை அப்போஸ்தலர் என்று அழைத்துக்கொள்ளுகிற யாவரும் அப்போஸ்தலர் அல்ல. அழைக்கப்பட்டுத் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர் மாத்திரமே அஸ்திபாரமாகக் கூடும் (லூக்.14:26,33). புதிய எருசலேமின் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களின் மேல் அப்போஸ்தலருடைய நாமங்கள் எழுதப்பட்டுள்ளன. எனவே, புதிய எருசலேமை சுதந்திருக்கிறவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் ஐக்கியத்திலும் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும்.

**2.** புதிய எருசலேமை சுதந்தரித்துக்கொள்ளும் கிறிஸ்துவின் மணவாட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் யாவை?

i) பூரண புருஷன் (எபே. 4 : 11)
ii) ஆண்பிள்ளை (வெளி. 12 : 5)
iii) ஆட்டுக்குட்டியானவரின் மனைவி (வெளி. 21 : 9)
iv) தேவனுடைய வாசஸ்தலம் (எபே. 2 : 22)
v) கற்புள்ள கன்னிகை (2 கொரி. 11 : 2)
vi) மகிமையுள்ள சபை (எபே. 5 : 27)
vii) தேவனுடைய சுதந்தரர் (ரோமர் 8 : 17)
viii) நற்பலன் (யாக். 5 : 7)
ix) தேவனுடைய இராஜ்யம் (யோவான் 3 : 5)
x) பரிசுத்த ஆலயம் (எபே. 2 : 21)

## III *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி :* (15 Marks)

**1.** புதிய எருசலேமை சுதந்தரித்துக் கொள்பவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளை விரிவாகவும் தெளிவாகவும் எழுது.

1. இரட்சிக்கப்பட்டு, முழுக்கு ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவின் பூரணத்திற்கு வளருகிறவர்கள் மட்டுமே நித்தியத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியவார்கள்.
2. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறும்போது, அநேகராகிய நாம் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தின் அவயவங்களாகிறோம் ( 1 கொரி. 12 : 13). அதன் பின்னர் நாம் தனித்தனியாக மட்டுமல்ல, மொத்தமாகவும் பூரணப்படுத்தப்பட வேண்டும் (எபே. 4 : 15. 16; 2 : 19 - 22).
3. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்ற எல்லா சபைகளும் கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்த முடியாது. எபேசியர் 2 : 20 - இல் கூறப்பட்டிருப்பதைப் போன்று நாம் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டி எழுப்பப்பட வேண்டும். இந்த உத்தியோகஸ்தர்கள் சபையின் பூரணத்திற்காக அளிக்கப்பட்ட கிறிஸ்துவின்

ஈவாயிருக்கிறார்கள் (எபே. 4 : 11 - 13). தங்களை அப்போஸ்தலர் என்று அழைத்துக்கொள்ளுகிற யாவரும் அப்போஸ்தலர் அல்ல. அழைக்கப்பட்டுத் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர் மாத்திரமே அஸ்திபாரமாகக் கூடும் (லூக்.14:26,33). புதிய எருசலேமின் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களின் மேல் அப்போஸ்தலருடைய நாமங்கள் எழுதப்பட்டுள்ளன. எனவே, புதிய எருசலேமை சுதந்திருக்கிறவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் ஐக்கியத்திலும் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும். தேவ ஆவியானவருக்கும், தேவனுடைய வசனத்திற்கும், தங்களுடைய ஆத்துமாக்களுக்காக் விழித்திருக்கும் தேவ ஊழியருக்கும் கீழ்ப்படியவேண்டும். (ரோமர் 8 : 14 ;அப். 20 : 32; எபி. 13 : 17).

4. எருசலேம் இசைவிணைப்பான நகரமாகக் கட்டப்பட்டிருக்கிறதென்று நாம் வாசிக்கிறோம் (சங். 122 : 3). இதுவே எபேசியர் 2 : 21, 22 - லும், 4 : 16 - லும் கூறப்பட்டுள்ளது. நாம் மூலைக்கல்லாகிய இயேசுவின்மீதும் அஸ்திபாரமாகிய அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்கள்மீதும் கட்டப்பட்டவர்களாய், இசைவாய் இணைக்கப்பட்டிருக்கிறோம்.
5. அன்றியும் கிறிஸ்துவின் மணவாட்டியாகத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிறவர்களுக்கு வேறுபாட்டின் ஜீவியமும், ஜெப ஜீவியமும் தேவை. புதிய எருசலேமுக்குப் பெரிதும் உயரமுமான மதில் இருக்கிறது. பெரிதும் உயரமுமான மதில், நாம் புதிய எருசலேமைச் சுதந்தரிக்க வேண்டுமேயாயின், நமக்கிருக்க வேண்டிய வேறுபாட்டின் ஜீவியத்தையும், ஜெப ஜீவியத்தையும் காட்டுகிறது (ஏசாயா 62 : 6).
6. கிறிஸ்துவின் மணவாட்டி முற்றிலும் கிருபையினால் ஆயத்தப்படுத்தப்படுகிறாள். வெளிப்படுத்தல் 12 : 1 - இல் தன் பாதங்களின் கீழே சந்திரனை உடையவளாக குறிப்பட்டுள்ள ஸ்திரீ, சபையைக் காட்டுகிறது. நீங்கள் நிலைக் கொண்டு நிற்கிற கிருபை என 1பேதுரு 5:12 இல் நாம் வாசிப்பதுபோல சந்திரன் என்பது கிருபையைக் குறிக்கிறது. .
7. புதிய எருசலேமைச் சுதந்தரிக்கிறவர்கள் ஆவி ஆத்துமா சரீரத்தில் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்க வேண்டும் (1 தெச. 5 : 23). ஆகவேதான் இது பரிசுத்த நகரம் என்று அழைக்கப்படுவதுடன், ‘தீட்டுள்ளது ...... ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை’ (வெளி. 21 : 2, 27) என்றும் கூறப்பட்டுள்ளது. நாம் எல்லா அசுத்தங்களினின்றும் வேறுபிரிக்கப்பட்டவர்களாய், சகல அசுசிகளும் நீங்க சுத்திகரிக்கப்பட்டவர்களாக (2 கொரி. 7 : 1) கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும்.
8. பிரதிபலன்கள் யாவும் ஜெயங்கொண்டவர்களுக்குரியது என வெளிப்படுத்தல் 2, 3 அதிகாரங்களில் நாம் வாசிக்கிறோம். பாவம், வியாதி, சாத்தான்,உலகம், மரணம் இவற்றிற்கு விரோதமாக நமக்கு யுத்தம் உண்டு. இவை யாவற்றையும் ஜெயிக்கிறவர்கள் புதிய எருசலேமில் தேவ சிங்காசனத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் (வெளி. 3 : 21). ஜெயங்கொள்ளுகிற சபை மாத்திரமே கிறிஸ்துவின் மணவாட்டியாகும் (வெளி. 12 : 5).
9. கிறிஸ்துவின் மணவாட்டி கிறிஸ்துவின் சுபாவத்தில் பூரணப்பட்டிருக்க வேண்டும் (எபே. 4 : 11). அவள் விசுவாசம், அன்பு, பரிசுத்தம், தேவசித்தம் செய்தல் ஆகிய நான்கு சுபாவங்களிலும் பூரணப்பட வேண்டும் (யாக். 2 : 22; 1 யோவான்4:17, 18; 2 கொரி.7:1; கொலோ. 4 : 12). ஆகவேதான், புதிய எருசலேம் சதுரமாயிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் சுபாவத்தை தரித்துக் கொள்ளும்படியாக, கிறிஸ்துவின் மணவாட்டியும் அவரைப்போல அநேக பாடுகளின் பாதை வழியாகச் சென்று பூரணத்தை அடைய வேண்டும் (எபி. 2 : 10).
10. கிறிஸ்துவின் மணவாட்டி அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுகிறாள். இது, ‘எடுத்துக்கொள்ளப்படுதல் ’(rapture) என்று அழைக்கப்படுகிறது. இதில் கிறிஸ்துவுக்குள் மரித்த பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்கும் ஜீவனோடிருப்பவர்கள் ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டு, எடுத்துக் கொள்ளப்படுவார்கள் ( 1 தெச.4: 15 - 17; 1கொரி.15:51,52).கர்த்தர் தமக்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்காக வருகிறார். ஒரு மணவாட்டி தன் மணவாளனுக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருப்பதுபோல, கிறிஸ்துவின் சபையானது தேவ அன்பினால் நிறைந்து, தன் மணவாளனாகிய கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகைக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருக்க வேண்டும்.

*************

வகுப்பு : 11 பாடம்-20

# சீயோன்

**I** ***ஓரிரு வாக்கியங்களில் விடையளி*** : (2 Marks)

**1.** பழைய ஏற்பாட்டில் எருசலேம் நகரத்தின் ஒரு பகுதியாய் இருந்தது எது? அது எவ்வாறு அழைக்கப்பட்டது?

பழைய ஏற்பாட்டில், சீயோன் எருசலேம் நகரத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. அது தாவீதின் நகரம் என்று அழைக்கப்பட்டது (2 சாமு. 5 : 7).

**2.** சீயோன் யாருடைய பிரதிபலனும் சுதந்தரமுமாகக் காணப்படுகிறது?

சீயோன், பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களும் பூரணமாக்கப்பட்டவர்களுமான தேவ ஊழியர்களின் பிரதிபலனும் சுதந்தரமுமாக இருக்கிறது (வெளி. 14: 1-5; 21: 14; எபே 2: 20)

**3.** பழைய ஏற்பாட்டில், தேவன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் எங்கே வாசம்பண்ணினார்? அந்த இடம் எதற்கு நிழலாட்டமாயிருக்கிறது?

மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவன், கிருபாசனத்தின் மீதிலும் சாட்சிப்பெட்டியின் மேல் நிற்கும் இரண்டு கேரூபீன்களின் நடுவிலும் வாசம்பண்ணினார் (யாத். 25 : 22). அந்த இடம் சீயோனுக்கு நிழலாட்டமாயிருக்கிறது

**4.** சீயோனிலிருந்து புறப்படுபவை எவை?

*i)* சகல ஆசீர்வாதங்கள் (சங். 128 : 5 ; 134 : 3)

*ii)* வேதம் (ஏசா. 2 : 3; மீகா 4 : 2)

*iii)* நியாயமும் நீதியும் (ஏசாயா 33 : 5)

*iv)* வல்லமை (யோவேல் 3 : 16; மீகா 4 : 13; சங். 110 : 2).

**5.** சீயோனைச் சுதந்தரிப்பவர்களின் நெற்றியிலுள்ள நாமங்கள் என்ன? அவர்கள் யாருக்கு முன்பாகப் புதுப்பாட்டைப் பாடுவார்கள்?

*v)* (மூல பாஷையில் கூறப்பட்டுள்ளபடி) சீயோனைச் சுதந்தரிப்பவர்களின் நெற்றிகளில் பிதாவின் நாமமும் குமாரனின் நாமமும் எழுதப்பட்டிருக்கும்.

*vi)* இவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும், இவர்களேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்த புதுப்பாட்டைப் பாடுவார்கள்.

**II** ***சுருக்கமான விடையளி***: (5 Marks)

**1.** சீயோனைப் பற்றிய சிறுகுறிப்பு வரைக.

பழைய ஏற்பாட்டில், சீயோன், எருசலேம் நகரத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. அது, தாவீதின் நகரம் என்று அழைக்கப்பட்டது ( 2 சாமு. 5 : 7). பழைய ஏற்பாட்டில் சீயோன் என்னும் பதம் இஸ்ரவேல் சபைக்குக்கூட உபயோகப்படுத்தப்பட்டுள்ளது (ஏசாயா 1 : 8; 49 : 14). புதிய ஏற்பாட்டு சீயோனைக் குறித்து ஏசாயா 28 : 16 - லும் நாம் வாசிக்கிறோம். இது பரம சீயோனைக் குறிக்கிறது என்பதை 1 பேதுரு 2 : 6 வெளிப்படுத்துகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறி, சீயோனில் மூலைக்கல்லானார் (எபே. 4 : 8 - 10; ஏசாயா 28 : 16; மத் 21 : 16 : எபே. 2 : 20; 1 பேதுரு 2 : 4 - 7). சீயோன் எல்லா வானங்களுக்கும் மேலான உன்னதமான இடமாகும்.

சீயோன், பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களும் பூரணமாக்கப்பட்டவர்களுமான தேவ ஊழியர்களின் பிரதிபலனும் சுதந்தரமுமாகும் (வெளி. 14 : 1 - 5; 21 : 14; எபே. 2 : 20).

**2.** வெளிப்படுத்தின் விசேஷம் 14 : 1 - 5 ல் குறிப்பிடப்பட்டுள்ள சீயோனை சுதந்தரிப்பவர்களின் தன்மைகளை எழுதுக.

i. (மூல பாஷையில் கூறப்பட்டுள்ளபடி )இவர்கள் நெற்றிகளில் பிதாவின் நாமமும் குமாரனின் நாமமும் எழுதப்பட்டிருக்கும்.

ii. இவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும், இவர்களேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்த புதுப்பாட்டைப் பாடுவார்கள்.

iii. இவர்கள் பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்

iv. இவர்கள் ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள்

v. இவர்கள் கற்புள்ளவர்கள்

vi. இவர்கள் ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள்
vii. இவர்கள் மனுஷரிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்
viii. இவர்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாவர்கள்
ix. இவர்கள் தங்கள் வாயிலே கபடமற்றவர்கள்
x. இவர்கள் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக மாசில்லாதவர்கள்
இவர்களின் தொகை 1,44,000. இவர்கள் சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரோடு நிற்பார்கள்

## III *விரிவான விடையளி :* (10 Marks)

**1.** சீயோனின் மேன்மைகளை எழுதுக.

i. தேவன் சீயோனில் வாசமாயிருக்கிறார் (சங். 9 : 11, 132: 13, 14)
ii. தேவன் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார் (சங்132:13)
iii. சீயோன், லிபூரண வடிவுள்ளது' . இங்கிருந்துதான் லிதேவன் பிரகாசிக்கிறார்' (சங், 50:2).
iv. தேவன் சீயோனிலிருந்து அரசாளுகிறார். (சங். 146 : 10)
v. அது சகல மகிழ்ச்சியின் உறைவிடமாயிருக்கிறது (சங், 48 : 2)
vi. சகல துதிகளும் சீயோனிலிருக்கும் தேவனிடத்தில் போய்ச் சேருகிறது (சங். 65 : 1)
vii. சகல ஆசீர்வாதங்களும் சீயோனிலிருந்து புறப்படுகின்றன (சங்128:5134 : 3).
viii. சீயோனிலிருந்து வேதம் புறப்படுகிறது (ஏசாயா 2 : 3 மீகா 4 : 2)
ix. சீயோனிலிருந்து புறப்படும் வேதம் இருவிதங்களில் வெளிப்படுகிறது.
   (a) பாட்டாக (ஜீவியம்)
   (b) மகிமையாக (வெளிச்சம்).
x. நியாயமும் நீதியும் சீயோனிலிருந்து புறப்படுகின்றன (ஏசா. 33 : 5)
xi. சீயோனிலிருந்து வல்லமை புறப்படுகிறது(யோவேல்3:16மீகா4: 13சங் 110:2)

## IV *விரிவாகவும் தெளிவாகவும் விடையளி :* (15 Marks)

**1.** சீயோனின் மேன்மைகளைக் குறித்தும், அதை சுதந்தரிப்பவர்களின் தன்மைகளைக் குறித்தும்எழுதுக.

<u>சீயோனின் மேன்மைகள்:</u>

*i)* தேவன் சீயோனில் வாசமாயிருக்கிறார் (சங். 9 : 11, 132: 13, 14)
*ii)* தேவன் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார் (சங். 132 : 13)
*iii)* சீயோன், 'பூரண வடிவுள்ளது'. இங்கிருந்துதான் 'தேவன் பிரகாசிக்கிறார்' (சங், 50:2).
*iv)* தேவன் சீயோனிலிருந்து அரசாளுகிறார். (சங். 146 : 10)
*v)* அது சகல மகிழ்ச்சியின் உறைவிடமாயிருக்கிறது (சங், 48 : 2)
*vi)* சகல துதிகளும் சீயோனிலிருக்கும் தேவனிடத்தில் போய்ச் சேருகிறது (சங். 65 : 1)
*vii)* சகல ஆசீர்வாதங்களும் சீயோனிலிருந்து புறப்படுகின்றன (சங்128:5;134 : 3).
*viii)* சீயோனிலிருந்து வேதம் புறப்படுகிறது (ஏசாயா 2 : 3; மீகா 4 : 2)
சீயோனிலிருந்து புறப்படும் வேதம் இருவிதங்களில் வெளிப்படுகிறது.
   (a) பாட்டாக (ஜீவியம்)
   (b) மகிமையாக (வெளிச்சம்).
*ix)* நியாயமும் நீதியும் சீயோனிலிருந்து புறப்படுகின்றன (ஏசா. 33 : 5)
*x)* சீயோனிலிருந்து வல்லமை புறப்படுகிறது(யோவேல்3:16;மீகா4: 13;சங் 110:2)

<u>சீயோனை சுதந்தரிப்பவர்களின் தன்மைகள் :</u>

*i)* (மூல பாஷையில் கூறப்பட்டுள்ளபடி )இவர்கள் நெற்றிகளில் பிதாவின் நாமமும் குமாரனின் நாமமும் எழுதப்பட்டிருக்கும்.
*ii)* இவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும், இவர்களேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்த புதுப்பாட்டைப் பாடுவார்கள்.
*iii)* இவர்கள் பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்
*iv)* இவர்கள் ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள்
*v)* இவர்கள் கற்புள்ளவர்கள்
*vi)* இவர்கள் ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள்
*vii)* இவர்கள் மனுஷரிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்
*viii)* இவர்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாவர்கள்
*ix)* இவர்கள் தங்கள் வாயிலே கபடமற்றவர்கள்
*x)* இவர்கள் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக மாசில்லாதவர்கள்
இவர்களின் தொகை 1,44,000. இவர்கள் சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரோடு நிற்பார்கள்

**********************